
If You Want More Free E-books

# ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்



ஜெயகாந்தன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

www.pustaka.co.in

If You Want More Free E-books

Pustaka Digital Media

http://www.pustaka.co.in

# ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

# Oru Nadikai Naadakam Parkiral

Author:

த. ஜெயகாந்தன்

T. Jayakanthan

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

முன்னுரை

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

## முன்னுரை

காதல் என்பது மிகவும் அற்பமானது, அது பிறப்பதற்கும், அழிவதற்கும் அற்பக் காரணங்களே போதும். காதல் வயப்பட்டவர்களிடையே கூட அந்தக் காதல் வளர்வதற்கும் மேன்மையுறுவதற்கும் அந்தக் காதலோடு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சேர்ந்த வேறு குணநலன்களே காரணமாயிருக்கின்றன.

இந்தக் கதையில் வரும் கல்யாணியோ ரங்காவோ காதலையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர்கள் அல்ல. வாழ்க்கையில் அவர்கள் இருவருக்குமே வேறு வேறு லட்சியங்களும் வேறு வேறு காரியங்களும் இருக்கின்றன. வாழ்க்கையின் முழு அர்த்தத்தோடு வாழ்கிற யாரும் எனக்கு இதுதான் லட்சியம்; இது ஒன்று தான் லட்சியம்' என்று பிரகடனப்படுத்திக் கொள்ள முடியாது. அவரவர்க்கும் சில கொள்கைகள். சில விருப்பு வெறுப்புக்கள், சில 'கூடும்-கூடாது'கள் என்று இருக்கின்றன. அதற்கு ஒப்ப வாழ முயல்வதே அவரவர் வாழ்க்கையாய் இருக்கிறது. அதனால் இந்த வாழ்க்கைகளை லட்சியமற்ற வாழ்க்கை என்று சொல்ல முடியாது.

இன்ன லட்சியத்துக்காகத்தான் நான் வாழ்கிறேன் என்று எழுதி நெற்றியில் ஒட்டிக் கொண்டவர்களைத் தவிர எஞ்சிய மக்களெல்லாம் இந்த விதமாய்த்தான் வாழ்கிறார்கள்.

ஆனால் இவர்கள் எல்லோருமே-இன்ன லட்சியத்துக்காக நான் வாழ்கிறேன் என்று ஒரு குறிப்பிட்ட லட்சியத்துக்குத் தாலி கட்டிக் கொண்டவர்களும்-அதற்கு மாறான லட்சியத்தில் தங்களைப் பிணித்துக் கொண்டவர்களை எதிர்ப்பதையும் அழிப்பதையும் ஆக்கிரமிப்பதையும் தங்களுடைய நடைமுறையாகக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரியாக-சமுதாய, அரசியல், மத நம்பிக்கை போன்ற லட்சியங்கள் ஏதுமில்லாத மற்ற மக்களும் தங்கள் சொந்த வாழ்க்கையில் தங்கள் வாழ்க்கைத் துணைகளிடமும் குழந்தைகளிடமும் தங்களுக்கு அடக்கமானவர்களிடமும் அவர்களது சொந்த விருப்பு வெறுப்புக்களையும் கொள்கைகளையும் கூடும் கூடாது' களையும் ஏன், சாதாரண ரசனைகளையும் கூட அழித்து ஒழிக்கிற ஆக்ரமிப்பாளர்களாக இருப்பதை வாழ்க்கை நெடுகிலும் எல்லாரிடமும் நாம் காணலாம்.

கடைசியில், லட்சியவாதிகள் என்று தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்களும் சரி, சாதாரண மனிதர்களும் சரி, இந்தப் பிறர் விஷயத்தில் தலையிடுவதையே தங்களது நடை முறை வாழ்க்கையாகக் கொண்டிருப்பதன் மூலம் தங்களது லட்சியமே இதுதான் என்றாகி விட்டதை உணராதவர்களாகி விடுகிறார்கள்.

ஆக்ரமிப்பு என்பதும், பலாத்காரம் என்பதும், அவை என்பதும் ஸ்தூலமாக நிகழ்வது மட்டுமல்ல. ஒருவன் வீட்டில் அத்துமீறிப் புகுவதும். ஒருவன் உடலைத் துன்புறுத்துவதும் மட்டும்தான் ஆக்ரமிப்பு,

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பலாத்காரம் என்று புரிந்து கொள்ளுவது மிகவும் ஆரம்ப அறிவே (Elementary knowledge) ஆகும். இந்த அறிவுக்குப் புறம்பான அந்தச் செயல்கள், அதாவது ஒருவனின் வீட்டில் அல்லது நாட்டில் பிரவேசிக்கிற துராக்கிரகம் அல்லது ஒரு மனிதனை, ஒரு கும்பலை, ஓர் இனத்தைத் தாக்கி அழிக்கிற அடக்குகிற, அடிமை கொள்கிற காரியங்கள் மிகவும் கொடுரமானவை, அநாகரிகமானவை என்று அறிந்திருக்கிறவர்களும்- (மனுஷ சரித்திரத்தில் இதை அறிந்து கொள்வதற்கே எவ்வளவோ காலமாயிற்று - அதற்கு முன்னால் இதுவே ஒரு பெருமையாக இருந்த காலமும் உண்டு) இதனைக் கொடுமை, பாபம் என்று உபதேசிக்கிறவர்களும் கூட, கருத்து ரீதியாகவும் எண்ணங்களை அழிக்கிற காரியத்திலும் மிகவும் மூர்த்தண்யமாக ஈடுபடுவதில்தான் அக-வாழ்வின் பிரச்னைகள் எல்லாம் எழுகின்றன.

சட்டங்களும் சமுதாயங்களும், சாஸ்திரங்களும், மதங்களும், அரசியலாரும், மகான்களும் மட்டும்தான் இந்த ஆக்கிரமிப்புகளை, பலாத்காரங்களைக் கைக்கொண்டுள்ளனர் என்பதில்லை; அன்புள்ளம் கொண்ட அன்னையரும், நமக்காகவே உயிர்தரித்திருக்கின்ற நமதருமைக் காதலிகளும், காதலர்களும், கணவர்களும் மனைவியரும். தங்களுக்காகக் கூட அல்லாமல் அந்தந்த மறுதரப்பாரின் நலனுக்காகவே என்கிற நம்பிக்கையில் இந்த ஆக்கிரமிப்பையே, இந்த மனோ-பலாத்காரத்தையே காதல் என்றும், அன்பு என்றும், கடமை என்றும், பக்தி என்றும், பண்பு என்றும் கருதி அமைதியையும் நிம்மதியையும் இழந்த நிராசைகளை அறுவடை செய்து கொள்ளுகிறார்கள்'

வாய்விட்டு வாழ்க்கையைச் சபிக்கிறவர்களாகவும் -அப்படிச் செய்ய மனம்கூசி உள்ளூர உடைந்து போனவர்களாகவும் மாறிப்போய் ஒருவகைப் பழக்கத்தினால் குறைபட்ட அன்பையும், மூளியான காதலையும் ஒப்புக்குச் செலுத்துகிற பக்தியையும், சுயநம்பிக்கையற்ற பண்புகளையும் சுமந்து வாழ்கிற கொடுமைகளே இவர்களுக்கு இறுதியில் எஞ்சுகின்றன.

வாழ்க்கை என்பது பெரும்பாலும், ஏன் முழுக்க முழுக்க இந்தக் கொடுமைதான். இந்தக் கொடுமையை அகற்ற முயலுவதைவிட, மானுட இயல்பேயான இதனின்றும் விலகுவதுதான் விவேகம். இந்தக் கொடுமைகளை எதிர்த்து அன்பு மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்வதோ, இதனை மறுத்து தீவிரமாக எதிர்த்து நிற்பதோ வாழ்க்கையைத் துறந்து எங்காவது ஏகாந்தம் நாடி ஒடுவதோ நம்முடைய நியாய உணர்வைக் காட்டுமே தவிர, அவை இந்த நிலைமைக்குத் தீர்வாகா. நம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஒவ்வொருவரையும் பொறுத்த தனிவாழ்க்கை எனும் சிறு வட்டத்தில்கூட இவை தீர்வாக மாட்டா.

நாம் அமைதியென்று நினைத்துக் கொண்டிருக்கிற, சமாதான சூழ்நிலையென்று நம்பிக்கொண்டிருக்கிற வாழ்க்கைகள் எல்லாமே மோதுதலையும், யுத்தங்களையும் தவிர்த்துக் கொண்டிருக்கிற சந்தர்ப்பங்கள் தானோ? என்று கூடத் தோன்றுகிறது; எனவே அமைதியும் சமாதானமும், துறவும் அன்பும், பற்றற்ற அன்பும் நம்முள் ஏற்படுவதே மிக முக்கியம். அது இல்லாதபோது புறத்தே ஏற்படுகிற அமைதி இரண்டு மோதல்களுக்கு நடுவே ஏற்படுகிற யுத்தங்களின், கலவரங்களின் இயல்பேயான ஒய்வுதான்.

அந்த ஒய்ச்சல் அமைதி ஆகாது. இது சமாதானம் என்கிற விஷயத்துக்கே சற்றும் சம்பந்தமில்லாததாகும்: இந்த ஒய்ச்சலில் மனங்கள் அல்ல, யுத்தங்களே ஓய்வு எடுத்துக் கொள்கின்றன. இதிலிருந்து முன்னிலும் அதிக மூர்த்தண்யத்தோடு யுத்தமே கிளைக்கிறது. இந்த ஒய்விலிருந்து மறுபடியும் சச்சரவு ஆரம்பமாகிறது. இது அமைதியோ, சமாதானமோ, சாந்தியோ ஆகாது. உண்மையான அமைதி என்பது, சமாதானம் என்பது, சாந்தி என்பது நிரந்தரமானது, அது நிரந்தரமாகவே மோதலையும் பகைமையையும் யுத்தத்தையும் தவிர்ப்பது. அப்படி ஒரு சாந்தியை இந்த வாழ்க்கை இதுவரை கண்டதில்லை.

நாம் வாழ்க்கையில் காண்பதெல்லாம் இந்த ஒய்ச்சல்தான். அதனால்தான் நாம் மறுபடியும் மறுபடியும் யுத்தத்துக்குக் கிளர்ந்தெழுகிறோம். யுத்தம் நம்முள் நடந்துகொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் ஆக்கிரமிப்பாளராயிருக்கிறோம்.

இந்த வரையறுப்புக்கள் உலக அளவிலும் சமுதாய அளவிலும், குடும்ப அளவிலும், ஏன்-நான் என்கிற தனிப்பட்ட அளவிலும்கூடப் பொருந்தும்.

இந்தக் கதை சம்பந்தப்பட்ட இரண்டு தனி மனிதர்களான கணவன் - மனைவியரிடையே மிக உயர்வான தரத்திலேற்பட்ட ஆக்கிரமிப்பினை, நான் விரும்புகின்ற ஒரு மனைவி எப்படிச் சமாளிப்பாள் என்கிற லட்சியமாகிய கற்பனையே கல்யாணி, கல்யாணி என் மனைவி அல்ல; என் காதலியும் அல்ல: நான் தான். ரங்காவும் நான்தான். அண்ணாசாமி கூட நான்தான். இந்தக் கதையில் வருகிற எல்லாப் பாத்திரங்களும் நான்தான். ஏன், என் கதைகளில் வருகிற எல்லாப் பாத்திரங்களுமே- ஒன்றைக் கவனியுங்கள்; என் பாத்திரங்களில் யாருமே முழுக்க முழுக்க நல்லவர்களுமில்லை; கெட்டவர்களுமில்லை. நான்தான். நான் போட்டுக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொள்ளுகின்ற-வாழ்க்கையில் நான் சந்தித்த பிறர் மாதிரியான-வேஷங்களே அவை.

கல்யாணி மாதிரி ஸ்தூல உருவங்கள் உண்டு. ஆனால் அதனுள் இருக்கின்ற சூட்சும உருவம் நான். அது எந்த அளவுக்கு யதார்த்தமோ அந்த - அளவுக்குப் பொய். கல்யாணி என்கிறவள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருப்பதாக நான் காட்டுகிறேன். நான் அறிந்த வாழ்க்கையில் அவள் இல்லை; ஆனால் இருக்கக்கூடாது என்பதுமில்லை.

நான் விரும்புகிற மாதிரி இவள் இருப்பதனால் எழுகின்ற பிரச்னைகளைப் பாருங்கள். அவளது அமைதியும் ஆக்கிரமிப்பின்மையும் அவளது அன்பையே சம்பந்தப் பட்டவனால் சந்தேகப்பட வைக்கிறது! அவனது சந்தேகத்தை அவள் மாற்ற முயலாதபோது, அது அசட்டையாகக் கூடப்படுகிறது. இதை அறிகிற நாம் பாதிக்கப்படுகிற அளவுக்குக் கூடப் பாதிக்கப்படாத ஒரு மனோநிலை கல்யாணிக்கு ஏற்படுவதுதான் அவளது வாழ்க்கையில் மோதல்களை-அவலங்களைத் தவிர்த்தது.

இதற்குப் புறவாழ்க்கையினால் சற்றும் பாதிக்கப் படாத மனோநிலை தேவையாகிறது. அப்படிப்பட்ட மனோநிலையினாலும் வேறு விளைவுகள் நேர வாய்ப்பேற்பட்டு விடுகிறது. மனித வாழ்க்கை யாந்திரீகமாகவும், ஆடத் தன்மையானதாகவும் மாறிப்போகலாம். உணர்ச்சிகளின் தொடர்பில்லாமை (non-communication) நிகழ்ந்து மனுஷவர்க்கத்தின் மிக அற்புதமான அழகே இழந்து போகிற ஆபத்து நேர்ந்து விடலாம்.

communicative-ஆகவும் (பிறரோடு பேச்சால் செய்கை பால் தொடர்பு கொள்ளுதல்) இருக்க வேண்டும்: non-aggressive ஆகவும் (ஆக்ரமிக்காமை) இருக்க வேண்டும் என்பதைப் பிரச்சாரம் செய்வதைத் தவிர்த்து அதனைச் சொந்த வாழ்க்கையின் சுய-தர்மமாகக் கொள்ளுகிற தன்மை வேண்டும்.

ஆக்ரமிப்பு என்பது அதிக துன்பத்தை ஆக்ரமிக்கப் பட்டவரைப் பார்க்கினும் ஆக்ரமித்தவனுக்கே இழைத்து விடுகிறது. ஆக்ரமித்தவன் வெற்றியையும் அந்த மகிழ்ச்சியையும் கொண்டாடுவது கூடத் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுகிற முயற்சிதான். அவன் தன்னால் ஆக்ரமிக்கப்பட்டதை எண்ணியெண்ணி எப்போதும் அஞ்சிக் கொண்டிருக்கிறான் என்பதே உண்மை; அந்த அச்சம் அவனை மேன்மேலும் ஆக்ரமிக்கத் துண்டுகிறது. அவன் இன்னும் அதிக துன்பங்களையே ஆக்ரமிக்கிறான். ரங்காவுக்கு ஏற்படுவது இதுதான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இந்த ஆக்ரமிப்பும் அச்சமும், யுத்தமும் அழிப்பும் இரண்டு நாடுகளுக்கிடையேதான் இரண்டு கூட்டங்களுக்கு இடையேதான் இரண்டு பகைவர்களுக்கிடையேதான் ஏற்படும் என்பதில்லை; அப்படி ஏற்படுவது மிகவும் சாதாரணமான, எல்லோருக்கும் தெரிகின்ற, உலகமும் ஒவ்வொருவரும் அறிந்த பழைய விஷயமாகும்.

இது இன்னும் சூட்சுமமாக, மிகவும் subtle ஆகவே அதிகம் நிகழ்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் கூட உணர முடியாமல் இந்தப் பெரும் சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கிறது இதற்குக் காரணம் பகைமை அல்ல; பாசம் இதற்குக் காரணம். ஒருவருக்கொருவர் அந்நியமாக இருப்பதல்ல; சொந்தமாக இருப்பதே.

தந்தையும் மகனும், தாயும் மகளும், எஜமானும் வேலைக்காரனும், கணவனும் மனைவியும் சண்டை போடுகிறோம் என்கிற பிரக்ஞையோடு தம்மை மறந்து கூச்சலிட்டுக் கோபத்தில் மோதிக் கொள்ளுகிறார்களே, அந்தச் சமயத்தில் மட்டும் அல்ல-அவர்கள் அன்பு செய்கிறபோதும், ஒருவருக்கொருவர் உபசரணை புரியும் போதும், ஒருவர் நலனில் ஒருவர் நாட்டம் கொள்ளுகிற இந்தச் சண்டை, இந்த ஆக்ரமிப்பு, இந்த அழிப்பு வேலை அதிகம் மும்முரம் கொள்கிறது.

நாட்டு வெறியும், மதவெறியும், இனவெறியும், இஸ வெறியும் மட்டும்தான் கேடுகளையும் அழிப்புகளையும் உற்பவிக்கும் என்பதல்ல. அன்புவெறியும் நியாயவெறியும், ஆசைவெறியும், இன்பவெறியும், தந்தைவெறியும், தாய் வெறியும் அதனிலும் அதிகமான அழிப்புகளை (destruction) ஏற்படுத்தும்.

பாருங்கள்! அன்பு செய்கிறவர்கள் தாங்கள் யார்மீது அன்பு காட்டுகிறார்களோ அவர்களது சொந்தத் தன்மைகளை அழித்துக் கொள்ள உடன்பட அவர்கள் மறுக்கிற பொது, தங்கள் அன்பை அழித்துக் கொள்ளுகிறார்கள். சிலர் தங்களையே அழித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்குப் பிரதியாகத் தங்கள் மீது அன்பில்லை என்று அழுகிறார்கள். அன்புக்குப் பிரதியே இந்த ஆக்ரமிப்புக்கு ஆட்படுதல்தான். இல்லாவிட்டால் 'நாகரிக' மானவர்கள் அந்த அன்பையே திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறார்களாம். ஆ! என்ன நாகரிகம்!

தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகச் சிலர் நிராசைப்பட்டு விடுகிறார்கள். அதாவது-ஆக்ரமிப்பின் தோல்வியில் புலம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். சிலர் சபிக்கிறார்கள்; சிலர் கொலை செய்கிறார்கள்; சிலர் மனஸ்தாபம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொண்டு மறுதலையாகிறார்கள்,
'அறத்துக்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்துக்கும் அஃதே துணை'
என்ற குறள் இங்கு நினைவுக்கு வருகிறது.

பொறாமை இல்லாத காதலை, சம்பந்தப்பட்ட, காதலியோ காதலனோ கூடப் புரிந்து கொள்ளுவதில்லை ஆக்ரமிக்காத அன்புக்கு எங்கேயும் அங்கீகாரம் இல்லை. கல்யாணியோடு ரங்காவுக்கு ஏற்பட்ட பிரச்னையே அதுதான். அவளது காதலில் பொறாமை இல்லை. அவளது அன்பில் ஆக்ரமிப்பு இல்லை. ஆக்ரமிக்காத ஒரு நிறைவான அன்பு வாழ்க்கையில் சம்பவிக்கும்போது யாருமே அதனை ஏற்றுக்கொள்ளுவதில்லை. அது ஒரு குறையாகவேதான் கொள்ளப்படும் என்று தோன்றுகிறது.

வாழ்க்கைக்கு நிறைவைத் தேடுவதாகப் பேசுவதெல்லாம் பொய். வாழ்க்கை நிறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் நமக்கோ மேலும் மேலும் குறைகள் வேண்டும். குறைந்தபட்சம் நம்முள்ளே இருக்கும் ஆக்ரமிப்புப் பேயின் அசட்டுத் திருப்திக்காகவேனும் நமது 'எதிரி' உடல் ரீதியாகவாவது குறைப்பட்டால்தான்-அந்த மூளியில்தான் இந்தப் பேய் திருப்தி கண்டு அடங்குகிறது.

மகாத்மாக்கள் கூட ரங்காக்கள்தான். கல்யாணி வெறும் லட்சியப்படைப்பு. அதைப் பறந்து போகாமலிருக்கும் பொருட்டே தரையில் காலூன்றும் பொருட்டே, காலை ஒடித்துப் போடுகிற கொடுமையில் கதைக்கு முடிவு கண்டேன். நெஞ்சு ஒடிவதைவிட இது கொடுமை குறைந்த விபத்தல்லவா? எல்லாருக்கும்.-ரங்காவுக்குக்கூட.

அவள்பால் திருப்தியும் அநுதாபமும் ஏற்பட்டு விடுகிறதல்லவா? பாவம் மனித இயல்பு அப்படித்தான் ஆகிவிட்டது.

பெண் ஏதோ ஒரு விஷயத்தில் ஆணின் தயவில் இருந்தால்தான், ஆண் வர்க்கமும், ஆண் ஏதோ ஒரு விஷயத்தில் நயாய்க் குழைந்து பலவீனம் கொண்டிருந்தால்தான் பெண் வர்க்கமும் திருப்தியுறும்.

சமுதாய மாற்றங்களும் வாழ்க்கை முறைகளும் மாறினாலும் இந்த விதியினால் விளைகிற பிரச்னைகளின் வடிவங்கள்தான் மாறும் போலும்.

இந்தப் புத்தகத்துக்கு இது முன்னுரையாக எவ்வளவு பொருந்தும் என்று எனக்குத் தெரியாது. இதைப் படித்து இந்தப் பின்னணியில் கதையைப் படித்தால் வாசகர்க்கு உதவும் என்று நம்புகிறேன்.

5-1-71

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

த. ஜெயகாந்தன்
சென்னை-31

# 1

நாலு மணிக்குத் தான் அவன் வரப்போகிறான். கல்யாணி மூணரை மணிக்கெல்லாம் தயாராகிவிட்டாள். அவனைச் சந்திக்கும் நேரத்தில் தான் தனியாக இருக்க வேண்டாமென்பதற்காக மூணரை மணிக்கெல்லாம்அண்ணாசாமியை வரச் சொல்லி இருந்தாள்.

அண்ணாசாமி வருகிறாரா என்று பார்க்கவும்-அவளது வழக்கமான பொழுதுபோக்கான-எதிரேயுள்ள நர்ஸரியில் குழந்தைகள் விளையாடுவதை ரசிப்பதற்காகவும் வீட்டின் வெளி வராந்தாவில் ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் கல்யாணி.

எதிரே அந்த நர்ஸரிப் பள்ளியுள்-மூங்கிலாலும் மரச் சட்டத்தாலும் ஆன வெள்ளையும் வைலட்டுமாய் அடர்ந்த ‘பொகைன்வில்லா’ பூக்கள் நிறைந்த காம்பவுண்டுக்குப் பின்னால் சறுக்குப் பலகைகளிலும் ‘ஸீஸா’க்களிலும் இறைந்து, வழிந்து, ஆடிச் சிரித்துக் குலுங்கும் குழந்தைகளை அவள் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியும், மனசில் ஒரு கனமும், சிரிப்பும், சில நேரங்களில் பெருமூச்சுமாய் உட்காருகிற மனநிலையில்தான் இப்போதும் இருந்தாள். ஆனாலும் இடையிடையே அவள் தலையைத் திருப்பித் தெருக் கோடியைப் பார்த்தாள். அவன் வருவதற்கு முன்னால் அண்ணாசாமி வந்துவிட வேண்டுமே என்று மனசுள் ரகசியமாக ஒரு பதைப்பு.

ஏனோ அவன் தன் வீட்டுக்கு வரவிருக்கும் இந்த முதல் சந்தர்ப்பத்தில்-இன்னும் பல சந்தர்ப்பங்கள் இதன்பின் ஏற்படுமென்கிற நம்பிக்கை அவள் மனசில் அவளறியாமல் ஒளிந்திருப்பதால்-அண்ணாசாமியும் உடன் இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

அது ஒரு தற்காப்பா, ‘தன்-பயமா’ என்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் மனசின் ஆழம் அவளுக்கே புரியாமல்தான் அவள் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குத் தன் மனசின் ஆழங்கள் எப்போதுமே புலப்பட்டதில்லை. தன்னை எதுவென்று அவள் நினைத்துக் கொண்டாலும் சில காலம் கழித்தபின் தான் அதுவல்ல என்று தானே அறிந்து கொள்வதையே அவள் தன் வாழ்வின் அனுபவங்களாக இதுவரை கொண்டிருந்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவளுக்குத் தன்னைத் தெரியவில்லை. தனது விருப்பங்கள், ஆசைகள், லட்சியங்கள், சந்தோஷங்கள், ரசனைகள் எல்லாவற்றையுமே ஏதோ வலிந்து கொண்டு விட்ட சுமைகளாகவே சுமந்து, அவை அழுத்துகின்றன என்று உணர்ந்தும் வேறு வழியின்றி இந்த அனுபவங்களை அவள் சுமந்து கொண்டிருந்தாள்.

பள்ளியில் படித்ததும், மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் அரசாங்கக் குமாஸ்தாவாகப் பணிபுரிந்ததும், சங்கீதத்திலும், நாட்டியத்திலும் மோகம் கொண்டு தனது திறமைகளைப் பிறர் பாராட்டும் வண்ணம் வெளிப்படுத்திக் கொண்டதும், அந்தப் பாராட்டுக்களையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு மகிழ்ந்ததும், தாயின் வற்புறுத்தலின் பேரில் பெரிய சினிமா நடிகை ஆகிவிட முடியும் என்று நம்பியதும், ஒவ்வொரு முறை முகத்தில் மேக்-அப் போட்டுக் கொள்ளும் போதும் காணுகிற சுகமும், எல்லாமே ஒரு பொய்யென்று அவள் புரிந்துகொண்டு எது உண்மை, எது உண்மையான ‘தான்’ என்று புரிந்துகொள்ள இயலாமல் தனது மனத்தின் அடி ஆழத்தில் ஏதாவது நிறைவு என்றோ திருப்தி என்றோ ஒன்று உண்டா என்று தேடுகிற முயற்சியில் இப்படி மணிக்கணக்காய் மௌனமாய் உட்கார்ந்திருப்பாள்.

திடீரென்று ஏதோ ஒரு சமயத்தில் நினைத்துப் பார்க்கும்போது அவளுக்கே தனது நடத்தையும் மனநிலையும் விசித்திரமாக இருந்தது.

வரப் போகின்ற ‘அவன்’ யார் என்று அண்ணாசாமிக்குத் தெரியாது தெரிந்தால் நிச்சயம் அண்ணாசாமி வரமாட்டார் என்பதும் அவளுக்குத் தெரியும். அவனுக்கும் அண்ணாசாமிக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட அர்த்தமில்லாத பகைமையைப் போக்கி, அவர்களிடையே நட்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தைச் சாக்காக வைத்துத்தான் அவனுக்கு அந்தக் கடிதத்தை எழுதினாள்.

அவனை முதல் முதலில் சந்திக்கும் வாய்ப்பே அவளுக்கு அண்ணாசாமியினால்தான் ஏற்பட்டது.

எதிரே நர்ஸரி ‘பிளே-கிரவுண்’டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி அவள் புறத்தே தோற்றம் கொண்டாலும் தன்னுள், சென்ற மாதத்தில் ஒருநாள் மாலை, நாடகக் கொட்டகையில் நாடகம் ஆரம்பிப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால், அண்ணாசாமிக்கும் அவனுக்கும் விளைந்த சச்சரவினால் ஏற்பட்ட களேபரத்தை, அரையும் குறையுமாய்ப் போட்ட ‘மேக்அப்’புடன் ஓடிவந்து அரங்கின் பக்கவாட்டிலிருந்த ஒரு துவாரத்தின் வழியாகப்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பார்த்தாளே, அந்தக் காட்சியையே இப்பொழுதும் மானசீகமாகக் கண்டு சிரித்துக் கொண்டிருந்தாள்.

எல்லா நாடகக் கொட்டகைகளிலும் மேடைக்கு இரண்டு பக்கத்திலும் உள்ள அடைப்புக்களில் இப்படிப் பட்ட துவாரங்கள் ஏதேனும் நிச்சயமாக இருக்கும். அவை இயல்பாகவே அங்கே இருக்குமா அல்லது ஏற்படுத்தப்பட்டதா என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் அவை இயல்பாகவே ஏற்பட்டுவிட்ட ஓட்டைகள் மாதிரியோ விரிசல் மாதிரியோ இருக்கும். இதன் வழியாகத்தான் நாடகக்காரர்கள் ரசிகர் உலகத்தைப் பார்த்து ரசிப்பது வழக்கம்.

ஆம்: ரசிகர்கள் தங்களைப் பார்த்து ரசிக்கிற மாதிரி, நாடகக்காரர்களும் ரசிகர்களைப் பார்த்து ரசிப்பது உண்டு. அந்த ரசனைக்காகத்தான் அவர்கள் நாடகம் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

ரசிகர்களுக்கு நாடகங்கள் தரும் ஆனந்தத்தைவிட மேடையில் உள்ள நடிகர்களுக்கு இந்த ரகசியமான ரசனை மிகுதியான ஆனந்தத்தைத் தரும்! நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்னால் சபையின் நாடியைப் பிடித்துப் பார்க்கிற மாதிரி இதன் வழியாகத்தான் இந்த கல்யாணி கலை அரங்கின் மூலகர்த்தாவான அண்ணாசாமி ரசிகர்களின் மனோபாவனைகளை அளந்து பார்ப்பார்.

நாடகத்திற்குத் தலைமை தாங்க வந்திருக்கும் பிரமுகர்கள், அல்லது விசேஷ அழைப்பின் பேரில் வந்து உட்கார்ந்திருக்கும் பெரிய மனிதர்கள், படத்துக்குக் கதை தேட வந்து நாடகம் பார்க்கும் படாதிபதிகள், ஸ்டார்களை உற்பத்தியாக்கும் டைரக்டர்கள், டைரக்டர்களையே உற்பத்தியாக்குகிற ஸ்டார்கள், இந்த நாடகத்தின் வெற்றியைப் பொறாமைக் கண்களோடு பார்த்து வயிறெரியப் போகும் வேறு நாடகக் குழுவைச் சேர்ந்த நண்பர்கள், எல்லாவற்றுக்கும் பின்னால் நன்றாக இருந்தால் கைதட்டி ஆரவாரிக்கப் போகிற-போரடித்தால் சீட்டியடித்து நடிகர்களோடு சேர்ந்து ‘டைலாக்’ பேசப் போகிற ரசிகர்கள் ஆகியோரை ரசிக்கிறார்கள்: அப்படி ரசிக்கும்போது முகத்திலே என்னென்ன பாவங்களைத் தேக்குகிறார்கள் என்பதை- பின்னால் வேறு என்னென்னவோ காரணங்களால் அவற்றை அவர்கள் மறைக்க நேரிடலாமென்பதால்.... அவர்களறியாமல் அவர்களது ரசனையை உளவுபார்க்க யாரோ முன்னேற்பாட்டுடன் அமைத்த மாதிரி இந்தத் துவாரங்கள் நாடகக்காரர்களுக்குப் பயன்படும்.

தன் ஸீனுக்குப் போகிற நேரம் தவிர அண்ணாசாமி எப்போதும் இவற்றின்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வழியாக, ரசிகர்கள் நாடகம் பார்க்கிற மாதிரி இந்த 'ரசிக நாடக'த்தைப் பார்த்துக் கொண்டிருப்பார். பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அந்தப் பார்த்த ரசனையைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கல்யாணியிடம் ஓடி வருவார்.

இன்னிக்கு இந்த இடத்திலே இன்னார் எப்படிக் 'கொன்னுட்டார்', அதைப் பார்த்துவிட்டு இன்னார் எப்படி அடக்க முடியாமல் கர்சீப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு அழுதார் என்பதையெல்லாம் உடனுக்குடன் 'ரிலே' செய்வார்.

கடைசியில் நாடகம் முடிந்து, இவர் துப்பு துலக்கியதற்கு மாறாக ஏதாவது அவர்கள் குறைகள் சொன்னாலோ அல்லது பத்திரிகையில் விமரிசனம் எழுதினாலோ அது எவ்வளவு பொய் என்பதற்கும் அவர்கள் வேண்டுமென்றே அவ்வாறு எழுதினார்கள் என்று தீர்மானித்து தனக்குத்தானே சமாதானம் கொள்வதற்கும் இந்தத் துவாரங்கள் வழியே அவர் பார்க்கின்ற இந்தக் கண் கூடான காட்சிகளே சான்றுகள்.

கல்யாணியும் எப்போதாவது தியேட்டரில் ரசிகர்களிடையே ஏதாவது கூச்சலோ, ரகளையோ ஏற்படும் போது அந்தத் துவாரங்களின் வழியாகப் பார்ப்பதுண்டு.

போன மாசத்தில் ஒருநாள் நாடகம் ஆரம்பிப்பதற்கு முதல் மணி அடித்த பிறகு, கல்யாணி மேக்-அப் ரூமில் அரைகுறை மேக்-அப்போடு மூன்றாவது ஸீனில் நுழைவதற்காகச் சற்று நிதானமாகத் தன்னை தயார் செய்து கொண்டிருந்தபோது தியேட்டரில் ஏதோ சலசலப்புக் கேட்டது, அது என்னவென்று கேட்டு அறிந்து கொள்வதற்காக அல்லது போய்ப் பார்த்துவந்து சொல்வதற்காக, அதற்கும் மேல் அதை அடக்கிச் சமாதானப்படுத்துவதற்காக அவள் உதட்டுச் சாயத்தைத் தீட்டிக்கொண்டே எதிரே இருந்த பெரிய கண்ணாடியில் தனக்குப் பின்னால் அண்ணாசாமி எங்கேயாவது நிற்கிறாரா என்று தேடினாள்.

ஆனால் அந்தச் சலசலப்பே உச்ச ஸ்தாயியில் ஆங்கிலத்தில் முழங்குகிற அண்ணாசாமியின் குரலாக இருக்கவே, மேக்-அப் ரூமிலிருந்து மேடைக்குப் போகிற வழியில் ஓடி, இடது பக்கம் இருந்த அந்தத் தட்டியின் துவாரங்களில் ஒன்றின் வழியாகத் தியேட்டரைப் பார்த்தாள்.

அங்கே கட்கத்தில் 'லெதர் பா'கை இடுக்கியபடி மேலே போட்டிருந்த துண்டு கீழே விழுந்தது கூடத் தெரியாமல் கையை உயர்த்தி எதிரே உள்ள மனிதனின் முகத்துக்கே நேரே நீட்டிநீட்டி, 'ஓ'வென்று, சொல்வது எதுவுமே எவருக்கும் புரிய முடியாத ஸ்தாயியில் அலறிக் கொண்டிருந்தார் அண்ணாசாமி. அவர்களைச் சுற்றி ஒரு இருபது முப்பது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பேர்.

நாடகம் ரசிக்க வந்த அத்தனை பேரும் கொஞ்சங் கொஞ்சமாக இவர்களைச் சுற்றிக் குழுமிக் கொண்டிருக்கிறார்கள்!

கல்யாணி ஏதோ ரகசியத்தை ஒட்டுக் கேட்பது மாதிரி, காது மடலைக் குவித்துக் கொண்டு, இந்த இரைச்சலைப் புரிந்து கொள்வதற்காக அந்தத் தட்டியோடு ஒண்டி நின்றாள்.

சப்தங்கள் ஒரு ஸ்தாயிக்குக் கீழே இறங்கினாலும் அப்படித்தான்: ஒரு ஸ்தாயிக்கு மேலே போனாலும் இப்படித்தான்!

கடைசியில் அண்ணாசாமியின் அந்த இரைச்சலில் வெகு சிரமப்பட்டுச் சேகரித்து கொண்ட விஷயம் இவ்வளவுதான்:

“உன் கையிலே பேனா இருக்குன்னா எதை வேணாலும் எழுதிடறதோ? அப்புறம் அவனவன் கையிலே என்ன இருக்கோ அதோட வருவான். நீ ‘கிரிட்டிக்’னா நாடகத்தைப் பத்தித்தானே எழுதணும்? ஒரு ‘பர்ஸ’னைப் பத்தி என்னய்யா எழுதறது? இதுக்கு ஏதாவது ‘யெல்லோ மகஸீன்’லே எழுதப் போயேன்யா. உனக்கு என்னய்யா நாடகத்தைப் பத்தித் தெரியும்? தர்ட்டி இயர்ஸ் எனக்கு எக்ஸ்பீரியன்ஸ். நீ பச்சா. பொறந்திருப்பியா அப்போ? அப்புறம் என்ன தைரியத்திலே ஐயா வரே, இங்கே? நீங்க எழுதறவங்கன்னு பயந்துக்கிட்டு நீங்க என்ன எழுதினாலும் நாங்க பேசாமல் இருப்போமா?...யூ கெட் அவுட்.”

இவ்வளவையும் தங்கு தடை இல்லாமல் சுத்தமான இங்கிலீஷில் தான் அவர் சொல்லிக்கொண்டிருந்தார். இங்கிலிஷ் ஒரு நல்ல பாஷைதான்! இவ்வளவு சப்தத்திலும் அதை மொழி பெயர்த்துப் புரிந்து கொள்ளும் போது ஏற்படுகிற விரசத்தை அந்த பாஷை மறைத்துக் கொண்டது.

கல்யாணி, அண்ணாசாமியின் இந்தத் தாக்குதல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிற அவனைப் பார்த்தாள்.

அவன் ‘இதுவும் தாங்கும்: இன்னமும் தாங்கும்’ என்கிற மாதிரி நின்று கொண்டிருந்தான். அவன் நிதானமாக ஆங்கிலத்தில் அவரைக் கேட்ட அந்த வார்த்தைகள் அவள் காதில் தெளிவாக வந்து விழுந்தன:

“சரி, இப்போது என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?”

இந்தக் கேள்விக்குக் கூட அண்ணாசாமி ஆவேசம் வந்தவர் மாதிரி எம்பி எம்பிக் குதித்துக்கொண்டு என்னவோ கத்தினார். ‘அப்பாலஜைஸ்’

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

‘அப்பாலஜைஸ்’ என்கிற ஒரு வார்த்தை மட்டும் காதில் வந்து வந்து மோதியது.

அவனை மன்னிப்புக் கேட்கச் சொல்லி உலகத்துக்கே ஏன் இவர் பிரகடனம் செய்யவேண்டுமென்று கல்யாணி நினைத்துக் கொண்டாள். அவன் கைகளை மார்பின்மீது கட்டிக்கொண்டு முன்னே கேட்ட மாதிரியே கேட்டான்:

“இல்லாவிட்டால்....?”

மறுபடியும் ஒரே சத்தம்தான் கேட்டது. அதிகபட்சமான இரைச்சலை நீக்கி, விஷயத்தை மட்டும் கிரஹித்துக் கொள்ள அவளுக்கு கிடைத்த வார்த்தைகள்:

“உன்னைக் கோர்ட்டுக்கு இழுப்பேன்: மான நஷ்டம் கேட்பேன்: உன் வேலைக்கே சீட்டுக் கிழிப்பேன். யார்னு நினைச்சே?”

அவன் கீழே கிடந்த அவரது துண்டை எடுத்துக் கொடுத்துச் சொன்னான்:

“அதைச் செய்யுங்க.... இப்போ என்னை நீங்க வெளியே போகச் சொல்லிட்டீங்க. நான் வரேன்” என்று அவன் திரும்பியபோது விவகாரம் இத்தோடு ஓயுமென்று அவள் நினைத்தாள்.

ஆனால் அவனுக்குச் சார்பாக நாலைந்துபேர் கிளம்பினார்கள். அவர்களும் அவனைப்போல் பத்திரிகைக்காரர்கள் போலிருக்கிறது. அண்ணாசாமியைப் போலவே அவர்களிலும் பலபேர் புரிகின்ற ஸ்தாயிக்கு மேலே குரலை உயர்த்திக் கொண்டு போட்ட இரைச்சலில் கல்யாணி எவ்வளவு முயன்று பார்த்தும் ஒரு வார்த்தை கூட அவளுக்குப் புரியவில்லை.

திடீரென்று நெருப்புப் பிடிக்கிறமாதிரிக் கலவரமும் கூட்டமும் அதிகமாயிற்று. அண்ணாசாமிக்கு ஆதரவாகவும் அவர்கள் பத்திரிகைக்காரர்கள் என்று தெரிந்து அவர்களுக்குப் பரிந்துகொண்டும் கும்பல் இரண்டாகப் பிரிந்து கூக்குரலிட்டது. இதன் அடுத்த கட்டம் கைகலப்பாக மாறிவிடுமோ என்று கல்யாணி அச்சம் கொண்டாள்.

ஸீன்காரர்கள், ஆர்கெஸ்ட்ராக்காரர்கள், சபாக்காரர்களில் சிலபேர், மேக்-அப் ரூமில் மேக்-அப் போட்டுக் கொண்டு ஸீனுக்கு ரெடியாகிவிட்ட ஒரு சிலரைத் தவிர மற்ற நடிகர்கள் அண்ணாசாமிக்குப் பக்கபலமாக வந்து நின்று அந்தக் கலவரத்தில் கலந்து கொண்டார்கள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

போட்ட மேக்-அப்போடு மேடைக்கு வந்து நின்று மைக்கில் கூவி, அவர்களைத் தான்தான் சமாதானப் படுத்த வேண்டி இருக்குமோ என்று நினைத்து அதற்குத் தயாராவதற்காக, நெற்றிக்கு மேலே முக்கோண வடிவில் மடித்துக்கட்டியிருந்த பெரிய ஸில்க் கர்சீப்பை அவள் நீக்கியபோது அதற்கு அவசியமில்லாதபடி மேடைக்கு வராமல் மைக் இல்லாமல், பாதிக்கப்பட்ட அவனே ஒரு நாற்காலியின்மீது ஏறி நின்று உரத்த குரலில் ‘கொஞ்சம் அமைதியாயிருங்கள்’ என்று கூட்டத்திற்குக் கட்டளையிடுவது மாதிரி வேண்டிக் கொண்டான்:

“இங்கே ஒண்ணும் நடந்துடலே, எல்லோரும் அவங்க அவங்க இடத்திலே உட்காருங்க ஃபர்ஸ்ட் பெல் அடிச்சாச்சி, நாடகம் ஆரம்பிக்கப் போகுது” என்று பின் வரிசைகளில் எழுந்து நின்ற ரசிகர்களைச் சமாதானப்படுத்தினான். பின்னர் தன்னுடைய நண்பர்களான பத்திரிக்கைக்காரர்களிடம் நெருக்கமாக நின்று, தோளில் கைபோட்டு அவர்களை அமைதிப்படுத்தினான். அப்புறம் ஆர்க்கெஸட்ராக்காரர்களையும் அந்த நாடகக் குழுவைச் சேர்ந்தவர்களையும் பார்த்து, “ம்…ம் ஆகட்டும், போய் வேலையைப் பாருங்க” என்று கொஞ்சம் அதிகாரமாகவே அவர்களை விலக்கினான்.

எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்த அண்ணாசாமி தான் சற்றும் எதிர்பாராதவிதமாய் இவ்வளவு களேபரம் நிகழ்ந்துவிட்ட அதிர்ச்சியினால் மிகவும் பதற்றமடைந்து இருப்பதைக் கண்டு இறுதியாக அவன் அவரோடு உடன்பாடு காணுகிறவன் மாதிரி, “வாங்க! உள்ளே போய்ப் பேசுவோம்” என்று அவரை இழுத்துக்கொண்டு மேடைக்குப் பின்புறமாக வந்தான்.

அதுவரை அவ்வளவையும் மேடைக்குப் பக்கவாட்டிலுள்ள அடைப்பின் சிறு துவாரம் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி வேகமாக மேக்-அப் அறைக்கு ஓடிவந்து முன்பு இருந்தது மாதிரியே கண்ணாடிக்கு முன்னால் அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். பின்புறம் முடிச்சு அவிழ்க்காமல் இருந்த அந்த முக்கோண வடிவில் மடித்துக் கட்டிய கர்சீப்பை கிரீடம் மாதிரி நெற்றிக்கு மேல் மாட்டிப் பின்புறம் இழுத்துவிட்டுக் கொண்டாள்.

இதுவரை நடந்தது எதுவுமே தெரியாதது போன்று, அங்கே நடந்த நிகழ்ச்சிகள் எதையுமே காணாதவள் மாதிரி, லிப்ஸ்டிக்கை எடுத்து உதட்டின் மேல் அழுத்தி அழுத்தி எழுதிக்கொண்டே, அவர்களிருவரும் உள்ளே ஒன்றாக நுழைந்து வருவதைக் கண்ணாடியினூடே பார்த்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது: "ஸார்! நீங்க என்னைத் தனிமையிலே ஒரு வார்த்தை தப்பா சொல்லிட்டாலும், நான் உங்களைச் சொல்லிவிட்டாலும் அது நம்ப ரெண்டுபேர் சம்பந்தப்பட்ட விஷயமாயிடும் நீங்க பாட்டுக்கு இத்தனை பேருக்கு மத்தியிலே என்னை 'கெட் அவுட்'னு கத்தினா ஒரு பத்திரிக்கைக்காரனை அவ மதிச்சிட்டீங்கன்னு மத்தவங்களெல்லாம் வராங்க, என்னாலே இவ்வளவு பெரிய ஸீன் ஆயிடுச்சேன்னு எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. 'ஸெகண்ட் பெல்' அடிக்கச் சொல்லுங்க. நாடகம் ஆரம்பமாகட்டும். எனக்கு வேற வேலை இருக்கு. இதை எல்லாம் 'ஸ்போர்ட்டி' வா எடுத்துக்கணும் ஸார்" என்று அவரை அனுப்பிவிட்டு, அங்கு ஓர் ஓரமாய்க் கிடந்த இரும்பு நாற்காலியில் அமர்ந்து அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

இவ்வளவு நேரமாய் ஏற்கனவே எழுதிய கண்ணையும் புருவத்தையும் டச்-அப் செய்கின்ற அவர்கள் அறியாதவாறு இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தாள் கல்யாணி.

இரண்டாவது மணி அடிப்பதற்கு உத்தரவு தருவதற்காகவும், ஸீனுக்குப் போவதற்கு முன்னால் நடிகர்கள் அவரை வணங்கிச் செல்வதற்காகவும் உள்ளே ஓடுகிற அவசரத்தில் அண்ணாசாமி அவன் கையைப் பிடித்துக் கொண்டு,

"மிஸ்டர் ரங்கா! போயிடாதீங்கோ: இருங்கோ, இதோ வந்துட்டேன்" என்று முற்றிலும் மாறிய பாவனையில் சொல்லிக்கொண்டே உள்ளே ஓடினார்.

அண்ணாசாமியின் 'சான்றோர் சினப் பண்பை' அறிந்திருந்த கல்யாணி மனசுக்குள் சிரித்துக்கொண்டாள். போகிற போக்கில் அவர் சொன்ன அவன் பெயரை ஒரு விநாடி கவனிக்க மறந்து மறுவிநாடி அந்த பெயர் மனசில் பதிய 'ஓ!' என்று நெரித்த புருவத்தோடு கண்ணாடியில் அவனை நன்றாகப் பார்த்து, 'நீங்கள் தானா அது?' என்கிற மாதிரித் திரும்பி அவனைப் பார்த்தவாறே நாற்காலியிலிருந்து எழுந்து நின்றாள் கல்யாணி.

இந்த 'ரங்கா' என்கிற ரங்கசாமியைப்பற்றி அவள் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறாள்.

லட்சக் கணக்கில் விற்பனையாகின்ற தினசரி, வார, மாதப் பத்திரிகைகளைப் பல மொழிகளில் ஏகபோகமாக நடத்திவரும் ஒரு பெரிய நிறுவனத்தோடு சம்பந்தப்பட்டு, அவற்றின் தமிழ் வாடிக்கைக்காரர்களுக்கு நன்கு அறிமுகமான பெயர் கொண்டவன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

என்பது மட்டுமல்லாமல் வேற பல சிறப்புக்களும் அவனுக்கு உண்டு.

பத்து வருஷங்களுக்கு முன்பு அந்த நிறுவனம் நடத்துகின்ற வாரப்பத்திரிக்கையில் அவன் கொஞ்ச காலம் எழுதிய சிறுகதைகளின் மூலம் முதலில் பிரபலமானான். அப்போதுதான் அந்தப் பத்திரிகையில் அவன் உதவி ஆசிரியனாகச் சேர்ந்திருந்தான். முதலில் அவனது கதைகளுக்கு வரவேற்பும் பின்னால் விமர்சனம் கலந்த வரவேற்பும் அப்புறம் வெறும் கண்டனங்களும் இறுதியாக இந்த மாதிரிக் கதைகள் எல்லாம் வரவே கூடாது என்கிற தடையும் வந்து அவன் கதை எழுதுவதையே நிறுத்திவிட்டான் என்கிற விஷயம் கல்யாணிக்குத் தெரியாது. ஆனால் அவன் கதை எழுதி வந்த காலத்திலிருந்தே அந்தப் பெயரை அவள் அறிந்திருந்தாள். அப்போது அந்தக் கதைகள் அவளுக்குப் பிடித்திருந்தன. அந்தக் காலத்தில் அவள் மாகாண அரசாங்கத்தின் ஏதோ ஒரு துறையில் குமாஸ்தாவாக இருந்தாள்.

அதே பத்திரிகையில் வேறு வேறு பகுதியில் அந்தப் பெயரைத் தொடர்ந்து பார்த்ததிலிருந்து அதே நபர் தான் இப்பொழுது கதை மட்டும் எழுதாமல் வேறு ஏதேதோ எழுதிக் கொண்டிருக்கிறார் என்பதையும் அவள் அறிந்து வைத்திருந்தாள். அதன் பிறகு ஒரு நீண்ட இடைவெளியில் அவன் பெயரையே அவள் பத்திரிக்கையில் பார்க்கின்ற சந்தர்ப்பமே கிட்டவில்லை.

அந்தக் காலத்தில்தான் அவன் அரசியல்வாதிகள் மத்தியில், பெரிய அரசியல் தலைவர்களையெல்லாம் ஏதாவது கொக்கிகள் மாதிரி கேள்வி போட்டு அவர்கள் வாயிலிருந்து வார்த்தைகளை இழுத்து, வம்பில் சிக்கவைத்து விடுகிற கலையில் மிகத் தேர்ந்த நிருபராக, எல்லோரும் அஞ்சுகிற அளவுக்குப் பிரபல்யமாகி இருந்தான்.

இந்த விஷயம் மட்டும் அவளுக்குத் தெரிய நியாயமில்லை.

அகிய இந்திய ரீதியிலுள்ள பெரிய அரசியல்வாதிகள் இங்கு விஜயம் செய்யும்போது நடத்துகிற பத்திரிகையாளர் கூட்டங்களில் அவன் கலந்து கொண்டு கேட்கின்ற கேள்விகளும், அவர்களை நழுவிப்போக விட்டுவிடாமல் வளைத்துப் பிடிக்கிற அவனது சாமர்த்தியமும் அவனைப் போன்ற பிற நிருபர்கள் மத்தியில் அவனுக்கு ஒரு 'ஸ்டார் வால்யூ'வை ஏற்படுத்தி இருந்தன.

ரொம்பவும் பழக்கப்பட்ட தலைவர்கள், நிருபர் கூட்டத்திலிருந்து ஒரு கேள்வி வந்ததும், அதைக் கேட்டவன் இந்த ரங்கா இல்லை என்று நிதானித்துத் தெரிந்துகொண்ட பிறகுதான் பதில் சொல்லுவார்கள்: கேள்வி

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கேட்டது ரங்காதான் என்று தெரிந்துகொண்டால் அவர்கள் நிதானம் இன்னும் சற்று நீடிக்கும்.

சந்தர்ப்ப நிர்ப்பந்தத்தால் சிலரை எதையாவது உளற வைத்து விடுவதிலே இவன் ரொம்பச் சமர்த்தன்.

அடுத்த நாள் பத்திரிகையில் ‘ஏழு கால’த் தலைப்பிலே அதைப் பார்த்ததன் பிறகு அந்தத் தலைவர்கள் அதற்கு மறுப்பு விடுவார்கள்! அந்த மறுப்பையும் அதே மாதிரி முக்யத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கும் பெருந்தன்மையும் அவனுக்கு உண்டு.

ஏனெனில் முதல்நாளே ‘ப்ரஸ்-கான்ஃப்ரன்ஸ்’ முடிந்து திரும்புகிறபோது நிருபர்களிடம் அவன் நிச்சயம் சொல்லி வைத்திருப்பான்: ‘நாளைக்குப் பாருங்கள் இதற்கு மறுப்பு வரப்போகிற’தென்று. எனவே, அவனுக்கு இரட்டிப்பு வெற்றி அதில்!

பலசமயங்களில் அவனால் அரசியல் உலகில் பெரிய பெரிய விவகாரங்கள் ஏற்பட்டுவிட்டிருக்கின்றன.

பல தலைவர்கள் அடுத்த சந்திப்பிலே அவனைக் கண்டபொழுது தங்களுடைய தகுதியையும் மறந்து அவன் மீது சீறி விழுந்திருக்கிறார்கள். சில பேருக்கு அவனைக் கண்டாலே முகம் சுளித்துப் போகும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவர்களை நன்கு புரிந்து கொள்வதற்குத் தனக்கு இது வாய்ப்பாகி விட்டது என்கிற திருப்தி உணர்ச்சியே அவன் முகத்திலே தென்படும். தன்னை எவர் எவ்வளவு மோசமாக அவமதித்த போதிலும், கோபித்துக் கொண்ட போதிலும், ‘நான் ஒரு நிருபர். இவை யாவும் எனக்குச் செய்திகள்’ என்று சொல்லுகிற மாதிரி அவன் புன்முறுவல் மாறாமல் நிற்பான். கோபித்துக் கொண்டு விட்டார்களே என்கிற உறுத்தல் இல்லாமல், ‘இது என் கடமை’ என்கிற மாதிரி அடுத்த கேள்வியைக் கேட்பான். எனவே, சில தலைவர்கள் அவனைத் தாஜா செய்ய முனைவர்.

எந்த அரசியல் கட்சியிலும் சார்பில்லாத நியாயபூர்வமான அறிவுணர்ச்சியும், எந்தத் தலைவனின் தாஜாவுக்கும் பணிந்து போகாத தன்னம்பிக்கை மிகுந்த சுதந்திரப் போக்கும் அமெரிக்காவிலோ பிரிட்டனிலோ இருக்கிற ஒரு பத்திரிகை நிருபனுக்கு இன்றியமையாத பண்பாக இருக்கலாம். இந்தியாவில், அதுவும் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட பண்புகளில் ஏதோ கொஞ்சம் தங்களிடம் தலை எடுக்கும் போதெல்லாம் அதற்குரிய ‘பலனை’ நமது நிருபர்கள் அடிக்கடி ‘நறுக்’ ‘நறுக்’கென்று எங்கேயிருந்து விழுகிறது என்று தெரியாமல் விழுகின்ற

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

குட்டுக்களின் மூலம் அவ்வப்போது அனுபவித்து விடுகிறார்கள்.

அப்படி ஓர் அனுபவத்தின் விளைவாகத்தான் ரங்காவுக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு நிருபர் பதவியே பறி போயிற்று. தட்டிக் கழிக்க முடியாத ரொம்பப் பெரிய இடத்திலிருந்து வந்த நிர்ப்பந்தத்தின் காரணமாக உழைப்பும் திறமையும் உடைய ரங்காவை வெளியேற்ற மனமில்லாமல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கலைத்துறை விமரிசகனாகும்படி அந்த நிறுவத்தின் முதலாளியே அவனிடம் கலந்து பேசி அவனை ஒப்புக் கொள்ள வைத்தார். பாவம்! அவருக்கென்ன தெரியும்? அரசியல் உலகில் இல்லாத விருப்பு வெறுப்புக்களும் நிர்ப்பந்த நெருக்கடிகளும் இந்தக் கலைத் துறையில்தான் அதிகமென்பது!

ஆனால், ரங்காவைப் பொறுத்தவரை அவனுக்கு அதனால் நஷ்டமெதுவும் இல்லை.

அந்தக் கதை எழுதுகிற ரங்காதான் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அந்தப் பத்திரிகையில் இப்போது கலைத்துறை விமரிசகனாயிருக்கிறானென்பதையும் கல்யாணி அறிந்து வைத்திருக்கிறாள்.

இதே இடைக்காலத்தில்தான் கல்யாணி அரசாங்க உத்தியோகத்தைவிட்டு நாடக அரங்கில் 'முழு நேர நடிகை'யாக நுழைந்து நின்றிருக்கிறாள்.

எனவே இப்போது, தான் சம்பந்தப்பட்ட துறையில் அவனும் மாறி இருப்பதற்காக அவனோடு ஒரு மானசீக ஒருமை கண்டாள் கல்யாணி.

ஆனால், அவனை அவள் நேருக்கு நேர் இதுவரை சந்தித்ததில்லை 'அவன் இளைஞனாக இருப்பானா வயதானவனாக இருப்பானா?' என்கிற கற்பனைகளிலெல்லாம் அவள் மனம் இறங்கியதில்லை. அவன் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அவனது விமரிசனங்கள் சிலவும், அம்பு மாதிரி படிக்கிறவர்களின் மனசில் பாய்ந்து தைக்கிற சில சொற் பிரயோகங்களும், பத்து வருஷத்துக்கு முன்னால் அவன் எழுதிய சில கதைகளும்தான் அவளுக்கு இப்போதும் ஞாபகம் வந்தது.

அண்ணாசாமியை, 'அவர் ஒரு அமெச்சூர் ஆபீசர்' என்று அவன் சூட்டிய பட்டம் இந்த நாடகக் குழுவைச் சேர்ந்தவர்கள்கூட அவர் இல்லாத சமயத்தில் அவரைக் குறிப்பிடப் பயன்படுத்தும். அளவுக்குப் பிராபல்யம் கொண்டுவிட்டது.

கல்யாணி அதைப் படித்து விழுந்து விழுந்து சிரித்த போது அண்ணாசாமி அவளிடம்கூடக் கோபித்துக் கொண்டார். அவர் கோபித்துக் கொள்கிற

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அளவுக்கு உண்மை அவனது அந்த விமரிசனத்தில் அழுத்தமாக விழுந்து இருந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த நாடகக் குழு அரங்கேற்றிய ஒரு புதிய நாடகத்துக்கு விமரிசனம் எழுதுவதாகப் பெயர் பண்ணி அண்ணாசாமியைத் தனிப்பட்ட முறையில் 'வாங்கு வாங்கு' என்று வாங்கி விமரிசனம் செய்திருந்தான் அவன்.

எப்படி நாடகத் துறையை நாசப்படுத்துவதற்கென்று இந்த மனிதருக்கு அரசாங்கத்தில் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்று மிகக் கிண்டலாக எழுதியிருந்தான். அவர் உத்தியோகத்துக்கு லீவு போட்டுவிட்டு நாடகம் போடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார் என்ற விஷயத்தையெல்லாம் சாங்கோபாங்கமாக அதில் விவரித்திருந்தான்.

நாடகத்தையும், 'அது எப்படி ஒரு நாடகமே அல்ல' என்று ரொம்பவும் தர்க்கபூர்வமாக விமரிசனம் செய்திருந்தான்.

அவனது விமரிசனத்தைப் படிக்கும் போதெல்லாம் கல்யாணிக்கு வியப்பே மேலிடும்.

'யார் கண்ணிலும் படாத குற்றங்கள், யார் புத்திக்கும் எட்டாத குறைகள் இவனுக்கு மட்டும் எப்படி எல்லாவற்றுக்கும் மத்தியில் தெரிந்துவிடுகிறது?' என்று அவள் ஆச்சரியப்படுவாள். 'அதற்குமேல் எந்தச் சாக்குப் போக்கும் சொல்லி எவரும் தப்பித்து நழுவ முடியாமல் நாலா பக்கத்திலிருந்தும் வியூகம் அமைத்துத் தாக்குவது மாதிரித் திறமையாக இவனால் எப்படி வாதம் செய்ய முடிகிறது!' என்று அவனது திறமையில் அவள் லயித்துப் போவாள். மற்றவர்களெல்லாம் அதைப் படித்துவிட்டுத் தங்களுக்குள்ளாக மனம் போனபடிப் பாமரத்தனமாக விவாதித்து அவனுக்குப் பதில் சொல்கின்ற நினைப்பில் தங்களைத்தாங்களே பிறாண்டிக் கொள்கிறமாதிரி அவனைத் திட்டித் தீர்ப்பதை மனசில் ஒரு சிரிப்போடு அவள் பொறுத்துக் கொள்வாள்.

நாடகம், சினிமா சம்பந்தப்பட்டவர்கள் நாலு பேர் சேர்ந்தால் அவனுடைய விமரிசனத்துக்காக அவனைத் திட்டித் தீர்ப்பதையே அவள் கண்டிருக்கிறாள். ஆனால் அவர்கள் எல்லோருமே தன்னைமாதிரி நேர்மையாக அவன் மீது மரியாதை கொள்ளாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் அவன் மீது மரியாதையும் பயமும் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அண்ணாசாமியும்-அவரைத் தனிப்பட்ட முறையில் அவன் விமரிசனம் செய்கிற வரைக்கும்-எவ்வளவுதான் அவனை வெளிப்படையாகத் 'திமிர் பிடித்தவன்' 'மண்டைக்கனம்' என்றெல்லாம் பேசியபோதிலும், உள்ளூற அவனிடம் மரியாதை கலந்த பயம் கொண்டிருந்தார்.

அவரைத் தனிப்பட்ட முறையில் அவன் விமர்சிக்க இலக்காகி இருந்த அந்த நாடகத்துக்கு அவனை அவர் ரொம்ப நம்பிக்கையோடு அழைத்திருந்தார்.

"நீ வேணுமானால் பாரேன். இந்த நாடகத்தை ரங்கா நிச்சயம் பாராட்டப் போகிறான்" என்று பலமுறை கல்யாணியிடம் அவர் கூறி இருக்கிறார். கல்யாணிக்கும் 'தப்பித் தவறி இந்த நாடகம் நன்றாகத் தான் அமைந்துவிட்டதோ? ரங்காவும் பாராட்டி விடுவானோ!' என்ற நப்பாசை இருந்தது.

ஆனால், நாடகத்தை அவன் கிழிகிழியென்று கிழித்து விமரிசனம் எழுதிய பிறகுதான் அதிலுள்ள குற்றங் குறைகளெல்லாம் அவளுக்கே தெரிந்தன. 'இந்தக் குற்றங் குறைகளுக்கெல்லாம் இந்த நாடகக் குழுவோ, இந்த நாடக ஆசிரியனோ பொறுப்பல்ல: இது தமிழ்நாட்டின் தலைவிதி' என்று அவன் எழுதி இருந்தான்.

போதாக்குறைக்கு அன்றைக்குத் தலைமை வகித்த பெரிய மனிதர் இதை 'ஓஹோஹோ' என்று புகழ்ந்து வைத்தார். 'ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு மகாகவி பிறப்பது மாதிரி, நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை கலைப் பூங்காவிலே மலரும் காவியமலர் இந்த நாடகம்' என்றெல்லாம் ஓரத்தில் நின்றிருந்த கல்யாணியைப் பார்த்து இளித்து இளித்துப் புகழ்ந்து வைத்தார் இவர். இந்த புகழுரைகளைக் கேட்டு அண்ணாசாமியும் புல்லரித்துப் போயிருந்தார். கல்யாணிக்கு அன்றைக்கே அது கொஞ்சம் அதிகமாகத்தான் பட்டது.

ரங்கா எழுதிய விமரிசனத்தின் கடைசி வரியாக அவன் எழுதியிருந்த வாசகத்தை இப்போது நினைத்துக் கொண்டாலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவன் எழுதி இருந்தான்"

'நல்லவேளை! நூறு வருஷத்துக்கு ஒரு முறைதான் இப்படிப்பட்ட நாடகம் வருமாம்!'

இந்த ஞாபகம் வந்ததும் மேக்-அப் ரூமில் கண்ணாடி முன்னால் தனிமையில் உட்கார்ந்திருந்த கல்யாணி, தன் சிரிப்பை அவன் கண்டுவிடக் கூடாதே என்கிற பயத்தோடு தலையைக் குனிந்து

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொண்டாள்.

என்ன இருந்தாலும் அண்ணாசாமியைப் பற்றி, 'அவர் ஆபீசில் சரியாக வேலை செய்யாமல் நாடகத்தைக் கட்டி அழுவது நாடகத்துக்கும் கேடு, அவருடைய நாணயத்துக்கும் கேடு. என்றெல்லாம் அவன் எழுதி, 'இந்த விஷயத்தில் அரசாங்கமே தலையிட வேண்டுமோ?' என்று அவருடைய வேலைக்கே உலை வைக்க முயன்றது கொஞ்சம் அதிகப் பிரசங்கம்தான் என்று அவளும் அண்ணாசாமியிடம் ஒப்புக் கொண்டிருந்தாள்.

இந்த இரண்டு மாத காலமாக, 'அவனை எங்கேயாவது பார்த்தால் நான் சும்மா விடுகிறேனா பார்' என்று அண்ணாசாமி அடிக்கடி கறுவிக் கொண்டிருந்தார்.

அண்ணாசாமிக்கு அடிக்கடி கோபம் வரும். அதே மாதிரி அது வந்த சுவடு தெரியாமல் போய்விடுவதும் உண்டு. இது அந்தக் குழுவில் இருப்பவர்களுக்குத் தெரியும், இந்த அவருடைய குணம் இவனுக்கும் எப்படி தெரிந்திருக்கிறது என்று அவள் நினைத்துக் கொண்டிருந்த போது, அவனைக் காக்க வைத்துவிட்டு உள்ளே போயிருந்த அண்ணாசாமி அவசரம் அவசரமாகஓடி வந்தார். வந்த வேகத்தில் அவனைத் தாண்டிப் போன பிறகுதான் கல்யாணியை அவனுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்தது.

முதலில், சற்றுமுன் அவனிடம் தான் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதற்காக மன்னிப்புக் கேட்பதா? கல்யாணியை அவனுக்கு அறிமுகம் செய்து வைப்பதா? என்று தடுமாறி இரண்டையும் ஒரே சமயத்தில் அவர் செய்துவைத்தார்.

கல்யாணி! நான் இவரை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கணும். மிஸ்டர்...ரங்கா! மன்னிச்சுக்குங்கோ ஸார், இவர்தான் மிஸ்டர் ரங்கா! நம்ப 'எனிமி' நெம்பர் ஒன். ஆனாலும் அதுக்காக நான் கொஞ்சம் 'ஓவரா' சத்தம் போட்டுட்டேன். ஐ யாம் ஸாரி மிஸ்டர் ரங்கா! நீங்க இருந்து நாடகம் பார்த்துவிட்டுத்தான் போகணும். நீங்க திட்டுங்கோ, அதனாலே பரவாயில்லை. ஆனால் நாடகம் பார்த்துவிட்டுப் போங்கோ."

"என்னை அடிக்கறதுக்குப் பதிலா இந்த தண்டனையா?" என்று கேட்டு அவன் சிரித்தான்: "நீங்க சொன்னதுக்காக இல்லே ஸார். நானே இண்டர்வெல் வரைக்கும் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன். மீதியை இன்னொரு நாளைக்கு-நீங்க டிக்கெட் அனுப்பாட்டிப் போனாலும் துட்டுக் குடுத்து வாங்கிக்கிட்டு வந்து பார்க்கிறதா இருக்கேன். உங்க நாடகத்துக்காக இல்லே ஸார், எங்க பத்திரிகைக்காக: நமக்கு அது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தொழிலாச்சே சாமி!” என்று சொல்லிக்கொண்டே அறிமுகம் செய்விக்கப்பட்ட அவளுக்கும் வணக்கம் கூறினான்.

இத்தனை நேரமாய்க் கண்ணாடி வழியே அவனை ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி இப்போது நேருக்கு நேர் அவனைப் பார்த்தாள். ஆனால் பேச்சு வரவில்லை வெறும் சைகையினால் மட்டுமல்லாமல் மனமே குவிந்து அவள் அவனை வணங்கினாள்.

அவனது எழுத்துக்கும், அவனது உருவத்துக்கும் இருந்த வேற்றுமை அவளை இன்னும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவனது எழுத்துக்களைப் படித்தபோது சற்று நேரத்துக்கு முன் அவனிடம் சண்டையிடுகையில் அண்ணாசாமி கூறினாரே அந்த ‘முப்பது வருஷ அனுபவம்’ அவனுக்குத்தான் இருக்கும் என்று அவள் நினைத்திருந்தாள். இப்பொழுது அவனை நேரில் பார்க்கும் போது அவனது தோற்றமும் ஒரு முப்பது வயது கணிக்கத் தக்க இளமையும் இவை எல்லாவற்றுக்கும் முரண்பாடான அமைதியும் நிதானமும் உடைய தன்மைகளும் எதுவும் பேசமுடியாத மௌனத்தில் அவளை ஆழ்த்தி விட்டன. ஆனாலும் ஏதாகிலும் பேச வேண்டுமே என்பதற்காக அவள் சொன்னாள்:

“உங்க கதையெல்லாம் நான் படிச்சிருக்கேன். நீங்க ஏன் இப்போ கதையே எழுதறதில்லே?”

அவனே மறந்துபோன விஷயம்போல் இருக்கிறது அது.

“கதையா?” – என்று ஆச்சரியத்தோடு புருவத்தை உயர்த்தி அவன் மோவாயைச் சொரிந்து கொண்டான்.

பத்து வருஷத்துக்கு முன்னால் ஏதோ போகிற போக்கில் சில கதைகள் எழுதி, இப்போது அவற்றைத் திரும்பிப் பார்த்தால் வெட்கப்பட நேருமே என்று தானே அதை ஒதுக்கி வைத்த பின்னர், திடீரெனச் சற்றும் எதிர்பாராத ஓர் இடத்தில், சற்றும் எதிர்பார்க்காத முறையில் இவளிடமிருந்து அதற்குப் பாராட்டுரை வந்ததும் அவனுக்கு ஒன்றும் பிடிபடாமல் போயிற்று.

“நான் ஒரு விமரிசகனானப்புறம் அந்தக் கதைகளையெல்லாம் ஞாபகம் வச்சுக்கிட்டு இருக்கிறது விமரிசன தர்மத்துக்கு நியாயமா?” என்று அவன் திருப்பிக் கேட்டான்.

“அப்போது அந்தப் பக்கம் வந்த யாரோ கல்யாணியிடம், “அடுத்தது உங்க ஸீன் தான்” என்று தயார் படுத்தவே, அவன் அவளிடம் விடை பெற்றுக் கொண்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவள் அவனிடம் கரங்கூப்பி விடை பெற்றவாறே சொன்னாள்:

“உங்க கதைகள் மாதிரியே உங்க விமரிசனமும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். என்னிக்கு உங்க விமரிசனம் எல்லோருக்கும் பிடிக்கிறதோ-புரியுதோ-அன்னிக்குத்தான் நம்ப நாடக உலகம் உருப்படும். உங்களைப் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்: அப்புறமா சந்திக்கலாங்க. உங்ககிட்டே நிறையப் பேசணும்” என்று சொல்லிக் கொண்டே மேடைக்குப் பின்னால் இருளில் மறைந்தாள் அவள்.

அவள் அந்த இருட்டில் போய் நின்றபின் திரும்பிப் பார்த்தாள். அவன் அங்கேயே நின்று, தான் வந்து மறைந்த அந்த இருண்ட திசையை நோக்கியவாறு ஏதோ ஆழ்ந்த சிந்தனையுடன் புகை பிடித்துக் கொண்டிருப்பதை அவளால் அங்கிருந்து பார்க்க முடிந்தது,

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் அவள் அவனுடைய பத்திரிகை விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதினாள். அந்த ஒரு மாச காலமாக அவள் அவனைப் பற்றி அடிக்கடி நினைத்துக் கொண்டதனாலேயே அந்தக் கடிதத்தை எழுதினாள். ‘அவனும் தன்னைப் பற்றி அவ்விதம் அடிக்கடி நினைத்துக் கொள்கிறானா?’ என்றும் அறிவதற்காக அவள் அந்தக் கடிதத்தை எழுதினாள். அவனுடைய எழுத்தையும் அன்றைக்கு அவனைச் சந்தித்தபோது கண்ட அவனது உருவத்தையும் தவிர அவனைப்பற்றி அவளுக்கு வேறு எதுவும் தெரியாது. எனவே, அவனைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டவையெல்லாம் நினைப்பு என்கிற எல்லைக்கு மேல் எதுவாகவும் வளரவில்லை. அதிகம் போனால் மானசீகமாக அவன் உருவத்தை அவள் அடிக்கடி கண்டுகொண்டு இருந்தாள்.

அண்ணாசாமிக்கும் அவனுக்கும் சமாதானம் செய்து வைப்பது என்று தனக்குள்ளே ஒரு காரணத்தை அவள் வளர்த்துக் கொண்டு அந்தக் கடிதத்தை எழுதினாள். அவளே அறியாமல், அவள் உள் மனம் ஆசைப்படுகிற விதமாக எதுவும் ஏற்படாமல் போனால் அந்த ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காகவும், இப்படி ஒரு நல்ல விளைவாக அது முடிந்தது என்கிற திருப்தியாவது மிஞ்சட்டுமே என்பதற்காகவும்தான் அவள் அப்படி ஒரு காரணத்தை அண்ணாசாமிக்கும் அவனுக்கும் சமாதானம் ஏற்படுத்தி வைப்பது என்று ஏற்கனவே நடந்துவிட்ட ஒரு விஷயத்தைக் காரணமாக- ஏற்படுத்திக் கொண்டாள் போலும்!

அவள் அந்தக் கடிதத்தில் தனது பேரையோ விலாசத்தையோ தரவில்லை. அது அப்படி மொட்டையாக ஆரம்பித்தது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மதிப்பிற்குரியவருக்கு,

‘இந்தக் கடிதம் எங்கிருந்து வருகிறதென்று உங்களால் ஊகிக்க முடிந்தால் என்னைச் சந்திக்கவும்’

கையெழுத்தே இல்லாமல் அந்தக் கடிதம் மொட்டையாக முடிந்தது.

இப்படி ஒரு கடிதத்தை எழுதி, அதைத் தபாலில் சேர்க்கலாமா, கூடாதா?’ என்ற தவிப்போடு இரண்டு நாள் கையிலேயே அதை அவள் வைத்திருந்தாள்.

அதன் பிறகு ஏதோ ஒரு தைரியத்தில், ஏதோ ஒரு சமாதானத்தில், ஏதோ ஒரு நம்பிக்கையில், தானே அதைத் தபால் பெட்டியில் கொண்டு சேர்த்தாள்.

அவனும் கூட, அந்தக் கடிதத்தின் மேல் இருந்த விலாசத்தைக் கொண்டு மட்டுமே அந்தக் கடிதம் தனக்குத்தான் வந்தது என்று முடிவு செய்து கொண்டிருக்க முடியும்.

அதற்குப் பின்னர் ஒரு மாசம் கழித்து அவனிடமிருந்து அவளுக்கும் ஒரு கடிதம் வந்தது.

‘தங்களை ஒரு பேட்டிக்காகச் சந்திப்பதற்கு இன்ன தேதியில் நாலுமணிக்கு வர உத்தேசம். தங்கள் வசதிக்கு எழுதவும்’ என்று மட்டும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது. அதில் அவன் கையெழுத்தும் இருந்தது.

அந்தக் கடிதத்துக்குத் தான் எப்படி பதில் எழுதுவது என்று அவள் மிகவும் குழம்பிப் போனாள். தனது இந்தக் கடிதத்தின் கையெழுத்தை வைத்து அந்தக் கடிதம் எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடிக்க அவன் செய்யும் முயற்சியே இது என்றும் அவள் சந்தேகித்தாள். கடைசியில் டெலிபோன் மூலம் தனது சம்மதத்தை அவனுக்கு அவள் தெரிவித்திருந்தாள்.

இப்போது நாலு மணிக்கு அவன் வரப் போகிறான்.

இன்னும் மணி நாலாகவில்லை. நர்ஸரி பள்ளியில் ஏக அமளியாக இருந்தது. அந்தக் குழந்தைகள் எல்லோரையுமே அவளுக்குப் பிடிக்குமென்றாலும் அவளையும் பிடித்த சில குழந்தைகளும் அங்கு உண்டு.

சைக்கிள் ரிக்ஷாவிலும், ஆயாக்களின் துணையோடு நடந்தும், வேலைக்காரர்களின் சைக்கிள் பின் ஸீட்டிலும் அந்தக் குழந்தைகள்பள்ளிக்கு வரும்போதும், திரும்பிச் செல்லும் போதும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பார்த்துக் கொண்டே நிற்கும் கல்யாணி, தன்னைப் பார்க்கிற குழந்தைகளிடம், யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அழைக்கிற மாதிரி முகத்தருகே விரல்களைக் குவித்துப் புன்னகையோடு சைகை காட்டிய உறவில், சில குழந்தைகள் அவளோடு புன்னகை பரிமாற்றம் கொள்கிற அளவுக்குப் பரிச்சயம் கொண்டிருந்தன.

கல்யாணியின் இந்த வீட்டுக்கு முன்னால் உள்ள சிறிய காம்பவுண்டில் கொஞ்சம் அதிகமாகவே பூச்செடிகளை அவள் வளர்த்து வந்தாள். ரோஜாக்களில் மட்டும் ஓர் ஆறுவகை வைத்திருந்தாள். அறுபது வகைகள்கூட வைத்துக்கொள்ள அவளுக்கு ஆசைதான்! இந்த வீட்டுக்குள் அவள் குடியேறியுள்ள இந்த ஆறு மாதத்தில் இவ்வளவுதான் சாத்தியமாயிற்று.

சில சமயங்களில் ஓரிரு குழந்தைகள் ரோஜாப் புஷ்பங்களுக்காகக் கை நீட்டிக்கொண்டு இங்கே வரும். அந்தப் புஷ்பங்களினுடைய மலர்ச்சிக்கே அர்த்தம் காணுகிற மாதிரி அவள் மகிழ்ச்சியோடு அவற்றைப் பறித்து அந்தக் குழந்தைகளுக்குத் தருவாள்.

இப்போது அந்த நர்ஸரியில் மணி அடித்து முதலில் குழந்தைகள் வரப்போகின்றனவா, அண்ணாசாமி வரப் போகிறாரா அல்லது அவனே வந்துவிடப் போகிறானா என்று பல எதிர்பார்ப்புகளுடன் அவள் உட்கார்ந்திருந்தாள்.

தெருக்கோடியில் டாக்ஸி வருவது தெரிந்தது. அண்ணாசாமியும் கூட டாக்ஸியில்தான் வருவார். ஆனால் இன்று அந்த டாக்ஸியில் வருவது அண்ணாசாமியாகவும் இருக்கலாம். அல்லது ரங்காவாகவும் இருக்கலாமே என்ற பதட்டத்துடன் அவள் எழுந்து நின்று கொண்டாள்.

‘மூணரை மணிக்கே வருவதாகச் சொன்னாரே’ என்று அண்ணாசாமியை நினைத்துக் கொண்டாள். ‘ஒருவேளை அவருக்கு முன்னால் ரங்கா வந்து இறங்கி விட்டால்? என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது’ என்றெல்லாம் அவள் யோசிக்க ஆரம்பித்தாள்!

‘அவரை வரவேற்று ஹாலில் உட்கார வைத்துவிட்டுச் சமையலறைக்குப் போய், டிபன் செய்துகொண்டு இருக்கிற பட்டம்மாளோடு ஏதோ தயார் செய்கிற பாவனையில் கொஞ்ச நாழி கழித்தால் அதற்குள் அண்ணாசாமி வந்துவிட மாட்டாரா?’ என்று நினைத்துக் கொண்டாள். இடையில் ஒரு தடவை அறைக்குள் போய் ஏதேனும் எடுக்கிற சாக்கில் ஹாலை ஒரு முறை நடந்து கடக்க வேண்டும். அப்போது அவரைப் பார்த்து ‘ஸாரி.... உங்களைக் காக்க வெச்சுட்டு என்னமோ செய்துகிட்டு இருக்கேன்...’

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

என்று சொல்லிக்கொள்ள வேண்டும். திரும்பி அறைக்குள்ளிருந்து வரும்போது ஏதாவது புத்தகமோ, பத்திரிகையோ, போட்டோ ஆல்பமோ-எதையாவது கொண்டுவந்து அவர் கையில் தந்து சற்று நின்றுவிட்டு, 'இதோ வந்துட்டேன்' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சமையலறைக்குப் போய்விட வேண்டும் என்றெல்லாம் அண்ணாசாமி வருவதற்கு முன் பேட்டியைத் துவக்கி விடாமல் இருக்க என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று அவள் மனசில் திட்டம் தீட்டிக் கொண்டிருந்த போது, அண்ணாசாமியே டாக்ஸியில் வந்து இறங்கினார். இறங்கும்போதே வாயிலிருந்த வெற்றிலைச் சாற்றைச் சுவரோரமாகக் குனிந்து துப்பிவிட்டு, தெருவெல்லாம் கேட்கிறமாதிரி பெருங் குரலில், "கல்யாணி: மன்னிச்சுக்கோ! மூணரை மணின்னு சொல்லிவிட்டு லேட்டாக்கிட்டேன். ஆனால், இன்னும் நாலாகலை" என்று கூறிய வாறே டாக்ஸியை அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

ஹாலுக்குள் நுழைந்தவர், நாலு புறமும் சுற்றிப் பார்த்துச் சமையலறைப் பக்கம் தலையை நீட்டி ஆழ்ந்து சுவாசம் இழுத்து, "என்ன விசேஷம்? பட்டம்மா என்னவோ டிபன் பண்றாள், நெய்மணக்கறது!" என்று கூறிக்கொண்டே சமையலறையை நோக்கி நடந்தார்.

"என்னடி பட்டு. உன்னைப் பெண் பார்க்க யாராவது வராளா? இல்லே, உங்க எஜமானியை பார்க்க வராளா!" என்று பரிகாசம் பண்ணினார்.

சமையலறையில் காரியம் செய்து கொண்டிருந்த சிற்றாடை தரித்த அந்தப் பதினைந்து வயசுச் சிறுமி "போங்க சாமி? உங்களுக்கு வேற வேலை இல்லை" என்று சிணுங்கினாள்.

பட்டம்மாளை அண்ணாசாமி கேட்டது காதில் விழாத கல்யாணி தெரு வராந்தாவில் நின்றபடியே உட்பக்கம் திரும்பி அண்ணாசாமியிடம் சொன்னாள்.

"யார் வரப் போறதுன்னு உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச ஃபிரண்டு மிஸ்டர் ரங்கா!" என்று கூறி அவர் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

"வரட்டுமே! எனக்கென்ன பயமா?" என்று அவள் வார்த்தையை நம்பாமல் ஹாலில் உட்கார்ந்து கொண்டார் அண்ணாசாமி.

"நிஜமாத்தான் ஸார். ஏதோ அவங்க பத்திரிகைக்குப் பேட்டி காண வரலாமா?ன்னு கேட்டு எழுதி இருந்தார். 'சரி'ன்னேன். நீங்களும்கூட இருந்தீங்கன்னா நல்லா இருக்கும்னு தோணிச்சு! நீங்கதானே எனக்கு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கார்டியன்!" என்று சொல்லிக் கொண்டே அவனிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தை அவரிடம் நீட்டினாள்.

அப்போது நர்ஸரி பள்ளிக் கூடத்தில் மணி அடித்தது, ஹோ'வென்ற இரைச்சலோடு ஓடிவரும் குழந்தைகளை வேடிக்கை பார்ப்பதற்காக அவள் வராந்தாவில் வந்து நின்று கொண்டாள். அதே சமயம் தெருக் கோடியில் ரங்கா சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். குழந்தைகளைப் பார்க்கிற பரவசத்தில் அவன் வந்ததையோ காம்பவுண்டு கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததையோகூட அவள் கவனிக்கவில்லை.

குழந்தைகளை அவள் ரசிகத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அவன் தனக்குள் சிரித்துக்கொண்டான். வராந்தா சுவரோரமாகச் சைக்கிளை ஸ்டாண்டுபோட்டு நிறுத்திவிட்டு அவனும் அந்தக் குழந்தைகளைப் பார்த்து ரசித்துக்கொண்டு நின்றான்.

திடீரென்று அவள் திரும்பியபோது, சற்றும் எதிர்பாராத விதமாக அவனைப் பார்த்து, "வணக்கம் சார்! வாங்க! எப்படி வந்தீங்க? நான் உங்களைத்தானே எதிர்பார்த்துக்கிட்டு நிக்கறேன்" என்று வரவேற்றாள். தூணோரமாக இருந்த சைக்கிளைப் பார்த்ததும் அவனிடம் அவள் ஆச்சரியத்தோடு சொன்னாள்.

"நீங்க சைக்கிளிலே வந்தீங்களா? நான் ஒரு காரையோ இல்லாட்டி ஒரு டாக்ஸியையோ எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். அதனால் நீங்க வந்ததை நான் 'மிஸ்' பண்ணிட்டேன்... உள்ளே வாங்க ஸார்: மிஸ்டர் அண்ணாசாமிகூட வந்திருக்கார்" என்று அவள் கூறியதைக்கேட்டு அவன் வேடிக்கைக்காக ஒரு நிமிஷம் தயங்குவது போல் பாவனை காட்டிச் சொன்னான்.

"மிஸ்டர் அண்ணாசாமியா? பயமா இருக்கு! ஸார், வரலாமா?" என்று ஹாலுக்குள் தலையை நீட்டிக் கேட்டான்.

"வாங்கோ மிஸ்டர் ரங்கா! குட்ஈவினிங்! நீங்க வரப்போறீங்கங்கற விஷயமே இப்போதான் எனக்குத் தெரியும். நம்ம ரெண்டு பேரையும் மோதவிட்டுப் பாக்கறதிலே இந்தப் பெண்ணுக்கு அவ்வளவு குஷி! உட்காருங்கோ" என்று பக்கத்தில் இருந்த சோபாவைக் காட்டினார்.

கையிலுள்ள 'லெதர் பா'கை மடிமீது வைத்துக் கொண்டு ரொம்ப அடக்கமாக அந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டான் ரங்கா.

"நான் இப்போ உங்களோட மோத வரலே ஸார். இவங்களைப் பேட்டி கண்டு ஒரு கட்டுரை எழுதற உத்தேசம். நீங்களும் இருக்கிறது எனக்கு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உதவியாக இருக்கும்னு நினைக்கிறேன்” என்று கூறியவாறே பையைத் திறந்தான். குறிப்புப் புத்தகம், பேனா இரண்டையும் எடுத்துக்கொண்டு அவன் தலைநிமிர்ந்து கல்யாணியைப் பார்த்த தோரணை, ‘பேட்டியை ஆரம்பிக்கலாமா? நான் ரெடி’ என்பது போலிருந்தது.

“கொஞ்சம் இருங்க ஸார். டிபன் சாப்பிட்ட பிறகு பேட்டியை ஆரம்பிக்கலாமில்லே? உங்களுக்கு அவசரமா எங்கேயாவது போகனுமா?!’ என்று தயக்கத்தோடு மரியாதை கலந்த குரலில் கேட்டாள் கல்யாணி.

“சீக்கிரமா பேட்டியை முடிச்சுட்டா, எங்கேயாவது போய் டிபன் சாப்பிடலாமேன்னு நினைச்சேன். வரும் போது நேரமில்லை. மத்தியானம் கொஞ்சம் தூங்கிட்டேன். முழிச்சுப் பார்த்தால் மணி மூணரை. அரைமணி நேரமாவது சைக்கிளை மிதிச்சாத்தான் சூளையிலேயிருந்து இங்கே வந்து சேர முடியும். இப்போ நீங்க டிபன் கொடுக்கறதானா ராத்திரிச் சாப்பாடு வரைக்கும் இங்கே இருப்பேன்” என்று அவன் சொன்னதைக் கேட்டு அண்ணாசாமி அவசியமில்லாமல் ‘ஓ’வென்று சிரித்தார்.

‘எங்கேயாவது போய் டிபன் சாப்பிடுவது’ என்று அவன் சொன்னதை மனசில் புரட்டிக்கொண்டே, ‘அப்பன்னா இவருக்குக் குடும்பம், வீடுன்னு ஒண்ணும் கிடையாதோ?’ என்றும், ரொம்ப அழகா இருக்கே! குடும்பம் இருந்தா வெளியே ஹோட்டல்லே டிபன் சாப்பிட மாட்டாங்களா என்ன? என்றும் தனது தவறுக்குத் தானே தலையில் குட்டிக் கொள்வது மாதிரி எண்ணமிட்டவாறே அவள் சமையலறையை நோக்கி நடந்தாள்....

இன்னும் நர்ஸரி பள்ளியிலிருந்து குழந்தைகளின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

“மிஸ்டர் ரங்கா! உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?” என்ற அண்ணாசாமியின் கேள்வி, அதற்குமேல் அடி எடுத்து வைத்து நகர முடியாமல் சமையலறையை நோக்கிப்போய்க் கொண்டிருந்த அவளைப்பிடித்து நிறுத்தியது. அவரது கேள்விக்கும் அவனது பதிலுக்கும் நடுவே தங்கிய சில விநாடிகள் நீண்ட இடைவெளி மாதிரி அவளது பொறுமையைச் சோதித்தன. அந்தச் சில விநாடிகளில் மனசில் தோன்றிய படபடப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவன் சொல்கிற பதிலை அவள் கூர்ந்து கவனித்தாள்.

“ஒரு பெண் குழந்தை, அஞ்சு வயசாகுது” என்று அவன் கூறிய பதிலைக் கேட்டு அவள் ரகசியமாக உதட்டைக் கடித்துக் கொண்டாள். ஒரு விநாடி ஏதோ யோசித்தாள், பிறகு ஏதோ சமாதானத்தோடு, வாழ்க்கையில்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எவ்வளவோ கசப்பான உண்மைகளை விழுங்கிய பழக்கத்தால் ஏற்பட்ட அனுபவ முதிர்ச்சியோடு தலையை ஆட்டிக்கொண்டாள்.

அண்ணாசாமியின் குரல் கொஞ்சம் அடங்கிப் பரிகாசம் கலந்த தொனியில் கேட்டது,

"அடுத்தது ஒண்ணும் இல்லியா: ஃபேமிலியைப் பிளான் பண்றீங்களா?"

"அப்படியெல்லாம் இல்லே ஸார். முதல் பிரசவத்திலேயே அவள் போயிட்டாள். குழந்தைகூட அவங்க வீட்டிலேயேதான் இருக்குது. நான் இங்கே தனியாகத்தான் இருக்கேன்" என்று அவன் கூறிய பதிலைக் கேட்டதும் அண்ணாசாமி மனம் நெகிழ்ந்து போனார். எடுத்த எடுப்பில் அவனுடைய நிலைமை தெரியாமல் தான் அப்படி ஒரு கேள்வி கேட்டது ஒரு குற்றமோ என்கிற உணர்வோடு அவனிடம் மன்னிப்புக் கேட்கிற மாதிரி அவர் சொன்னார்: 'ஐ யாம் ஸாரி, மிஸ்டர் ரங்கா!"

துயரமோ, மகிழ்ச்சியோ, அனுதாபமோ, சமாதானமோ அல்லாத உணர்ச்சியில் சில விநாடிகள் வெறுமையாகி நின்றாள். அதைத் தொடர்ந்து தன்னைப் பற்றி அவளுக்கு ஓர் அருவருப்பு உணர்ச்சி தோன்றியது. அந்தத் தாழ்வு உணர்ச்சியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, சற்றுமுன் அண்ணாசாமியும் ரங்காவும் பேசிக் கொண்ட, அவர்களறியாமல் தான் கேட்டுத் தெரிந்து கொண்ட அவனைப் பற்றி அந்த உண்மைகளைத் தான் கேளாதவள் போல் ஒரு பாவனையைத் தனக்குத்தானே அவள் பாவித்துக் கொண்டாள்.

சமையலறைக்குள் போய் பட்டம்மாளிடம் தட்டுகளில் டிபனை எடுத்து வைக்கச் சொன்னாள். திரும்பி ஹாலுக்கு வந்து, அண்ணாசாமிக்கும் ரங்காவுக்கும் எதிரில் சோபாவுக்கு இடைவெளியில் இருந்த இரண்டு சின்ன டீபாய்களை எடுத்துப் போட்டாள்.

பட்டம்மாள் இரண்டு சிறிய எவர்சில்வர் தட்டுகளில் ஸ்வீட் கொண்டு வந்து அவர்கள் முன் வைத்தாள்.

'இந்தப் பெண் வேலைக்காரியா, இவளுக்குச் சொந்தக்காரியா?' என்ற நினைப்போடு ரங்கா அவளைப் பார்த்தான்: அதைப் புரிந்துகொண்டு கல்யாணி சொன்னாள்:

"இந்தப் பட்டம்மா மட்டும் தான் எனக்குத் துணை, இவள்கூட இல்லேன்னா நான் தனியா, அநாதை மாதிரி இந்த வீட்டிலே உட்கார்ந்துகிட்டு இருப்பேன். போன மாசம்தான் எங்கம்மா செத்துப் போயிட்டாங்க, ஒரு மாசம் படுத்த படுக்கையாக் கிடந்தாங்க. அப்போ

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கிராமத்திலேருந்து, பாக்கறதுக்குப் பட்டம்மாவும் அவ அம்மாவும் வந்தாங்க. பட்டம்மாவோட அம்மா, எங்க அம்மாவுக்குத் தங்கச்சி முறை. அம்மா போனத்துக்கப்பறம் எனக்குத் துணையா இங்கேயே இருக்கா, எவ்வளவு நாளைக்கு அவள் என்னோட இருக்க முடியும்?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்வது மாதிரி அவளை அறிமுகம் செய்து வைத்தாள்.

ஹாலுக்கும் சமையலறைக்கும் நடுவே ரங்காவின் பார்வைக்கு மறைவாக நின்றிருந்த பட்டம்மாள் அங்கிருந்தபடியே தனது கீச்சுக் குரலில் சொன்னாள்:

"அதென்னக்கா அப்பிடி சொல்றே? நான் எப்பவும் உன்னோட தான் இருப்பேன். எங்கியும் போகமாட்டேன்." கல்யாணி அதைக் கேட்டு சிரித்தாள்.

"அது எப்படி முடியும்? நாளைக்கு உங்கம்மா வந்து என் மகளுக்குக் கல்யாணம் பண்ணப்போறேன்'னு சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போயிடும். அப்போ நீதான் போகமாட்டேன்னு சொல்லுவியா? நான்தான் அனுப்பமாட்டேன்னு சொல்லுவேனா?" என்று கேட்டவாறே அவள் கொண்டு வந்து தந்த 'ஸ்வீட்' தட்டைக் கையில் வாங்கிக் கொண்டு கதவோரமாகக் கிடந்த மோடாவில் அமர்ந்தாள் கல்யாணி. பட்டம்மாள் எல்லோருக்கும் தண்ணீர் கொண்டுவந்து வைத்தாள்.

கல்யாணியினருகே தண்ணீர் தம்ளரை வைக்கும் போது, இவள் காதில் மட்டும் விழுகிறமாதிரி அவள் சொன்னாள்: "மொதல்லே உனக்குக் கல்யாணம் ஆகட்டும். அதைப் பார்த்துட்டு நான் போறேன்."

"சரி…சரி ஏதாவது உளறாதே. உள்ளே போ" என்று அவள் காதில் மட்டும் விழுகிற மாதிரிக்கூறி அவள் வாயை அடைத்தாள் கல்யாணி.

ஹாலில் பெரிசாக வரைந்து வைத்திருக்கும் கல்யாணியின் அம்மாவின் படத்தை ரங்கா பார்த்தான், இரவும் பகலும் எரிந்து கொண்டிருக்கிற மாதிரி சின்ன பல்பு ஒன்றும் பொருத்தப்பட்ட அந்தப் படத்தின் மேல் ஒரு சரிகை மாலையும் போடப்பட்டிருந்தது, ஹாலின் ஒரு மூலையில் ஓர் ஆர்மோனியப் பெட்டி, தபலா, மடித்து வைத்த ஒரு பெரிய ஜமக்காளம். இவையெல்லாம் இந்த நாடகக் குழுவின் ஒத்திகை இந்த ஹாலில்தான் நடக்கும் என்பதை அவனுக்கு உணர்த்தின. அவன் டிபன் சாப்பிட்டு முடிகிற வரைக்கும் ஒன்றும் பேசவில்லை.

அந்தக் கடிதம் தன்னிடமிருந்துதான் வந்திருக்க வேண்டுமென்று

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவனுக்குத் தெரிந்திருக்குமோ என்று நினைத்த கல்யாணி தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் முகபாவத்திலிருந்து அவளால் ஒன்றும் கண்டுகொள்ள முடியவில்லை. அதிலிருந்தே 'இவனுக்குத் தெரிந்திருக்கிறது: அதனால்தான் இவ்வளவு உஷாராக இருக்கிறான்' என்றும் புரிந்து கொண்டாள்.

தான் ரொம்ப சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்து விட்டோமென்று அந்தக் கடித விஷயமாய் அவள் நினைத்துக் கொண்டிருந்தபோது, தன்னை விடவும் சாமர்த்தியமாக அந்தக் கடிதத்தைப் பற்றி ஒரு குறிப்பைப் கூடக் காட்டிக் கொள்ளாமல், ஒரு மாதம் இடைவெளி விட்டு, பேட்டிக் காணக் கடிதம் எழுதிய அவனது சமத்காரத்தை அவள் மனசுக்குள் பாராட்டிக் கொண்டாள்.

அதற்கு ஒப்புதல் அளித்துத் தன்னிடமிருந்து கடிதம் வர வேண்டுமென்று நினைத்த அவனது முயற்சியை ஒரு 'டெலிபோன்-கால்' மூலம் தோற்கடித்த தனது காரியத்தை எண்ணி அவள் உள்ளூறச் சிரித்துக் கொண்டாள். அதற்கும் மேல் அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக அவன் வரும் போது அண்ணாசாமியையும் அழைத்து நடுவில் உட்கார வைத்துக் கொண்டதால், 'அந்தக் கடிதத்தை ஒரு வேளை இவள் எழுதி இருக்க மாட்டாளோ, வேறு யாராவதாக இருக்குமோ?' என்று அவன் தனக்குள் குழம்புவதாக இவள் கற்பனை செய்து கொண்டாள்.

"ஏன் சாப்பிட்டுண்டே பேட்டியை ஆரம்பிச்சுடக் கூடாதா?" என்றார் அண்ணாசாமி.

"அண்ணாசாமி ஸார் தான் எனக்குக் குரு, கார்டியன், வழிகாட்டி எல்லாம் என்னைப் பத்தி நான் சொல்றதை விட அவர் சொல்றது சரியாக இருக்கும். அதுக்காகத்தான் அவரையும் வரச் சொன்னேன்" என்று சொல்லிவிட்டு, 'இதை எதற்காகச் சொன்னோம்' என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

அவனும் 'அண்ணாசாமியை வரவழைத்ததற்கான காரணத்தைக் கூறு என்று நான் உன்னைக் கேட்கவில்லையே' என்கிற மாதிரி அவளைப் பார்த்து புன்முறுவல் காட்டினான்.

காபி சாப்பிட்ட பிறகு கல்யாணி வெற்றிலைத் தட்டைக் கொண்டுவந்து அவர்கள் நடுவில் வைத்தாள். அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவர் மாதிரி அண்ணாசாமி ஒரு கை நிறையச் சீவலை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

சாப்பிடுகிற நேரம் தவிர, நாடகத்தில் வெற்றிலை போடக் கூடாத

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பாத்திரத்தைத் தாங்கி நடிக்கும்போது அவசர அவசரமாகத் துப்பிவிட்டு மேடையில் காட்சி தருகிற நேரம் தவிர அவர் வாயில் எப்பொழுதும் வெற்றிலையும் புகையிலையும் குழம்பிக்கொண்டே இருக்கும். சில சமயங்களில் துப்ப மறந்து தூங்கிப் போவதும் உண்டாம்!

கல்யாணியும் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

“ஸார்! நீங்க வெத்திலை போடுங்கோ” என்று ரங்காவை உபசாரம் பண்ணினார் அண்ணாசாமி.

“தாங்ஸ். பழக்கமில்லை” என்று சொல்லிக் கொண்டே பையிலிருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்தான் ரங்கா.

கல்யாணி எழுந்து போய் ‘ஆஷ்ட்ரே’யைக் கொண்டு வந்து அவன் அருகில் வைத்தாள். அது நிறைய சிகரெட் துண்டுகளும், நெருப்புக் குச்சிகளும், கீறி எடுத்த வெற்றிலை நரம்புகளும் நிறைந்து கிடந்தன.

“பட்டம்மா இதைச் சுத்தம் பண்ணி வெக்கறது தானே.... இந்த மியூசிக் பார்ட்டிக்காரங்க வந்தால் முதல் வேலை இதை நிறைக்கறதுதான்....” என்று அலுத்துக் கொண்டாள்.

சுத்தமாக இருந்த இன்னொரு ‘ஆஷ்-ட்ரே’யைக் கொண்டு வந்து வைத்துவிட்டு அதை எடுத்துக்கொண்டு போனாள் பட்டம்மாள்.

“பேஷ்! பேஷ்! பொண்ணை நன்னாத் தயார் பண்ணி இருக்கே” என்று பட்டம்மாளையும் கல்யாணியையும் சேர்த்துச் சிலாகித்துக் கொண்ட அண்ணாசாமி, புகையிலைப் பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டே கல்யாணியிடம் கேட்டார்.

“உனக்கு வேணுமா?”

“கொஞ்சம்-“ என்று வெட்கத்தோடு இரண்டு விரல்களில் சிறிதே புகையிலையை எடுத்து, இந்தப் பக்கம் திரும்பி வாயில் அடக்கிக் கொண்டாள் கல்யாணி.

ரங்கா சிரித்தான்: “இப்படி ரெண்டு பேரும் வாய் நிறையப் புகையிலையைப் போட்டுக்கிட்டீங்கன்னா நான் எப்படி இண்டர்வ்யூ பண்றது?”

“அதனாலே பரவாயில்லே” என்று அண்ணாந்து சொல்வது என்னவென்று புரியாமல் சொன்னார் அண்ணாசாமி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“உங்களுக்குத்தான் அவசரமில்லேன்னு சொன்னீங்களே” என்றாள் கல்யாணி.

“உங்களுக்குச் சினிமாவிலே நடிக்கிற சந்தர்ப்பம் எதுவும் வரலியா?” என்ற கேள்வியோடு தன் பேட்டியைத் துவக்கினான் ரங்கா.

கல்யாணி எழுந்து போய் ‘புளிச்’சென்று எச்சில் துப்பினாள். பின்னர் ஹாலுக்கு வந்து சொன்னாள்:

“நான் சினிமாவிலே நடிக்கிறதில்லைன்னு தீர்மானம் பண்ணிட்டேன். இதை எதுக்குச் சொல்றேன்னா இதை நீங்க எழுதணும். அப்பத்தான் ‘ஒரு ரோல் இருக்குது. ஆக்ட் பண்றீங்களா’ன்னு கேட்டுக்கிட்டு கண்டவனும் வந்து வீட்டுக்குள்ளே நுழையாமல் இருப்பான். நீங்க இதையும் எழுதினாலும் சரிதான்” என்று அவள் சொல்வதைக் கேட்டு அண்ணாசாமியின் முகம் மாறியது.

ஒரு பத்திரிகை நிருபர் என்ற முறையில் ரங்கா எத்தனையோ பேரை இதுவரை பேட்டி கண்டிருக்கிறான். அந்தப் பேட்டிகளிலெல்லாம் ஏற்படாத ஓர் அனுபவம் ரொம்பச் சாதாரணமான இந்த நடிகையை, அதுவும் பேர் சொன்ன பாத்திரத்தில் எல்லோருக்கும் தெரிந்து விடக்கூடிய ‘ஸ்டார் அந்தஸ்து’ இல்லாத ஒரு நாடக நடிகையான இந்தக் கல்யாணியைப் பேட்டி கண்டபோது அவனுக்கு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அவள் ஒரு நடிகை என்பதோ ஒரு பெண் என்பதோ அல்ல. அவன் எத்தனையோ நடிகைகளை, வேறு துறை சம்பந்தப்பட்ட பெண்களைப் பலமுறை பேட்டி கண்டிருக்கிறான்.

ரங்காவுக்கு எல்லாத் துறையின் ரகசியங்களும் தெரியும். எந்த மனத்தின் எந்த மூலையையும் அவன் துருவிவிடுவான்.

அதுவுமில்லாமல் ஒரு நடிகை என்பவள் சமூகத்தின் திறந்த புத்தகம். அவளுக்கு ஓர் அந்தரங்கம் இருப்பதாக நினைப்பதே ஒரு பாவனை: அப்படிப் பாவனை செய்து கொள்வது ஒரு சுயேச்சையான மன மயக்கம். அவளுக்கு இருக்கும் அந்தரங்கங்களெல்லாம் வெளிப்பட்டபின், இல்லாத அந்தரங்கங்கள் அவளது சொந்தவாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத பிறரால் எந்த அளவுக்குக் கற்பனை செய்து வளர்க்கப் படுகிறதோ அந்த அளவுக்கு அவன் புகழ் வளர்ந்திருப்பதாக அவள் நம்பவேண்டும் என்பதெல்லாம் ரங்காவுக்குத் தெரியும்.

இந்தக் கல்யாணி அந்த அளவு வதந்திகளின் கதாநாயகியாக இன்னும் உயரவில்லை என்றே அவன் நினைத்திருந்தான். அதாவது இனிமேல்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உயரப்போகிறவள் என்று நம்பி இருந்தான். அந்தப் பேட்டிக்குப் பிறகு அவனது இந்த நம்பிக்கையை அவள் சிதற அடித்தாள்.

ஒரு விமர்சகன் என்ற முறையில் ரங்காவுக்கு இங்கே நடைபெறுகிற நாடகங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது. அவற்றைப் பார்த்து அவன் அருவருப்படைவதுண்டு: பரிதாபப்படுவதும் உண்டு. இந்த நாடகங்கள் சம்பந்தப்பட்ட நடிக நடிகையரைப் பார்க்கும்போதும் அவனுக்கு இதே உணர்ச்சிதான் ஏற்படும்.

'தமிழ் நாடகம் என்பது நாடக நடிகைகளைப் பொறுத்த வரை சினிமாவுக்குப் போக ஒரு ஏணி: அல்லது தங்களது அவலமான சொந்த வாழ்க்கையை மறைத்துக் கொள்ளும் ஒரு திரை!' என்றே அனுபவத்தால் ஏற்பட்ட அவனது அறிவு குரூரமாகக் கணித்திருந்தது.

கல்யாணியைச் சந்தித்த இந்தப் பேட்டி தான் அவனது இந்தக் கணிப்பு-எந்த அளவு ஆதாரத்தோடு நிரூபிக்க முடிகிற உண்மை என்றாலும்-அது எவ்வளவு குரூரமானது என்பதை அவனையே உணரவைத்தது.

பொதுவாகவே நடிகைகளுக்கு உள்ள குணங்களுக்கு எதிரிடையான குணங்கள் அவளுக்கு இருந்தன. பெண்களுக்கே சுபாவமில்லாத, வெளிப்படையான, மனம் திறந்த, 'நாணல்-கோணல்'களில்லாத அவளது பேச்சுக்கள் அவனுக்கு ஒரு புதிய அனுபவமாயிருந்தன.

அவனை வரவேற்பதற்காக அவள் காத்திருந்தபோது அவன் சற்றும் எதிர்பாராத முறையில், பகட்டில்லாத எளிய தோற்றத்தில் சாதாரண நூல் புடவையும் அள்ளிச் சொருகிய கொண்டையுமாய் அவள் காத்திருந்தது, அவன் எதிரிலேயே அவள் புகையிலை போட்டுக் கொண்டது, கொஞ்ச நாழி மரியாதைக்காக நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு, 'எனக்கு இதுதாங்க சௌகரியம்' என்று தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்துகொண்டது போன்ற புறக்கிரியைகள்கூட அவனது 'நடிகை பற்றிய கணிப்பை'க் கொஞ்சம் புனராலோசனை செய்ய வைத்தன.

இந்த நடிப்புத் துறையில் அவளது அனுபவங்கள் குறுகிய கால அளவை உடையதுதான். அவள் அதிலே சேகரித்துக் கொண்ட அறிவுகள், அவள் இன்றைக்கு எடுத்து கொண்டிருக்கும் நிலை, இந்த நாடக-சினிமா உலகத்தைப் பற்றியும் இதில் தெரிந்து பங்கு கொண்டு விட்ட அல்லது தெரியாமல் சிக்கிக் கொண்டுவிட்ட தன்னைப் பற்றியும் அவள் கொண்டிருக்கிற தீர்மானம், அந்தத் தீர்மானங்களின் தெளிவு ஆகிய இவற்றை அல்லது இதுபோன்ற சில கறார்த்தனங்களை அவன் தனது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அனுபவத்தில் மிகவும் குறைவாகவே சந்தித்திருக்கிறான்.

அதுவும் இந்தத் துறையில் இன்னும் ஓர் உதாரணத்துக்கு அவன் இனிமேல்தான் சந்திக்க வேண்டும்.

பேட்டியின்போது கல்யாணி மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இதுபற்றியெல்லாம் ஏற்கனவே யோசித்தவள் போன்று நயமாகவும் பேசினாள். அவள் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்வதற்கு முன்னாலும், சொல்லி முடித்த பிறகும், பேசுகின்ற பேச்சின் இடையிலும் மெல்லச் சிரித்துக் கொண்டே இருந்த அந்த வசீகரம் அவளது நல்ல இயல்புகளுக்கும் உயர்ந்த பண்புகளுக்கும் மட்டுமல்லாது அவளது அறிவுக்கும் ரசனைக்கும்கூட அடையாளமாக இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அந்தச் சிரிப்புதான் இவன் மனசில் அடிக்கடி தோன்றித் தோன்றி இவன் நினைவை அலைக்கழிப்பதாயும் இருந்தது!

இதோ, தன் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொள்வதற்காக மவுண்ட் ரோட்டிலுள்ள ஏதோ ஒரு ஹோட்டலை நோக்கி சைக்கிள் பெடலை மிதித்துக் கொண்டிருக்கிறானே ரங்கா-இப்போதுகூட அவளது வசீகரம் மிக்க மிக மெல்லிய நகை தவழும் அந்த முகத்தை, பற்கள் பளீரிட நளினமாக நெளியும் அவளது உதடுகளை, நெற்றியில் சிகை புரள அதை விரல்களால் ஒதுக்கிக்கொண்டு நிமிர்ந்து பார்க்கும் அந்த லாவகத்தை அவன் கற்பனை செய்து கொள்கிறான்.

மூணரை மணி நேரம் அவன் அவளோடு பேட்டிக்காகப் பேசிக் கொண்டிருந்தான்.

அண்ணாசாமி, தான் இந்த பேட்டிக்குச் சம்பந்தமில்லாதவர் போல் ஒதுங்கி இருந்தால் அவ்வளவு நன்றாக இருக்காதே என்று நினைத்தவர் போல அவர்களது உரையாடலைப் பாதிக்காத அளவுக்குத் தானும் இடை இடையே ஏதோ சொல்லிப் பங்கு பெற்றார். பேட்டி முடிவதற்குள் அவர் ஐந்தாறு தடவை வெற்றிலை போட்டுக்கொண்டது, வாயை மூடிக் கொண்டிருக்க அவர் கண்டுபிடித்த வழியோ என்னமோ?

“நீங்க என்ன சொல்றீங்க?” என்று எக்கச்சக்கமாக அவரையும் சம்பாஷணைக்கு இழுத்தபோது வாயில் வெற்றிலை இருப்பதைச் சைகையால் காட்டித் துப்புவதற்காக எழுந்து போனார். திரும்பி இங்கே வந்து பதில் சொல்வதைத் தவிர்ப்பதற்காகப் பின்கட்டு முற்றத்தில் நின்று கொண்டு சமையலறையில் இருந்த பட்டம்மாளிடம் ஏதோ பேச்சுக் கொடுத்து வம்பளந்தார்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி கூறிய சர்ச்சைக்கு இடமுள்ள சில விஷயங்களைக் குறித்து அவருக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்தன. என்றாலும் இந்த பேட்டியின்போது அது குறித்து விவாதம் செய்வது முறையல்ல என்பதால் அவன் போன பிறகு அவளிடம் பேசிக் கொள்ளலாம் என்றிருந்தார் அவர். அந்த அவரது நிதானம் குலைந்து போகாமல் காப்பாற்றிக் கொள்ள அவர் எவ்வளவு சிரமப்படுகிறார் என்றுகூட ரங்கா புரிந்து வைத்திருந்தான்.

பேட்டி முடிந்து அவளுக்கு நன்றி கூறி, வணக்கம் செய்து விடை பெற்றுக் கொண்டபோது, அவளைப் புகழ்கிற மாதிரியும் அவனைப் பாராட்டுகிற மாதிரியும் அவர் தனது அபிப்பிராயத்தைச் சொன்னார்.

“இந்தப் பெண்ணோட அபிப்பிராயங்கள் இவ்வளவு ‘ஷார்ப்’பா இருக்கும்னு எனக்கே தெரியாது ஸார். நீர் மகா பொல்லாத மனுஷர்! கேள்வி கேட்டுப் புரட்டி எடுத்துடறேளே மனுஷாளை? போகட்டும். இதெல்லாம் பேப்பரிலே எழுதி ஆகணுமா? இதனாலே யாருக்கு என்ன லாபம்? உங்களுக்கு தெரியாததில்லே. ஏதோ என் அபிப்பிராயத்தைச் சொன்னேன். அப்புறம் ஒரு சின்ன விஷயம், அச்சுக்குப் போறதுக்கு முன்னாலே இந்தப் பேட்டியை நாங்க ஒரு தடவை பார்த்துடலாமோ?” என்று அவள் சார்பில் ரங்காவை வேண்டிக் கொண்டார் அண்ணாசாமி. தனது வேண்டுகோள் சரிதானா? என்பதற்காகக் கல்யாணியிடம் திரும்பி, “என்ன கல்யாணி?” என்று அவளது ஆமோதிப்பைக் கேட்டார்.

அவள் ஒரு வினாடி யோசித்து, இன்னும் ஒரு தடவை அவனைச் சந்திக்கவும் பேசிக் கொண்டிருக்கவும் கிடைக்கிற வாய்ப்பை எண்ணினாள்.

“உங்களுக்குச் சிரமம் இல்லேன்னா…” என்று அவள் தயங்கிய அந்தச் சிறுபோதில் அவனும் அதேவிதமாக யோசித்தான். அவசியம், தான் எழுதி முடித்ததும் கொண்டு வந்து காட்டுவதாக உறுதி அளித்தான்.

அப்பறம்தான் அவனுக்கு ஞாபகம் வந்தது: அவன் கல்யாணியின் போட்டோ ஒன்றைப் பிரசுரத்திற்காக அவளிடம் கேட்டான். கல்யாணி உள்ளே போய் ஓர் ஆல்பத்தைக் கொண்டு வந்து அவனிடம் தந்தாள்.

விடை பெற்றுக்கொண்டு புறப்பட எழுந்த அவன், மறுபடியும் உட்கார்ந்து அந்த ஆல்பத்தை வாங்கி மடியின் மீது விரித்து ஒவ்வொரு ஏடாகத் திருப்பி அந்த ஆல்பத்தையே ரசிக்க ஆரம்பித்துவிட்டான்.

அந்தப் படங்களில் சிலவற்றைப் பார்த்தபோது அவன் தலைநிமிர்ந்து

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அடிக்கடி எதிரே நின்றிருந்த அவளையும் ஒத்திட்டுப் பார்த்துக் கொண்டான். அவன் எந்தப் படத்தைப் பார்த்துத் தன்னை ஒப்பிடுகிறான் என்று கவனித்த அவளும் வாய்க்குள் சிரித்துக் கொண்டாள். அவற்றில் சில அவளே வெட்கப்படுகிற அவளுக்கு 'கிளாமரஸ்' ஆக இருந்தது.

அவற்றின் நடுவே ஒன்று மேக்கப் எதுவும் இல்லாமல் இப்போது எதிரில் நிற்கிறாளே இதேமாதிரி எளிய உடையும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, வாராமல் விரிந்த கூந்தலுமாய் இருந்த ஒரு படம் அவனை மிகவும் கவர்ந்தது.

"இதை எடுத்துக்கலாமா?"என்று அவன் கேட்டான்.

"ஐயையே...இதுவா?" என்று அண்ணாசாமி குறுக்கிட்டார்.

அவனது ரசனையை சிலாகிக்கிறமாதிரி அவள் புன்னகை புரிந்தாள். "ஏன் அதுவும் நான்தானே?' என்றவாறு அந்தப் படத்தையே எடுத்து அவனிடம் கொடுத்தாள் கல்யாணி.

பேட்டியின்போது அவளுடைய வயதைப் பற்றி அவன் விசாரித்தபோது, பொதுவாகவே நடிகைகள் வயதைக் குறைத்துத்தான் சொல்லுவார்கள் என்று நினைத்து சிரிப்புடனே கேட்டான் ரங்கா.

அவளோ, அவன் சற்றும் எதிர்பாராத விதமாகத் தனக்கு 'வயது முப்பத்து மூன்று ஆகிறது' என்று உண்மையைக் கூறினாள். அவன் கணித்திருந்தது முப்பதுதான், அவன் எதிர்பார்த்த பதிலோ இருபத்தைந்துக்குள்ளே தான். "எந்த மாதம்?" என்று தன்னையறியாமலே அவன் கேட்டு வைத்திருந்தான். அவள் "செப்டம்பர் என்றதும்" என்னைவிட ஆறுமாதம் நீங்கள் குறைச்சல்" என்று சொன்னபோது அவள் ஆச்சரியப்பட்டாள்.

"முப்பத்து மூணாவது? என்ன உளர்றே" என்று குறுக்கிட்டார் அண்ணாசாமி.

"ஆமாம், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழுன்னா பார்த்துக்குங்க" என்று அவள் சொன்னதும் அண்ணாசாமி விரல்களை மடக்கி வருஷங்களை எண்ண ஆரம்பித்தார்.

"முப்பத்திரண்டுதான் ஆறது. செப்டம்பருக்கு இன்னும் நாள் இருக்கே, முப்பத்து மூணு முடிஞ்சாத்தான் முப்பத்து மூணுன்னு சொல்லணும். குழந்தை பிறந்த உடனே ஒரு வயசுன்னு சொல்லுவியா?" என்று ரொம்ப ஆவேசமாக ஒரு விவாதத்திற்கே தயாரானார்: "ஒவ்வொருத்தியும் ஏழு கழுதை வயசைத் தலைமேல சுமந்துண்டு, நேத்திக்குப் பொறந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

'பாப்பா'ன்னு சொல்லிண்டு அலைஞ்சிண்டிருக்கா: நீ எதுக்கு உள்ளதுக்கு மேலே கூட்டிச் சொல்றே? உள்ளதைச் சொல்லு"

"சரி சாமி! விடுங்க முப்பத்துரெண்டுதான். மாத்தி எழுதிக்குங்க ஸார்! முப்பத்துரெண்டு" என்று சிரித்த அந்தச் சிரிப்பை நினைத்துக் கொண்டே அந்த ஹோட்டலின் முன்னால் வந்து சைக்கிளை நிறுத்திப் பூட்டினான் ரங்கா.

அண்ணாசாமியை அவள் நேரில் 'ஸார்' என்றும் பின்னால் 'ஐயர்' என்றும் குறிப்பிடுவதை அவன் நினைத்துக் கொண்டான். அவள் 'சாமி' என்று சொல்வது கிண்டலுக்காக. அவரை மட்டுமல்லாமல் தன்னைக்கூட ஒரு சந்தர்ப்பத்தில் அவள் அப்படிச் 'சாமி' என்று விளித்ததாக ஒரு நினைவு.

மணி ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு ரூமுக்குப் போய் விட்டால் அந்தப் பேட்டிக் கட்டுரையை இன்றிரவே எழுதி முடித்துவிடலாமென்றும், நாளைக்கே அவளிடம் எழுதியதைக் கொண்டுபோய்க் காட்டி விடலாமென்றும் நினைத்து மனசில் ஓர் அவசரம் கொண்டான் ரங்கா.

சாதாரணமாக அவன் இரவில் பதினோரு மணிக்கும் சாப்பிடுவான்: சாப்பிடாமலும் இருப்பான். நேரா நேரத்துக்குச் சாப்பிடுவது, தூங்குவது போன்ற நியதிகளையெல்லாம் அவன் கைவிட்டு ரொம்ப நாளாகிறது. சில நாட்களில் அவன் சாப்பிட மறந்து போனதும் உண்டு, அவன் செலவுகளிலேயே மிகவும் குறைவானது சாப்பாட்டுச் செலவு தான். அவன் நிறைய டீ குடிப்பான்: சிகரெட்டும் குடிப்பான். எனவே அவனுக்குப் பசிக்கிறதேஇல்லை.

இன்றைக்கு-அதுவும் இப்போது அவனுக்கு ஏனோ பசித்தது. அதனால் அவன் சாப்பிடப் போனான். இரவில் சாப்பிடுவதென்றால் அவனுக்கு பிரியாணி சாப்பிடுவது தான். எனவே அவன் அந்த மவுண்ட்ரோடு ஹோட்டலுக்குப் போனான்.

ஒரு தனியறைக்குள் சென்று உட்கார்ந்தான். ஒரு தம்ளர் தண்ணீரோடு வெய்ட்டர் வந்தான். இவனது ஆர்டரைக் குறித்துக்கொண்டு அவன் அந்தத் தனியறையின் கதவை மூடிக்கொண்டு போனபின், கண்ணாடித் தம்ளரிலிருந்த தண்ணீரை ஒரு மிடறு குடித்து, பாக்கெட்டிலிருந்த அவளது அந்த போட்டோவை எடுத்து அந்தரங்கமாக ஒரு தடவை பார்த்துக் கொண்டான் ரங்கா.

அந்த போட்டோவில் அவள் சிரிப்பு ஏதோ இப்போது தான் இவன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பார்த்தபிறகு இவனைப் பார்த்துச் சிரிப்பது மாதிரிப் புதிதாக இருந்தது: ரொம்ப ரகசியமாக எதையோ பரிமாறிக் கொள்வதுபோல் இருந்தது. அந்தச் சிரிப்பின் பேச்சுக்கூட அவனுக்கு இப்போது புரிந்தது.

'என் மதிப்பிற்குரியவருக்கு, இந்த கடிதம் எங்கிருந்து வருகிறதென்ற உங்களால் ஊகிக்க முடிந்தால்....'

இந்த வாசகங்களை இந்தப் படத்திலுள்ள அவளது உருவம் உதடுகளசையக் கூறுவதுபோல் கற்பிதம் கொண்டு அவன் தனிமையில் சிரித்துக் கொண்டான்.

பிறகு மறுபடியும் அவன் இன்று மாலை அவளைக் கண்ட பேட்டியை ஆரம்ப முதல் வரிசைக்கிரமமாக மனசில் நினைக்க ஆரம்பித்தான். அப்படி மறுபடியும் மறுபடியும் அதை நினைத்துக் கொள்வதில் அவனுக்கு ஒரு சுகம் எற்பட்டது. அவ்விதம் நினைத்து நினைத்து பார்ப்பதன் மூலம் அந்தக் கட்டுரையை ஒரே மூச்சில் மிக நன்றாக எழுதி முடித்துவிட முடியும் என்று-அது தனது வேலை சம்பந்தப்பட்ட விஷயமென்பதால் அதை ஒரு கடமை உணர்ச்சியோடு, அதற்காகச் சற்றும் சலிப்புக் கொள்ளாமல்-அவளைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அந்த நேரங்களை அவன் திரும்பத் திரும்ப நினைப்பதிலேயே மூழ்கிப் போனான்.

அவள்தான் எவ்வளவு விஷயங்களைச் சொன்னாள்!

அவளைப் பற்றி அவன் இப்படித்தான் முடிவு செய்தான்:

அவள் மிகவும் அற்புதமான, காண்பதற்கு அரிய தேடினால் கிடைக்காத மிக உயர்ந்த பெண். அதே மாதிரி ஒரு ரசிகை. (இதில் எதை முன்னால் சொல்வதென்று அவனுக்குப் புரியவில்லை.) அவள் ஒரு நடிகை என்பதும் ஒரு கலைஞை என்பதும் இரண்டாம் பட்சந்தான். அவற்றுக்கெல்லாம் அடிப்படையாயிருப்பதே அவள் ஒரு ரசிகை என்ற விஷயம்தான். அவளது பண்புகள் இயல்பாகவே உயர்வாக இருந்தன. இந்தத் துறைக்கு வந்தும் அவள் இவ்வளவு உயர்வாக இருப்பதுதான் அவளது பண்புக்கு உரைகல்.

அவன் தனது குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பிரித்து ஒருமுறை பார்த்துக் கொண்டான்.

அவள் தான் நடிக்க வந்ததற்கான காரணங்களைக் கூறி இருந்தாள். அவன் அவளை, "நீங்கள் நடிக்க வந்த விதத்தை, நடிப்புத் தொழிலை மேற்கொண்ட காரணத்தை விளக்கமுடியுமா?" என்று கேட்டிருந்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

குறிப்புப் புத்தகத்தில் கட்டுரை எழுதப்போகும் தனது வசதிக்காக, அவள் கூறிய பதிலைக் கிறுக்கல் கிறுக்கலாய் தனக்கு மட்டும் புரிகிற விதமாய் அவசர அவசரமாய் எழுதியிருந்ததை இப்போது அவன் படித்துப் பார்த்தான்.

இதை படித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் ஹோட்டல் சர்வர் இவனுக்குச் சாப்பிடக்கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான்.

குறிப்புப் புத்தகத்தை இடதுபுறம் மேஜையின் மீது வைத்துக்கொண்டு ஏடுகளைத் தள்ளித்தள்ளிப் படித்தவாறே சாப்பிட்டான் ரங்கா.

அந்தக் கேள்விக்கு அவள் சொன்ன பதிலைப் படிக்கிற போது அவள் முகம் அவன் மனசில் தெரிந்தது. இந்தப் பதிலைச் சொல்கிறபோது அவள் எவ்விதம் இருந்தாளோ, அதே விதமாய் அவளைக் கண்டான் அவன்.

குறிப்புப் புத்தகத்தில்…

“எனக்கு என்னை ரொம்பப் பிடிக்குங்க. நான் ரொம்ப அழகுன்னுகூடச் சில சமயம் தோணுங்க. என் உடம்பு, என் குரல், என் மனசு எல்லாமே எனக்கு ரொம்பவும் பிடிக்குது. இப்பவும் மணிக்கணக்கா கண்ணாடி முன்னே உக்காந்துக்கிட்டு என்னை நானே அழகு பார்த்துக்கறது எனக்கு ஒரு பொழுது போக்கு. கண்ணுக்கு மை தீட்டிக்கறது, புருவத்தை விதம் விதமா எழுதிப் பார்க்கறது, தலையை அவுத்து அவுத்து அலுப்பு சலிப்பு இல்லாம அலங்காரம் பண்ணிக்கறது, நகத்தை வெட்டிச் சாயம் தீட்டறது, சுரண்டிட்டு வேற சாயம் தீட்டறது, அதே மாதிரி பல டிரஸ் பண்ணிப் பண்ணிப் பார்த்துக்கறது-எல்லாமே சின்ன வயசிலேருந்தே எனக்கு ரொம்பப் பிடிக்குங்க. தனியா உக்காந்துக்கிட்டு குரல் இழைய இழைய நானே பாடிக்கிட்டு இருக்கிறதுமாதிரி ஓர் ஆனந்தம்-என்னை மறந்த ஆனந்தம்-வேறே எதிலேயும் இல்லீங்க. அதே மாதிரி மத்தவங்க பாடினாலும் எனக்குப் பிடிக்கும், மத்தவங்க அழகும் எனக்குப் பிடிக்கும்-இந்த மாதிரியே என்னை நானே ரசிக்கிற ரசனை மத்த விஷயங்களை ரசிக்க விடாமல் என்னை ஆக்கிடலே… அந்த அழகோட நாமும் கலந்துடணும்னு ஆசை தான் வந்திச்சு. ஒண்ணும் இல்லாத போது எனக்கு நானே ரசிகையாயிடறேன். அந்த ரசனைதான் மத்த விஷயங்களையும் ரசிக்க வெக்கிதுன்னுநெனைக்கறேன். இதையெல்லாம் பார்த்துத் தான் நான் நடிக்கணும்னு மத்தவங்களுக்கு தோணி இருக்கும். நான் நடிக்க வந்ததுக்கு நெஜமாலும் காரணம் இந்தச் சுய-ரசனைதான்னு நான் நெனைக்கறேன்.

“எப்பவாவது இதிலே ஒரு சலிப்போ, வேற இது சம்பந்தமா-இதுக்குச்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சம்பந்தமில்லாத சங்கடங்களோ இந்த நடிக்கிற துறையிலே ஏற்படறபோது என்னை நடிகையா ஆக்கின எங்க அம்மாவைத் திட்டுவேன்: நம்ப ஐயரைப் பார்த்து, ‘எல்லாம் உங்களாலேதான்னு’ நொந்துக்குவேன். ஆனால், இவங்க எல்லாருமே ஒரு தூண்டுகோலாகதத்தான் இருந்தாங்கன்னு சொல்லணும். மத்தப்படிக்கி நான் நடிகையா ஆனதுக்குக் காரணமே நான்தாங்க. இப்ப சொன்னேனே இந்த ரசனைதான் காரணம்.”

“தமிழ் நாடகத்தைப் பற்றி உங்க அபிப்பிராயம் என்ன?” என்று அவன் கேட்ட கேள்விக்கு அவள் சொல்லி இருந்த பதிலைப் படித்து வாயிலிருந்ததைக்கூட விழுங்காமல் அவன் சற்று உரக்கவே சிரித்துக்கொண்டான்.

கல்யாணியின் வீட்டிலிருந்து மவுண்ட்ரோடு ஹோட்டலுக்கு வருகிற வழி நெடுகிலும், ஹோட்டலில் சாப்பிடுகிற போதும், சாப்பிட்ட பிறகு தனது சைக்கிளில் ஏறி, எங்கோ மூலையில் இருக்கும் தனது தனியறைக்குத் திரும்பி வருகிறபோதும், வந்த பின்னரும் ரங்காவால் அந்தச் சாயங்காலத்தை, அவளது சந்திப்பை, பேட்டியை, அவளது அந்த வசீகரமான சிரிப்பை நினைத்து நினைத்து அசைபோடுவதைத் தவிர்க்கவே முடியவில்லை.

அவனுக்குத் திடீரென்று ஒரு சமயம் தோன்றிற்று, தான்மட்டும் அவளைப் பேட்டி காணவில்லை. தன்னையும் ஒரு வகையில் இன்று அவள் பேட்டி கண்டுவிட்டாள் என்று நினைத்துக் கொண்டான் ரங்கா.

இப்போது நினைத்துப் பார்க்கையில் அவள் அதை ரொம்பவும் சமத்காரமாகச் செய்துவிட்டாள் என்று தோன்றியது.

இவனது தனி வாழ்க்கை பற்றியும், இவனது மனைவி இறந்து போனது குறித்தும் இவனது மனைவியின் பெற்றோர் வசம் வளர்கின்ற இவனது குழந்தையைப் பற்றியும் இந்தப் பேட்டியினூடே அவள் தெரிந்து கொண்டுவிட்டாள். அவற்றைக் கேட்கும்போதே, அந்தக் கேள்விகளுக்கான பதில்களைச் சொல்லும்போதே அது ஏதோ சும்மா பேச்சுக்காகக் கேட்கப்பட்டதல்ல என்று புரிந்துகொண்ட ரங்கா-தன்பால் அவளுக்கு ஏற்படுகின்ற நாட்டத்தை உணர்ந்தான்.

மவுண்ட்ரோடிலிருந்து சூறையிலிருக்கும் ரூமுக்கு வருகிற வழியில் தனித்த சாலையில் சைக்கிளை மிதித்துக் கொண்டிருக்கையில் அவன் தன்னையுமறியாமல் விசில் அடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து சிரித்துக்கொண்டான். அவனுக்குத் தன்னையே விலகி நின்று பார்கையில்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சிரிப்பு வந்தது.

'சீ! இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம்!' என்று நினைத்துக்கொண்டான். ரூமுக்குப் போய் இரவே இந்தக் கட்டுரையை எழுதி முடித்துவிட வேண்டும். இது எனது தொழில்-இதிலே போய் இவ்வளவு தூரம் மனசையும் உணர்ச்சியையும் செலவிடுவது என்ன?' என்று தன்னைத் தானே அவன் கேட்டுக் கொண்டான்.

ஒரு பெண்ணின் துணை இல்லாமல் வாழுகின்ற தனது தனி வாழ்க்கைதான் இதுமாதிரி ஒரு பித்துக்கு அடிப்படையோ? என்று அவன் ஆராய்ந்தான்.

இறந்து போன மனைவியின் தங்கை ஒருத்தி-சுமதி-இவனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று காத்திருப்பதும், 'அதெல்லாம் முடியாது' என்று இவன் மறுத்துவிட்டு வந்ததும் இப்போது அவன் நினைவுக்கு வந்தது.

மீண்டும் மீண்டும் இத்தனை நினைவுகளுக்கிடையே கல்யாணியின் அந்த வசீகரமான சிரிப்பு வந்து வந்து அவன் மனசில் நிற்கிறது.

ரங்கா வீட்டுக்கு வரும்போது மணி பதினொன்றாகி விட்டது.

சூளைப் பிரதேசத்தில் பழங்காலத்து ஒட்டு வீடுகளும் தெரு ஓரத்தில் சதாகாலமும் பானைகள் அணிவகுத்து நிற்கும் தண்ணீர்க்குழாயும், தெருக் கோடியில் இரவு பகல் எந்நேரமும் மின் தொழிலாளர்களுக்காகத் திறந்து வைத்திருக்கும் ஒரு காக்கா டீக்கடையும் உள்ள ஆதிகேசவலு நாயக்கர் தெருவில் ஒரு பழமையான வீட்டின் முன் பகுதியில் ரங்காவின் ரூம் இருந்தது.

அந்த அறைக்கு இருபத்தைந்து ரூபாய் குடிக்கூலி தருகிறான் அவன் இந்த வீட்டில்தான் அவனுடைய தந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி வாழ்ந்தனர் என்பதனாலும், அவனுடைய தாத்தாவின் பெயர்தான் இந்தத் தெருவிற்கு சூட்டப்பட்டிருக்கிறது என்பதனாலும் ரங்காவுக்கு-தேச பக்தி மாதிரி இந்த ஆதிகேசவலு நாயக்கர் தெருவின்மீது ஒரு 'தெரு பக்தி' உண்டு.

அந்தத் தெருவில் ரங்காவுக்கு ரொம்ப மரியாதை உண்டு. அந்த மரியாதை இவனது குடும்பத்தினாலும் இவனாலும் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இவனது தந்தையாரின் காலத்தில் குடும்பத்தின் செல்வம் கரைந்த போதிலும் பெருமை கரையவில்லை. வயது முதிர்ந்தவர்கள் இவனது குடும்பத்தைக் கருதியும், அந்தத் தெருவிலுள்ள இளைஞர்கள் இவனையே கருதியும் மரியாதை அளித்து வந்தனர்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அந்தத் தெருவில் அநேகமாக மில் தொழிலாளர்களும், கூலிக்காரர்களும், ஏழைகளும்தான் வசித்து வந்தனர். ஓரிரு வீடுகளைத் தவிர மற்றவை அனைத்தும் பல குடித்தனங்கள் வாழ்கின்ற வீடுகள்தாம். அவர்களுக்குள்ளே எத்தனையோ பிரிவுகளும், பேதங்களும், பகைமையும், வேற்றுமையும் அரசியல்-தொழிற்சங்க வித்தியாசங்களும் இருந்த போதிலும் அந்தத் தெருவாசிகள் எல்லாருமே ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் என்கிற உறவு அந்த எல்லாப் பேதங்களைவிட சக்திமிக்கதாயிருக்கிறது.

இந்தத் தெருவில் உள்ள ஜாதிக்காரர்களில் இவன் தான் ரொம்பப் படித்தவன். பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேயே பி.ஏ. படித்தவன் என்பதனால் இவனுக்கு அப்போதிருந்தே ராஜமரியாதை உண்டு அங்கே.

எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்த இளைஞர்களும், போட்டி மன்றங்கள் நடத்திக் கொண்டிருக்கிறவர்களும் இவனிடம் ஒரே மாதிரி நடந்துகொள்வார்கள். அதே மாதிரி இவனும் அவர்கள் மத்தியில் நிதானமாகவும் நடுநிலைமையோடும் எல்லாருக்கும் உதவி புரிகிறவனாகவும் இருந்து வருகிறான்.

பெண்கள் இவனைக் கண்டால் மரியாதையாக எழுந்து நிற்பார்கள். இவன் குடித்தனம் இருக்கிற வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் இவன் வாடகை கொடுக்கும் போது வாங்கிக் கொள்வார்கள். காலை நேரத்தில் அவர்களாகவே வந்து இவனது அறையைப் பெருக்கி சுத்தம் செய்து தண்ணீர் பிடித்து வைப்பார்கள். காக்கா கடையிலிருந்து ஒரு பையன் காலையில் இவனுக்கு டீ கொண்டு வந்து வைத்துக்கொண்டு இவனை எழுப்புவான். அவனே இவனுக்குக் காலைப் பத்திரிகைகளும் சிகரெட்டும் வாங்கி வருவான்.

ரங்கா தினந்தோறும் காலையில் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளையும் படிப்பான்: தமிழ்த் தினசரிகளை ஆபீசில் படித்துக் கொள்வான்.

தெருவில் இவன் சைக்கிளை மிதித்துக்கொண்டு ஆபீசுக்குப் புறப்படுகிறபோது யாரையும் பார்க்க மாட்டான். அவசியம் உள்ளவர்கள் இவனை நோக்கி வந்தால் சைக்கிளிலிருந்து இறங்கி நின்று அவர்களிடம் பேசுவான். அவன் அந்தத் தெருவில் போகிறபோது சிகரெட் பிடிப்பதில்லை: அவர்கள் தனக்கு எந்த அளவு மரியாதை வைத்திருக்கிறார்கள் என்று அவன் உணர்ந்திருப்பதால் அவர்களுக்கு அந்த மரியாதைகளை எல்லாம் அவனும் தரவேண்டி இருக்கிறது.

இப்போது பதினோரு மணிக்கு அவன் வீடு திரும்பி வருகிறபோது,

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இந்தத் தெருவிலுள்ள அந்த மனிதர்களையும் அவர்கள் அவனிடம் காட்டுகிற மரியாதைகளையும் அவன் நினைத்துக் கொள்வது எதனால்? என்று சிந்தித்துக் கொண்டே வீட்டருகே வந்து சைக்கிளில் இருந்து இறங்கி ரூமின் பூட்டைத் திறந்து லைட்டைப் போட்டான்.

கதவுகளை விரியத் திறந்தபின் வெளியே நிறுத்தியிருந்த சைக்கிளைத் தூக்கி வந்து அறையின் ஒரு மூலையில் நிறுத்தி வைத்தான்.

அறையின் குறுக்காகக் கட்டிய கயிற்றுக் கொடியில் சரம் சரமாகத் தொங்கிய துணியின் பளுவால் கொடி மிகவும் தொய்ந்து தொங்கியது. ஒரு மூலையில் காலி சிகரெட் பாக்கெட்டுகளும், புகைத்து எறிந்த சிகரெட் துண்டுகளும், தீக்குச்சிகளும், எழுதிக் கசக்கி எறிந்த காகிதக் கசங்கல்களும் குப்பையாய்க் கூட்டி வைக்கப்பட்டிருந்தன. ஜன்னல் ஓரமாய் இருந்த மேஜையின் மீது புத்தகங்கள் ஒழுங்கின்றி அம்பாரம் அம்பாரமாய்க் கிடந்தன. சுவர் அலமாரியிலும் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தினசரிப் பத்திரிகையின் தாள்கள் காற்றில் திசைக்கொன்றாய்ப் பறந்து கிடப்பதைப் பார்த்து அவற்றைச் சேகரித்து மடித்து வைத்தபின் ரங்கா உடை மாற்றிக் கொண்டான். சட்டையைக் கழற்றியபிறகு அவன் தோற்றம் மிக மெலிந்து பரிதாபமாக இருப்பதை அவனே உணர்ந்தான்.

காற்று வருவதற்காக ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து கொக்கியை மாட்டியபின், மூலையிலிருந்த பானையிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தான். ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு எழுதுவதற்கு ஆயத்தமாய்ப் புத்தகங்கள் குவிந்த அந்த மேஜையினருகே நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான். மறுபடியும் எழுந்து வந்து கைப்பையிலிருந்து குறிப்புப் புத்தகத்தை எடுக்கையில் கல்யாணியின் போட்டோவை எடுத்து அந்த வசீகரமான புன்னகையைப் பார்த்தான்.

அப்பொழுது மறுபடியும் இந்தத்தெருவில் உள்ள மக்கள் அவனுக்குத் தருகிற மரியாதையை நினைத்துக் கொண்டான். இப்போது எதற்கு இதையெல்லாம் நினைக்கிறோம் என்று சற்றுமுன் நினைத்ததற்கு அவன் மனத்தில் தகுந்த பதில் கிடைத்தது.

அவன் கடமையுணர்ச்சியோடு வந்து மேஜையின் முன் அமர்ந்து குறிப்புப்புத்தகத்தைப் பார்த்துக் கட்டுரை எழுத ஆரம்பித்தான்.

பாதி எழுதிக் கொண்டிருக்கையில் அவனுக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்தது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நாடகத் தியேட்டரில் அவளை முதன் முதலாகப் பார்த்ததும், அவன் எப்போதோ எழுதிய கதைகளை நினைவு வைத்துக்கொண்டு அவள் அவனைப் பாராட்டியதும், ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் மொட்டையாகக் கையெழுத்தில்லாமல், 'இந்தக் கடிதம் எங்கிருந்து வருகிறது என்று ஊகித்து அறிந்து கொள்ளும்படிக் கூறும் ஒரு கடிதம் வந்ததும், சற்றும் தயக்கமோ, இரண்டாவது யோசனையோ ஏதுமின்றி இதை எழுதியது அவள்தான் என்று இவன் சரியாகவே ஊகித்துக் கொண்டதும், அதன் பின்னர் தன் பங்கில் அவளைப் பேட்டி கண்டதும், இப்போது நள்ளிரவில் அவள் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு அவள் சிரிப்பையும் குரலையும் கற்பனையில் கண்டும் கேட்டும் மகிழ்ந்து கொண்டிருப்பதும்-

'ஓ! இதற்கெல்லாம் அர்த்தம் என்ன?' என்று அவன் சிரத்தை உலுப்பிக் கொண்டு எழுந்தான்.

'அவளும் நானும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறோமா?' என்று நேரிடையாக விஷயத்தை உடைத்தே தன்னிடம் அவன் கேட்டுக் கொண்டான். அவனுக்கு அவனது இந்த நிலை ரொம்பவும் ஆச்சரியமாகவும் நம்பமுடியாததாகவும் இருந்தது.

அவன் யாரையும் காதலித்தது இல்லை. எந்தப் பருவத்திலும், அந்த மாதிரியான அசட்டுத்தனங்கள்-ஆம் காதல் என்பது அசட்டுத்தனமான கற்பனை என்பது அவன் கணிப்பு-தன் வாழ்க்கையில் தலை எடுக்க அவன் அனுமதித்ததே இல்லை. அதையெல்லாம் அவன் நம்பியதுமில்லை. மனிதனுக்கு வாழ்க்கையில் ஒரு பெண்ணின் துணை அவசியம் என்பதை அவன் அறிந்து உணர்ந்த போது அவன் ஒருத்தியை மனைவியாக ஏற்கச் சம்மதம் தந்தான். அவளோடு மகிழ்ச்சியாக இருந்தான். அவள் அவனுக்கு வசதியாக இருந்தாள். அவள் மீது அவன் அன்பு கொண்டிருந்தான். அவளது நலனுக்கு அவன் பொறுப்பேற்றுக் கொண்டான்: அவள் இறந்த போது அந்த இழப்புக்கு அவன் வருந்தினான். அவளை அவன் இப்போதும் அன்போடு நினைத்துக் கொள்கிறான். அவள் இடத்தில் வேறு எவள் இருந்தாலும் அவளைப்போல் இருந்திருந்தால் அவன் இதுமாதிரிதான் இருந்திருப்பான்.

இதில் காதல் என்ன? நினைப்பதும், ஏங்குவதும், ரசிப்பதும், நினைத்து நினைத்து ஏங்கி ஏங்கி.... இதெல்லாம் என்ன மனக்கிறுக்கு?' என்று இப்போது ரங்கா நினைத்துக் கொள்கிறான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கவிதை, நாடகம், கலை, ரசனை என்பதெல்லாம் வசதி படைத்தவர்கள் வாழ்க்கையை விரயமாக்கிக் கொள்ளக் கண்டுபிடித்த வக்கரிப்பு என்றுகூட அவன் நினைக்கிறான். இதை வெளியில் சொல்ல அவன் அஞ்சுகிறானோ? அல்லது சொல்லிப் பயனில்லை என்று சும்மா இருக்கிறானோ! ஆனால் சில சமயங்களில் அவன் இவ்விதம் நினைப்பது மட்டும் உண்மை.

ஏழைகளும், இந்தத் தெருவில் தன்னோடு வசிப்பவர்களும் சினிமாக்களினாலும், வசதி படைத்தவர்களைப் பார்த்து அது மாதிரி தாங்களும் ஆகவேண்டும் என்கிற ஆசையினாலும் கெட்டுப் போகிறார்கள் என்று அவன் நினைக்கிறான்.

இப்படிப்பட்ட நினைப்புகளும் போக்குகளும் நம்பிக்கைகளும் கொண்ட தனக்கு இப்படியொரு சோதனை ஏற்பட்டு விட்டதை அவனால் நம்ப முடியவில்லை. ஆனால் இது உண்மை. கல்யாணி அவனை விரும்புகிறாள். அவனும் அதைப் புரிந்து கொண்டு அவள் பால் மனம் பறிகொடுத்து விட்டான்.

நன்கு முதிர்ந்த மனமும் அனுபவங்களும் கொண்ட தங்கள் இருவருக்கும் ஏற்படுகிற உறவு அசட்டுத் தனங்களைத் தவிர்த்து நடைமுறைக்கு ஒத்ததாகவே அமையும் என்று அவன் நம்பினான்.

'சரி இப்போது இந்தத்தெரு மனிதர்கள் தன்னைப் பற்றி என்னென்னவெல்லாம் பேசுவார்கள். எவ்வளவு கேவலமாக ஒரு நாடகக்காரியின் பின்னால் சுற்றித் திரிகிறவன் என்று இகழ்வார்கள்?' என்றெல்லாம் அவன் யோசித்தான்.

அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது என்று தன்னைத் தானே அவன் ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. 'எல்லாம் நடக்கத்தான் போகிறது' என்று அவனுக்குள் ஏதோ ஒன்று உறுதியாகக் கூறியது.

அந்த உறுதியில் அவன் சந்தோஷம் கொண்டான். ஆனால் குழப்பமும் சலனமும் கூடவே இருந்தன.

அவன் இரவெல்லாம் கண் விழித்துக் கட்டுரையை எழுதி முடித்த பின் விளக்கை அணைத்து விட்டு இருளில் படுத்துக் கொண்டான். கழுத்துக்குக் கீழே மடித்த கைகளுடன் மல்லாந்து படுத்து, கல்யாணியின் வசீகரமிக்க அந்தச் சிரிப்பையே அவன் உறக்கம் வராமல் கண்டு கொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததும் போய் அவளைப் பார்க்க வேண்டும். 'எப்போது விடியும்?' என்று அவன் காத்திருந்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்கா போனபின்பு வெகுநேரம் வரை அண்ணாசாமி அந்தப் பேட்டி சம்பந்தமாகக் கல்யாணியோடு பேசிக் கொண்டிருந்தார்.

முன் கூட்டியே தன்னிடம் அதுபற்றி அவள் கலந்து கொள்ளவில்லை என்பதில் அவருக்குக் கொஞ்சம் வருத்தம். கல்யாணியின் வாழ்க்கையில் அண்ணாசாமிக்குத் தெரியாத ரகசியம் ஏதுமில்லை. சொல்லப் போனால் அவளுக்குத் தெரியாத-அவள் வாழ்க்கையைப் பற்றிய-விஷயங்கள் கூட அவருக்குத் தெரியும்.

கல்யாணிக்கு, தான் பிறப்பால் தேவதாசி குலத்தைச் சேர்ந்தவள் என்பதே வெகு நாட்களுக்குப் பிறகுதான் தெரியும். அந்த அளவுக்குக் குல மரபுகள் திருத்தப்பட்ட பிறகுதான் அவள் பிறந்தாள். கல்யாணியின் தாய் கல்யாணியின் தந்தையை முறைப்படி மணந்து கொள்ள முடியாமல் கோயிலுக்குப் பொட்டுக் கட்டி கொண்டவள் என்கிற விஷயம் கல்யாணிக்கு இன்றுவரை தெரியாது. பொட்டுக் கட்டிக் கொண்டவள் என்றாலும் 'சந்தனப் பூச்சில் நிகழ்ந்த சாந்தி உறவிலிருந்து சாகும்வரை அந்த ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்ந்தவள் என்பதால் இந்தக் குடும்பத்தின் மீது அண்ணாசாமிக்கு ஓர் ஆழ்ந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

அண்ணாசாமியின் ஆபீசில் ஹெட் கிளார்க்காகக் கல்யாணியின் தந்தை வேலை பார்த்தார். இவருக்கு மிகவும் ஸீனியர். அவள் தந்தை இறந்த போது அவருடைய இன்ஷூரன்ஸ் பணம், பிராவிடென்ட் நிதி எல்லாவற்றையும் அண்ணாசாமிதான் பொறுப்போடு வாங்கித் தர உதவியாயிருந்தார். பத்தாவது படித்துவிட்டு, வீட்டிலிருந்த இவளுக்குத் தன் ஆபீசிலியே வேலை வாங்கித் தந்ததும் அந்த மரியாதையின் காரணமாகத்தான்.

அதன் பிறகு இந்தப் பத்தாண்டுகளில் ஏதேதோ ஆசைகளிலும் நம்பிக்கைகளிலும் இவள் வாழ்க்கையில் என்னென்னவோ நடந்துவிட்டன. போன மாசம் கல்யாணியின் அம்மாவும் போய்விட்டாள். பட்டம்மாளின் - துணையோடு எவ்வளவு காலம் இவள் தனி வாழ்க்கை நடத்த முடியும்? இவளுக்கு ஆதரவு என்று யாருமே இல்லையே? இந்தப் பெண் இதைப் பற்றியெல்லாம் யோசிப்பதாகத் தெரியவே இல்லையே என்று அண்ணாசாமி அடிக்கடி நினைத்துக் கொள்வார். சில சமயத்தில் கேட்கவும் கேட்பார். அப்போதெல்லாம் அந்தக் கேள்விக்கும், அவருடைய அந்த மாதிரியான கவலைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்காத மாதிரி ஏதாவது விளையாட்டாக, அல்லது இடக்காகப் பதில் சொல்வாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இந்தப் பேட்டியின் போது ரங்கா கேட்ட சில கேள்விகளும் அதற்கு இவள் சொன்ன பதில்களும் அண்ணாசாமிக்கு இவளை ஒரு புதிராகவே புரியவைத்தன.

இவள் தான் சினிமாவில் நடிக்கப் போவதில்லை என்ற தனது தீர்மானத்தை அவனிடம் தெளிவாகச் சொல்லிவிட்ட பிறகு, அதன் தொடர்பாக அவன் கேட்டான்:

“அப்படின்னா கொஞ்ச நாளைக்கு அப்புறம் திருமணம் செய்துக்கிட்டு, இந்தத் துறையிலிருந்து மெதுவா விலகிக்கலாம்கிற எண்ணம் உண்டா உங்களுக்கு?” என்று அவன் கேட்டபோது அது கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று பாராட்டுகிறமாதிரி அண்ணாசாமி தனக்குள் தலையாட்டிக் கொண்டார். இதற்குத் தான் சொல்லப் போகிற பதிலை அவன் அளவுக்கு ஆர்வத்தோடு அண்ணாசாமியும் அறிந்து கொள்ளத் துடிக்கிறார் என்று புரிந்து கொண்ட கல்யாணி ஒரு சிரிப்புக்குப் பிறகு சொன்னாள்:

“கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்ல முடியாது: ஆனால் அதுக்காக இந்தத் துறையைவிட்டு ஏன் விலகணும்னு சொல்றீங்க? ஒரு வேளை எனக்குக் கல்யாணம் ஆகாமப் போனாலும் போகலாம். நாடகத்தை விட்டுட்டு நான் எதுக்குப் போகணும்?" என்று அவள் திருப்பிக் கேட்டாள். இதன் தொடர்பாகவே அவன் தமிழ் நாடகத்தைப் பற்றி அவளிடம் பேசினான்.

“இந்த அளவுக்கு ஈடுபாடு கொள்ளத் தக்க விதமாய்த் தமிழ் நாடக உலகம் உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?” என்று அவன் கேட்டதற்கு அவள் பதில் கூறி இருந்தாள்:

“நாடகத்தைப் பத்தியோ உலகத்தைப் பத்தியோ எனக்கு ஒண்ணும் தெரியாது. ‘கலைத்துறை, அது, இது’ அப்படின்னு மத்தவங்க பேசறதைக் கேட்டுக்கிட்டு நானும் அந்த மாதிரிப் பேசறது உண்டு: எனக்கு நாடகமெல்லாம் பிடிச்சுத்தான் இருக்குது. ஏன்னா அதிலே நான் இருக்கேன் இல்லே? அதனாலே பிடிச்சிருக்குது. நீங்க நாடகத்தைப் பத்தியெல்லாம் சொல்றீங்களே, குறைகள்.... அதெல்லாம் நியாயமாத்தான் தோணுது. ஆனாலும் அதிலே நான் இருக்கேன் இல்லே. அதனாலே பிடிச்சிருக்குது. முகத்திலே மேக்-ஆப் போட்டுக்கிட்டா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குது, அந்த வெளிச்சத்திலே போய் நிக்கறதிலே எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குது, இந்தச் சந்தோஷத்தையும் பெருமையையும் எதுக்காகவும் என்னாலே விடமுடியாது. சாதாரணமாக என்னை மாதிரிப் பெண்களுக்கு ஏற்படற

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எவ்வளவோ சந்தோஷங்களை நான் இழந்துட்டேன். வேலையை விட்டேன். கல்யாணம், குடும்பங்கற விஷயங்களையெல்லாம் கூட விட்டமாதிரிதான். இதுவரைக்கும் இதுக்கெல்லாம் ஈடு செய்யற மாதிரி எனக்கு இருக்கிற ஒரே சந்தோஷம் இந்த நாடகம்தான். அதனாலே இதை என்னாலே விடமுடியாது.... அதெல்லாம் கிடைச்சால் கூட இதைவிட முடியாதுன்னு நினைக்கறேன். இந்த நாடகங்களிலே குறை இருந்தால் என்ன? இதெல்லாம் நீங்க நினைக்கற மாதிரி நாடகமாகவே இல்லாட்டி போனாலும்தான் என்ன?" என்று அவள் சொன்னதை அண்ணாசாமி நினைத்துப் பார்த்தார்.

இவளைப் பெரிய நடிகையாக்கி, இவளுக்குப் பொறுப்பான ஒரு இடத்தில் தானும் இவள்கூடவே அந்தப்புகழ் வெளிச்சத்தில், இதற்குத் தான்தான் காரணம் என்கிற பெருமையோடு நிற்கவேண்டும் என்று அவர் எண்ணி இருந்த நினைப்பெல்லாம் இன்று கொஞ்சம்கூடப் பிசிறில்லாமல் அறுபட்டுப் போய்விட்டதில் அவருக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது.

இதையெல்லாம் வேறு அவன் பத்திரிகையில் எழுதி விடப்போகிறான் என்று நினைக்கும்போது அவருக்குக் கோபம் வந்தது. ஒரு வார்த்தை தன்னிடம் அவள் சொல்லியிருந்தால் தன்னுடைய செல்வாக்கை உபயோகித்து எவ்வளவு சிறப்பாக ஒரு 'பிரஸ் கான்ஃப்ரன்சு'க்கு ஏற்பாடு செய்திருக்கலாம்! ஒரு சிறு பார்ட்டிகூடக் கொடுத்திருக்கலாம். இவளது வண்ணப்படங்கள் பத்திரிகையில் வெளியாவதற்கும் இவளது வாழ்க்கை வரலாற்றைக் கவர்ச்சிகரமாக எழுதுவதற்கும் கூடக் காரியங்கள் செய்திருக்கலாம். அதற்கெல்லாம் தகுந்த சூழ்நிலை வரட்டும் என்றுதானே அவர் காத்துக் கொண்டிருந்தார்!

'அதற்குள் அவசர அவரசமாக இந்த உருப்படாப் பயல் ரங்காவின் பேட்டிக்குத் தன்னைக் கலக்காமல் ஒப்புக்கொண்டு விட்டு, அதில் தனக்கும் சம்பந்தம் ஏற்படுத்துகிற மாதிரித் தன்னையும் அழைத்து அவனுடைய எக்கச்சக்கமான கேள்விகளுக்கெல்லாம் எக்குத் தப்பாகப் பதில் சொல்லி... என்ன இந்தப் பெண் இப்படிச் செய்துவிட்டாளே?' என்ற மன உளைச்சலில் முகத்தில் ஏற்பட்ட சுளிப்பு மாறாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார் அண்ணாசாமி.

பட்டம்மாள் சமையல் வேலைகளை முடித்துக் கொண்டு வராந்தாவில் சற்று நேரம் கல்யாணியை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அண்ணாசாமி விடைபெற்றுக் கொண்டு போவார் என்றும் அதன் பிறகு கல்யாணி சாப்பிட வருவாளென்றும் அவள் நினைத்தமாதிரி நடக்காததால்,

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொடியில் கிடந்த ஒரு பழந்துணியை எடுத்துச் சிமெண்ட் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டாள், முற்றத்து வழியே நிலா தெரிந்தது: எதற்கோ அவள் பெருமூச்செறிந்து கொண்டாள். சற்று நேரத்தில் அண்ணாசாமி, கல்யாணி, சாப்பாடு எல்லாவற்றையும் மறந்து அவள் மனம் எதிலோ மயக்கம் கொண்டு கண்களை மூடிய சுகத்தில் உறங்கிப் போனாள்.

முகத்தில் ஏற்பட்ட சுளிப்பு மாறாமல் அண்ணாசாமி வெற்றிலை போட்டுக் கொண்டார். அவருடைய மௌனத்திலிருந்து அவர் மன நிலையைப் புரிந்து கொண்ட கல்யாணி, அவரிடம் பேச்சுக்கொடுக்காமல் அவராகப் பேசட்டும் என்று வெகு நேரம் காத்திருந்த பின் இந்த நிலைமையை நீடிக்க விரும்பாமல், ஏதாவது சாக்கில் பட்டம்மாளைக் கூப்பிட்டுக் கொண்டு பின் கட்டுக்குப் போகலாமா என்று நினைத்துத் திரும்பியபோது அவளும் படுத்துத் தூங்குவதைப் பார்த்தாள். பின்னர் கடிகாரத்தைப் பார்த்தாள். நிலா வெளிச்சத்தில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்காரலாமா என்று அவளுக்குத் தோன்றியது. அவளும் கூட அண்ணாசாமி போகட்டுமே என்று எதிர்பார்த்தாள்.

அண்ணாசாமியை அனுப்பிவிட்டு, இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து மாலை நடந்த சந்திப்பின் சம்பாஷணைகளை, அவன் கேள்விகளை, சிரிப்பை, ஆழ்ந்த அறிவை, நிதானமான கருத்துக்களை நினைத்து நினைத்துப் பார்த்துக்கொண்டு இரவைக் கழிக்க வேண்டும் என்று அவள் ஆசை கொண்டாள்.

தான் ஏதாவது பேசினால் அவர் மனோநிலையில் சமாதானம் ஏற்பட்டுப் புறப்படுவாரோ என்ற எண்ணத்தில் ‘என்ன ஸார். பலமான யோசனை? கொஞ்சம் வெத்திலைப் பெட்டியைக் கொடுங்க” என்று அவர் சிந்தனையையும் அங்கு நிலவிய மௌனத்தையும் கலைத்துவிட்டு அவள் வெற்றிலை போட்டுக்கொள்ள ஆரம்பித்தாள்.

அண்ணாசாமி திடீரென்று அவளிடம் கேட்டார்: “நீ என்கிட்டே முன்கூட்டியே சொல்லி இருக்கலாம். இந்த மாதிரியே பத்திரிகையிலே பேட்டி கீட்டி வரது உனக்குப் பிடிக்கும்னு என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் பிரமாதமா ஏற்பாடு எண்ணி இருக்கலாமே? உனக்குத் தெரியாததில்லே. இந்த ரங்கா இருக்கானே இவன் ஒரு வக்கிரம். நீ இவன்கிட்டே எக்கச்சக்கமா வார்த்தைவிட்டு வச்சிருக்கே. அவன் என்னத்தை எழுதி வெக்கப் போறானோன்னுதான் யோசிச்சுண்டு இருக்கேன். அவன் ரொம்பப் பொல்லாதவன்” என்று நிறுத்த முடியாமல்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பேசிக் கொண்டே இருந்தார்.

அவனை வரச்சொன்னதும், தான் இந்தப் பேட்டிக்கு ஒப்புக்கொண்டதும் அண்ணாசாமிக்குக் கட்டோடு பிடிக்கவில்லை என்று கல்யாணி புரிந்துகொண்டாள். இவருக்கு எது பிடிக்கவில்லை என்று தான் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டுமென்று இவர் எதிர்பார்ப்பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் இதை முகத்தில் அடித்தாற்போல் இவரிடம் சொல்லிவிடுவதோ அல்லது இதை இவர் அறிந்து கொள்ளும்படி நடந்து கொள்வதோ கூட அநியாயமானது என்ற நினைப்பில்தான் இந்தப் பேட்டியைப்பற்றித் தனக்கு ஏன் முன்கூட்டியே சொல்லவில்லை என்று அண்ணாசாமி கேட்டதற்கு அவள் பதில் சொல்லாமல் இருந்தாள்.

அவர் தனக்குள்ளாகவே அவள் காதில் விழுகிறமாதிரி சொல்லிக் கொண்டார்.

“அங்கே என்னடான்னா உன் மேல் நான் வச்சிருக்கிற அக்கறையிலே பாதிகூட அவாகிட்டே காட்டறதில்லேன்னு ஆத்திலே குறைப்பட்டுக்கறா. உன் விஷயத்தில் அவாளுக்கு ரொம்பப் பொறாமை...” என்று என்னவோ சொல்லவந்தவர் வேறு மாதிரியாகத் தானே வழுக்கிக் கொண்டார். “இவாளுக்கென்ன குறைச்சல்? இவாளை நான் என்ன, ஏதுன்னு கேக்காமல், கண்டுக்காமல் விடறதுதானே இவாளுக்கே சந்தோஷம்? என்ன, ஏதுன்னு கண்டுண்டாத்தானே வம்புன்னு அந்தப் பக்கமே நான் திரும்பறதில்லே, அப்பவும் கஷ்டமா? அம்மாளும் பொண்ணுமா சேர்ந்துண்டு போட்டி போட்டுண்டு புடவையா வாங்கி அடுக்கறா” என்று அவர் தன் மனைவியைப் பற்றியும் மகளைப் பற்றியும் பேச ஆரம்பித்த சம்பந்தமில்லாத விஷயங்களை அவள் பொருட்படுத்தாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அண்ணாசாமி அடிக்கடி இப்படிக் குடும்பத்தைப் பற்றி ஏதேனும் குறைகளைக் கொட்டி அளக்க ஆரம்பிப்பார். அப்போதெல்லாம் அவற்றை மனத்தில் வாங்கிக் கொள்ளாமல் மௌனம் சாதிப்பதன் மூலம் அவர் குடும்பத்தினரிடம் தனக்கிருக்கும் மரியாதையைக் காட்டிக் கொண்டாள் அவள். ஆனால், அவரோ சமயம் கிட்டுகிற போதெல்லாம் தன் குடும்பத்தினர் இவள் மீது கொண்டிருக்கும் பொறாமையையும் ஆத்திரத்தையும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது ஏன் என்று அவளுக்குப் புரிவதில்லை.

இப்போதும்கூட அவரது புலம்பல்களையெல்லாம் பொருட்படுத்தாது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

போனாலும் தன் மீது அவர் கொண்டிருக்கிற அக்கறையை எடுத்துக்காட்டியது ஏன் என்ற காரணத்தை ஒரு நொடியில் அவள் புரிந்து கொண்டுவிட்டாள். அவரது அனுமதி இல்லாமல் அவனை வரச் சொன்னதில் அவருக்கு ஏற்பட்டிருக்கிற மனத்தாங்கலை அவள் உணர்ந்து கொண்டாள். ஆனால் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லாமல், ‘அவன் என்ன எழுதி வைக்கப்போகிறானோ?’ என்று அவர் கொண்ட பயத்துக்கு மட்டும் அவள் பதில் சொன்னாள்:

“மத்தவங்களுக்கெல்லாம் அவர் எப்படி இருந்தாலும் எனக்கென்னமோ அவர் ரொம்ப நேர்மையானவர்ங்கற நம்பிக்கை இருக்குது. அவர்தான் அச்சுக்குப் போறதுக்கு முன்னாலே எழுதினதைக் கொண்டுவந்து காட்றேன்னு சொன்னாரே” என்று சமாதானம் சொல்லிக்கொண்டே கொஞ்சம் புகையிலையை எடுத்து வாயில் ஒதுக்கிக் கொண்டாள்.

அண்ணாசாமி இவளது வாழ்க்கையோடு தனக்கு ஏற்பட்ட இந்தப் பிரிக்கமுடியாத பந்தத்தை ஒரு விநாடி பரிதாபமாக யோசித்துப் பார்த்தார்.

ஒரு அமெச்சூர் நடிகர் என்ற முறையில் தன்னுடைய நடிப்புக்கோ அல்லது இந்தக் ‘கல்யாணி கலை அரங்க’ வளர்ச்சிக்கோ தான் அலைகிற அலைச்சலுக்கோ பொருளாதார ரீதியில் ஒரு சல்லிகூடப் பயனடையாமல் ஏதோ ஒரு திருப்திக்காக-அவர் வீட்டில் அதற்கு அசட்டுத்தனம் என்று பெயர்- அந்தப் பட்டத்தையும் வாங்கிக் கட்டிக்கொண்டு, தான் எடுத்துக் கொண்ட சிரமங்களையும் அதன் விளைவாக இவளையும் இவளுக்குச் சொந்தமான நாடகக் குழுவையும் தன்னுடைய சொந்தத்துக்கு அப்பாலேயே விலக்கிவைத்து வளர்த்து விட்டு விட்டுத் தனக்கு அவற்றோடு-இவளோடு எந்த விதச் சொந்தமுமில்லாமல், மனோ உணர்ச்சிகளினால் மட்டும் தான் பந்தப்பட்டுப்போன நிலைமையின் பரிதாபத்தை அவர் எண்ணிப் பார்த்தார்.

“கல்யாணி நீ சினிமாவிலே நடி, நடிக்காம போ: நீ கல்யாணம் பண்ணிக்கோ, பண்ணிக்காம இரு. அதெல்லாம் எதுக்கு இப்படி பப்ளிக்கா சொல்லணும்? இந்த மாதிரிப் பேட்டி எல்லாம் தொழில்லே முன்னேறணும்ங்கறதுக்குப் பயன்படணுமே ஒழிய, ‘அது வேண்டாம் இது வேண்டாம்’னு சொல்றதுக்கு ஆயிடப்படாது. மத்தவாள்ளாம் என்னவெல்லாம் பண்றாதெரியுமா? இதுக்காக முன்னாடியே ஒத்திகை பார்த்துக்கிறா. இந்த மாதிரி மனசிலே படறதெல்லாம் சொல்றது உன்னோட முன்னேற்றத்துக்கு நல்லதில்லேன்னு தோணறது. எனக்கு இதைப்பத்தி முன்னாலேயே நீ கேக்கலையேங்கறது வருத்தமாத்தான்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கு” என்று அவர் மிகவும் மனம் கனத்துப் பேசிக் கொண்டிருக்கும் போது, ‘ஒரு நிமிஷம்’ எனறு சைகையால் சொல்லிவிட்டு வாயிலிருந்த புகையிலைச் சாற்றைத் துப்பிவிட்டு வர அவள் எழுந்து போனாள்.

அந்த ஹாலைக் கடந்து அவள் நடந்து போன அந்தக் காட்சி அவள் திரும்பி வருவாள் என்பதற்கு எப்படி ஒரு குந்தகமும் விளைவிக்காதோ அதே மாதிரி தன்னிடம் தெரிவிக்காமல் இந்தப் பேட்டிக்கு ஏற்பாடு செய்ததனால் இவள் தன் பொறுப்பிலிருந்து ஒன்றும் நழுவிப் போய் விட்டவள் அல்ல என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும் என்று மனசின் ஆழத்தில் அண்ணாசாமி சமாதானம் கொண்டார்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த அவர், வராந்தா கதவுக்குப் பின்னால் அவள் மறைந்தபோது அந்தக் கதவோரத்தில் நிலைக்கவிட்ட தன் பார்வையை மாற்றாமல் மறுபடியும் அவள் கதவோரத்தில் தோன்றிய மாத்திரத்தில் அங்கு காத்திருந்த தன் பார்வையால் அவளைத் தொட்டு அவள் தன் அருகே உட்காருகிற வரைக்கும் தொடர்ந்து இழுத்து நெருக்கம் கொள்கிற மாதிரி உணர்ந்தார்.

“என்ன ஸார்! அப்படிப் பாக்கிறீங்க?” என்று அவள் கேட்டபோது, “ஒண்ணுமில்லை” என்று சிரித்துக் கொண்டே லேசாக அவர் கண்கலங்கிவிட்டார். அவளும் ஒரு விநாடி மனசுள் பதறிப் போனாள்.

“ஏன் ஸார்! உங்க மனசு வருத்தப்படும்படியா ஏதாவது தப்புப் பண்ணிட்டேனா?” என்று உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து நின்று அவள் கேட்டாள். அந்த விநாடி அவளுக்கு அவர் முன்னால் எழுந்து நின்று பேசுவதுதான் முறை என்று தோன்றியது. அவர் தன்னிடம் காட்டுகின்ற அன்பினால் தனக்கு அவரிடம் ஏற்பட்டுவிட்ட சமத்துவத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அவள் நினைத்தாள். தனது தவறுகளை அவர் சுட்டிக்காட்டவும், தான் அவருக்குவிளக்கம் கூறவும் தன்னிடம் அவருக்குள்ள பாத்தியதையை அவள் உணர்ந்திருந்தாள்,

“சீ!சீ! இதென்ன, நீ ஒரு தப்பும் செய்யலை. எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. உட்காரு” என்று அவளை அமர்த்தித் தன்னைத் தேற்றிக் கொண்டார் அண்ணாசாமி.

“நீ இப்படியே எவ்வளவு நாளைக்குத் தனியா இருக்கிறதுன்னு நான் யோசுச்சுப் பார்க்கிறேன். அப்படி இருக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன். உனக்கு வயசு வேறே முப்பத்திரண்டு ஆயிடுத்துன்னு ஊர் பூரா நீ மேளம் கொட்டறே.... அதுபத்தி நீ சீரியஸா ஒண்ணுமே யோசிக்கலையா?” என்று

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவர் கேட்டபோது, அவள் சிரித்துக்கொண்டே பதில் சொன்னாள்.

“சீரியஸா ஒண்ணும் ஆகலையே. அதுக்குள்ளே சீரியஸா எப்படி ஸார் யோசிக்கறது?” என்றதும் அண்ணாசாமிக்கு ஒரு முறை உடம்பு புல்லரித்துப் போய்விட்டது.

‘இவள் என்ன சொல்கிறாள்? நான் நினைக்கிற மாதிரியே இவளும் கூட நினைத்துக்கொண்டிருக்கிறாளோ’ என்று எண்ணிய போது அது தன் கற்பனையே என்று தோன்றி அவரால் நம்பமுடியவில்லை. “சீரியஸா எதுவும் தானா ஆகாது நாம்ப தான் ஆக்கணும்” என்று வாயெல்லாம் பல்லாகச் சொன்னார்.

அவர் எது குறித்து அப்படிச் சொல்கிறார் என்று தெரிந்து கொள்ளச் சிரத்தை காட்டாமல் அவர் சொல்வதை ஆமோதிக்கிறமாதிரிச் சிரித்துக் கொண்டு தலையசைத்தாள் கல்யாணி. அண்ணாசாமி மேலும் கொஞ்சம் அந்தரங்கமாக அவளிடம் சொன்னார்: “ஏன்னா, மத்தவா இந்த உறவை சீரியஸா ஆக்கிப் பேசிண்டு இருக்கும் போது நாம்ப யாருக்காக ‘அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை’ன்னு ஒருத்தரை ஒருத்தர் ஏமாத்திக்கணுமாம். எங்க வீட்டிலே இருக்கிறவா அப்படி ஒண்ணும் உன்னை விட எனக்குப் பந்தபட்டவா இல்லை. கல்யாணி! நான் என்ன சொல்றேன்னு உனக்கு புரியறதா? எனக்கு உன்னைத் தவிர யார் இருக்கா?” என்று பேசப்பேச அவர் குரலின் ஸ்தாயி குறைந்து கொண்டே வந்தது.

கல்யாணிக்கு அவருடைய மனமும் தவிப்பும் புரிந்தது. அதற்காக அவள் அதிர்ச்சிகூட அடையவில்லை. வருத்தமும் கொள்ளவில்லை. அசூசைப் படவுமில்லை. அதில் உள்ள நியாயத்தை அவள் நினைத்துப் பார்த்தாள். அந்த நியாயம் தனக்கு இவ்வளவு காலமாகப் புரியவில்லையே என்று எண்ணினாள். இப்போது புரியவேண்டிய காலம் கடந்து விட்டதையும் எண்ணி இதை எப்படி இவருக்குப் புரியவைப்பது என்று ஒரு பிரமிப்புக் கொண்டாள்.

அண்ணாசாமி காமாதுரப்பட்டுத் தன்மீது இப்படி ஒரு நாட்டம் கொண்டுவிடவில்லை என்று அவளுக்குத் தெளிவாய்ப் புரிந்தது. அவள் மீது அவர் வைத்த மதிப்பும், அவளது திறமையின் மீது அவர் கொண்ட நம்பிக்கையும், அவளது அழகிலும் நடிப்பிலும் அவர் கொண்ட ரசனையுமே-அவளுக்காக அவர் மேற்கொண்ட சிரமங்களும், உழைப்பும், அவளது எதிர்காலத்தின் மீதும் நல்வாழ்க்கையின் மீதும் அவர் கொண்ட நாட்டமும்தான்-அவரைத் தன் மீது ‘காதல்’ கொள்ளும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அளவுக்குத் தாழ்த்தி இருக்கிறது என்று மிகவும் அனுதாபத்தோடு புரிந்து கொண்டாள். இவ்வளவும் செய்த அவருக்கு, இவள் உறவினால் தனக்கு யாருமே இல்லை என்ற நிலையை ஏற்படுத்திக் கொண்ட அவருக்கு, தன்னிடம் இப்படி ஓர் ஆசையை வெளியிடும் உரிமை மிகவும் நியாயமானதே என்று அவள் நினைத்தாள்.

'ரங்காவைப் பார்ப்பதற்கு முன்னால், அந்த மொட்டைக் கடிதத்தை எழுதவேண்டுமென்ற எண்ணம் எனக்கு வருவதற்கு முன்னால், அண்ணாசாமி தனது இந்த எண்ணத்தை வெளியிட்டிருந்தால் மிகவும் பெருமிதத்தோடு அவர் கையைப் பற்றிக்கொண்டு எனது ஒப்புதலைத் தந்திருப்பேனோ?' என்று கூட அவள் இப்போது எண்ணினாள்.

அண்ணாசாமிக்குத் தன்பால் இப்படியொரு எண்ணம் ஏற்படக்கூடும் என்று கற்பனையாகக்கூடத் தனக்குத் தோன்றியதில்லையே என்று எண்ணி மனசுள் வியந்தாள் கல்யாணி. இப்போதும்கூட அவர் தனக்குச் செய்த, செய்கிற உதவிகளையும் தனது நலனில் அவர் காட்டுகிற அக்கறையையும் அந்த உள் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்று அவள் நினைக்கத் தயாராயில்லை.

அவரை நினைக்க அவளுக்குப் பரிதாபமாய் இருந்தது. அவரையும் அவரது குணங்களையும், இயல்புகளையும், ரசனையையம் கலையார்வத்தையும் கட்டோடு விரும்பாத அவரது குடும்பத்தினரை அவள் எண்ணிப் பார்த்தாள். இப்படிப்பட்ட மனிதர்கள் தங்கள் இயல்புகளுக்கும் போக்குகளுக்கும் ஏற்ப இன்னொரு வாழ்க்கை-சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிற நடைமுறை வழக்கத்தின் நியாயமும் கூட அவளுக்குப் புரிந்தது. அப்படித் தனக்குத் தெரிந்த இந்தத் துறை சம்பந்தப்பட்ட பெரிய மனிதர்களிலிருந்து சாதாரணமானவர்கள் வரை அவள் வரிசையாகப் பலரை நினைத்துப் பார்த்தாள்.

அவள் தன்னைப்பற்றியும் எண்ணிப் பார்த்தாள். யாரையும் கல்யாணம் செய்துகொண்டு குடும்பம், குழந்தையென்ற பந்தங்களில் தன்னைப் பிணைத்துக் கொள்கிற தன்மையும் தகுதியும் தனக்கு இல்லையென்றே அவளுக்குத் தோன்றியது. அப்படியொரு அதிர்ஷ்டம் தனக்கு ஏற்படுமெனில் அதற்காக அவள் சந்தோஷப்படுவாள். அதை ஏற்றுக்கொண்டு அதற்கு உகந்த முறையில் வாழ்ந்தும் காட்டுவாள். ஆனால் அதற்குப் பிணையாகவோ, பேரமாகவோ, இந்த நாடகத் துறையை விட்டு விலக அவள் சம்மதிக்கமாட்டாள் என்பதைத்தான் சற்றுமுன் பேட்டியின்போது அவள் ரங்காவிடம் கூறினாள். அர்த்தமுள்ள எது எதையோ இதன் பேரால் அவள் இழந்து விட்ட பிறகு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அர்த்தமில்லாத, மரியாதை இல்லாத, வளர்ச்சிக்கோ புதிய முன்னேற்றங்களுக்கோ வாய்ப்பில்லாத இந்த ‘நடிகை’ என்கிற பீடத்தைப் பதிலுக்குப் பரிசாகவோ தண்டனையாகவோ தெரிந்தோ தெரியாமலோ ஏற்றுக்கொண்டாகிவிட்ட பிறகு இதையும் இழக்க-எதன் பேராலும் இழக்க அவள் தயாராயில்லை.

எனவேதான் வாழ்க்கையில் யாருடனாவது தனக்கு வாழ்க்கைச் சம்பந்த உறவுதான் ஏற்படமுடியும் என்றும் அதையாவது உயர்வானதாகவும், பிசிறில்லாத, பிரச்சனைகள் இல்லாத, சற்று உயர்ந்த தரத்தோடு ஒரு நல்ல மனிதனுடன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இவள் விரும்பினாள். அதிலேயே ஒருவகை ஒப்பந்தம் காண அவள் மனசுள் அவாவினாள்.

இந்தத் தனி வாழ்க்கையின் வெறுமையை, அர்த்தமின்மையை அவளால் இன்னும் அதிககாலம் தாங்க முடியாது என்றும் அவள் உணர்ந்திருக்கிறாள். தன்னோடு அவ்விதம் ஓர் வாழ்க்கைச் சம்பந்தம் பெற வருகிறவன் ஏழையாக, நூறு ரூபாய்ச் சம்பளக்காரனாக, ஒரு குமாஸ்தாவாக இருந்தால் கூடப் பரவாயில்லை. அவன் தன்னை மதித்துத் தன் மீது அன்பு காட்டிக் கௌரவம் அளிக்கிற நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள்.

பணக்காரர்களின், படத் தயாரிப்பாளர்களின், செல்வ மமதை கொண்டவர்களின், காமுகர்களின் ‘ஆசை நாயகி’ யாக வாழ்ந்து, வைப்பாட்டி என்ற பேரெடுத்து அதன் மூலம் வெறும் லோகாயத-பொருளாதார ரீதியான சௌகரியங்கள் எவ்வளவு கிடைத்தாலும் அதன் மூலம் தன் ஆத்மா சீரழிந்து, பின்னர் தனது புறவாழ்க்கையும் கூடச் செல்லரித்துப் போய்விடும் என்று அஞ்சியதால் அவள் மிக ஜாக்கிரதையாகவே, இந்த உலகத்தில் பழகி வந்தாள்.

அந்த ஆவலுக்கும், இந்த எண்ணங்களுக்கும் ஏற்ற உறவாக அண்ணாசாமியுடனேயே ஒரு தொடர்பு ஏற்பட்டு விடமுடியும் என்று அவளுக்குத் தோன்றியதே இல்லை. அதற்குக் காரணம் அவரை மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து அவள் மரியாதையோடும் பெருமையோடும் நடத்தியதுதான். அவரும் மனிதர். அவருக்கும் பலவீனங்களும், ஆசைகளும் குறைகளும், ஏக்கங்களும் உண்டு என்று அவள் நினைத்ததே இல்லை.

தன் மனசின் விரிசலை அவர் கொஞ்சம் காட்டியவுடன் அதன் வழியே அவளது அந்தரங்கமான உள்ளுலகத்தை மிகத் தெளிவாகவும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வெளிச்சமாகவும் அவளால் பார்க்க முடிந்தது.

இவ்வளவு நாடகங்கள் போட்டு, அதில் தானும் வேஷ மேற்றுக்கொண்டு, ஊரில் உள்ளவர்களைக் கல்யாணதிற்கு அழைப்பது மாதிரி அழைத்து, வரவேற்று, அவர்கள் பாராட்டில் தன்னை மறந்து நின்று மயங்குவதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறாரே இந்த அண்ணாசாமி. இவரது குடும்பத்தினர்-அதாவது மனைவியோ மகளோ- ஒருவராவது ஒரு தடவையாவது இவரது வேஷத்தையோ இவரது நாடகக்கதையோ பார்க்கக்கூட வந்ததில்லை என்பதைக் கல்யாணி நினைவு கூர்ந்து இவரது நிலைமையை நன்றாக உணர்ந்து பார்த்தாள்.

இவரது வாழ்க்கையே குடும்பத்துக்கு வெளியே இந்த நாடகக் குழுவில்தான் நிறைவுகாண்கின்றது என்று இப்போது புரிந்து கொள்கையில் இவரது எண்ணப்படி இவரோடு வாழ்க்கைச் சம்பந்தம் கொண்டுவிடுவது என்கிற யோசனை அவருக்கும் தனக்கும் எவ்வளவு பொருத்தனமாது, உகந்தது என்று அவளுக்குத் தோன்றியது.

அப்படி ஒன்றும் அவர் வயதானவரோ கிழவரோ அல்ல, தானும் உலகமறியாத கன்னிப்பெண் அல்ல. வாழ்க்கையைப் பற்றி அதீதமான கனவுகள் காண்பவளும் அல்ல.

சரியாகவோ தவறாகவோ, நல்வினையாலோ தீவினையாலோ வாழ்க்கையில் ரொம்பப் பேருடைய திசை மாறிப்போய் விடுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குப் கலையும் ரசனையும் மனித பலவீனம் மாதிரி தனிப்பட்ட அந்தரங்க வாழ்வில் அவலம் கொண்டு விடுகிறது. விலகி நின்று பார்க்கிறவர்களுக்கு அது கேவலமாகவும் கேலிக்குரியதாகவும் கூட ஆகிவிடலாம். ஆனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவரவர் வாழ்க்கை அவரவர் அந்தரங்கம் என்று நியாயமானதாகவும் புனிதமாகவும்தான் இருக்கும்: இருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் தற்கொலை செய்து கொள்ள நேர்ந்துவிடும்.

அதுமாதிரியான ஒரு நியாயம் அவளுக்கும் அவருக்கும் இடையே ஏற்படக்கூடிய – ஏற்படவேண்டிய – ஏற்படாது போய்விட்ட – சம்பந்தத்தில் இருந்திருக்கலாமே என்று அவள் எண்ணினாள். இந்த ரங்காவின்பால் தன் மனம் ஈர்க்கப்பட்டுவிட்டதற்காக அவள் இப்போது கொஞ்சம் அந்த மகிழ்ச்சியில் குறைப்பட்டாள். தானும் அவர் மாதிரியே நினைப்பதாகவும் அவர் எண்ணத்தை அறிந்து அதற்கு இணங்கி இருப்பதாகவும் எண்ணுகிற அண்ணாசாமியிடம் இதை எப்படி எடுத்து அவர் மனம் புண்படாமல் விளக்குவது என்ற தயக்கத்தில் அவள்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மௌனமாக இருந்தாள்.

“கல்யாணி” என்று மெதுவாக, சொந்தமாக நெருக்கமாகக் குரல் கம்மிக் கூப்பிட்டார் அண்ணாசாமி. அவளது சம்மதத்தை, அவளுடைய ஒப்புதலை, ஆமோதிப்பை, ‘சரி’ என்னும் சிறுநகையை எதிர்பார்த்து அவர் மனமும் உடலும் வியர்த்தார்.

கல்யாணி மௌனமாக அவரைப் பார்த்தாள்.

“நீ எப்படியெல்லாம் பேரும் புகழும் வாங்கிப் பிரபலமாக வேணும்னு நான் கனவு கண்டுண்டு இருக்கேன் தெரியுமா?” என்று கெஞ்சுவதுபோல் தன் அன்பை அவர் கூறினார்.

கல்யாணிசிரித்துக் கொண்டே சொன்னாள்:

“உங்களுக்கு நான் ரொம்ப இளம் பெண்ணாத்தான் தோணும். ஆனால் இந்த வயசுக்கு மேலே நான் ஒரு ஸ்டாரா ஆகணும்னு ஆசைப்படறதுக்கே வெக்கமா இருக்கு ஸார்....எவ்வளவு சின்னச் சின்னப் பெண்களெல்லாம் எல்லாத்துக்கும் தயாராகிப் போட்டி போடற இந்தக் கலை உலகத்திலே என்னை மாதிரி ஒரு…சுய கௌரவமும், மரியாதையும் உள்ள முப்பது வயசையும் தாண்டிட்ட ஒருத்தியைப்பத்தி நீங்க இப்படியெல்லாம் கனவு காணறது உங்களுக்கு என்மேலே இருக்கிற அளவு கடந்த ஆசையைத்தான் காட்டுது.”

அண்ணாசாமிக்கு இவள்பால் தான் கொண்டிருக்கின்ற அளவு கடந்த ஆசையை இப்போதாவது இவள் புரிந்து கொண்டாளே என்கிற நிம்மதியும் நிறைவும், அந்த ஆசை நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியும் கலந்து ஓர் ஆனந்தப் பெருமூச்சாக வெளிவந்தது.

“கல்யாணி கல்யாணி” என்று குழைவுற்ற மனத்தோடு, தன்மீது அவள், பொழிந்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்ட காதலின் குளிர்ச்சியில் சிலிர்த்துக் குறுகிய உடலோடு, மறுபடியும் மறுபடியும் கூப்பிட்டார்.

அவர் தன்னை நெருக்கமுறுவது கண்டு நாற்காலியில் சற்று ஒதுங்கி பட்டம்மாள் அங்கு இருப்பதை அவருக்கு நினைவூட்டுகிறமாதிரி அவள் படுத்திருக்கிற திசையை ஒரு முறை பார்த்தபின் ஸோஃபாவிலிருந்து எழுந்தாள் கல்யாணி.

தான் எழுந்தவிதம் ஒரு மறுப்பாக அவர் மனசில் புரிந்து விடக்கூடாதே என்கிற நினைவோடு அவரைப் பார்த்து லேசாகப் புன்னகை செய்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அந்தப் புன்னகை ஒரு சம்மதமாக அவர் பார்வையில் பதிந்து விடக் கூடாதே என்று அஞ்சி, 'மணி பத்தாச்சே!' என்று அவரைப் புறப்படச் சித்தப்படுத்துவது போலவும் "டாக்ஸி கிடைக்காதே!" என்று அவர் மீது அக்கறை பாராட்டுவது போலவும் அவள் சொன்னாள்.

அவள் சொன்னதை அவர் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை. அவள் அங்கிருந்து நகர்ந்து நிலா வெளிச்சம் வீசுகின்ற வீட்டின் முன் வராந்தாவுக்கு நடந்தாள். அவரும் எழுந்து அவளைத் தொடர்ந்து வந்தார்.

கல்யாணி, சாயங்காலம் ரங்காவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாளே அதே இடத்தில் அந்த நாற்காலியில் நிலா வெளிச்சம் தன்மீது நன்றாக விழுகிற மாதிரி உட்கார்ந்து கொண்டாள். அண்ணாசாமியும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார்.

தெருவில் ஜனநடமாட்டம் இருந்தது. நர்ஸரிப் பள்ளிக்கு இரண்டு பக்கத்திலுமுள்ள எதிர்வீடுகளில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

அண்ணாசாமி எழுந்துபோய் வெற்றிலைப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தார். அப்போது அவரைப் பின்னால் பார்த்த கல்யாணி தன் மனநிலையையும், ரங்கா மீது தனக்கு ஏற்பட்டுள்ள இந்தப் புதிய நாட்டத்தையும் இவரிடம் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அதே சமயம் தன்னிடம் அண்ணாசாமி அவருடைய ஆசையை வெளியிட்டதில் தவறு ஏதும் இல்லை என்றும், எப்படி அவர் உணர்ந்துகொள்ளுகிற வகையில் சொல்லமுடியும் என்றும் யோசித்தாள்.

அவர் வந்து உட்கார்ந்ததும் அவரிடம் அவள் சொன்னாள்:

"ஸார், உங்ககிட்டே நான் சில முக்கியமான விஷயங்களைப் பேசிடணும். மணி ஆச்சு.... அதனாலே பரவாயில்லை. நீங்க இங்கேயே கூடத் தங்கிடலாம். நான் சொல்லப் போறதைத் தப்பாவோ வருத்தமாவோ புரிஞ்சுக்கக்கூடாது. எனக்கு ஆதரவா உங்களைத் தவிர வேற யாரும் கிடையாது. நல்லதோ கெட்டதோ உங்ககிட்டேதான் நான் கலந்துக்க முடியும்..." என்று கூறி சற்று மௌனமாக இருந்தாள் கல்யாணி.

அண்ணாசாமியும், இவள் எது குறித்து என்ன சொல்லுவதற்கு இப்படி ஆரம்பிக்கிறாள் என்று தெரியாத மௌனத்தில் தலையாட்டினார். வாயிலிருந்ததை எழுந்துபோய்த் துப்பிவிட்டு வந்தார். வெற்றிலை போடலானார்.

கல்யாணி நிலாவைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்:

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“ஸார், நீங்க எனக்கு எவ்வளவோ உதவி செஞ்சிருக்கீங்க: இன்னிக்கு நான் இருக்கிற நல்ல திறமைக்கெல்லாம் நீங்க செய்த உதவிதான் காரணம். நம்ம நாடகக் குழுவுக்கு இன்னிக்கு இருக்கிற இவ்வளவு பேரும் புகழும் உங்களாலேதான். உங்களைப் புகழறதுக்காக நான் இதெல்லாம் சொல்லலே... இவ்வளவு இருந்தும் என் வாழ்க்கை என்னவோ திசை தெரியாத பிரயாணமாத் தானே போய்க்கிட்டு இருக்குன்னு நான் யோசிப்பேன்... சில சமயத்தில் தோணும்... நடிக்கிறதுக்கு, நாலு பேர் முன்னாலே தோண்றதுக்கு எல்லாம் நான் ஆசைப்பட்டேனே-அந்த ஆசை தான் என் வாழ்க்கையை இப்படி ஆக்கிட்டுதுனு நினைப்பேன். ஒரு விதத்திலே அது சரி தான். நான் பேசாம-ஆபீஸ் உத்தியோகத்தை விடாமல் அதிலேயே இருந்திருந்தால் என் வாழ்க்கை முறை வேற தினுசாத்தான் ஆகி இருக்கும். ஆனா இப்பவும் இந்த நடிக்கிற ஒரு விஷயம் தான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. நடிக்கவும் வரலேன்னா இந்த நிம்மதியும் இல்லாமல் வேற சிக்கல்களை வாழ்க்கையிலே இழுத்து விட்டுக்கிட்டு இந்த மாதிரி நடிக்க வந்திருந்தா நல்லா இருக்குமேன்னு அப்ப ஏங்கி இருப்பேனோ என்னவோ?...” என்று சொல்லிக் கொண்டே வந்தவள், ‘நான் என்ன, சொல்ல வந்த விஷயத்தை விட்டுட்டு வேற எங்கேயோ ஆரம்பிச்சு சம்பந்தமில்லாமே எதையோ சொல்லிக்கிட்டு இருக்கேன்’ என்று யோசித்தாள். பிறகு சொன்னாள்:

“இருக்கிற வாழ்க்கையிலே நிம்மதியா இருக்கக் கத்துக்கணும். அலைச்சலும், பேராசையும், ஆவலாதியுமா இருந்தா இருக்கற நிம்மதியும் போயிடும்.... அதனாலே அதெ விடுங்க... எனக்கு இந்த நாடகக் கம்பெனி போதும். சினிமாவிலே நடிக்கணும் ஸ்டாரா ஆகணும்னு இருந்த ஆசை எல்லாம் எப்பவோ போயிடுச்சு. மானத்தோட மரியாதையோட நம்ப மனசுக்கு நம்மைப்பத்தி நெனச்சுப் பார்த்தா கௌரவமா, சந்தோஷமா இருக்கிறமாதிரி வாழ்ந்தா போதும்னுதான் தோணுது. இந்தப் புத்தி கொஞ்ச வருஷத்துக்கு முந்தி வந்திருந்தா எவ்வளவோ கேவலங்களை நடக்காமல் தடுத்திருக்கலாம். சரி போனது போச்சு...

“தாசித் தொழில்னு ஒண்ணை நியாயம்னு எல்லாரும் ஒப்புத்துக்கிட்டு நடந்த காலத்திலேயே எங்க அம்மா குடும்ப வாழ்க்கையை ரொம்ப கௌரவமா நடத்தி இருக்கு. ‘அது கேவலம், அது தப்பு’ன்னு எல்லாருமே பேசற இந்தக் காலத்திலே ஒரு கௌரவமான குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்திக்க முடியாமல் போயிட்டுது என் நிலைமை. நீங்க கொஞ்ச நாழிக்கு முன்னே சொன்னது மாதிரி யாரோடேயாவதுதான் நான் வாழ்ந்துடணும்-அது தான் எனக்கு ஏற்படும்னு நான் முடிவு கட்டிட்டேன்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஆனா அப்பிடி ஒரு வாழ்க்கையை உங்களோட ஏற்படுத்திக்கறதுங்கற விஷயத்தை நான் ஏன் நெனச்சிக்கூடப் பார்க்கலேன்னு எனக்குத் தெரியலே. அப்படி ஒரு ஆசையை நீங்களா என்கிட்டே தெரிவிச்சப்பறம் இப்ப அதை மறுக்கப் போறோமேன்னு நெனைக்கிறப்போ எனக்கு ரொம்ப வருத்தமாகவும் இருக்குது" என்று சொல்லி அண்ணாசாமியின் முகத்தைப் பார்த்தாள் கல்யாணி.

அவர் மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவளது நல்ல இயல்புகளும், குணங்களும் தெரிந்தவராகையால் அவள் பேச்சில் ஆழ்ந்த நியாயம் தான் இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அவள் பேசும் போது எப்போதுமே அவர் குறுக்கிட்டுப் பேச மாட்டார். அதே மாதிரிதான் இப்போதும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

"எனக்கு இதைவிட நிம்மதியானதும், சௌகரியமானதுமான வாழ்க்கை இருக்க முடியாது. ஆனால் ஆனால்…" என்று அவள் கொஞ்சம் திணறினாள். வார்த்தை தடைப்பட்டது. தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள்:

"….இன்னிக்கு சாயங்காலம் பேட்டி காண வந்திருந்தாரே மிஸ்டர் ரங்கா- அவரை நான்தான் வரச் சொல்லியிருந்தேன். என்னமோ அவரை முதல் தடவை பார்த்தப்பவே அவரைச் சந்திச்சுப் பேசணும்னு இருந்தது – அந்த மாதிரி எனக்கு வேற யார்கிட்டேயும் தோணினது இல்லே…. அதனாலே நான்தான் அவருக்கு முதல்லே கடுதாசி எழுதினேன்"-அவளுக்குக் குரல் அடைத்துக் கொண்டது: நெற்றி வியர்த்தது.

அண்ணசாமியின் கண்கள் பிரகாசம் கொண்டன. அவர் நினைக்கிற வார்த்தையை வெளியே சொல்ல முடியாமல் வாயில் புகையிலைச் சாறு குழம்பி இருந்தது.

"அவர் கல்யாணமானவரா இருப்பாரோ? அப்படி இருந்தா நான் இப்படியெல்லாம் நினைக்கிறது தப்பு இல்லியான்னு குழம்பிக்கிட்டே இருந்தேன். எப்படியானா என்ன ஒரு தடவை சந்திச்சுப் பேசறதிலே ஒண்ணும் தப்பில்லேன்னுதான் கடுதாசி எழுதினேன். அதுவும் என்னைப் பொறுத்த வரைக்கும் என்னோட மனசும் ஆசையும் அப்பிடியே மாத்திக்க முடியாதபடி பெரிசா காதல் வசப்பட்டுடும்னு ஒண்ணும் அபிப்பிராயம் கெடையாது. ஒரு பழக்கத்துக்கும் சிநேகிதத்துக்கும் ஒருத்தரைக் கூப்பிட்டா தப்பில்லேன்னு நெனைச்சேன். ஆனா, அப்படி ஒரு ஆசை மனசுக்கு வந்தப்புறம் 'பழக்கம், சிநேகிதம்'னு என்னை நானே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஏமாத்திக்கக் கூடாதுன்னும் நினைச்சேன்...

“கையெழுத்து இல்லாம ஒரு கார்டுலே ‘இந்தக் கடுதாசி எழுதறது யாருன்னு யூகிக்க முடிஞ்சா என்னை வந்து சந்திக்கவும்’னு மொட்டையா எழுதிப் போட்டேன். அவர் மனசிலேயும் என்னைப்பத்தி அப்படி ஒரு நாட்டம் இருக்குதான்னு தெரிஞ்சுக்கவும் உதவியா இருக்கும்னு தான் அப்படி எழுதிப் போட்டேன். அதுக்கப்புறம் ஒரு மாசம் கழிச்சி அவர்கிட்டேருந்து பேட்டி காணவேணும்னு ஒரு கடுதாசி வந்தது. அதுக்கும் என் கடுதாசிக்கும் சம்பந்தம் உண்டோ இல்லையோ.... அதனாலேதான் இதெப்பத்தி உங்ககிட்டே முன்னாலேயே சொல்லலெ. ஆனா நீங்க இல்லாம அவரை இங்கே வரவழைக்கிறதும் சரின்னு எனக்குத் தோணலே. ஆனா நிச்சயமா உங்க மனசு எனக்கு முன்னாடியே தெரிஞ்சிருந்தா அவருக்குக் கடுதாசி எழுதி இருக்கவும் மாட்டேன். இந்தப் பேட்டிக்கும் ஒத்துக்கிட்டிருக்க மாட்டேன். இப்ப அவர் மனசிலே என்ன இருக்குன்னு தெரியலே...” என்று தன் தர்ம சங்கடத்தை ரொம்பவும் நடைமுறைக்கு ஒத்த விவகாரமாகப் பெரிய அநாவசியப் பூச்சுக்கள் இல்லாமல் அவள் வெளிப்படையாகக் கூறினாள்.

அண்ணாசாமி ‘பேசிவிடவேண்டும்’ என்கிற அவசரத்துடன் தலையை அண்ணாந்து செருமியவாறே வாயிலிருந்ததைத் துப்புவதற்காக எழுந்து ஓடினார். துப்பி விட்டு வரும்போது, “நான் ஒரு அசடு... சுத்த அசடு...” என்று நெற்றியில் அடித்துக் கொண்டார்.

ரொம்ப சந்தோஷத்திலும் செல்லமான அன்பினாலும் அவர் கல்யாணியை எல்லார் முன்னாலும் கூடச் சில சமயங்களில் பிராமணத்தனமாக ‘அடி’ என்றழைத்து விடுவார். அந்த மாதிரியான செல்லத்தோடு ஒரு விநாடியில் புது மனிதராகி அவர் சொன்னார்.

“கல்யாணி என்னமோ அசடாட்டமா நான் பேத்திட்டேண்டி பொண்ணே! மனசிலே இதை வச்சுக்காதே!... டிராமாஸீன் மாதிரி மேடையிலே நான் டயலாக் உளறிட்ட மாதிரி-சிரிச்சுண்டே மறந்துடு! புத்தி போறதே நேக்கும்! சரி அதெ விடு. நான் அப்படிப் பேத்தலேன்னா இதெ என்கிட்டே சொல்லி இருப்பியோ நீ? நல்ல பையன்... அவனுக்குக்கூட ‘வய்ஃப்’போயிட்டாள்னு சொன்னான்... குட்குட்! உன் ஆசைப்படி நடக்கணும், காட் ப்ளஸ் யூ!. ரொம்ப ரைட்-நல்ல மாட்ச்... இது நடக்கும், நடக்கணும்டி பொண்ணே! அப்படித்தான் இப்ப நெனைச்சுப் பார்க்கறச்சே எனக்குத் தோண்றது!’ என்று தன்னை மறந்து சந்தோஷப் படபடப்பில் நினைத்து நினைத்துப் பேசிக்கொண்டே இருந்தார் அண்ணாசாமி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவரது பேச்சையும் சந்தோஷத்தையும் படபடப்பையும் கண்டு அவரது ஒவ்வொரு வார்த்தைக்கும் சிரித்துக் கொண்டிருந்தாள் கல்யாணி. பெரிய சுமை நீங்கிய உணர்வோடு அவளுக்கு மனசு லேசாகி மிதந்து கொண்டிருந்தது.

“சரி நாழியாச்சு. நான் புறப்படறேன். நாளைக்கு அவன் நிச்சயம் வருவான். எனக்கு வேலை இருக்கு. நாளைக்கு நான் வரலே” என்ற கண்களைச் சிமிட்டிக் கொண்டு எழுந்தார் அண்ணாசாமி.

“அந்தக் கட்டுரையை மட்டும் வாங்கி வெச்சுக்கோ. அச்சுக்குப் போறதுக்கு முன்னே நான் பார்க்கணும். அதிலே ஒண்ணும் ‘சேஞ்ச்’ இல்லே... சரியான வக்கரம் அவன். எதையாவது எழுதி வெக்கப் போறான்!” என்று சிரித்துக் கொண்டே புறப்பட்டார் அண்ணாசாமி.

அவரை வழி அனுப்பிவிட்டுத் தூங்குகிற பட்டம்மாளைச் சாப்பிடுவதற்காக எழுப்பப் போனாள் கல்யாணி.

## 2

நேற்று இரவு ரங்கா, கல்யாணியின் வீட்டிலிருந்து ரூமுக்குத் திரும்பி வந்தபோது மணி இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது.

ஆறு மாதத்துக்கு முன்பு ஒரு நாள் அவளைப் பேட்டி காணப் போனானே, அதற்கு அடுத்த நாள் அந்தப் பேட்டிக் கட்டுரையை அச்சுக்குப் போவதற்கு முன்னால் அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்ற காரணத்தை ஒரு சாக்காகக் கொண்டு அவசர அவசரமாக இரவெல்லாம் கண்விழித்து எழுதி முடித்தபின், எப்போது பொழுது விடியுமென்று காத்திருந்து விடிந்ததும் விடியாததுமாக எழுந்து ஓடினானே, அன்று முதல் இந்த ஆறுமாத காலமாய் ஒவ்வொரு நாளும் அவள் வீட்டுக்கு அவன் போய்க் கொண்டுதானிருக்கிறான். ஆனால் அந்தப் பேட்டிக் கட்டுரை மட்டும் இன்னும் பிரசுரமாகவில்லை.

காலையில் நேரங்கழித்துப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து-காக்காக் கடைப் பையன் கொண்டு வந்து வைத்த-ஆறிப்போன டீயைக் குடித்தபின், ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துப் புகையை ஊதியபோது புகைவழியே சென்ற அவன் பார்வை டேபிளின் மீதிருந்த, ஒரு புதிய ஃபிரேமுக்குள் பொருத்தப்பட்டிருந்த அந்த போட்டோவை-பேட்டிக் கட்டுரையில் பிரசுரிப்பதற்காக என்று சொல்லி கேட்டு வாங்கிக்கொண்டு வந்தானே, மேக்-அப் எதுவுமில்லாத சாதாரணமாக எதிரில் பார்க்கிற மாதிரி எளிய உடையும் எண்ணெய் தேய்த்துக் குளித்து வாராமல் விரித்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கூந்தலுமாயிருந்த அந்தப் படத்தை-இப்போது பார்க்கும்போது இந்த ஆறுமாத நிகழ்ச்சியைப் பழைய நினைவாக எண்ணி வெட்கப்பட்டு, ஒரு பெண் மாதிரி அவன் தனிமையில் சிரித்துக் கொண்டான்.

அந்தப் பேட்டியின்போது ஏற்பட்ட அவளது பரிச்சயம் அவன் மனத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தி இருந்தபோதிலும், அவளிடம் இந்த போட்டோவைக் கேட்டு வாங்கிய போதும், அந்தக் கட்டுரையை எழுதியபோதும் மறுநாள் காலையில் அதை எடுத்துக் கொண்டு அவள் வீட்டுக்கு ஓடிய போதும், தான் தன்னுடைய தொழிலைச் செய்வதாகவே அவன் கருதினான்.

ஆனால், அந்த மறு சந்திப்பிலேயே தான் பேட்டி அளித்ததும் அந்தக் கட்டுரையை எடுத்துக்கொண்டு வரச்சொன்னதும் ஒரு பாவனையே என்றும் அந்தப் பாவனைகளின் போது ஏற்பட்ட பரிச்சயமே தான் விரும்பியது என்றும் அவள் அவனிடம் வெளிப்படையாகவே சொல்லி விட்டாள்.

அவ்வளவு அதிகாலையில் அவன் எழுந்து ஆபீசுக்குப் போவதை அந்தத் தெருவில் யாருமே பார்த்ததில்லை.

‘இந்த வாரம் ஞாயிறு மலரிலேயே அதைச் சேர்த்து விடலாம் - பத்து மணிக்குள் ‘கம்போஸிங்’க்கு அனுப்பி விட்டால் என்று ஓர் அவசரத்தைத் தானே வலிந்து இழுத்துக் கொண்டு அவன் நாலு மைல் தூரம் சைக்கிளில் ஓடி அவள் வீட்டை அடையும்போது மணி எட்டு.

அப்போது மியூசிக் பார்ட்டிக்காரர்கள் சில பேர் ஹாலில் விரித்த ஜமக்காளத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்களும் அப்போதுதான் வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

தபலாவைத் தட்டிக்கொண்டிருந்த ஒருவன் இவனைப் பார்த்ததும், ‘யாரோ வந்திருக்கிறார்கள் நமக்கென்ன?’ என்கிற மாதிரி தனி ஆவர்த்தனம் பண்ணிக் கொண்டிருந்தான். ரங்காவுக்கு அவனையும் அவனது சுய-ரசிப்பையும் பார்க்கச் சிரிப்பு வந்தது. அந்தப் பையனுக்கு இருபதிலிருந்து இருபத்தைந்து வயதிருக்கலாம். தலையில் உள்ள சுருட்டை முடி கலைந்து கலைந்து நெற்றியில் விழவேண்டும் என்பதற்காக ரொம்ப அலட்டிக்கொண்டு தபலாவை வாசித்தான் அவன். கழுத்தில் மைனர் சங்கிலியும், மஸ்லின் ஜிப்பாவும், அரும்பு மீசையும், தான் தபலாக்காரன் மட்டுமல்ல, வருங்கால ஹீரோவும் கூட என்று மார்தட்டிக் கொள்கிறமாதிரி இருந்தது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்காவும் இவர்கள் யாரும் தன்னை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்கிற மாதிரி ரொம்பவும் சொந்தத்தோடு, ஹாலின் மறுபக்கம் இருந்த சோபாவில் உட்கார்ந்து தான் எழுதிக்கொண்டு வந்திருந்த கட்டுரைக் காகிதங்களால் முகத்தை மறைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

அவன் கண்கள்தாம் கட்டுரையின் எழுத்துக்களின் மீது மிதந்தனவே அல்லாமல் காதும் மனசும் அந்தத் தபலா ஆவர்த்தனத்தின் நடுவே அவள் காலடி ஓசை கேட்கிறதா என்பதைக் கூர்ந்து கவனித்தன.

“அக்கா! அவங்க வந்திருக்காங்க!நேத்திக்கு வந்தாங்களே, அவங்க” என்ற குரலைக் கேட்ட மாத்திரத்தில் உள்ளே இருந்து பாய்ந்து வருகிற அவளது அவசரத்தை அவன் புரிந்து கொண்டான். ஆயினும் முகத்தை மறைத்திருந்த காகிதங்களை விலக்கவில்லை.

“வாங்க....வாங்க.... ரொம்ப நாழி ஆச்சா?” என்று குதூகலமாக அவனை வரவேற்ற அவள் குரலைக் கேட்ட பிறகுதான் அவன் கையிலிருந்த காகிதங்களை மடித்துக் கொண்டு எழுந்து நின்று வணக்கம் செய்தான்.

அவன் தனக்கு வணக்கம் கூறுவதைத் தான் அங்கீகரித்ததாய்க் காட்டிக் கொள்வது அவன் மீது தனக்கிருக்கும் மரியாதைக்கு ஏற்றதில்லை என்கிற உணர்ச்சியுடன் சட்டென்று இந்தப் பக்கம் திரும்பி, அந்தத் தபலாக்காரனிடம் “போதும் ஐயா...காதைக் கிழிக்குது கொஞ்ச நேரம் சும்மாதான் இரேன்” என்று அடக்கிய பின் இவன் பக்கம் திரும்பித் தான் முந்திக்கொண்டு வணக்கம் கூறினாள். பிறகு அவனை உட்காரச் சொல்லி எதிர்சோபாவில் தானும் உட்கார்ந்து கொண்டாள். அப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருந்ததால் கூந்தலிலிருந்து வடிந்த தண்ணீர் ரவிக்கையின் தோள்புறத்தை நனைத்திருந்தது. தலையில் சுற்றி இருந்த டவலில் கூந்தலைத் துவட்டி விட்டுக் கொண்டாள்.

அப்போது வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து இன்னும் சில வாத்திய கோஷ்டிக்காரர்கள் இறங்கி வந்தனர். அந்த இருவரையும் கண்டதும் ‘ஒரு நிமிஷம்’ என்று அவனிடம் அனுமதி கேட்டுக்கொண்டு எழுந்து நின்றாள் கல்யாணி. வாசற் பக்கம் திரும்பி அவர்களைப் பார்த்தபோது அவர்கள் அவளுக்கு வணக்கம் தெரிவித்த பின் தபலாக்காரனைப் பார்த்துச் சொன்னாள்:

“தாமு! நீங்க மாடியிலே ஒத்திகை வச்சுக்குங்க: ஒரு முக்கியமான விஷயமா இவங்களோட நான் கொஞ்சம் பேசவேண்டி இருக்கு” என்றதும் அந்த தாமு, தபலாக்களை மூட்டைகட்டலானான். கூட இருந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இன்னொருவன் அந்தப் பெரிய ஜமக்காளத்தை மடிக்க ஆரம்பித்தான். வந்தவர்கள் நேரே மாடிக்குப் போனார்கள்.

மேலே மொட்டை மாடியில் தென்னங் கீற்றால் கூரை வேய்ந்திருக்கின்ற கொட்டகையை ரங்கா நினைத்துக் கொண்டான். ஆயினும் ஒரு பேச்சுக்கு அவளிடம் கேட்டான்: “மெத்தை மேலே ரூம்ஸ் இருக்குதா?”

“ரூமெல்லாம் ஒண்ணுமில்லீங்க: சும்மா ஒத்திகை நடத்தறதுக்காகன்னே ஒரு கொட்டா போட்டு வச்சிருக்கோம். படியேறிப் போறதுக்குச் சோம்பேறித்தனப் பட்டுக்கிட்டு இவங்க கடையை இங்கேயே விரிச்சுடறது!” என்று சொல்லிக் கொண்டு இருக்கையில் பட்டம்மாள் உள்ளே இருந்து காப்பி கொண்டு வந்தாள்.

மாடிப்படி ஏறிக்கொண்டிருந்த தாமு, அங்கே இருந்து பட்டம்மாளைப் பார்த்து, “பட்டு! காப்பி எங்களுக்குத்தானே? இரு இரு! நீ சிரமப்பட்டு மாடிப்படி ஏறி வரவேண்டாம். நான் தபலாவைக் கொண்டு வச்சிட்டு வந்து வாங்கிக்கிறேன்” என்று பரிகாசமாகச் சொல்லுகிற குரல் மட்டும் ரங்காவுக்குக் கேட்டது.

குரல் வந்த திசையைப் பார்த்து பட்டம்மாள் சிரித்தாள். “உங்களுக்கு இல்லாத காப்பியா?” என்று வாய்க்குள் முணகிக்கொண்டு காப்பித் தம்ளர்களைக் கொண்டு கல்யாணியிடம் நீட்டினாள். கல்யாணி ஒன்றை எடுத்து அவனிடம் தந்து தானும் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அவன் எதிரே உட்கார்ந்து அவனைச் சாப்பிடச் சொன்னாள். பின்னர் ‘ரொம்பச் சுடுகிறதா’ என்று கேட்டு அவன் காப்பியை எடுத்து ஆற்றிக் கொடுத்தாள்.

காப்பி கொண்டு வந்த பட்டம்மாள் அங்கிருந்து உள்ளே சென்றபின் அவன் அவளிடம் பேசினான்! ராத்திரியே கட்டுரையை எழுதி முடிச்சுட்டேன். ஒரு ‘கிளான்ஸ்’ பார்த்துட்டுக் குடுத்திட்டீங்கன்னா இன்னைக்கே பிரஸ்ஸுக்குக் குடுத்துடலாம். இன்னைக்கே பிரஸுக்குப் போயிட்டா வர ஞாயிறு மலரிலேயே போட்டுடலாம்.”

கல்யாணி பதில் ஒன்று சொல்லாமல் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

“இவ்வளவு வெத்திலை போடறீங்க: புகையிலை போடறீங்க-ஆனா எப்படி உங்க பல் ‘பளிச்’னு இருக்கு?”என்று புன்னகையுடன் கேட்டான் ரங்கா.

“நான் ஒண்ணும் நிறைய வெத்திலை போடறதில்லீங்க, எப்பவாவது ஐயர் வரும்போது தான் போடறேன். அது சரி, ஐயர் என்னிக்கி வராம

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கார்? ஒவ்வொரு தடவையும் உடனே பல் தேச்சுடறதனாலே கறை பிடிக்கறதில்லே.”

ரங்கா காப்பி சாப்பிட்ட பிறகு தான் எழுதி வந்த பேட்டிக் கட்டுரையை அவளுக்குப் படித்து காட்டினான். இடையில் குறுக்கீடு ஏதுமில்லாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் கல்யாணி. மாடியிலிருந்து ஒலித்த தபலா சத்தமும் வைலின் இசையும் இதற்கு இடைஞ்சலில்லாமல் ஏதோ பின்னணி சங்கீதம் மாதிரி ஒலித்துக் கொண்டிருந்தது.

அவன் படித்து முடித்த பிறகு அவளது ஒப்புதலுக்காக அவளைப் பார்த்தபோது அவளும் மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வை ‘இவ்வளவு நேரமாகத்தான் படித்துக் காட்டியதில் ஓர் அட்சரம் கூடக் கிரஹிக்காமல் தன்னை மட்டும் இப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறாள் இவள்’ என்று அவனுக்கு உணர்த்திற்று.

பேட்டி என்றும் கட்டுரை வாசித்தல் என்றும் தாங்கள் போட்டுக் கொண்டிருக்கிற திரைகளையெல்லாம் விலக்கி ‘இதெல்லாம் என்ன விளையாட்டு? என்று கேட்கிற மாதிரி அந்தப் பார்வை அவனுள் இறங்கியது.

‘என்ன, சரிதானே? நீங்க சொன்ன விஷயங்கள் ஏதாவது மாறி வந்திருக்கா? ஏதாவது மாத்தி எழுதணுமா? ஒண்ணும் சொல்லாமல் இருக்கீங்களே?” என்று கேட்டான் ரங்கா.

“கட்டுரை அச்சுக்குப் போறதுக்கு முன்னே பார்க்கணும்னு ஐயர்தான் சொன்னார். அது சரி. எவ்வளவோ பிரபலமானவங்க எல்லோரும் இருக்கிறபோது என்னைப் பேட்டி காணணும்னு உங்களுக்கு ஏன் தோணிச்சு?” என்று லேசாக நாக்கைக் கடித்துக் கொண்டு கேட்டாள் கல்யாணி.

“பிரபலமானவங்களையும்பேட்டி காணறது உண்டு. பிரபலமாக்கறதுக்கும் பேட்டி காண்றது உண்டு. நாடகங்களைப் பொறுத்தவரைக்கும் நீங்க பிரபலமான நடிகைதான். அதிலே என்ன சந்தேகம்?” என்றான் ரங்கா.

‘உங்களைப் பேசி மடக்க என்னால் முடியுமா?’ என்று அவனை மனசுள் பாராட்டிக் கொண்டாள் கல்யாணி.

மேலே இருந்து வைலின் இசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தத் தபலா தாமு மாடிப்படியிலிருந்து சமையலறை வரைக்கும் “பட்டு, பட்டு” என்று கூப்பிட்டுக் கொண்டே போனான். கல்யாணி முகத்தைச் சுளித்துக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொண்டு திரும்பிப் பார்த்தாள். “என்னப்பா என்ன!”

“ஒண்ணுமில்லே அக்கா.... ஒரு செம்பிலே தண்ணியும் வெத்திலைத் தட்டும்...”

“அதைக் கேட்டு வாங்கிட்டுப் போயேன். என்ன, ‘பட்டு பட்டு’ன்னு ராகம்! இங்கே பேசிக்கிட்டு இருக்கோமில்லே?” என்று அதட்டினாள் கல்யாணி. சற்றுக் கழித்து ரங்காவிடம் திரும்பி அவள் சொன்னாள். “இந்தக் கட்டுரை இந்த ஞாயிறு மலரிலேயே வரணும்னு என்ன அவசரம்?”

“அவசரம் ஒண்ணுமில்லே. நீங்க வெச்சிருந்து மிஸ்டர் அண்ணாசாமிகிட்டே காட்டிட்டுக் கூடக் கொடுக்கலாம்” என்றதும் அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: “கரெக்ட்! அப்போ சாயங்காலம் வரீங்களா? உங்களை ரொம்ப அலைய வைக்கிறேன் இல்லே? நீங்க எவ்வளவு தூரத்திலேயிருந்து சைக்கிளிலே வரீங்களோ?” என்று அவன் இங்கு வரவேண்டுமென்பதற்கான தனது ஆவலையும் அவனைத் தான் அலைய வைப்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்கான சமாதானமும் கூறினாள் அவள்.

அவள் மனசுக்கு நன்றாகத் தெரியும், இன்று பூராவும் அண்ணாசாமி வரப்போவதில்லை என்று. அவர் சாயங்காலம் வந்தால் சற்று மனம் விட்டுப் பேசலாம் என்று நினைப்பு. அது அவனுக்கும் புரிந்ததால் ஒப்புக் கொண்டான்.

“ஆபீசிலிருந்து உங்க வீட்டுக்கு வரது ஒண்ணும் அவ்வளவு தூரமில்லே” என்று சொல்லிக்கொண்டு அவன் புறப்பட்டான்.

அவன் புறப்படும்போது அவள் அவனிடம் கேட்டாள்: “உங்க வீடு, எங்கே இருக்குது?”

“வீடுன்னு அதெ சொல்லக் கூடாது...ரூம்!”- என்று திருத்திய பின் கடிதம் எழுதுவதற்கு விலாசம் தருகிற மாதிரி சொன்னான்! “நம்பர் பதினாறு, ஆதிகேசவலு நாயக்கர் தெரு, சூளை”

தெரு வரை அவள் அவனோடு வந்தாள். பூட்டி வைத்திருந்த சைக்கிளை எடுக்கும் போது அவன் சொன்னான்: “இந்த சைக்கிள் இல்லாட்டி ஒரு வேலையும் நடக்காது. அடுத்த மாசம் எனக்கு ஒரு ஸ்கூட்டர் வந்துடும். அப்போ இன்னும் கொஞ்சம் சௌகரியமா இருக்கும்” என்று கூறியதும் ஸ்கூட்டர் ஐடியாவை அவள் வெகுவாகப் பாராட்டினாள்.

“அது பரவா இல்லீங்க. சீக்கிரமா ஸ்கூட்டரே வாங்கிடுங்க” என்று

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன்பால் அவள் காட்டுகின்ற அக்கறைக்கு நன்றி கூறுவது மாதிரி அவன் சிரித்தான். புறப்படுவதற்கு முன்னால் தன் குறிப்புப் புத்தகத்தின் உள்ளே வைத்திருந்த இந்த போட்டோவை எடுத்து அவளிடம் நீட்டி, "இதிலே ஒரு கையெழுத்துப் போடுங்களேன். போட்டோவிலே கையெழுத்துப் போடறது உண்டுல்லே?" என்று அவன் கேட்கும்போது அவளுக்குச் 'சுருக்'என்றது. உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஓ! தாராளமா" – என்று போட்டோவை அவனிடமிருந்து வாங்கி அவனது சைக்கிள் ஸீட்டின் மேலேயே போட்டோவை வைத்து அவனிடமே பேனாவை வாங்கி அதிலே கையெழுத்து இடுவதற்கு முன் அவள் முகம் சிவக்கக் கேட்டாள்:

"என்னத்துக்கு அப்படிக் கேட்டீங்க, போட்டோவிலே கையெழுத்துப் போடறது உண்டா?"ன்னு

அவனும் சிரித்தான்: "சும்மாத்தான். சிலபேர் போட மாட்டாங்க" என்று கூறியவாறே அவள் கையெழுத்துப் போட்டுத் தந்த போட்டோவை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டான்.

அவளிடம் விடை பெற்றுக் கொண்டு சைக்கிளில் ஏறிப்பெடலை மிதிக்கும் முன் அவன் சொன்னான்: "சில பேர் லெட்டர் எழுதினாலே கையெழுத்துப் போடறதில்லே."

அதைச் சொன்ன பிறகு அவள் முகத்தைக் கூட அவன் பார்க்கவில்லை. அவள் என்னவோ சொல்ல வாய் திறந்தாள். அதற்குள் அவன் சைக்கிள் நகர்ந்து விட்டது.

சற்றுதூரம் சென்றதும் அவன் சைக்கிளிலிருந்து திரும்பிப் பார்த்தான். கல்யாணி கை அசைத்தாள். மாடியிலிருந்து தபலாவில் தனி ஆவர்த்தனம் அமர்க்களமாக முழங்கிக் கொண்டிருந்தது.

அன்று மாலை ரங்காவுக்கும் கல்யாணிக்கும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுகிற அந்த உறவு எவ்வளவோ தயக்கத்துக்கும் கால தாமதத்துக்கும் பிறகு ஓர் அவசரத்தில் திடீரென் இப்படி நிகழ்ந்தது-

அவன் போன நேரத்தில் அங்கே யாரும் இல்லை: பட்டம்மாள் கூட இல்லை. அவர்கள் வெகுநேரம் ஒன்றும் பேசவில்லை. அவள் அவனை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் அவனை வரவேற்று உட்கார வைத்துவிட்டு ஏதோ யோசனையில் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

யாரோ ஒருவரின் வீட்டைத் தேடி வெகு தூரம் நடந்து வந்த பின்பு அந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வீட்டருகே நின்று, ‘அந்த அந்நியரின் வீட்டுக்குள்ளே போகலாமா கூடாதா?’ என்று தயங்குவது மாதிரி இருந்தது அவளது நிலைமை. அந்தத் தயக்கம் மிகவும் அர்த்தமுள்ளது. அந்தத் தயக்கம் இன்னும் சற்று நீண்டிருக்குமேயானால் அவள் மனம் மாறி இருக்கலாம். தனது முடிவுகளை அவள் மறு பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் நடந்து இந்த இடத்துக்கு வந்தாளோ அவ்வளவு தூரம் திரும்பிச் சென்று விலகிப் போயுமிருக்கலாம்!

அந்த விநாடி அவள் அவ்விதப் பிரயாசைகளோடு நடந்து நெருங்கிய இடங்களையும், அப்படி ஒரு தயக்கத்தோடு நின்று பின் திரும்பி வந்து விலகிய நிகழ்ச்சிகளையும் எண்ணிப் பார்த்துக் கொண்டு இருந்த நேரத்தில் தயங்கி நின்றிருந்த அந்த அந்நியரின் வீட்டு வாசற் கதவுகளை விரியத் திறந்து ‘என்னைவிடச் சொந்தக்காரன் உனக்கு யாருமே இல்லை,’ என்று உணர்த்துவது மாதிரி அது நடந்தது.

அவன் அந்தக் கடிதத்தை எடுத்து அவள் கையில் வைத்து, ‘என் யூகம் சரிதானே?’ என்று சொல்லாமற் சொல்லி அவள் கரத்தைக் கடிதத்தோடு சேர்த்து இறுகப் பற்றிக் கொண்டான்.

இப்படித்தான் அது ஆரம்பமாயிற்றே என்று நினைக்கையில், அந்த நிமிஷம் தனக்கு ஏற்பட்ட தைரியத்தை எண்ணி ஒரு பெண் மாதிரி வெட்கப்பட்டுக் கொண்டான் ரங்கா.

மணி ஒன்பதாகி இருந்தது. ரூமைச் சுத்தம் செய்வதற்காக வீட்டுக்கார அம்மாளின் மகள் உள்ளே வந்ததும் அவள் பார்வை மேஜைமீது உள்ள அந்தப் படத்தில் பதிவதைப் பார்த்தான் ரங்கா.

“பாத்ரூம் காலியா இருக்கா?” என்று அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

காலியாகத்தான் இருக்குது” என்று அந்தப் படத்தின் மீதிருந்த பார்வையை மாற்றாமலே சொன்னாள் அந்தச் சிறுமி.

இந்தப் படத்தை ஃப்ரேமில் போட்டு இங்கே பகிரங்கமாக அதை வைத்து இப்போது கிட்டத்தட்ட ஒரு மாசமாகிறது. இந்த ரூமுக்கு வருகிற எல்லாருமே அதைப் பார்த்திருப்பார்கள். ஆனால் ஒருவரும் அதைப் பற்றி அவனிடம் கேட்டதில்லை. அது கேட்க வேண்டிய விஷயமென்று நினைத்ததில்லை. ஆனால் இந்தப் பெண் மட்டும் இங்கே வருகிற போதெல்லாம் இந்தப் படத்தின் மீது விசேஷமாகப் பார்வை செலுத்துவதை ரங்கா கவனித்திருக்கிறான்.

இந்தப் படத்தைப் பற்றி அவன் தானாகவே அவளிடம் பேச்சுக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொடுத்தான். “என்ன? அந்தப் படத்தையே பார்த்துக்கினு இருக்கே? நல்லா இருக்குதா அந்தப் பொண்ணு?”

“....ம்....-நல்லாத்தான் இருக்குது. யார் இவுங்க?” என்று அந்தப் படத்தைக் கையில் எடுத்துப் பார்த்தாள் சிறுமி,

இவ்வளவு காலம் இங்கே இருந்த பின்னர் இவள் பொருட்டு இங்கே இருந்து, தான் குடிமாறப் போகிற நிகழ்ச்சிக்கு முன்னராவது இதுபற்றி இவர்களுக்கெல்லாம் தெரிவித்துவிடவேண்டும் என்று நினைத்த அவன், “இதைக் கொண்டு போய் உங்க அம்மா கையிலே காட்டு. இந்தப் பொண்ணைத்தான் நான் சீக்கிரம் கல்யாணம் கட்டிக்கப் போறேன்” என்று சொன்னதும், அந்தச் சிறுமி மிகுந்த சந்தோஷத்துடன் அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள். அவன் குளிக்கப் போனான்.

அவன் பாத்ரூமுக்குள்ளே இருக்கும்போது வெளியே கூடத்தில் ஒரு பெரிய கும்பலே கூடி அந்தப் படத்தையும் அது பற்றிய செய்தியையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதை அவன் கேட்டான்.

“இது அந்த டிராமா ஆக்ட்ரஸ் கல்யாணி” என்று ஒரு குரல் தனியாக ஒலித்தது. அது ஹைஸ்கூலில் படிக்கிற – வீட்டுக்கார அம்மாளின் மகள் - ஏழுமலையின் குரல்!

“நீ இஸ்கோலுக்கும் போறதில்லே... பாடமும் படிக்கிறதில்லே. போன வருசமே பெயிலு. யாரைப் பார்த்தாலும் இவ அந்த சினிமாக்காரி, அவ அந்த டிராமாக்காரின்னு அதெப்பத்தி பேசிக்கினு இரு” என்று பையனை வீட்டுக்கார அம்மாள் கண்டித்தாள்.

“இல்லேம்மா இது அந்த டிராமாக்காரிதான்” என்று மறுபடியும் வலியுறுத்திச் சொன்னான் ஏழுமலை.

“வாயை மூடுடா. அவர் காதிலே விழப் போவுது” என்று மறுபடியும் அவள் அடக்கினாள்.

“நீ வேணாப்பாரு. அதிலே கல்யாணின்னு கை எழுத்தும் போட்டிருக்குது” என்று தான் கூறியதை அவன் ஆதாரத்தோடு நிரூபித்தபோது அங்கு திடீரென்று ஓர் அமைதி கனத்தது.

பாத்ரூமுக்குள்ளே குளித்துக் கொண்டிருந்த ரங்காவுக்கு அந்த அமைதியின் கனம் புரிந்தது.

கடைசியில் அந்தப் பேட்டி வெளியாகவே இல்லை. கல்யாணிதான்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அதனை வேண்டாமென்று தடுத்துவிட்டாள். அந்தக் கட்டுரையை அண்ணாசாமியின் பார்வைக்காகக் கொடுத்துவிட்டுப் போய் அன்று மாலை அவன் திரும்பி வந்தபோதும் சரி, கையெழுத்தில்லாத அந்தக் கடிதத்தை அவள் கையிலே வைத்துத் தனது யூகத்தையும் தனது மனசையும் அவளறியச் செய்தபோதும் சரி, அந்தப் பேட்டியைத் தனது தொழில் சம்பந்தமான கடமையைச் செய்வதாகவே நினைத்திருந்தான் ரங்கா.

ஆனால், கல்யாணி அவனிடம் இந்த மாதிரிப் பேட்டிகள் தனக்குப் பிடிக்காதது என்றும், தான் பிரபலம் என்றோ பிரபலம் ஆகக் கூடியவள் என்றோ தனக்கு நம்பிக்கையுமில்லை, ஆசையும் இல்லை என்றும் தெரிவித்த போது அந்தப் பேட்டிக் கட்டுரையில் எழுதப்படாமல் விடப்பட்ட ஒரு அருமையான பாயிண்ட் இது என்று ரங்கா கருதினான்.

“உங்களைச் சந்தித்துப் பேசலாம்கிற எண்ணத்தினாலேதான் அந்தப் பேட்டிக்கு நான் ஒத்துக்கிட்டேன். அது சரி அந்த லெட்டர் நான்தான் எழுதினேன்னு நீங்க எப்படிக் கண்டுபிடிச்சீங்க?” என்று அவள் விரலைக் கடித்துக் கொண்டு கேட்டாள்.

“எப்படிக் கண்டு பிடித்தோம்?” என்று அவனும் சற்று யோசித்தான்.

“இவ்வளவு நிச்சயமா நான்தான்னு எப்படி நம்பி என் கையிலே அந்த லெட்டரைக் குடுத்தீங்க? நான் இல்லேன்னு சொல்லி இருந்தால்?” என்று மறுபடியும் கேட்டாள் கல்யாணி.

“அன்னக்கி மேக்கப் ரூமிலே மிஸ்டர் அண்ணாசாமியோடு வந்து நின்னப்போ என்னை நேராப் பார்க்காமல் கண்ணாடியிலேயே நீ பார்த்துக்கிட்டு இருந்தது ஒரு காரணமா இருக்கலாம்...”

-அவளை முதன் முதலாக அப்போதுதான் அவன் ஒருமையில் அழைத்தான். அது ரொம்ப இயல்பாக, எப்போதுமே அவன் இப்படித்தான் பேசுகிறமாதிரி, இது முதல் தடவை அல்லாத மாதிரி ரொம்ப இயற்கையாக இருந்தது.

இப்போதெல்லாம் சில சமயங்களில் வேறு யாருமில்லாத போது அவளை அவன் ‘அடி’ என்று கூட அழைக்கிறான்.

அவள் கேட்டகேள்விக்குக் கடைசியில் அவன் ரொம்பத் தெளிவாகப் பதில் சொல்லி விட்டான்.

கண்ணாடியில் பார்த்தது, அண்ணாசாமி அறிமுகம் செய்து வைத்தபோது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தன்னுடைய நாடக விமரிசனங்களை முதன் முறையாகப் பாராட்டிய நாடகம் சம்பந்தப்பட்ட ஒரு நபர் அவள் என்பது, பத்து வருஷங்களுக்கு முன்னால் அவன் எழுதிய கதைகளை நினைவு வைத்துக் கொண்டு-சும்மா பெயருக்கு இல்லாமல் சரியாகப் பாராட்டியது, கடைசியில் நாடக அரங்கின் இருளில் போய் நின்றுகொண்டு மேக்கப் ரூமில் சிகரெட் பிடித்துக் கொண்டு நின்றிருந்த அவனைக் கண்கள் பளபளக்கப் பார்த்துக் கொண்டே இருந்தது, எல்லாவற்றுக்கும் மேலாக இவள்மீது அவனுக்கு ஒரு மன-ஈர்ப்பு இருந்தது என்று யோசித்து அந்தக் கையெழுத்தில்லாத கடிதத்தை எழுதியது கல்யாணியே என்று தான் தீர்மானித்த காரணங்களை வரிசையாக அவளிடம் சொன்னான் அவன்.

பொழுது இருட்டி வெகு நேரமாகியும் விளக்கைக் கூடப் போடாமல் அந்த நேரத்தின் மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் இருவரும் சூழ்நிலையை மறந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் அவனுக்குக் காப்பி கொடுக்கக்கூட மறந்து விட்டாள்.

ஹால் முழுவதும் சிகரெட்டுப் புகை குவிந்திருந்தது. வழக்கத்துக்கு அதிகமாக அவன் அப்போது சிகரெட் குடித்திருந்தான். புகையை வெளியேற்ற ஃபேனைப் போடச் சென்றபோது விளக்கு ஸ்விட்சையும் போட்டாள் கல்யாணி.

திடீரெனப் பரவிய வெளிச்சத்தில் அவன் இதுவரை எப்போதுமில்லாத மாதிரி புதிய பொலிவோடு மிகவும் அழகாக அவள் கண்களுக்குத் தோன்றினான். நல்லவேளை, இவள் அவனை நெருங்கிய வேகத்தில்...

கோயிலுக்குப் போயிருந்த பட்டம்மாள் வந்தாள். அவள் நேரே அடுக்களைக்குப் போனாள். அடுக்களைக்குப் போகிற வழியில் ஹாலுக்கும், சமையலறைக்கும் நடுவே, ரங்காவின் பார்வைக்கு மறைவாகப் போய் நின்றுகொண்டு கல்யாணியைச் சைகையால் அழைத்து அவளிடம் கோயில் பிரசாதங்களைத் தந்தாள்.

இந்த இரண்டு சந்திப்புக்களில் அவனும் அவளும் பழகிக் கொண்ட முறையிலிருந்தே கல்யாணி-ரங்கா உறவைப் பட்டம்மாள் ஊகித்துவிட்டாள். எனவே, அவனைப் பார்க்கிற போதெல்லாம் பட்டம்மாள் வெட்கத்தோடு ஒளிந்து கொண்டுதான் கல்யாணியிடம் பேசுகிறாள்.

கல்யாணி ஹாலுக்கு வந்து தாயின் படத்துக்கு எதிரே நின்று பட்டம்மாள் தந்த விபூதியையும் குங்குமத்தையும் நெற்றியில் அணிந்தபின் அவன் பக்கம் திரும்பி அவனிடம் அவற்றை நீட்டுவதற்கு முன்னால் சற்று

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

யோசித்து ஒரு புன்னகையோடு கேட்டாள்:

"இதிலே எல்லாம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?" என்று கேட்டுக்கொண்டே சோபாவில் உட்கார்ந்திருந்த அவனை நெருங்கி அவன் நெற்றியில் விபூதியை இடப் போனாள். அவன் அவள் கையைப் பற்றித் தனது நெற்றியின் அருகே இழுத்தவாறே சொன்னான்:

"எனக்கு இதிலே எல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனாலும் நீ இதை இடவரும்போது வேணாம்னு தடுக்கற பிடிவாதமும் இல்லை" என்று நெற்றியில் இட்ட விபூதியோடு அவளை நிமிர்ந்து பார்த்துத் தனது பிடியை நெகிழ்த்தாமல் சிரித்தான்.

அப்போதுதான் அவனை அவள் முதன் முறையாக நெற்றியில் முத்தமிட்டாள். பட்டம்மாள் எங்கேயாவது நின்று பார்த்துவிட்டாளோ என்ற பதைப்போடு உடனே அவனிடமிருந்து அவள் விலகிக்கொண்டாள்.

அடுக்களையிலிருந்து பட்டம்மாளின் குரல் ஒலித்தது:

"ஏனக்கா காப்பி அப்படியே இருக்கு?"

கல்யாணியும் ரங்காவும் தாங்கள் காப்பியைக்கூடக் குடிக்க மறந்திருந்ததை உணர்ந்து சிரித்தார்கள்.

அன்று இரவு அவனை அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகுமாறு அவள் வற்புறுத்தினாள். ஆனால் அவன் என்ன காரணத்தினாலோ 'இன்றைக்கு வேண்டா' மென்று மறுத்துவிட்டான். அந்த மறுப்பில் அவளுக்கு ஏமாற்றமோ வருத்தமோ ஏற்படவில்லை. அதிலே அவனுடைய நிதானத்தை அவள் புரிந்து கொண்டாள்.

ஆனால் அடுத்த நாள் தான் அவனுக்கு விருந்து வைக்கப் போவதாகச் சொன்னாள் கல்யாணி.

'விருந்துன்னா என்னென்ன கிடைக்கும்?' என்று அவன் கண்களைச் சிமிட்டியவாறு கேட்டான்.

"உங்களுக்கு என்னென்ன வேணுமோ அதெல்லாம் கிடைக்கும்" என்று சொல்லி அவள் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

"கேட்டா கெடைக்குமா, கேக்காமலே கெடைக்குமா?"

"விருந்துக்கு வந்தால் அப்போ தெரியும்!" என்று முகத்திலிருந்த கையை

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

விலக்கி 'நாளை வரை காத்திருக்க வேண்டுமே' என்று ஏக்கத்தோடு அவள் சொன்னாள்.

பட்டம்மாள் காப்பி கொண்டு வந்தாள். ஹாலுக்கு வராமல் தலையை மட்டும் நீட்டி 'அக்கா' என்று கல்யாணியைக் கூப்பிட்டாள்.

"என்னடி வெக்கம்? இப்படிக் கொண்டுவா" என்று அவள் அழைத்ததும், குனிந்த தலையோடு காப்பியைக் கொண்டு வந்தாள் பட்டம்மாள். அவளிடம் இவனை 'உன் அத்தான்' என்று அறிமுகம் செய்துவிட வேண்டும் என்று கல்யாணிக்கு மனசு துடித்தது. ஆனால் தனக்கே வெட்கமாக இருந்ததால் கல்யாணியும் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவர்கள் அருகே காப்பித் தம்ளர்களை வைத்து விட்டுப் பட்டம்மாள் ஓடிப்போனாள்.

அதன் பிறகு ஒன்பது மணிவரைக்கும் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்று இருவருக்கும் நினைவில்லை.

ஒன்பது மணிக்கு அவன் விடை பெற்றுக் கொண்டு புறப்படும்போது கடைசியாக அவள் கேட்டுக்கொண்டது ஒன்றுதான் அவனுக்கும் நினைவிருக்கிறது.

வராந்தாவில் பூட்டி வைத்திருந்த சைக்கிளின் 'லாக்'கைக் குனிந்து அவன் திறக்கும்போது அவள் அவனுக்கு மிகவும் நெருக்கமாக வந்து நின்றுகொண்டு சொன்னாள்:

"நான் ஒண்ணு சொல்லுவேன். தப்பா நெனச்சுக்கக் கூடாது. தயவுசெய்து அந்தப் பேட்டிக் கட்டுரையைப் பிரசுரிக்க வேண்டாமே! நீங்க என்னைப் பார்க்க வந்ததும் நான் உங்களை வாங்கன்னு கூப்பிட்டதும் அதுக்காக இல்லே-அது வேண்டாம்."

அவனுக்கும் அது சரியென்றே பட்டது. சிரித்துக் கொண்டே "அப்படியே ஆகட்டும்" என்றான். அந்தக் கட்டுரை அவளிடமே தங்கிவிட்டது.

அந்தப் போட்டோ அவனிடம் இவ்வளவு நாட்கள் மறைந்திருந்தது. போன மாதத்தில் ஒரு நாள் புதிதாக அவன் வாங்கிப் பொருத்திய இந்த ஃபிரேமுக்குள்ளே போடப்பட்டு அவனது அறைக்கு வருகிறவர்களுக்கெல்லாம் பகிரங்கமாகி இதோ இப்போது அந்த வீட்டின் கூடத்தில் கூடியிருக்கும் கும்பலின் நடுவே எல்லாரிடமும் கைமாறி வீட்டுக்காரம்மாளின் மகன் ஏழுமலையிடம் "அந்த டிராமா ஆக்ட்ரஸு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி இல்லே, இது?” என்று வெளிப்பட்டு நிற்கிறது.

அந்தக் கையெழுத்திலே உள்ள பெயரைப் படித்துக் காட்டி அது அவளேதான் என்றும் ஏழுமலை நிரூபித்து விட்டான்.

ரங்கா பாத்ரூமிலிருந்து வெளியே வந்தான். அங்கு கனத்த அமைதியினூடே அவன் அவர்களைக் கடந்து போனான். மேலே சட்டையில்லாமல் அங்கே நின்று அவர்களோடு பேசிக் கொண்டிருக்க மனமில்லாமல் ரூமுக்குப் போய் உடை மாற்றிக் கொண்டு வந்து இந்த விவகாரத்தைத் தீர்த்து வைக்கலாமென்ற நினைப்போடு அவன் போனான்.

தான் ஒன்றும் பேசாமல் அப்படிப் போவது சரியில்லையோ என்ற நினைப்பில் கூடத்தைக் கடந்த பிறகு ஏழுமலையைத் திரும்பிப் பார்த்து, “ஏழுமலை, நீ சொன்னது சரிதான். இதோ வந்து மீதியைச் சொல்றேன்” என்று அவர்கள் எல்லோருக்குமாகப் பதில் சொன்னான் ரங்கா.

யாருக்குமே இவன் ஒரு நாடகக்காரியைக் ‘கல்யாணம் செய்து கொள்வதில் சம்மதமில்லை. அவனுக்கு அது புரிந்தது.

ரூமுக்குப் போய் உடம்புக்கெல்லாம் பௌடர் போட்டுக் கொள்ளும் போதும், உடை மாற்றிக் கொள்ளும் போதும், தலைவாரிக் கொள்ளும் போதும் அந்தக் காரியங்களில் பிடிப்பில்லாமல் யாந்திரீகமாக அவற்றில் ஈடுபட்டிருந்த ரங்கா, அவனைத் தெரிந்த அவன் ஜாதிக்காரர்களான இவர்கள் அத்தனை பேருக்கும் இந்தக் கல்யாணத்தில் உள்ள அதிருப்தியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். இந்த விஷயத்தில் அவர்களைச் சமாதானம் செய்ய முடியாது என்று அவனுக்குத் தெரியும். அது அவனுடைய உத்தேசமுமில்லை. எனினும் அவர்கள் இவன் மீது வைத்துள்ள மரியாதையையும் அன்பையும் அவன் எப்போதும் மதித்து வருகிறான். அதன் காரணமாகவே இந்த முடிவை அவர்களிடம் சொல்லி இரண்டொரு நாட்களில் இங்கேயிருந்து தான் விடைபெற்றுக் கொள்ளப் போவதை அவன் தெரிவித்துவிட முடிவு செய்தான்.

அவன் கூடத்துக்கு வந்தபோது வீட்டுக்கார அம்மாள் அவனுக்காக ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டாள். அவன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். என்ன பேசுவது என்று தெரியாமல், எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் மௌனமாய்த் தன்னைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கின்ற அவர்களை ஒரு முறை பார்த்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வீட்டுக்கார அம்மாளுக்கும் இன்னும் சிலருக்கும் இவன் அப்படியெல்லாம் செய்துவிடக் கூடியவன் அல்ல என்று தோன்றியது.

சும்மா ஒரு அலங்காரத்திற்கு-ஒரு சினிமா ஸ்டார் படத்தையோ ஒரு டிராமாக்காரி படத்தையோ வீட்டிலே வைத்திருப்பதில்லையா, அதே மாதிரிதான் - இவன் இந்தப் படத்தை ஃபிரேம் போட்டு வைத்திருப்பான். இந்தச் சின்னக்குட்டி அவன் அறையைப் பெருக்கப் போன போது அவளிடம் பரிகாசமாக இவளைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறியிருக்கலாம் என்று நினைத்து இவர்களில் சிலர் சமாதானம் அடைகிறார்கள்.

அந்த ஃபிரேம், வீட்டுக்கார அம்மாளின் கையில்தான் இப்போது இருந்தது.

“நாங்ககூட ஏதோ பொண்ணுதான் பார்த்து வச்சிருக்கேன்னு நெனச்சி ஏமாந்துப்புட்டேன்! கடைசிலே பார்த்தா டிராமாக்காரியாமே” என்று சொல்லிக் கொண்டே அந்தப் படத்தை அவனிடம் தந்தாள் அவள்.

அவன் அதைக் கையில் வாங்கிச் சற்றுநேரம் உற்றுப் பார்த்தான். அந்தப் புன்னகை அவனோடு அந்தரங்கமாகப் பேசிற்று:

‘என் பொருட்டு நீங்கள் எதையெல்லாம் உதறிவிட்டு, எந்தெந்த பந்தங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு வரத் தயாராகி விட்டீர்கள்!’ என்று நிறைவோடு பாராட்டுவது மாதிரி இருந்தது.

அவன் எல்லாரையும் ஒரு தடவை தலை நிமிர்ந்து பார்த்தான். ஒரு புன்னகையோடு வீட்டுக்கார அம்மாவை அழைத்தான்.

“தொத்தா” – அவர்கள் எல்லோருமே ஒரே ஜாதிக்காரர்கள் என்பதனால் ஏதோ ஒரு விதத்தில் சொந்தமும் உள்ளவர்கள். ரங்கா, உங்க வீட்டுக்கார அம்மாவைத் தன் தாயின் உடன்பிறந்தவளாகக் கருதி, அவளைத் ‘தொத்தாவென்றும், அவளைத் தொத்தாவென்று அழைப்பதால் அவளுடைய கணவனை ‘சின்ன நாயினா’ என்றும், அதற்கேற்ப அவர்களைச் சார்ந்தவர்களையும், அந்தத் தெருவில் உள்ளவர்களையும் முறை வைத்துத்தான் அழைப்பான்.

அவர்கள் அனைவரும் விளங்கிக் கொள்ளும்படியாக அவன் சொன்னான்.

“இந்தப் பொண்ணு டிராமாவிலே நடிக்கிறதுதான். நம்ம ஜாதி கூட இல்லை.”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தொத்தா குறுக்கிட்டுச் சொன்னாள்:

“ஆமா, நாடகத்திலே வேஷங்கட்டப் பூட்டவளுக்கு சாதி ஒண்ணுதான் கொறச்சல்! கூத்தாடிக்கு மொறையாவது: கொயுக்கட்டைக்குத் தலையாவது! என்று கொஞ்சம் சிடுசிடுப்பாகவே சொன்னாள். ரங்கா அதைப் பொறுமையோடு சகித்துக் கொண்டான். அதைப் பொருட்படுத்தாமல் அவன் மேலே சொன்னான்:

“தொத்தா-தேவகி செத்தப்புறம் (தேவகி-ரங்காவின் இறந்துபோன மனைவியின் பெயர்) கல்யாணமே வேணாம்னு தான் இருந்தேன். சாதி எல்லாம் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் ஆசைப்படல்லே. நான் ஒண்ணும் நோட்டீஸெல்லாம் வெக்கப் போறதில்லே.”

“அப்பாலே என்னா, சேர்த்துக்கப் போறேன்னு தானே அர்த்தம்?” என்று கொஞ்சம் காரமாகக் கேட்டாள் வீட்டுக்கார அம்மாள்.

‘நீங்க எல்லாம் அதை அப்படித்தான் சொல்லுவீங்க. ஆனா, நான் ரிஜிஸ்டர் கல்யாணம் செஞ்சிக்கலாம்னு இருக்கேன்” என்று அவன் தலையைக் குனிந்து கொண்டு சொன்னான்.

“இந்தா ரங்கசாமி, உனக்கே இது நல்ல இருக்குதா?” என்று எழுந்து வந்தார் சின்ன நயினா.

“நீ ஆதிகேசவேலு நாகிரு பேரன். ஆதிகேசவேலு நாகிருன்னா அந்தக் காலத்திலே பட்டணத்திலே எட்டு கண்ணு உட்டு எரியும். ஒங்க நயினா தான் சொத்தெல்லாம் அயிச்சாரு. ஒண்ணொண்ணா வித்து வித்துத் துண்ணாரு. ஆனா, சாதி கெட்ட காரியம் ஒண்ணும் செஞ்சதில்லே. அவுங்கல்லாம் ‘கை நாட்டு’ங்க, நீ படிச்ச புள்ளே. அந்த வமுசத்துக்கே பேர் சொல்ல நிக்கறவன் நீ ஒருத்தன் தான். அதையும் நெனச்சுப்பாரு. எதுவோ எங்களுக்குத் தெரிஞ்சதைச் சொல்றோம்: ஒனக்குத் தெரியாததில்லே. என்னவோ, ஆசைப்பட்டு போனமா அத்தோட உட்டமான்னு இருக்கணும். நீ அப்படியும் போற புள்ளே இல்லே. அதுவும் எங்களுக்குத் தெரியும். நல்லா யோசிச்சிச் செய்” என்று சொல்லிவிட்டுத் துண்டை உதறித் தோள் மீதுபோட்டுக் கொண்டு போனார். போனவர் மறுபடியும் திரும்பி வந்து சொன்னார்:

“உனக்கு ஒரு பொண்ணு இருக்குதே அத்தெ நெனச்சிப் பாத்தியா? வாணாம் ரங்கசாமி. இது நல்லதில்லே: இன்னக்கி இப்ப எங்கையிலே சொல்லு: உனக்கு எம்மாம் பெரிய எடத்திலேயிருந்து நான் பொண்ணு பார்த்து வெக்கிறேன் பாரு!”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“பொண்ணுக்கா பஞ்சம்? ஏன் தேவகி தங்கச்சி அந்த சுமதி பொண்ணு இருக்குதே. அதுகூட உன்னெதான் கட்டிக்கறேன்னு காத்துக்கினு இருக்குதாமே! கிளியாட்டம் பொண்ணு: என்னா கொறச்சலு? நான் தோ, இப்ப போனப்பக்கூடப் பார்த்தேன். ஒம் மவளைப் பெத்த பொண்ணு மாதிரி வளத்துக்கினு இருக்குது, அத்தெக்கட்டிக்கினுதான் நீ குடித்தனம் நடத்தப் போறேன்னு நெனச்சேன்: நீ சாதி சனமெல்லாம் வுட்டுட்டுப் போற தானா போ!” என்று ஒரு முடிவாகச் சொன்னாள் வீட்டுக்கார அம்மாள்.

ரங்கா நேற்றுதான் கிராமத்திற்குப்போய் அந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கண்டு தீர்த்துக்கட்டி விட்டு வந்திருந்தான்.

ரங்கா லேட்டாக ஆபீசுக்குப் புறப்பட்டான். இந்த வீட்டிலுள்ளவர்கள் எல்லோருமே அவனிடம் மனஸ்தாபம் கொண்டவர்கள் மாதிரி நடந்து கொண்டார்கள்.

நேற்று இரவு கல்யாணியின் வீட்டிலிருந்து இரண்டு மணிக்கு வந்து படுத்துக் காலையில் எழுந்திருக்க நேரமானதாலும், தான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற விஷயமாக அவர்களோடு பேசிக்கொண்டிருந்ததாலும் இப்போது ஆபீசுக்கு லேட்டாகி விட்டது.

நேற்றுவரை இவன் ஒரு வாரம் லீவில் இருந்தான். அந்த லீவில்தான் கிராமத்துக்குப் போயிருந்தான். கிராமத்துக்குப் போய்வந்த அனுபவத்தையும் அங்கே நடந்த நிகழ்ச்சிகளையும் கல்யாணியுடன் பேசிக் கொண்டிருந்ததனால்தான் இரவு நேரமாகி விட்டது.

காலையில் அவன் டிபன் கூடச் சாப்பிடவில்லை. நெற்றியைப் பிளக்கும் முன் வெய்யிலில் அவன் அவசர அவசரமாக ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தான்.

கல்யாணிக்கும் அவனுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்ட இந்த ஆறுமாதகாலமாய் அநேகமாகக் காலையில் ரூமிலிருந்து கிளம்பியதும் அவன் நேரே அவள் வீட்டுக்குத் தான் போகிறான். அதேபோல் மாலையில் ஆபிசிலிருந்து முதலில் அங்கேதான் போகிறான். இரவு நேரம் கழித்து ரூமுக்குத் திரும்புகிறான்.

இரண்டு மாதங்களுக்கு முன் அவனுக்கு ஸ்கூட்டர் வந்துவிட்டது. மாலைநேரங்களில் அவர்கள் இருவரும் பகிரங்கமாக ஸ்கூட்டரில் வெளியே போகிறார்கள். அவனது நிருபர் நண்பர்களிடையே இந்தத் தொடர்பு இப்போது பழைய செய்தியாகி விட்டது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மத்தியானம் ஒரு வேளை எப்போதும் போல அவன் வெளியில் சாப்பிடுகிறான். அவன் உத்தியோகத்துக்கு அது தான் சௌகரியமாக இருக்கிறது.... கல்யாணி அதைக்கூட வீட்டிலிருந்து ஆபீசுக்கு அனுப்புவதாகப் பலமுறை வற்புறுத்தி வந்தாள்.

“அது சாத்தியமில்லை. அந்த நேரத்தில் நான் எங்கே சுற்றிக் கொண்டிருப்பேனோ” என்று அவனும் பிடிவாதமாக மறுத்து விட்டான்.

இரவில் அவன் கல்யாணியின் வீட்டில்தான் சாப்பிடுகிறான். காலையில் எழுந்து வழக்கம்போல் காக்காக் கடைப் பையன் கொண்டு வருகிற டீயைக் குடித்தபின் டிபனுக்குக் கல்யாணியின் வீட்டுக்குப் போய் விடுகிறான். ஒரு நாள் ஒரு வேளை அவன் வராவிட்டால் அவள் மிகவும் ஏமாந்துபோய் விடுகிறாள். எனவே அதை ஒரு கடமை மாதிரி கருதி அவன் அவள் வீட்டுக்குப் போய்விடுகிறான்.

அவனைத் தன்னுடனேயே தங்கிவிடும்படிக் கேட்க வேண்டுமென்று கல்யாணிக்கு ஆசைதான். ஆனாலும் வெளிப்படையாகத் தனது ஆசையைக் கூறமுடியாமல் அவள் தவித்தாள். தான் அவனது சுதந்திரமான தனி வாழ்க்கையில் தலையிட்டு தலையிட்டு அவனை ஆக்கிரமிக்கலாகாது என்று நினைத்த நிதானத்தில் அவன் வரும்போது அவனது உடனிருப்பில் மகிழ்வதும் அவன் சென்ற பிறகு அவனது நினைவில் சுகம் கண்டு கொண்டும் இருந்தாள் கல்யாணி.

அவனும் தான் அந்த வீட்டுக்கு ஒரு விருந்தாளி என்கிற நிலையிலிருந்து ஏதோ பாத்தியதை உடையவனாக மாறுவதை மிகுந்த மனக்கூச்சத்துடன் உணர ஆரம்பித்தான்.

தான் இங்கே வருவதும், சொந்தமாக அவளது அறைக்குள் சென்று சட்டையைக் கழட்டிப் போட்டுவிட்டு பனியனுடன் உட்கார்ந்து கொள்ளுவதும் என்ன உரிமையில்? என்று அவன் அடிக்கடி குழப்பமுற்றான்.

இவன் வந்ததும் வராததுமாய்க் கல்யாணி ஒத்திகையிலோ அல்லது வேறு யாருடனோ முக்கியமாகப் பேசிக் கொண்டோ இருந்தாலும்கூட எழுந்து ஓடி வருவதும் ‘என்ன வேண்டும்?’ என்று உபசரிப்பதும், ‘மத்தியானம் சாப்பிட்டீர்களா? ஏன் களைப்பாய் இருக்கிறீர்கள்?’ என்று விசாரிப்பதும் இவனுக்குக் காப்பியோ தண்ணீரோ கொண்டு வருவதும் மற்றவர்களால் எப்படிப் புரிந்து கொள்ளப்படுகிறது என்று அந்தச் சமயங்களில் அடிக்கடி விலகி நின்று அறியப் பார்த்தான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நாளுக்கு நாள் தான் அவளிடம் கடன்பட்டு வருவது மாதிரி அவன் சுமையுற்றான். அவளோ, தனக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம்போல் அவனைப் போஷித்தாள். இவன் முழுக்கவும் தன்னிடம் இல்லாமல்அடிக்கடி எங்கோ ஒரு தனி வாசத்துக்குப் போய் விடுகிறானே என்ற குறைதான் அவளுக்கு இருந்தது. அவள் வேறொன்றையும் இவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

அவனை விருந்துக்கு அழைத்தாளே, அன்றே இவன் கேட்கவும் தான் தரவும் இனிமேல் எதுவும் இல்லை என்கிற விதமாக எந்தப் பேரமும் பேசாமல் தன்னை முழுமையாக அவள் இவனிடம் சமர்ப்பித்துக் கொண்டு விட்டாள். அப்படித் தன்னை அளிப்பதன் மூலம்தனக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படும் என்று அவள் நினைக்கவில்லை. அதற்கு மறுநாளிலிருந்து அவன் அவளிடம் வராமல் போய் விட்டாலும்கூட அவன் வந்ததை ஒரு லாபமாகக் கருதி நிறைவு கொள்ளும் அளவுக்கு அவள் மனம் பக்குவம் பெற்றிருந்தது. அதனால் அவன் வியந்து பிரமிக்கிறமாதிரி அவனிடம் அவள் தன்னைச் சமர்ப்பித்துக்கொள்ள முடிந்தது.

அவளுக்கு அவன்தான் பிரதானமாக இருந்தானே ஒழிய-அவனுக்கும் தனக்கும் உள்ள உறவின் பேரில் ஒட்டிக் கொள்கிற பெயர் குறித்து, இதைப் பற்றிப் பிறர் என்ன பேசுகிறார்கள் என்பது குறித்து, இந்த உறவின் நிரந்தரம் அல்லது நிரந்தரமின்மை குறித்தெல்லாம் எந்தவிதமான குழப்பமும் அவளுக்கு இல்லை. அவள் தன் வாழ்க்கையில் இந்த ஆறுமாதங்களாக மிகுந்த மனநிறைவோடும், நிம்மதியோடும், சந்தோஷமாகவும் இருக்கிறாள்.

அவளது நாடகக் குழுவிலும் இந்த உறவு தெரிந்து அங்கீகரிக்கப்பட்டுவிட்ட மாதிரியும் ஆசீர்வதிக்கப்பட்டு விட்ட மாதிரியும் தான் எல்லாரும் நடந்து கொண்டார்கள்.

ஆனால் இப்போதும்கூட அவன் அவர்களின் நாடகங்களைப் பற்றி முன்பு மாதிரிதான் விமரிசனம் எழுதுகிறான். இதனால் அவன்மீது அவர்களுக்கு மதிப்பு கூடியதே தவிரக் குறையவில்லை. கல்யாணியின் நடிப்பைப் பற்றியும்கூட அவன் சமீபத்தில் மிகவும் விமரிசனத்துக்குரிய முறையில் அபிப்பிராயம் தெரிவித்திருந்தான். அவள் அவன் சம்பந்தப்பட்ட எதிலுமே நிறைவையும் அழகையும் காண்கிற மாதிரி, தன்னைப் பற்றி அவன் எழுதிய விமரிசனங்களிலும் நிறைவு கண்டு அவன் கருத்து சரி என்று அதை ஒப்புக் கொண்டாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அண்ணாசாமி மட்டும் 'இவன் இந்த விஷயத்தில் மாற்ற முடியாத வக்ரம் படைத்தவன்' என்ற தனது அபிப்பிராயத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். எனினும் கல்யாணிக்காக அவனிடம் நட்புக் கொண்டிருந்தார். நாடக-சினிமா-கலை விவகாரங்கள் தவிர, மற்ற விஷயங்களைப் பற்றி அவனிடம் பேசுவதோடு அவனது அபிப்பிராயங்களைக் கேட்பதிலும் குணங்களை அறிவதிலும் அவருக்கு அவன்பால் நல்லெண்ணமும் உடன்பாடும் இருந்தது.

சென்ற மாதத்தில் ஒரு நாள் அண்ணாசாமிதான் கல்யாணியிடம் கூறினார்.

"கல்யாணி உன் வாழ்க்கையிலே உனக்கு ஒரு நல்ல துணை கெடச்சு, நீ சந்தோஷமா இருக்கறதிலே எனக்கு ரொம்பத் திருப்தி. ஆனா இப்படியே இருக்கப்படாதோன்னா....?"

முதலில் அவர் என்ன சொல்லுகிறார் என்று அவளுக்குப் புரியவில்லை.

"இப்படியே இருக்கணும் என் வாழ்க்கைன்னு நான் தினம் தினம் கடவுளை வேண்டிக்கிட்டு இருக்கேன் சாமி" என்று மன நிறைவோடு சொன்னாள் கல்யாணி.

"அப்படியே இருக்கட்டும்" என்று அவளை ஆசீர்வதிக்கிற மாதிரி கையைக் காட்டி ஒரு புன்னகையோடு சற்று யோசித்துத் தான் கூற வந்ததை நிதானித்தபின் சொன்னார் அண்ணாசாமி.

"கல்யாணி, ரெண்டுபேர் சேர்ந்து வாழறதுங்கறது ஏதோ மனசு சம்பந்தப்பட்டது, உடல் சம்பந்தப்பட்டது மட்டுமில்லே-அது ரொம்ப முக்கியம்கிறதை நான் ஒப்புத்துக்கறேன். ஆனா, சேர்ந்து வாழறதுங்கறது 'லைஃப்' சம்பந்தப்பட்டது. வாழ்க்கைங்கறது மனசு உடம்பு சம்பந்தப்பட்டது மட்டும் தானா? சட்டம், சமூகம் பொருளாதாரம் அதெல்லாம் சம்பந்தப்பட்டது இல்லையா? அவன் மேலே நம்பிக்கை இல்லாமல் இதெ நான் சொல்றதா நீயோ அவனோ நினைச்சா, அது மகா தப்பு. அவன் மேலே ரொம்ப நம்பிக்கை வந்துட்டதனாலேயேநான் இதைப் பத்தி சொல்றேன். நீங்க நிரந்தரமா இப்படியே இருப்பேள்னு தோணிட்டுது, எனக்கு.அதனாலேதான் சொல்றேன். இந்த நிரந்தரத்துக்கு ஒரு அர்த்தம் வேணும் குறைஞ்சபட்சம் 'லீகலா' நீங்க இதை 'ரிஜிஸ்ட்'டராவது பண்ணிண்டா, பின்னாலே உங்களுக்கே நல்லது.... இதைப் பத்தி நீ யோசிக்கவே இல்லையே! ஆனா அவன் யோசிச்சு இருக்கணுமே" என்று அவர் பேசிக் கொண்டிருக்கையில் ரங்காவின் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்திவிட விரும்பினாள். தன்மீது நம்பிக்கை இல்லாமல் இவ்விதம் பேச்சு நிகழ்வதாக அவன் இதைப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அவள் அஞ்சினாள்.

அவள், அவன் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே வருவதற்குள் சுருக்கமாகவும் தீர்க்கமாகவும் அண்ணாசாமியிடம் கூறினாள்.

"அவர் இதைப்பத்தி யோசிப்பாருன்னு சொன்னீங்க இல்லே? அதனாலேதான் நான் இதைப்பத்தி யோசிக்கலே. அவருக்குத் தெரியாதா, என்ன? நான் இதைப்பத்தி ஒண்ணும் அவருகிட்டே பேசமாட்டேன்."

"நீ பேசவேண்டாம். நான் பேசறேன். எனக்கு அந்த உரிமை இல்லையா?" என்று அண்ணாசாமி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டே ரங்கா உள்ளே நுழைந்தான். கல்யாணி தர்மசங்கடமாய் அந்நிலைமையை உணர்ந்து கொண்டாள்.

"கல்யாணிகிட்டே நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லிண்டு இருக்கேன். என்ன, சரி தானே? நீரே யோசிச்சிருப்பீர். சாஸ்திரம், ஆசாரம், ஸ்வாமி சந்நிதியெல்லாம் கூட அவ்வளவு முக்கியமில்லே. ரிஜிஸ்டர் பண்ணிண்டாக் கூடப் போறும், என்ன? நான் சொல்றது தப்புன்னு நினைக்கிறீரா?" என்று தன் சுபாவப்படி பீடிகை ஏதும் இல்லாமல் பட்டென்று விஷயத்தை உடைத்துக் கேட்டார் அண்ணாசாமி.

ரங்கா கல்யாணியைப் பார்த்தான். இவளிடம் தான் கடன்பட்டுக்கொண்டே நாளுக்கு நாள் மனசிலே ஏற்றிக் கொள்ளுகிற சுமையை இந்த ஏற்பாடு குறைக்குமே என்று அவனுக்குத் தோன்றியது.

"என்ன கல்யாணி சொல்றே? சார் சொல்றது சரின்னு தான் எனக்குத் தோணுது. நானும்கூட இதெப்பத்தி யோசிச்சிருக்கேன். எங்க ஜாதிக்காரங்க சொந்தக்காரங்க எல்லாம் ஒத்துக்க மாட்டாங்க. அவங்களெ எல்லாம் வுட்டுட்டுத்தான் வந்துடணும்... அதனாலே ஒண்ணும் நஷ்டம் இல்லே. இவ்வளவு நாளு அவுங்களோடு வாழ்ந்திருந்த பழக்கம்தானே தவிர, வேறு நஷ்டம் ஒண்ணும் இல்லே.... அண்ணாசாமி சார் சொல்றது சரின்னு தான் தோணுது" என்று திரும்பத்திரும்ப யோசித்து அண்ணாசாமி யோசனைக்கு, அவர் தங்கள்மீது காட்டுகிற அக்கறைக்கு நன்றி தெரிவிக்கிற மாதிரி அவளிடம் தனது ஆமோதிப்பையும் அவன் தெரிவித்தான்.

அப்போதுதான் கிராமத்திலிருக்கிற ஐந்து வயது மகளை, இறந்துபோன

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மனைவியை, அவனையே மணந்து கொள்ள வேண்டும் என்கிற நினைப்போடு காத்துக் கொண்டிருக்கிற சுமதியை நினைத்துப் பார்த்தான்.

இது விஷயமாகக் கிராமத்துக்குச் சென்று – அவர்களது சம்மதத்தைப் பெறாவிட்டாலும் - அவர்களுக்கு இதைத் தெரிவித்து விட்டாவது வரவேண்டுமென்று அவன் நினைத்தான். அவனைப் பொறுத்தவரை தான் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டாலும் செய்து கொள்ளாவிட்டாலும் இந்தச் சுமதியைக் கல்யாணம் செய்துகொள்வது இல்லை என்று தீர்மானித்து வெகு காலமாகிவிட்டது. இதை அவன் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும், ஏதோ அவன் தேவகியின்மீது கொண்டுள்ள ஆசையினால் இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ள மறுக்கிறான் என்றுதான் அவர்கள் புரிந்து கொண்டார்கள். இப்படிச் சொன்னவர்கள் பல பேரை அவர்கள் பார்த்திருக்கிறார்களாம். இறந்தவள் மீது எவ்வளவு ஆசை இருந்தாலும் கடைசியில் ஒரு நாள் இரண்டாம் கல்யாணத்துக்குச் சம்மதம் தந்து விடுவார்களாம். இது மாதிரி எல்லாரும் திரும்பத் திரும்பச் சொல்கிற விஷயங்களில் வைத்த நம்பிக்கையில் ஐந்து வருஷமாக அவர்கள் காத்திருக்கிறார்கள். சுமதிக்கு இப்போது இருபத்திரண்டு வயது.

அண்ணாசாமியிடமும் கல்யாணியிடமும் அவன் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்: அவர் குறிப்பிட்டது மாதிரி யாருக்கும் சொல்லாமல், தாங்கள் இரண்டு பேர் சம்பந்தப்பட்ட ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாக அதை ரிஜிஸ்தர் செய்து கொள்ளுவதற்கு அவன் தனது முழுச் சம்மதத்தைத் தந்தான்.

அண்ணாசாமி பஞ்சாங்கம் பார்த்து அடுத்த மாதத்தில் ஒரு நாளையும் அதற்குக் குறித்து வைத்திருந்தார். அன்றைக்கு அவர்கள் இருவரும் தன் வீட்டில் வந்து விருந்து சாப்பிட வேண்டும் என்று சொல்லி இருந்தார். இந்தச் செய்தியை அவர் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்ற போது அண்ணாசாமியின் மனைவி வேங்கடத்துக்கு வாழ்க்கையில் ஒரு புதிய நிம்மதி கிட்டியது.

ரங்கா நேற்று காலை, பஸ்ஸுக்குக் கிளம்பி கிராமத்துக்குப் போனான். சென்னையிலே இருந்து வேலூருக்குப் போகிற வழியில் ஐம்பதாவது மைலில் இருக்கிறது அந்தக் கிராமம். மனைவி இறந்த பிறகு, இரண்டு தடவை அந்த வழியாகப் போக நேர்ந்த பொழுது தன் குழந்தையைப் பார்ப்பதற்காக அவன் அங்கு போயிருந்தான். இவன் ஓர் அந்நியன் என்று பயந்து அந்தக் குழந்தை இவனைக் கண்டவுடன் ஓடி ஒளிந்து கொள்ளும். கூப்பிட்டால் வராது, வலுக்கட்டாயமாகத் தூக்கினாலும் அழும்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இரண்டு வருஷத்துக்குப் பிறகு நேற்று அவன் போன போது திண்ணையில் செப்பு வைத்துக் கொண்டு தன்னை விட வயதில் குறைந்த குழந்தைகளை அதிகாரம் செய்தவாறு 'குடும்ப விளையாட்டு' நடத்திக் கொண்டிருக்கும் அந்தப் பாவாடை கட்டிய சிறுமியைத் தன் மகள் என்று அவன் அடையாளம் கண்டு கொண்டுவிட்டான்.

"அம்மா! யாரோ வந்திருக்கிறாங்க" என்று கூவியவாறு தன்னைப் பார்த்ததும் உள்ளே ஓடிய அந்தக் கிராமத்துக் குழந்தையை நெஞ்சில் பெருகும் பாசத்தோடு-இப்போது, ஸ்கூட்டரில் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது நினைத்துக் கொண்டான் ரங்கா.

அவன் மகள் இந்து, சுமதியை 'அம்மா' என்று அழைக்கிறாள். தனக்கு அம்மா அவள்தான் என்றும் நினைக்கிறாள்.... அதற்காக அவளை அவன் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்ன? அவன் மிகவும் பிடிவாதமாகவும்-உறுதியாகவும் அந்த நம்பிக்கைகளை உடைத்து எறிந்து விட்டதுமல்லாமல் தனக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கிற உறவையே அறுத்துக் கொண்டு விட்டமாதிரி, தான் ஒரு நாடக நடிகையை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற விஷயத்தையும் தாட்சண்யமில்லாமல் கூறிவிட்டான். அதன் பிறகு அங்கே ஒரு ஸீனே ஏற்பட்டது. கடைசியில் தங்களிடம் வளர்கின்ற இந்தக் குழந்தையை இவன் கேட்காமல் இருந்தால் போதும் என்று அந்தக் குடும்பத்தினர் இவனைத் தண்ணீர் தெளித்து விட்ட மாதிரி மனசை மாற்றிக் கொண்டனர்.

இந்தக் கல்யாணிக்காக, இவளுடைய காதலுக்காக இதையெல்லாம் செய்யலாம் என்று அவன் மனசுள் இப்போதும் கூடச் சமாதானமே கொண்டான்.

ரங்கா நேரே ஆபீசுக்குப் போனான். காலையில் நேரங்கழித்து எழுந்திருந்தாலும், அதன் பிறகு வீட்டுக்கார அம்மாளுடனும் மற்றவர்களுடனும் கல்யாணி விஷயமாகப் பேசிக் கொண்டிருந்ததாலும் அதிக நாழியாகி விட்டது. எனவே காலை டிபனுக்கு வழக்கமாகப் போகிறமாதிரி இன்று அவள் வீட்டுக்குப் போக முடியாது என்று நினைத்த ரங்கா நேரே ஆபீசுக்கே போய் விடுவதென்ற தீர்மானத்தில் ஸ்கூட்டரை வேறு பக்கம் திருப்பினான். அப்போதே மணி பத்தரைக்கு மேல் ஆகி இருந்தது. பதினோரு மணிக்காவது ஆபீசுக்குப் போய் விட வேண்டுமென்ற தீர்மானத்தோடு, மாலையிலோ இரவிலோ அவளைப் பார்த்துக் கொள்ளலாமென்று நினைத்துக் கொண்டான்.

ஆபீசுக்கு வந்ததும் கான்டீனிலிருந்து காப்பி வரவழைத்துச் சாப்பிட்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மேஜையின்மீது இவன் பார்த்து அச்சுக்கு அனுப்பவேண்டிய மேட்டர்கள் குவிந்து கிடந்தன. அவனுக்கு வேலையில் மனம் ஓடவில்லை.

கல்யாணி தனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள் என்ற நினைவு வந்தது. ஒரு வேளை அவளும் இந்நேரம் வரைக்கும் டிபன் சாப்பிடாமல் இருப்பாளோ என்ற கவலையும் வந்தது.

அவனுக்குத் திடீரென்று அந்த நர்ஸரிப் பள்ளிக்கூடத்துப் போனை கல்யாணி சில சமயங்களில் உபயோகப்படுத்துவது நினைவுக்கு வந்தது. அவளது நாடகக் குழு சம்பந்தப்பட்டவர்கள் கூட அந்த நர்ஸரிப் பள்ளிக்குப் போன் செய்து இவளைக் கூப்பிட்டுப் பேசுவது வழக்கம். முதன் முதலில் அவள் அவனுக்குப் போன் செய்ததுகூட அங்கே இருந்துதான்.

அவன் டைரக்டரியை எடுத்து அந்த நர்ஸரிப் பள்ளியின் நம்பரைப் பார்த்து போன் பண்ணி 'எதிர் வீட்டில் இருக்கின்ற கல்யாணியைக் கூப்பிட முடியுமா' என்று பணிவுடன் கேட்டான். அவள் வரும்வரை காத்திருந்தான்.

சில விநாடிகளுக்குப் பிறகு அவள் குரலைக் கேட்ட போது எதற்கு போன் செய்தோம் என்பது அவனுக்கு ஒரு விநாடி மறந்து போயிற்று. பேசுவது இவனென்று தெரிந்ததும் அவளே கேட்டாள்:

"காலையிலே ஏன் வரல்லே? சாப்பிட்டீங்களா?" என்று அவள் விசாரித்தாள். தான் போன் செய்ததும் அதற்காகத்தான் என்று இவன் விளக்கினான். மத்தியானம் வந்து சாப்பிட்டு விட்டுப் போகும்படி அவள் வற்புறுத்தி அழைத்தாள். அவன் சரி என்று ஒப்புக் கொண்டான்.

பிறகு தன் வேலைகளில் முனைந்தான் ரங்கா. பார்க்க வேண்டிய புரூப்களைத் திருத்திய பிறகு அதை எடுத்துக் கொண்டு போக வந்த கம்பாஸிட்டர் இன்னும் இரண்டு 'கால'த்திற்கு மேட்டர் வேண்டுமென்று கேட்டான். தனது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்து ரசமான இரண்டு மூன்று பெட்டிச் செய்திகள் தயாரித்தான் ரங்கா. ஏதோ ஒரு பக்கம் சரியாக 'மேக்கப்' ஆகவில்லை என்று அந்தப் புரூபை எடுத்துக்கொண்டு தானே பிரஸ்ஸுக்கு ஓடினான்.

அச்சு இயந்திரங்கள் போடுகின்ற இரைச்சலின் நடுவே அவன் உரத்த குரலில் பேசி அந்த போர்மனிடம் அந்தப் பக்கம் எப்படி அமையவேண்டுமென்று விளக்கினான். ஒரு கம்பாஸிட்டர் இவன் சொல்லுகிற விதமாக ஸ்டோன் மீது கிடந்த 'பே'ஜை மாற்றிச் சரிசெய்து

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொண்டிருந்தபோது பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தான். இவன் விரும்புகிறபடி அதைச் சரி செய்ய ஒரு மணி நேரமாயிற்று.

மறுபடியும் அதை ஒரு புரூப் போட்டு எடுத்துக் கொண்டு திருப்தியுடன் மாடியில் தன் அறைக்குத் திரும்பினான் ரங்கா.

மணி ஒன்றாகி இருந்தது. இவ்வளவு நேரமாக அவன் முனைந்திருந்த காரியங்களைத் தவிர வேறு சிந்தனையே இல்லாதிருந்த ரங்கா இப்போது கல்யாணியை நினைத்துக் கொண்டான். இன்று காலை தன்னுடைய உற்றார் உறவினர்களுக்கெல்லாம்அவளைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற விஷயம் தெரிந்து, அவர்கள் எல்லோரும் தன்னிடம் மனஸ்தாபம் கொண்டு விட்டதையும் நினைத்துக் கொண்டான். இனிமேலும் தொடர்ந்து ஆதிகேசவலு நாயக்கர் தெருவின் பதினோராம் நம்பர் வீட்டில் தான் குடியிருப்பதில் அர்த்தமில்லை என்று அவனுக்குத் தோன்றிற்று.

அவளைக் கல்யாணம் செய்து கொண்டால், தான் அவளோடு வந்து இருக்கவேண்டுமென்பதை நினைத்த போது அதுவும் அவன் மனசுக்குச் சரியாகப்படவில்லை. அவளைக் கல்யாணமும் செய்துகொண்டு தான் இப்படித் தனித்து வாழ்வதும் நியாயமாகப் படவில்லை. இது பற்றித் தான் இதுவரைக்கும் யோசிக்கவே இல்லை என்பதை இப்போது நினைத்து அவன் ஆச்சரியம் கொண்டான். கல்யாணி இது குறித்து என்ன நினைப்பாள் என்று அவன் யோசித்துப் பார்த்தான். 'நான் அவளுடன் வந்து அவள் வீட்டிலேயே இருப்பேனென்கிற நம்பிக்கையில் அவள் இருக்கிறாளோ?' என்று நினைத்தபோது அவளுடைய அந்த நம்பிக்கை தன்மீது அவள் கொண்ட உரிமையினால் ஏற்பட்டது என்று அவன் புரிந்து கொண்டான். ஆனாலும் அவ்விதம் தான் அவள் வீட்டில் போய் இருப்பது தன்னுடைய கௌரவத்துக்கு இழுக்கு என்று தோன்றிற்று. அவளுக்கு இருப்பது மாதிரி தனக்கு ஒரு சொந்த வீடு இல்லையே என்று எண்ணிப் பார்த்த ரங்கா, தனக்கும் அவளுக்கும் இடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வை முதன் முறையாக யோசித்துப் பார்த்தான்.

கல்யாணியைப் பற்றி அவனுக்கு முழுமையாகத் தெரியாவிட்டாலும் தன்னைவிட அவளது அந்தஸ்து அதிகமென்று மட்டும் அவனுக்குத் தெரிந்தது. அவனுக்கு எல்லாமாகச் சேர்ந்து மாதம் ஐநூற்று அறுபது ரூபாய் கிடைக்கிற சம்பளத்தைத்தவிர வேறு ஒன்றும் கிடையாது.

அவளுக்குச் சொந்தமாய் வீடு இருக்கிறது. அவளே அந்த நாடகக் குழுவில் எஜமானியாக இருக்கிறாள் அந்த வருமானமும் சேமிப்பும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நிச்சயம் கணிசமான அளவுக்கு இருக்கும் என்றெல்லாம் யோசித்த ரங்கா அவளைக் கல்யாணம் செய்து கொண்டாலும் அவளது பொருளாதார நிலை, தொழில் துறை முதலியவற்றிலிருந்து தான் சம்பந்தமற்று ஒதுங்கியே இருக்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். இதற்கு முதல் படியாக அவள் வீட்டிலேயே குடிபுகும் யோசனை வந்தால் அதை மறுத்து விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவளிடம் மத்தியானச் சாப்பாட்டுக்கு வருவதாகக் கூறியது நினைவில் வந்ததும் ரங்கா புறப்பட்டான். இது பற்றி அவளோடு பேசிவிட வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

கல்யாணி ரங்காவின் பக்கத்தில் அமர்ந்து உபசரித்து உபசரித்துப் பரிமாறிக் கொண்டிருந்தபோது அவன் ஆரம்பித்தான்.

“நம்ப கல்யாணத்துக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கு?”

அவள் உடனே பதில் சொன்னாள்: “இன்னும் பதினேழு நாள் இருக்குது.”

“கல்யாணத்துக்கு அப்புறம் நாம எப்பிடி நம்ப வாழ்க்கையை அமைச்சுக்கறதுன்னு நீ யோசிக்கவே இல்லையா?”

“அது எப்பிடிங்க நான் மட்டும் தனியா யோசிக்கறது? நீங்க சொல்றபடிதான் அமைச்சுக்கணும்.”

“உலக வழக்கப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டா புருஷன் வீட்டிலேதான் பொண்டாட்டி இருப்பா: ஆனா எனக்கு ஒரு வீடு கிடையாதே” என்று அவன் ரொம்பப் பரிதாபமாகச் சொன்னான்: “எங்க தாத்தா பேராலே ஒரு தெருவே இருக்கு. ஆனால் அந்தத் தெருவிலே இருக்கிற என் ரூமுலே நாம்ப இரண்டு பேரும் இருக்க முடியாது. நாம்ப ரெண்டு பேரும் குடி இருக்கறதுக்கு அந்தத் தெருவிலே வீடு கூடத் தரமாட்டாங்க யாரும்” என்று அவன் சொன்னபோது அவன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டு இப்படிச் சொல்கிறான் என்று புரியாமல்-அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சற்றுத் தயக்கத்தோடு யோசித்தாள் கல்யாணி. அவன் அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தான். அவள் பதிலேதும் பேசாமல் அவனைப் பார்த்து ஒரு புன்முறுவல் செய்தாள். பின்னர் அவனுடைய சுயமரியாதை உணர்ச்சிக்கும் பங்கமில்லாதபடி மிகவும் பக்குவமாகச் சொன்னாள்:

“நமக்குப் பெரியவங்க யாராவது இருந்து அவங்களாப் பார்த்து நம்ப கல்யாணம் நடந்ததுன்னா நீங்க சொல்ற மாதிரி உலக வழக்கபடி எல்லாமே நடக்கும். இப்போ நம்ப கல்யாணம்கிறது நம்மைப் பொறுத்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வரைக்கும் புதுசா ஒண்ணையும் ஏற்படுத்திடப் போறதில்லே. நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னோ உங்களோடயே நான் வந்துடணும்னோ பெரிய ஆசைகள் எதுவுமே மனசிலே வச்சிக்கிட்டிருந்ததில்லே. நான் எதிர்பாராமே இதெல்லாம் ஏற்படும்போது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. நாம்ப எப்படி இருக்கிறது உங்களுக்குச் சௌகரியம்னு நீங்க நினைக்கிறீங்களோ அது மாதிரி நான் இருப்பேன். என்னோட விருப்பத்தைக் கேட்டீங்கன்னா நானே உங்களுக்குச் சொந்தமானப்புறம் இந்த வீட்டையே உங்க வீடா நினைச்சு நீங்க இங்கேயே வந்து இருக்கலாம்னுதான் தோணுது."

ரங்கா அவளிடமிருந்து இந்த யோசனையை எதிர்பார்த்தே இருந்தான். அதுபற்றி அவன் செய்திருந்த முடிவை இப்போது சொல்லிவிட வேண்டுமென்று அவன் நினைத்தான்: அப்படிச் சொல்லும்போது அவள் மனம் புண்பட்டு விடக்கூடாதே என்று பயத்தோடு மிகவும் ஜாக்கிரதையாக-சாப்பிட்டு முடிகிற வரைக்கும் மௌனமாக இருந்துவிட்டுக் கை கழுவிக்கொண்டு ஹாலில் வந்து உட்கார்ந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

"நான் இந்த வீட்டோடேயே வந்து இருக்கறது அவ்வளவு சரின்னு எனக்குப் படலே. ஆனால் இந்த வீடு மாதிரி இவ்வளவு வசதியான இன்னொரு வீட்டிலே உன்னைக் கொண்டுபோய் வச்சிக்கறதுங்கறதும் என்னாலே முடியாது. எனக்காக உன்னைக் கஷ்டப்படுத்தறதிலேயும் எனக்குச் சம்மதமில்லே. அதனாலே நம்ப கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் கூட இப்போ இருக்கிற மாதிரியே இருக்க வேண்டியதுதான்" என்று அவன் சொன்னதைக் கேட்டு அவள் லேசாகச் சிரித்தாள்.

"ஏன்? எதுக்குச் சிரிக்கிறே?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான், ரங்கா.

"ஒண்ணுமில்லே. இது ஒரு பிரச்னையாகுதேன்னு நினைக்கும்போது எனக்குச் சிரிப்பு வருது. ஆனால் நீங்க ஏன் இப்படி நினைக்கறீங்கன்னு எனக்குப் புரியுது. நீங்க நினைக்கறதிலே நியாயம் இருக்கு. புதுசாத் தொடங்கற ஒரு வாழ்க்கை எல்லா விதத்திலேயும் புதுசாகவே இருக்கணும். பழசிலே ஒட்டுப் போட்ட மாதிரி இருக்கக் கூடாது. எனக்கு ஒரு யோசனை தோணுது. இந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிடுவோம்: அந்த வாடகைப் பணத்திலே இதே மாதிரி இன்னொரு வீட்டை நாம்ப வாடகைக்கு எடுத்துக்குவோம்" என்று அவள் சொன்ன யோசனை பரிசீலிக்கக் கூடியதாக இருந்தது. அவன் சொன்னான்.

"இந்த அளவுக்கு ஒரு வீடு எடுக்க வேண்டியதுதான். ஆனால் அந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வீட்டுக்கு வாடகை நான்தான் கொடுப்பேன். இந்த வீட்டிலிருந்து வர வாடகை உன்னோட 'ஸேவிங்ஸ்'லே இருக்கும். இல்லாட்டி உன்னோட செலவிலே இருக்கும். என்ன… சரிதானே?"

அவள் மறுபடியும் சிரித்தாள். தன்னைவிட இவன் வசதி குறைந்தவன் என்கிற-தாழ்வு உணர்ச்சி அல்ல-ஜாக்கிரதை உணர்ச்சி இவனுக்கு இருப்பதை அவள் மனசுக்குள் பாராட்டிக் கொண்டாள். நல்ல வேளை! இதையெல்லாம் யோசித்து இவன் தன்னிடம் நெருங்காமல் போய்விடவில்லையே என்று அவள் சமாதானம் கொண்டாள். தன்னை நெருங்குவதற்குமுன் இது பற்றியெல்லாம் இவன் யோசித்திருந்தால் தனக்கும் இவனுக்கும் உறவே ஏற்படாமல் போயிருக்குமே என்று அவளுக்குத் தோன்றியது.

அவள் சிரிப்பைப் புரிந்து கொண்டு அவன் சொன்னான்: "இதையெல்லாம் இவ்வளவு பெரிசுபடுத்தி நான் பேசறேனேன்னு நினைச்சுச் சிரிக்கிறியா! நாளைக்கு இதெல்லாம் நம்ப வாழ்க்கையிலே ஒரு பிரச்னையா ஆனாக்கா அது ரொம்ப அசிங்கமாயிடும். இதைப்பத்தியெல்லாம் இப்பவே பேசிடணும். நாம்ப ஒண்ணும் சின்னப்பிள்ளைகள் இல்லே. இதெல்லாம் நமக்குள்ளே ஒரு பிரச்னையாகாதுன்னு நான் நம்பறேன். ரொம்பப் பேர் அந்தத் தைரியத்திலேயே பல பிரச்னைகளை உண்டாக்கிக்கிறாங்க…அது சரி இந்த வீட்டை வாடகைக்கு விட்டா என்ன வரும்?"

அவளும் ரொம்ப காரியார்த்தமாக அந்த ஹாலையும் சுற்றுப்புறத்தையும் ஏதோ புதிதாக வந்தவள் மாதிரிப் பார்த்து விட்டுச் சொன்னாள்: "என்ன….ஒரு இருநூத்தி அம்பது ரூபா கிடைக்குமா?"

அவள் கணிப்பு சரிதான் என்று அவனும் நினைத்தான். தன்னுடைய சம்பளத்தில் அந்த வாடகையைத் தன்னால் கொடுக்க முடியும். தனக்கும் தன் மனைவிக்குமாகச் சாப்பாட்டுக்கு இருநூறு ரூபாய் போதும். தனது சுய மரியாதைக்கும் கௌரவத்திற்கும் இப்படியொரு சுமையை அல்லது பொறுப்பை ஏற்கத் தனக்கு வல்லமை உண்டு என்று அவன் மனசுக்குள் திட்டமிட்டான்:

பிறகு ஒரு தீர்மானத்துடன் சொன்னான்:

"ரொம்பச் சரியான யோசனை கல்யாணி, அப்படியே செய்வோம். நான் இருநூத்தைம்பது ரூபாயிலே கொஞ்சம் நல்ல இடமாகவே சீக்கிரம் பார்க்கிறேன். இந்த வீட்டு மெத்தை மேலே இருக்கிற கொட்டாயை மட்டும் வேணுமானா உன் ரிஹர்ஸல், டிராமா சமாசாரங்களுக்கு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வெச்சிக்கலாம். கூடியவரைக்கும் அதுக்கும் வசதியாகவே சேர்த்துப் பார்க்கிறேன். ஒருவேளை கெடைக்கலேன்னா இந்த வீட்டு மெத்தையே மட்டும் வெச்சிக்கிட்டு மீதியெ குடக்கூலிக்கு விட்டுடலாம். மெத்தைப்படி தெருப்பக்கம் தான் இருக்கு. குடித்தனம் வர்ரவங்களுக்கு இடைஞ்சல் இல்லாமப் பாத்துக்கலாம்" என்று அவன் பேசிக் கொண்டே இருந்தான்.

கல்யாணிக்கு அவன் சொல்வதெல்லாமே நியாயம் போல் தோன்றியது. நல்லது என்றும் அவள் நம்பினாள். அவன் எவ்வளவு கௌரவமானவனும் மரியாதை மிகுந்தவனும் என்று இதன்மூலம் புரிந்துகொண்டாள் அவள். தன்னை அவன் அந்நியமாக நினைக்கிறானே என்ற வருத்தம் கொஞ்சம்கூட அவளுக்கு ஏற்படவில்லை. மாறாக, தான் இவனுக்கு எவ்வளவு சொந்தமானவளும் உரிமையுடையவளும் என்பதை இவனோடு வாழ்ந்து காட்டி இவன் புரிந்து கொள்ளுமாறு நடந்துகொண்ட பிறகு இவன் அதை ஏற்றுக் கொள்ளுவதே சிறப்பு என்று அவள் எண்ணினாள்.

அவன் தனக்கு நேரமாகிறது என்று ஆபீசுக்குப் புறப்பட்டான். அவனுடைய ஸ்கூட்டர் மறைகிறவரைக்கும் கல்யாணி தெருவில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவள் சாப்பிடப் போனாள்.

மாலையில் ரூமுக்கு வந்த ரங்கா சின்ன நய்னாவை அழைத்துத் தான் ரூமைக் காலி செய்துவிட்டு வேறு இடத்துக்குக் குடிபோகிற செய்தியை எப்படித் தெரிவிப்பது என்று தயங்கித் தயங்கி ரூமிலிருந்து வெளியே வருவதும், உள்ளே போய் வேறு காரியம் பார்ப்பதுமாகக் காலம் கடத்திக் கொண்டிருந்தான். எப்படியாவது இதைச் சொல்லிவிட வேண்டும். திடீரென்று ஒருநாளைக்கச் சொல்வதைவிட முன்கூட்டியே சொல்லிவிடுவது நல்லது என்று அவன் நினைத்தான்.

சின்ன நய்னா வீட்டின் வெளிப்புறத்தில் சுவரோரமாகச் சாய்ந்து குத்துக் காலிட்டுச் சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தார்.

வழக்கமாக ரங்காவைக் காணும்போது ஏதாவது பேச்சுக் கொடுத்து அவனோடு அளவளாவுவார் அவர். இன்று அவருக்கு இவனிடம் மனஸ்தாபம். இவன் எவளோ ஒரு நாடகக்காரியின் பின்னால் போய்விடுவதாக மரியாதையில்லாமல் தன்னிடம் முகத்துக்கு நேரே சொல்லிவிட்டானே என்கிற வருத்தம். எனவே அவனைத் திரும்பிப் பார்க்காமல் சுருட்டுப் புகைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார் அவர்.

இவன் இரண்டு மூன்று தடவை வெளியே வந்து நின்றும் அவர் திரும்பிப் பார்க்கவேயில்லை.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“சின்ன நய்னா, இங்கே வாயேன். உன்னாண்ட ஒரு விஷயமா பேசணும்” என்று அழைத்தான் ரங்கா.

“என்னாண்ட நீ இன்னா பேசக் கெடக்குது? சொல் பேச்சி கேக்கறவனா நீ? நீதான் எவளையோ உன் இஸ்டத்துக்கு ரிஜிஸ்தர் பண்ணிக்கப் போறியே... இந்தக் காலத்துப் புள்ளைங்களுக்கு நம்ம எதினாச்சும் சொல்லப் போனா நம்ம மரியாதைதான் பூடும்...” என்று புலம்பிக் கொண்டே எழுந்து வந்தார்.

“உள்ளே வா நாய்னா? குந்து” என்று நாற்காலியொன்றை இழுத்துப் போட்டான். கிழவருக்கு அதிலே கொஞ்சம் திருப்தி. பையன் தன் மீது மரியாதை குறையாமலிருக்கிறான் என்று நினைத்துக்கொண்டே மேஜையில் இருக்கும் அந்தப் படம் பார்வையில் படாமல் வேறுபுறம் திரும்பிக் கொண்டார்.

“சின்ன நய்னா... இங்கேயிருந்து எங்க ஆபீசு ரொம்பத் தொலவு இருக்குது. நெதம் லேட்டாத்தான் போறேன்.... அதுக்கோசரம் அங்கேயே எதனாச்சும் இடம் பார்த்துக்கினு இந்த ரூமைக் காலி செஞ்சுடலாமானு யோசிக்கிறேன். நீஇன்னா சொல்றே?” என்று மெல்ல ஆரம்பித்தான் ரங்கா.

உடனே சின்ன நய்னா கையிலிருந்த சுருட்டைத் தூக்கி எறிந்துவிட்டு எழுந்து நின்றுகொண்டார்.

“நல்லாருக்குதுப்பா நாயம். வெறும் சைக்கிள் இருக்கும்போது இல்லாத தூரம் இப்ப மோட்டார் சைக்கிள் வண்டி வாங்கினப்புறம் வந்துடுச்சா? அந்தக் கதையெல்லாம் சொல்லாதே. நான் எம்மாங்காலத்து ஆளுரு தெரியுமா? நீ இன்னாப் பையன்! எனக்குக் காது குத்தறே? அந்த வேலையெல்லாம் வேணாம். நீ இன்னா இந்த வூட்டுக்குக் குடுத்தனக்காரனா? நானு எப்பவாவது எனக்கு இம்மா ரூபா குடக்கூலி வேணும்னு கேட்டு இருக்கனா? என்னமோ நீயா எதுவோ குடுக்கறே வாங்கிக்கறோம். இல்லேன்னா ஏன்னு கேக்கப் போறமா? இப்ப உனக்கு அந்த நாடகக் காரியோட போயிடணும்னு எண்ணம் உய்ந்துடுச்சுனு சொல்லு போ... யாரு வேணாம்னு சொல்றாங்க? உன்னெ மாதிரி போனவங்க எம்மாம்பேரை என் வயிசுக்குப் பாத்திருக்கேன். எங்கே போனாலும் திரும்பி வந்துதான் ஆகணும். நீ இன்னா, மீசை உள்ள ஆம்பிளை தானே? போயிட்டுவா. ரூமை ஒண்ணும் காலி பண்ண வாணாம். பூட்டிச் சாவியெ எடுத்துக்கினு போ. இல்லாட்டி எங்கையிலே குடுத்துட்டுப் போ. உன் நாடகக்காரி சாகவாசம் எம்மா நாளுன்னு நானும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பாக்கறேன்…"என்று அவனைப் பேசவிடாமல் இரைந்து கூவிக் கொண்டிருந்தார் சின்ன நய்னா.

சாயங்காலம் கல்யாணியின் வீட்டுக்கு அண்ணாசாமி வந்தார். இந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டுத் தாங்கள் வேறு வீட்டுக்குக் குடிபோகிற திட்டத்தை அவள் அவரிடம் சொன்னாள். அண்ணாசாமி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு இறுதியில் வினவினார்:

"எல்லாம் அவனுடைய யோசனை தானே!"

"ஆமாம்" என்றாள் கல்யாணி.

"வக்கிரம் ஆனாலும், எப்பேர்பட்ட வக்கிரம் பிடிச்சவன்னு இப்ப உனக்குப் புரியறதா?" என்றார் அண்ணாசாமி. "சொந்த வீடு அழகாகவும் வசதியாகவும் இருக்கிறதை வாடகைக்கு விடறதாம்…அந்த வாடகையிலே இன்னொரு இடத்துக்குப் போறதாம்…இதைப் பெரிய மகிமை மாதிரி இவளும் புகழ வந்துவிட்டாள். இதெல்லாம் என்னடி பைத்தியக்காரத்தனம்? சரியான வறட்டு இழுப்பா இருப்பான் போலிருக்கே: நீ கொஞ்சம் சமத்தா இல்லேன்னா 'காணாதவன் பெண்டு படைச்சானாம்: காடு மேடெல்லாம் இழுத்தடிச்சானாம்'னு ஆயிடும் கதை! மரியாதையா கல்யாணத்தைப் பண்ணிண்டு இந்த ஆத்தோட வந்து சேருடான்னு நீ சொல்லு. அசடாட்டமா நீயும் அவனோட சேந்துண்டு ஆடாதே" என்று புலம்பினார்.

"நீங்க அவர் இடத்திலே இருந்து யோசிச்சுப் பார்க்கணும். எனக்கு என்னமோ அவரு சொல்றது சரின்னுதான் தோணுது. இல்லேன்னா அவரைச் சுத்தி இருக்கிறவங்க 'எவளையோ-ஒரு டிராமாக்காரியை வெச்சுக்கினு அவ வீட்டோட போயிட்டான்'னு அவரைக் கேவலமாப் பேசமாட்டாங்களா? நடிகையைக் கல்யாணம் பண்ணிக்கிறவனயே எல்லாரும் ஒரு மாதிரிப் பேசறதை நாம்பளே கேட்டு இருக்கோம். பேப்பர்லே கூட 'கூஜா'ன்னு எல்லாம் எவ்வளவு அநாகரிகமா எழுதறாங்க! அதுக்கு என்ன காரணம்? இந்த நடிகை அவனை விடச் சம்பாதிக்கிறவளாகவும், வசதி உள்ளவளாகவும் இருக்கா. இவளைக் கல்யாணம் பண்ணிக்கற ஆளுங்களும் அந்த வசதிக்கும் பணத்துக்கும்தான் அவளோட ஒட்டிக்கிறாங்க. அந்த மாதிரி தான் ஆகவும் கூடாது! தன்னைப் பத்தி ஒருத்தர் அப்படியெல்லாம் பேசவும் கூடாதுன்னு இவ்வளவு முன் ஜாக்கிறதையா அவர் யோசிக்கறது எப்படிங்க வக்கிரமாகும்? அவரு இந்த யோசனையைச் சொன்னதனாலே எனக்கு அவரு மேலே இருக்கிற மரியாதை அதிகமாத்தான்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஆகுது…"என்று கல்யாணி ரங்காவின் யோசனையில் தான் புரிந்து கொண்ட நியாயங்களை அண்ணாசாமிக்கு விளக்கினாள்.

அண்ணாசாமி புருவ விளிம்புகளைச் சுருக்கிக் கொண்டு சற்று நேரம் யோசித்துப் பார்த்தார். அவளையே பார்த்தார்.

"என்ன சாமி, ஒண்ணும் சொல்லாமப் பாக்கிறீங்க?" என்று பேச்சுக் கொடுத்தாள் கல்யாணி.

"ஒண்ணுமில்லே. நீ கொஞ்சம் கொஞ்சமா அவன் பேசற எல்லா நியாயங்களையும் ஒத்துண்டு தொழிலைக் கூட விட்டுட்டு நம்ம பார்ட்டியெயும் கலைச்சுட்டுப் போயிடுவியோன்னு யோசிக்கிறேன்" என்று மனசில் ஆழமாக வேரூன்றிய கவலையை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்றும், அப்படி நடந்தால் அதற்கும் தான் தயாராகின்ற மனப் பக்குவத்தைப் பெற வேண்டியும் கூறினார் அண்ணாசாமி.

அவள் மிகுந்த தெளிவுடன் அவருக்குப் பதில் சொன்னாள்: "உங்களுக்கு என்னைப்பத்தி நல்லாத் தெரியும். இருந்தாலும் அப்படி ஒரு கவலை உங்களுக்கு ஏற்படறது நியாயந்தான். ஏன் சாமி, ஒண்ணுத்துக்காக இன்னொண்ணை விட்டுக் கொடுக்கறதுன்னா, நான் வாழ்க்கையிலே பேரம் பண்ணச் சம்மதிச்சு இருந்தால், அடிக்கடி நீங்க சொல்றீங்களே, அந்த மாதிரி பெரிய ஸ்டாராக்கூட ஆயிருக்க முடியுமே, இல்லீங்களா?" என்று கேட்டுவிட்டுச் சற்று மௌனமாகவே அவர் கண்களை உற்றுப் பார்த்தாள் கல்யாணி. அந்தச் சில விநாடிகளில் அவர் மனத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள்-வேறு யாருக்கும் தெரியாத, அவருக்கும் அவள் தாய்க்கும் அவளுக்கும் மட்டுமே தெரிந்த சில சம்பவங்கள்-நினைவுக்கு வந்தன.

"நான் எதைச் செய்தாலும் சாமி, அது அதுக்காகத் தான் செய்யறேன். இதைச் செய்தால் அது கிடைக்கும், செய்யாமலிருந்தால் இந்த உறவு கெடைக்கும்னு பேரம் பண்ற வாழ்க்கை ரொம்பக் கேவலமா இருக்கு. நான் நடிக்கிறேன்னா-நடிக்கறதுக்காகத்தான் - அதுலே ஏற்படற சுதந்திரமான சந்தோஷத்துக்குத்தான் நடிக்கிறேன் 'டிராமாவிலே நடிக்கிறது சினிமாவிலே சான்ஸ் வாங்கறதுக்கு' அப்படின்னு எங்க அம்மாவும் நீங்களும் நெனச்ச காலத்திலேயே சினிமாவிலே நடிக்கிறதில்லேன்னு நான் முடிவு பண்ணிக்கிட்டேன். அந்த மாதிரி-இப்ப இவரைக் கல்யாணம் பண்ணிக்கிறது டிராமாவையோ, நடிக்கிறதையோ விட்டுடறதுக்காகன்னு நினைக்கிறீங்க? அப்படியே இருந்தாலும் இதைக் காரணமா வெச்சி அதை

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

விடமாட்டேன். அதெ விட்டுட்டு அப்புறமா கல்யாணம் பண்ணிக்குவேனே தவிர இப்படிச் செய்யமாட்டேன். எனக்கென்னவோ அவுரு அப்படியெல்லாம் பேரம் பேசறவராத் தெரியலே. அப்படி அவர் சொன்னாலும் அது சரியில்லேன்னு சொல்லுவேன். அவரும் ஒப்புத்துக்குவார்" என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் பட்டு கோயிலுக்குப் போகப் புறப்பட்டாள்.

"அக்கா, நான் கோயிலுக்குப் போயிட்டு வரேன்" என்று அவள் கல்யாணியிடம் வந்து உத்தரவு கேட்ட போது அண்ணாசாமி பட்டுவின் அலங்காரத்தையும், அவள் முகத்தில் பிரகாசிக்கும் மகிழ்ச்சியையும் அளக்கிற மாதிரி பார்த்தார்.

கல்யாணி அவளை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் வேறு யோசனையோடு "போயிட்டுச் சீக்கிரமா வந்துடு" என்று சொன்னாள்.

பட்டம்மாள் வெளியே படியிறங்கித் தெருவில் நடக்கிற வரைக்கும் பார்த்திருந்துவிட்டு, அவள் மறைந்ததும் கல்யாணியிடம் குரலைத் தாழ்த்திக் கொண்டு ரகசியம் மாதிரிக் கூறினார் அண்ணாசாமி.

"உன்கிட்டே ரெண்டு மூணு தடவை 'சொல்லணும், சொல்லணும்'னு நெனச்சேன். பட்டுவும் நம்ப தபலா தாமுவும்...." என்று இழுத்தார்.

கல்யாணி தூக்கத்திலிருந்து விழித்தவள் மாதிரிக் கண்களை அகல விரித்து அண்ணாசாமியை ஆச்சரியத்தோடு பார்த்தாள். அவர் சொல்வது உண்மைதான் என்று தானும் உணர்வதை அந்தப் பார்வை அங்கீகரித்தது.

"நீங்க பார்த்தீங்களா? எப்போ? எங்கே?" என்று விசாரித்தாள் கல்யாணி.

"கோயில்லேதான். அவா என்னைப் பார்க்கலே. அனேகமா தினந்தோறும் இவா கோயில்லே மீட்பண்றாள்னு நெனைக்கறேன். இவள் கோயிலுக்குப் போறது அதுக்காகத்தான்" என்று விளக்கினார் அண்ணாசாமி.

"அப்படியா சங்கதி! நான் ஒரு மண்டு. எனக்குத் தெரியவே இல்லையே! அது சரி சாமி, தாமுப் பையன் எப்படி? நல்லவன் தானே.... பரவாயில்லேன்னா முடிச்சு வச்சுடலாமே! என்ன சொல்றீங்க?" என்று பொறுப்புடன் அவரிடம் விசாரித்தாள் கல்யாணி.

"பையன் நல்லவன்தான், எனக்குத் தெரிஞ்சவரைக்கும். அவனோட ஃபேமலியைப்பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது. விசாரிச்சுட்டாப் போறது. இவளையும்-இவ அம்மாவையும் கூப்பிட்டுப் பேசிடு. உங்க கல்யாணத்தோடேயே சேத்து வெச்சுட்டா என்ன?" என்று உற்சாகமாகக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கேட்டார் அண்ணாசாமி.

கல்யாணி சற்றே முகம் சுளித்து யோசித்தாள். அண்ணாசாமி சொல்கிற யோசனை அவளுக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை போலும்.

‘இது விஷயமே வேறே சாமி, அவ அம்மா தன் பொண்ணோட கல்யாணத்தை எப்படியெல்லாம் நடத்தணும்னு ஆசைப்பட்டுக்கிட்டு இருக்குதோ? இந்தக் கல்யாணத்தோட அதைச் சேர்க்கறது சரியில்லே. முதல்லே அவ அம்மாவை வரச்சொல்லி எழுதணும். நீங்களும் தாமுவைப்பத்தி விசாரிங்க.... அப்புறம் அவங்களாச்சு... அவனாச்சு” ... என்று தன் குடும்பம் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்னைகளும் ஒரு தீர்வுக்கு வருகிற நிம்மதியுணர்ச்சியோடு கூறினாள் கல்யாணி.

சற்று நேரம் கழித்து ரங்கா வந்தான். அவன் வருவதை ஸ்கூட்டர் சத்தத்திலேயே கண்டுபிடித்து விடுவாள் கல்யாணி.

அவன் உள்ளே வந்ததும் வராததுமாய் அண்ணாசாமி முந்திக் கொண்டு கேட்டார்.

“என்ன மிஸ்டர் ரங்கா, கல்யாணத்துக்கப்புறம் புதுக்குடித்தனம் போகப் போறேளாமே.... வீடு பார்த்துட்டீரா?”

“பார்க்கணும். ரெண்டு மூணு பேருகிட்டே சொல்லி வச்சிருக்கேன். ஒரு ப்ரோக்கர்கிட்டேயும் சொல்லி இருக்கேன். பட்டணத்திலே வீடு கெடைக்கிறது சுலபமாக இருக்கா, என்ன?” என்று சொல்லிக்கொண்டே வந்து ஹாலில் உட்கார்ந்தான் ரங்கா.

‘இருக்கிற வீட்டை விட்டுவிட்டு இப்படி அலைவானேன்?’ என்று மனசில் நினைத்துக்கொண்டார் அண்ணாசாமி: அவனிடம் சொல்லவில்லை.

“அம்மா கல்யாணி, நாளைக்கு சாயந்தரம் ரிஹர்சல் வச்சுக்குவோம். இன்னம் ரெண்டு நாளுதான் இருக்கு. அதைச் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். மத்தவாளுக்கும் சொல்லிடறேன்.... நான் புறப்படட்டுமா?” என்று எழுந்தார் அண்ணாசாமி.

“காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம் ஸார்.... என்ன அவசரம்?” என்றான் ரங்கா.

அண்ணாசாமி மனசுக்குள் சிரித்துக்கொண்டே சொன்னார். “மிஸ்டர் ரங்கா... நீர் இன்னும் இந்த ஆத்துக்கு விருந்தாளிதான். புது வீட்டுக்குப் போனப்பறம் தான் என்னை நீர் உபசாரம் பண்ணலாம். இப்ப இது எங்க

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வீடு தெரியுமோ! கல்யாணி ரெண்டு பேருக்குமா சேர்த்து ரெண்டுகப் காப்பி கொண்டுவாம்மா....” என்று பெரிசாக ஹாஸ்யம் பண்ணிவிட்டது மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு அசடு வழிந்தார்.

கல்யாணி அவரது திருப்திக்காகச் சிரித்தாள். ரங்காவும் சிரித்தான்.

இன்றுதான் முதன்முதலாகக் கல்யாணியின் வீட்டில் இராத் தங்கினான் ரங்கா.

இரவு சாப்பாடு முடிந்ததும் மாடியில் நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து-தரையில் பாய் விரித்து அவன் படுத்துக் கொண்டு இருக்கையில்-கல்யாணி வெற்றிலை போட்டுக் கொண்டே அவனிடம் சொன்னாள்:

“உங்க மச்சினிக்கும் சீக்கிரம் ஒரு கல்யாணத்தை முடிச்சுட வேண்டியிருக்கு...”

ரங்கா சுமதியை நினைத்துக் கொண்டான்.

“அது நம்ம கையிலேயா இருக்கு! அதுதான் சின்னப்புள்ளைத் தனமா என்னமோ நெனச்சிக்கிட்டு இருக்குதுன்னா பெரியவங்களுக்கும் அறிவில்லாமே போச்சே. அவுங்கதான் அப்பிடி ஒரு எண்ணத்தை வளர்த்துவுட்டு இருக்காங்க. அது ஒரு பக்கம் என் மனசிலே உறுத்திக்கிட்டேதான் இருக்குது. அதுக்காக?....ம்...நாம என்ன செய்ய முடியும்....” என்று தானே புலம்பிக் கொண்டான்.

பட்டம்மாள் விஷயமாகத் தான் ஏதோ சொல்லப் போய், அவன் வேறு விஷயமாகப் பேசவே அதைத் தடுக்க மனமில்லாமல் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த கல்யாணி இப்போது சுமதி விஷயமாகவே பேச்சுக் கொடுத்தாள்:

அவ்வளவு உறுதியாக இருக்கிற அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துக்க உங்களுக்கு ஏன் தோணலே?... கிராமத்துப் பெண்ணா இருக்கறதனாலேயா?”

ரங்கா சற்று நேரம் மௌனமாய் யோசித்த பின்னர் சொன்னான்: “நீ ஏன் ஒருத்தியைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்னு கேட்டா அதுக்குப் பதில் சொல்ல முடியும். ‘நீ ஏன் இவளைக் கல்யாணம் செஞ்சுக்கலே’ன்னு கேக்கற கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும்?.... சுமதி ஒண்ணும் நீ நினைக்கிற மாதிரி கிராமத்துப் பொண்ணு இல்லே. அவளும் படிச்சிருக்கா. பக்கத்திலே ஒரு ஸ்கூல்லே டீச்சராக வேலை பார்க்கறாங்கறதும் இந்தத் தடவை போனப்பத்தான் எனக்குத் தெரிஞ்சுது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

என்னமோ எனக்கு ஆரம்பத்திலே இருந்தே இந்த யோசனை பிடிக்கலே. அப்படி ஒண்ணும் ரொம்ப வயசு வித்தியாசம் கிடையாது. ஒரு வேளை அவ செத்துக்கிடக்கிறபோதே யாரோ இந்த யோசனையைச் சொல்லி அதைக் கேட்ட எரிச்சலிலே நான் முடியாதுன்னு தீர்மானம் பண்ணிட்டது ஒரு காரணமாயிருக்கலாம்." – அவன் வானத்தைப் பார்த்தபடி மல்லாந்து படுத்துக் கொண்டு பேசினான். திடீரென அவள் பக்கம் ஒருக்களித்துத் திரும்பி,

"சரி இப்ப என்ன அதெப்பத்தியெல்லாம்? எல்லா விஷயமும்தான் ஒரு தீர்மானத்துக்கு வந்தாச்சே" என்றான்.

கல்யாணி பெருமூச்செறிந்தாள்.

"உங்க குழந்தைக்கு நீங்கதான் அப்பான்னு தெரியுதா?" என்று கேட்டாள்.

"அப்பான்னு தெரியுது. அதான் எல்லாரும் சொல்றாங்களே. ஆனாலும் யாரோ ஒரு அந்நியன்மாதிரி நெனச்சுத்தான் ஓடுது...."

"உங்க குழந்தைக்காகவாவது நீங்க அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்குவீங்கன்னு நெனச்சிருப்பாங்க. இல்லே?..."

"ம்ஹும்... நான் அதெச் சொன்னப்பதான் சுமதியே வந்து அழுதுட்டா. நீங்க யாரை வேணுமானாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க விருப்பம் போல இருங்க. குழந்தையெ மட்டும் என்கிட்டே இருந்து பிரிச்சுடாதீங்கன்னு கேட்டப்பதான், ஏன் இப்படிக் கேட்டோம்னு எனக்கே மனசு என்னமோ மாதிரி ஆயிட்டுது" என்று சொல்லும்போது அவன் குரல் குழைவதை அவளால் உணர முடிந்தது.

"சரி, நாளைக்கு அந்தப் பெண்ணுக்குக் கல்யாணமாச்சுன்னா அப்பவாவது உங்க குழந்தையெ உங்ககிட்டே கொண்டு வந்து விடுவாங்களா?" என்று ஏக்கத்துடன் கேட்டாள் கல்யாணி.

கல்யாணியின் மனசும், அதில் மறைந்திருக்கும் ஏக்கமும் அவனுக்குப் புரிந்தது.

அவனுடைய மனைவியாக ஆனபின் அவனது குழந்தையை வளர்க்கும் உரிமை தன்னுடையது தானே என்ற அவள் நினைப்பு நியாயமானது என்று அவனும் எண்ணினான்.

"உனக்குக் குழந்தைன்னா ரொம்பப் பிடிக்கும், இல்லே?" என்று பாயில் நகர்ந்து வந்து, அவள் மடிமீது மோவாய் பதித்துப் பார்வையை உயர்த்தி

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஒரு குழந்தை போல அவன் முகத்தை ஏந்தி மார்புறத் தழுவிக் கொண்டாள். அவள் மனசின் கனமும் துடிப்பும்-

அவனது தலையைப் பற்றிப் பின்சிகையில் அவளது கரங்கள் அழுந்தி விரல்கள் கோதிக் கோதி அவனை இறுக அணைந்தன.

"உனக்கே பிறக்கும்..." என்று அவன் மெல்ல அவளிடம் கூறிய போது அவனது பிடரிமேல் இரண்டு கண்ணீர் முத்துக்கள் விழுந்தன, ரங்கா மனம் பதறி அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் கண்கள் கலங்கி உதடுகள் துடித்தன. அவனது வார்த்தையை மறுக்கிற மாதிரி தலையை ஆட்டினாள். பிறகு முந்தானையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு பற்கள் பளீரிடச் சிரித்தாள்.

"கொஞ்ச முன்னே எதுக்குக் கண்கலங்கினே?" – என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தவாறே கேட்டான் ரங்கா.

"நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவர்-அதனாலே சொல்லிடணும்... எனக்குக் குழந்தை பிறக்காது. குழந்தைக்காகத்தான் ரெண்டு பேர் கல்யாணம் பண்ணிக்கணும்னா நான் கல்யாணமே செஞ்சுக்கக் கூடாது" என்று விவகாரத் தெளிவோடு சொன்னாள் கல்யாணி.

"எப்படி அவ்வளவு தீர்மானமா சொல்றே?" என்று கேட்டான் ரங்கா. "நான் ஒண்ணும் குழந்தை வேணும்கிற காரணத்துக்காக உன்னைக் கல்யாணம் செய்துக்கப் போறதில்லே. இருந்தாலும் நீ எப்படி இவ்வளவு தீர்மானமா சொல்றே?' என்று திரும்பவும் கேட்டான்.

கல்யாணி சற்று மௌனமாய்த் தலை குனிந்திருந்தாள். பிறகு சிரித்துக்கொண்டே லேசான மனத்தோடு சொன்னாள்: "எனக்கு ஒண்ணும் அதனாலே வருத்தமில்லே...நான் ஒண்ணும் தீர்மானமாப் பிறக்கவே பிறக்காதுன்னு சொல்லலே. எனக்குப் பிறக்காதுன்னு தோணுது. அப்படித் தோண்றதுக்குக் காரணம் இருக்கும். அப்படி நமக்குக் குழந்தை வேணும்னு தோணினா அப்புறம் பார்ப்போம்..."

ரங்கா அதற்குமேல் இது விஷயமாகப் பேச வேண்டாம் என்று நினைத்துக் கடைசியாகச் சொன்னான்: "நம்ப நாட்டிலே குழந்தை பிறக்கறதுதான் பிரச்னை, இல்லேன்னா பரவாயில்லை. அதுக்காகக் கவலைப்பட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வேண்டாம்."

அவள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

## 3

இந்தப் புதிய வீட்டுக்கு எதிரே ஒரு கோயில் இருக்கிறது. அதிகாலையிலும், மாலை நேரங்களிலும் அங்கே இருந்து ஒலிக்கிற மணியோசை கேட்பதற்குச் சங்கீதம் மாதிரி கல்யாணிக்கு மனசில் ஒரு நிறைவைத் தருகிறது.

தினந்தோறும் அதிகாலையில் அந்தக் கோயிலின் மணியோசை கேட்டுத் துயில் கலைவதும், கண் வழித்தவுடன் பக்கத்தில் தன் மீது கையைக் கிடத்திக் கொண்டு உறங்கும் ரங்காவின் முகத்தைக் காண்பதும், அதன் பிறகு அவனது உறக்கம் கலைந்து விடாமல் அவன் பிடியிலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டு எழுந்து வந்து வெளியலிருக்கும் ரோஜாச் செடிகளையும் மலர்களையும் பார்க்கிற சுகமும் அவளது வாழ்வில் மிகப் புதிய அனுபவமாக இருக்கிறது.

அதே மலர்கள்தான் இப்போது எவ்வளவு புதிதான ஆச்சரியம் போல் பூத்து மகிழ்ச்சியூட்டுகின்றன!

இந்த ரோஜாச் செடிகளைத் தொட்டிகளோடு ஒரு லாரி நிறைய ஏற்றிக் கொண்டு வந்து அவள் இங்கே இறக்கியபோது, அன்றைக்கு ரங்கா சொன்னதை ஆறு மாதத்திற்குப் பிறகு இந்தக் காலைப்போதில், ஒவ்வொரு செடியாகப் பார்த்துக் கொண்டே வருகையில் கல்யாணி நினைத்துக் கொண்டாள்.

புதுக் குடித்தனத்துக்கு மாறும்போது வீட்டிலுள்ள சாமான்களை ஏற்றுவதற்கே இரண்டு லாரிகள் தேவைப்பட்டன. இந்தப் பூந்தொட்டிகளுக்கு மட்டும் தனியே ஒரு லாரி வேண்டியிருந்தது. அந்தச் சாமான்கள் விஷயத்தில் காட்டாத சிரத்தையே அவள் இந்தப் பூந்தொட்டிகளில் காட்டியதையும் அவற்றை ஜாக்கிரதையாகக் கொண்டு வந்து சேர்க்கும்படி அந்த லாரிக்காரர்களிடமும் கூலிக்காரர்களிடமும் அவள் திரும்பத் திரும்பக் கூறியதையும், அந்த அக்கறை வெறும் வாயளவில் அல்ல என்கிற மாதிரி அவற்றை லாரியில் ஏற்றிவிட்டு லாரி வருவதற்கு முன்பாக லாரியுடனே ஒரு டாக்ஸியில் சென்று இந்தப் புதிய வீட்டில் அவற்றை இறக்கித், தானே நேரிடையாக இருந்து அவற்றைச் சீர்ப்படுத்தி வைத்த செய்கையையும் பார்த்தபோது ரங்கா அவளிடம் சிரித்தவாறே சொன்னான்:

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“இது ரொம்பக் ‘காஸ்ட்லி’ ஹாபிதான். பணக்காரர்களுக்குத்தான் கட்டிவரும் நாய் வளர்க்கிற மாதிரி இதுவும் ஒரு ஃபாஷன் போல இருக்கு. எனக்கென்னவோ இது ஒரு விரயம் மாதிரிதான் இருக்கு. இதுக்குப் பதிலா காய்கறித் தோட்டம் போடலாம். அழகுன்னா அது யாருக்கும் பயன்படாம பூபூவாப் போகணுமா என்ன? புல் வளர்க்கிறதும் குரோட்டன்ஸ் வளர்க்கிறதும் பணக்காரர்கள் பணத்தை விரயம் பண்ணத் தங்களுக்கு இருக்கிற வசதியைக் காட்டிக்கறதுக்குத்தான். ‘மகாராஜாஸ்’னு இங்கிலீஷ்லே ஒரு புஸ்தகம் படிச்சேன்: அதிலே இந்த மாதிரி விரயங்களையே ஒரு வாழ்க்கையா எப்படி ஒரு கூட்டம் நம்ம தேசத்துலே நடத்தி இருக்குன்னு நெறைய நெறைய எழுதி இருக்கு... அந்த மாதிரி நம்ப அளவிலே இது ஒரு விரயம்தானே?”ன்னு அவன் கேட்ட போது ஒரு விநாடி உதட்டைக் கடித்துக் கொண்டு கல்யாணி யோசித்தாள்.

அப்போது அவளுக்குக் கல்யாணமாகி-அதாவது அவர்களது உறவு சட்ட ரீதியாகப் பதிவாகி இரண்டு நாட்கள் ஆகி இருந்தன. தனக்கு ரொம்பவும் பிடித்தமான ஒரு காரியத்தைப் பற்றி அவனது இந்த நறுக்கான கருத்துக்களுக்கு அவள் மரியாதை தந்து அதைப்பற்றி யோசித்தாள். தான் ரோஜாச் செடிகள் வளர்ப்பதும் அதற்காகப் பணம் செலவழிப்பதும், அதன் விஷயத்தில் தான் இவ்வளவு அக்கறை காட்டுவதையும் ஒரு மேல்வர்க்க ஃபாஷனைப் பார்த்துக் காப்பியடிக்கிற ஆடம்பரக் காரியமாக-டம்பச் செயலாக இவன் நினைக்கிறானே என்ற வருத்தமும் ஒருவேளை அவன் கூறுவதில் நியாயம் இருக்கிறதோ என்ற சிந்தனையும் அவளை வாயடைக்கச் செய்தன. அவள் மௌனமாய்த் தொட்டிகளைச் சீராக-நர்ஸரிப் பள்ளியில் குழந்தைகளை ஒழுங்குபடுத்தி நிறுத்துகிற மாதிரி-வரிசைப்படுத்தும் காரியத்தில் முனைந்திருந்தாள்.

அந்த மௌனம்தான் அவளது மனசைப் புண்படுத்தி விட்டதற்கு அடையாளமோ என்று துணுக்குற்ற ரங்கா ஒரு ரோஜாவைக் குனிந்து மோந்தவாறே அவளருகே சென்று “என்ன ஒண்ணுமே நீ பதில் சொல்லல்லே? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?” என்று மெதுவான குரலில் கேட்டான்:

அவள் அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள்: “இல்லே, நீங்க சொன்னதைப் பத்தி யோசிச்சுக்கிட்டு இருக்கேன்” என்று சுருக்கமாகச் சொன்னாள்.

அவள் வெகு நேரம் ஒன்றுமே பேசவில்லை. அவள் யோசித்துப் பார்த்தாள். அவளிடம் இப்போது மொத்தம் பதினாறு வகை ரோஜாக்கள் இருக்கின்றன. ஐம்பத்து நான்கு தொட்டிகள் இருக்கின்றன. இருபது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தொட்டிகள் சிமெண்ட்டினால் ஆனவை. மற்றவை பெரிதும் சிறிதுமான மண் தொட்டிகள், சிமெண்ட் தொட்டிகள். ரோஜாக் கன்றோடு சேர்த்து நாற்பது ரூபாயிலும் முப்பது ரூபாய்க்கு குறையாமலும் வாங்கியவை. இவற்றுக்குச் செலவான ரூபாய்களை மட்டும் முதல் தடவையாக இப்போதுதான் கணக்குப் போட்டுப் பார்த்தாள் கல்யாணி.

இந்தச் செடிகளின் ஒவ்வொரு முள்ளும் அவள் பார்த்துப் பார்த்து வளர்ந்தவை. 'அதில் ஒவ்வொரு அரும்பும் மலர்கிற போதெல்லாம் போய்ப் பார்த்துப் பார்த்துப் பரவசமுற்றதெல்லாம் வெறும் டம்பம்தானா? பெரிய பணக்காரர்களின் ஃபாஷனைக் காப்பியடிக்க முயன்ற ஆடம்பரக் காரியம்தானா?' என்று நினைத்தபோது அவள் மனம் அதை உறுதியாக மறுத்தது. அப்படி ஓர் அபவாதம் இந்த மென்மை உணர்ச்சியின் மீது சுமத்தப்பட்டதை எண்ணியபோது அவளுக்குக் கண்கள் கூடக் கலங்கிப் போயின.

பிறகு அவள் அவனிடம், அவனது கருத்தை மறுத்துக் கூறப்போகிறோம் என்ற ஜாக்கிரதை உணர்ச்சியுடன் ஒரு புன்னகையோடும் மிகவும் நளினமாகக் கூறினாள்.

"பூச்செடி வளர்க்கறதை ஒரு டம்பத்துக்காகச் செய்யறவங்க இருக்கலாம்: நான் இல்லேன்னு சொல்லலே...அது உண்மையிலே எவ்வளவு ஆனந்தமான காரியம்னு ஒரு புல்லையாவது வளர்த்துப் பார்த்தால்தான் புரியும். கத்திரிக்காய்ச் செடியும் வைக்கத்தான் வேணும். ஆனால் கத்தரிக்காயை விட ரோஜா அழகு இல்லையா?... நான் சொல்றேனே. இப்ப எனக்கு இவ்வளவு அதிகமான அளவிலே செடி வளர்க்க முடியுது, அதுக்கான வசதியான சூழ்நிலை இருக்கு. செய்யுறேன். இதுவே போதாது, இன்னும் எத்தனையோ வகைகள் வெச்சுக்க வேணும்னு ஆசைப்படறேன்...ஆனா அது வசதி இருக்கிறதனாலே ஏற்படற டம்பம் இல்லே. உங்களோடு ஒரு சின்ன ஓலைக் குடிசையிலே இருந்து கூழ் குடிக்கிற வாழ்க்கை எனக்கு ஏற்பட்டிருந்தாலும் அங்கே ஒரு சின்னத் தொட்டியிலே தகர டப்பாவிலேயாவது ஒரு பூச்செடி வெச்சு வளர்க்கிறதிலே நான் சந்தோஷப்படுவேன்

"அது ஒவ்வொரு நாளும் ஒரு இலை விடறதும், மொக்கு விடறதும் அரும்பாவதும், அரும்பு மலருகிறதும்... இது விரயம்னா வாழ்க்கையே ஒரு விரயம். கத்திரிக்காய்கூட விரயம்தான். மனுஷ வாழ்க்கையே விரயம்தான்... காசு பணம்னு கணக்குப் போட்டாக்கூட இதிலேயும் பெரிய வியாபாரம் நடக்குது. போன மாசம் நம்ம வீட்டிலே மட்டும் நூறு ரூபாய்க்குப் பூ வித்திருக்கா பட்டம்மா-" என்று அவனது தவறான

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அபிப்பிராயத்தை மாற்றுகிற விதமாகத் தான் பதில் சொல்லிவிட்ட மகிழ்ச்சியில் அவன் கை நிறைய ரோஜா மலர்களைப் பறித்துத் தந்தாள் கல்யாணி.

விரலிடுக்கில் புகைகிற சிகரட்டோடு அவற்றை வாங்கிக் கைப்பிடிச் சுவரின்மீது வைத்தபின், ஆழ்ந்த யோசனையோடு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு நின்றான் ரங்கா.

அவனுக்கும் இன்னமும் தான் சொன்னதுதான் சரி என்று தோன்றியது. ஒருவேளை இவனுக்கு இந்த ரோஜாக்களின் மீது பொறாமையோ என்று கூடக் கல்யாணி யோசித்தாள். அப்படி யோசிக்கும்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

ஆனால், ரங்கா தனது பிடிவாதத்துடன் சொன்னான். “நம்ம நாட்டுக்கு இப்ப அவசியமான தேவை ரோஜாவும், குரோட்டன்ஸீம் இல்லே. கத்திரிக்காயும், கடலைக் கொட்டையும், கம்பும் நெல்லும்தான். கோதுமைக்கும் அரிசிக்கும் உலகம் பூராவும் கையேந்தற தேசத்திலே நாம் வாழறோம். இங்கே இதெல்லாம் வளர்க்கறதும், இதுக்குப் பணத்தை வாரி இறைக்கறதும் குற்றம்னும் பாவம்னும் எனக்குத் தோணுது” என்று பிரசங்கம் செய்கிறவன் மாதிரி அவன் பேசினது, அவளுக்கு நாடகத்தில் வருகிற வசனத்தை ஒரு நடிகன் ஒத்திகை பார்த்துக் கொள்கிற மாதிரி தோன்றியது.

அவள் சிரித்து விட்டாள். மனசிற்குள் அவனைப் பற்றி மிகவும் பெருமையாகத்தான் இருந்தது. அவன் எந்த அளவுக்குச் சாதாரண, சின்னச்சின்ன விஷயங்களைக்கூட மிகவும் ஆழமாக யோசிக்கிறவன் என்று நினைத்து அவனைப் பாராட்டுகிற மாதிரிதான் அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனுக்கு எப்படிப் புரிந்ததோ?

”நீங்க என்னமோ இந்த ரோஜாவெல்லாம் வீணாப் போறதா நெனைச்சுக்கிட்டு இருக்கீங்க? நம்ப பட்டம்மா ஏகப்பட்ட பணம் சேத்து வெச்சிருக்க இந்த ரோஜாப் பூவாலே.... இந்தத் தொட்டி செய்யறவங்க, மாலை கட்டறவங்க எல்லாம் இதை நம்பித்தான் வாழறாங்க. மனுஷங்க எல்லாரும்தான் சாப்பிடறோம். அதுக்காக எல்லாரும் சாப்பிடற பொருளை மட்டுமா உற்பத்தி செய்ய முடியும்? அப்படின்னா நான் ஏன் நாடகம் போடணும்? நீங்க ஏன் பத்திரிகையிலே விமரிசனம் எழுதணும்?... உங்களுக்கு என்னமோ இது மேலே காரணமில்லாத கோவம்... அந்த ‘மகாராஜாஸ்’ங்கற புஸ்தகத்தைப் படிச்சதனாலே இருக்கும். மண்ணிலே மொளைக்கிறது எதுவுமே குற்றமோ பாவமோ

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இல்லே. நம்ப மனசிலே மொளைக்கறதுதான் குற்றமும், பாவமும்…” என்று அவள் பேசுவதைக் கேட்டபோது அவள் தன்னிடம் எந்த அளவுக்கு அடிப்படையில் முரண்படுகிறாள் என்று புரிந்து கொண்டு மன உறுத்தலுக்கு ஆளானான் ரங்கா.

அவன் தன் கருத்தை மாற்றிக்கொள்ளவே இல்லை. இந்த ரோஜா வளர்ப்பில் கல்யாணிக்கு இருக்கிற மகிழ்ச்சியும் சந்தோஷமும் அவனுக்குப் புரிந்தாலும், இது விஷயத்தில் அவள் காட்டுகிற பரவசம் ஒரு ‘மேல்வர்க்க இரவல்’ என்றே அவன் கருதினான்.

இது ஒரு ‘ஸ்நாபரி’ என்கிற தீர்மானத்தை அவனால் மாற்றிக்கொள்ள முடியவில்லை. இந்தப் பிரிவில் அவன் ஒரு பெரிய அட்டவணையே வைத்திருந்தான். நாய் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கிரிக்கெட் காமெண்ட்ரி கேட்டல், பெரிமாஸன் நாவல்கள் இத்தியாதி விஷயங்களின்மீது அவனுக்கு இவ்வகை அருவருப்பு உண்டு. ஏன்? நமது திருவிழாக்கள், பண்டிகை ஆடம்பரங்கள் அரசாங்க வைபவங்கள் இவற்றையெல்லாம்கூட அவனால் இந்த வெளிச்சத்தில் தான் பார்க்க முடியும்…

எனவே அவனால் தன்னுடைய மனைவியின் ரசனை என்பதனால் இதை ஏற்றுக்கொண்டு இவை எல்லாவற்றையும் பற்றிய – தனது வெகு காலமாய் வளர்ந்துவிட்ட தீர்மானங்களை மாற்றிக் கொள்ள இயலவில்லை.

கடைசியில் அவர்கள் இருவரும் இதைப்பற்றிப் பேசுவதையே நிறுத்திக் கொண்டார்கள்.

தான் இவளுக்காகச் சுற்றம், குழந்தை, உடமைகள், புத்தகங்கள் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு வந்ததையும், இவள் ஒரு ரோஜாச் செடியைக்கூட விடாமல், வேர் பதிந்த செடிகளைக் கூடப் பிடுங்கிக்கொண்டு வந்து இங்கு நடுகின்ற செயலையும் விபரீதமாகப் புரிந்து கொண்ட ரங்கா, அதுபற்றிய தனது உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தான்.

கல்யாணிக்கும், ரங்காவுக்கும் இடையே எழுந்த முதல் முரண்பாடு இந்த ரோஜாச் செடிகளை வைத்து உருவாயிற்று. அவள் இதற்காக வருத்தப்படவில்லை. தன்மீது அவன் வருத்தம் கொண்டிருப்பதாக நினைக்கவுமில்லை. ஆனாலும் ரோஜா மலரைப் பார்க்கும் போதெல்லாம் ரங்காவின் பேச்சை அவள் நினைத்துக் கொள்வாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கோயில் மணி நிதானமாக அடித்து அப்போதுதான் ஓய்ந்திருந்தது. கடைசி மணியோசையின் நாதரீங்காரம் ஓயுமுன் பால்காரனின் சைக்கிள் மணிச் சப்தம் கேட்டது.

புதிதாக அரும்பிய மொட்டுகளையும், நேற்று மொட்டாக இருந்து இன்று முகிழ்த்த மலர்களையும், பதியன்களையும் பதியன்களுக்காக வெட்டிய கட்டைகள் காய்ந்து விடாமல் மருதாணி அணிந்த விரல்கள் மாதிரி சாணி பதித்த கிளைகளையும் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி, பால்காரனின் சைக்கிள் மணி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் ‘கேட்’டைக் கடந்து உள்ளே வந்து கொண்டிருந்தான். கல்யாணி உள்ளே ஓடிப் பால் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து பால் வாங்கினாள்.

இப்போது பட்டம்மாள் இங்கு இவளுடன் இல்லை. அவளுக்கும், தபலா தாமுவுக்கும் போன மாதம்தான் கல்யாணியும்-ரங்காவும் முனைந்து நின்று அவள் தாயின் எதிர்ப்பைச் சரிக்கட்டிக் கல்யாணம் செய்து தனிக்குடித்தனம் வைத்தார்கள்.

இப்போது சமையல் வேலைகளைக்கூடக் கல்யாணியே தான் செய்கிறாள். வீட்டு வேலைகளுக்காக ஒரு வேலைக்காரியும், தோட்ட வேலைகளுக்காக ஒரு கிழவனையும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாள்.

அவர்கள் வேலைக்கு வர எட்டு மணியாகும்.

பாலை வாங்கிக் கொண்டு அடுக்களைக்குப் போய்க் காப்பி போடுவதற்காக அடுப்புப் பற்ற வைத்தபோது கல்யாணி பட்டம்மாளை நினைத்துக் கொண்டாள். இன்று மாலை இவளுக்கு நாடகம் இருக்கிறது. மத்தியானம் ஒத்திகைக்கு வந்துவிடுவார்கள். எனவே இரவுக்கும் சேர்த்து இப்போதே எல்லா வேலைகளையும் செய்து முடிக்கவேண்டும். இது மாதிரி வேலை குவிந்து விடுகிற போது கல்யாணி அடிக்கடி பட்டம்மாளை நினைத்துக் கொள்வாள்.

ஏதோ விளையாட்டாகத் தாமுவை இவள் சந்தித்துப் பேசிக்கொண்டு இருக்கிறாள் என்று அண்ணாசாமி சொன்னதைத் தானும் நம்பியதையும், ஆனால் அவள் அந்த விஷயத்தில் எவ்வளவு உறுதியாக, உண்மையாக, புனிதமாக, உயர்வாக இருந்தாள் என்பதை ரங்கா அடிக்கடி கூறிப் பெருமைப்படுவதையும் கல்யாணி நினைத்துக் கொண்டாள்.

பட்டம்மாளின் தாய் சுந்தரவல்லி அம்மாளுக்கு விஷயத்தை விளக்கிக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி கடுதாசி போட்டிருந்தாள். அவ்வளவுதான், அவள் துவஜம் கட்டிக்கொண்டு வந்து விட்டாளே யுத்தத்துக்கு!

அன்றைக்கு இந்த வீட்டு ஹாலில் ஒரு நீதிமன்றம் மாதிரி எல்லோரும் கூடி இருந்தார்கள்.

அண்ணாசாமியும், ரங்காவும், கல்யாணியும், தாமுவும் பட்டம்மாவும் எல்லோரும் ஒரு கட்சியாக நின்றும், அந்தச் சுந்தரவல்லி ஒரு கை பார்த்துத்தான் விட்டாள்.

அண்ணாசாமி பாதியில் அவள் பக்கம் சாய்ந்து விட்டார்.

"பெத்தவளுக்கு விருப்பம் இல்லேன்னா நாம் என்ன செய்ய முடியும்? கல்யாணி! நமக்கென்ன? தாயாரோட கொழந்தையே அனுப்பிவெச்சுடு" என்று சொல்லிவிட்டு அவர் எழுந்திருந்து துண்டை உதறிக்கொண்டு எல்லோரையும் காலைவாரி விட்டதை நினைத்தபோது கல்யாணிக்கு இப்போது கூடச் சிரிப்பு வந்தது.

"என்ன, தனியாக சிரிச்சிக்கிட்டு இருக்கே?" என்று கேட்டவாறு படுக்கையிலிருந்து எழுந்து நேரே காப்பிக்காக அடுக்களைக்கு வந்த ரங்கா, கல்யாணியைக் கேட்டான்.

"அன்னிக்குப் பட்டம்மாள் விஷயமாகப் பேசினப்ப நம்ப ஐயர் திடீர்னு எங்க சித்தியோட சேர்ந்துக்கிட்டதை நினைச்சுக்கிட்டேன்" என்றாள் கல்யாணி.

ரங்கா அந்தக் காதலர்களை, அவர்களின் தூய்மையான உயிரினும் மேலாக அவர்கள் கருதுகிற அந்தக் காதலை எண்ணிப் பெருமூச்செறிந்தான்.

ரங்காவைக் கல்யாணி கல்யாணம் செய்துகொண்ட விஷயம் சுந்தரவல்லி அம்மாளுக்கு முன்னாலேயே தெரிவிக்கப்பட்டிருந்தது. அவளும் ஆசிர்வாதம் செய்து அதற்குப் பதிலெழுதி இருந்தாள்.

இப்போது பட்டம்மாளைப் பற்றிய சேதி தெரிந்ததும் அடித்துப் புரண்டு வந்த சுந்தரவல்லி அம்மாள், தான் அவளுக்கு ரொம்பப் பெரிய இடத்திலேயே சம்பந்தத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவும், 'இப்படியெல்லாம் ஆகுமென்று தெரிந்திருந்தால் இங்கே விட்டிருக்க மாட்டேனே' என்றும் பெரிசாகப் பிரலாபித்தாள். தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாகக் கருதி ரங்காவிடம் நியாயம் தீர்த்துப் பெண்ணைத் தன்னுடன் கூட்டியனுப்ப வேண்டுமென்றும் அவள் கெஞ்சினாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்காதான் பையனை இவளும் பார்க்கட்டும் என்பதற்காகத் தாமுவை வரச்சொல்லி இருந்தான். அவன் ஒன்றுமே பேசாமல் வந்து தலைகுனிந்து ஒரு புறம் நின்றிருந்தான்.

கல்யாணி சொன்னாள்: "இப்போ ஒண்ணும் ஆயிடலே. பட்டு அவனைப் பார்த்து ஆசைப்பட்டு இருக்கா. அவனும் அவ மேலே ஆசைப்பட்டு இருக்கான். இதோ இந்த வீட்டுக்கு வர போற பழக்கம் உள்ள நம்ப பையன் தானேன்னு அவங்க பேசிக்கறதையோ, பரிகாசம் பண்ணிக்கறதையோ நான் நெனைக்கலே. அவ்வளவுதான் விஷயம். ஏதோ நல்லபடியா-ரெண்டு பேருக்கும் மனசு புடிச்சி இருக்கிறதனாலே, நீயும் சம்மதிச்சா முடிச்சு வச்சிடலாம்னுதான் உன்னை வரவழைச்சேன். உனக்கு இஷ்டமில்லேன்னா ஐயரு சொல்றமாதிரி நாங்களா கட்டாயப்படுத்த முடியும்? உன் பொண்ணாச்சு நீயாச்சு. நாளைக்கே கூட்டிக்கிட்டுப் போயி நீ பாக்கற பெரிய இடத்திலேயே தாராளமா முடிச்சுக்கோ. என்னங்க, நான் சொல்றது" என்று ரங்காவிடம் அபிப்பிராயம் கேட்டாள்.

"இதைப்பத்தி நீ என்ன நினைக்கறே? முடிக்கலாமா, கூடாதான்னு சொல்லு – பையன் எப்படி – உனக்கு சம்மதந்தானான்னு சொல்லு. அதுக்கப்புறம் அவுங்க இஷ்டப்படி முடிவு செய்யட்டும்" என்று அவள் வாயைக் கிளறினான் ரங்கா.

அப்போது கல்யாணி சொன்னாள்: "நம்ப அபிப்பிராயமும் யோசனையும் யாருக்கு உதவும்? நான் ஒண்ணும் இன்னொருத்தருக்கு யோசனை சொல்கிற மாதிரி இல்லேன்னு ஏதாவது பேசிடுவாங்கன்னுதான் நான் இந்த மட்டோடு நிறுத்திக்கிட்டேன்" என்று எல்லார் முன்னிலையிலும் வெட்டென்று கூறினாள்.

அதன் பிறகு, ரங்கா பட்டம்மாளைப் பார்த்துக் கேட்டான்: "இந்தா பட்டு! இங்கா பாரு-தலையைக் குனிஞ்சிக்கினே இருந்தா எப்படி. உங்க அம்மா சொல்றமாதிரி அவுங்க கூடப்போயி அவங்க சொல்றபடிக் கேளு-நீ என்ன செய்ய முடியும்?"

அவன் சொல்லி முடிக்குமுன் அவள் தலை நிமிர்ந்து எல்லாரையும் பார்த்துவிட்டுக் கல்யாணியிடம் உறுதியாகவும் தைரியமாகவும் சொன்னாள்.

"அக்கா, நீயாவது உறுதியா எனக்கு ஆதரவா இருப்பேன்னு பார்த்தேன். எல்லாரும் சேர்ந்து என்னை அனுப்புறதுன்னு முடிவு பண்ணிட்டீங்கன்னா நான் ஒண்ணும் அதுக்காக உங்களுக்கெல்லாம் தெரியாமல் அவரோட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஓடிட மாட்டேன். ஓட முடியாதுன்னு இல்லே. அப்பிடியெல்லாம், பார்க்கறவங்க சிரிக்கும்படியா நடந்துக்கறதில்லேன்னு நாங்க பேசி முடிவு பண்ணிக்கிட்டிருக்கோம். ஆனா அம்மா பார்த்து முடிக்கிற பெரிய இடத்திலே சம்பந்தம் பண்ணிக்கறதுக்கு நான் உசிரோட இருக்கமாட்டேன். நீ வேணும்னா பாரு. இன்னக்கிப் போறேன். ரெண்டு நாளுலே கடுதாசி வரும் - பட்டம்மாள் ஒரேயடியாப் போயிட்டாள்னு…” – இதைச் சொல்லும்போது அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது பாவம்! தாமு முகத்தை மூடிக் கொண்டு விக்கி விக்கி அழுதான். ரங்காவுக்குக்கூடக் கண்கலங்கி விட்டது. அண்ணாசாமி மூக்குக் கண்ணாடியைக் கொண்டு மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

கல்யாணி, பட்டம்மாளின் அருகே சென்று அவள் தோளை இறுகப் பற்றினாள்.

சுந்தரவல்லி அம்மாள் வாயடைத்துப்போய்ச் சிலையாய்த் தரையில் உட்கார்ந்து மௌனமாய் அழுதாள்.

அந்த அளவில் எல்லாரும் கலைந்தார்கள். தாமுவைத் தனியே அழைத்துச் சென்று “இந்தக் கல்யாணம் நிச்சம்ய நடக்கும். நீ கவலைப்படாமல் தைரியமாய் இரு” என்று அவனுக்குத் திடம் தந்தான் ரங்கா.

கல்யாணி சுந்தரவல்லி அம்மாளிடம் அவள் பிடிவாதத்தை விடும்படித் தனிமையில் அந்தரங்கமாக நீண்ட நேரம் பேசினாள்.

-கல்யாணியைத் தவிர மற்ற எல்லாருக்குமே தாமு உறவைக் கத்தரித்தால், பட்டம்மாள் தற்கொலை செய்து கொண்டு விடுவாள் என்று உள்ளூரத் தோன்றியது. அவள் முகபாவமும், அதை அவள் சொன்னவிதமும் இது பொய்யல்ல: இவள் அப்படிச் செய்வாள் என்ற அச்சத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது.

பட்டம்மாளின் தூயமனத்தையும், உறுதியான காதலையும் சொல்லிச் சொல்லிப் பாராட்டினான் ரங்கா.

இப்போது கையில் காப்பித் தம்ளரை வைத்துக் கொண்டு அவன் அவர்களை எண்ணி நிறைவோடு விட்ட பெருமூச்சுக்குப் பின்னால் உள்ள அவனது நினைவுகளை உணர்ந்தாள் கல்யாணி. தாமுக்கும் பட்டம்மாளுக்கும் திருப்பதியில் கல்யாணம் ரொம்ப விமரிசையாக நடந்தது.

தாலிகூடக் கட்டாமல், யாருக்கும் ஒரு வேளை சாப்பாடுகூடப் போடாமல்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்ட கல்யாணி-ரங்கா தம்பதியினர் அந்த கல்யாணத்தையே முன்நின்று நடத்தியதைப் பார்த்து அண்ணாசாமி ரொம்பக் கேலி செய்தார்:

"மிஸ்டர் ரங்கா! இந்தாம்மா கல்யாணி, நீங்க எங்களுக்குத்தான் விருந்து சாப்பாடு தரலே.... நீங்களாவது எங்காத்துக்கு வந்து விருந்து சாப்பிடப்படாதோ? அன்னிக்கே ஏற்பாடு பண்ணணும்னு இருந்தேன். வாண்டாம்னு சொல்லிட்டீங்க. இப்ப இந்தக் கல்யாணத்தை முடிச்சுண்டு ஊருக்குப் போனதும் நாளைக்கு நம்ப ஆத்திலே விருந்துக்கு வந்துடணும். கல்யாணி! இனிமே உன் பொறுப்பு. வரலையோ அப்புறம் நான் உங்க வீட்டுப் பக்கம்கூட வரமாட்டேன். அப்புறம் நான் கோவிச்சுண்டுடுவேனாம்!" என்று சொல்லி வைத்திருந்தார்.

அண்ணாசாமி வீட்டுக்கு விருந்துக்குப் போய்விட்டு வந்த அன்றுதான் கல்யாணிக்கும் ரங்காவுக்கும் இடையே ரோஜாச் செடியில் ஆரம்பித்த முரண்பாடு-அது ஒன்று மட்டுமல்ல என்கிறமாதிரி தொகை தொகையாய் பெருகலாயிற்று...

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், ரங்கா, பட்டம்மாளின் காதல்நெஞ்சத்தின் உறுதியைப் பற்றியும், உயர்வைப் பற்றியும் மிகவும் பாராட்டிப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

வெகு நேரம் அமைதியாக அவன் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டே சாப்பிட்டாள் கல்யாணி.

காதல் என்பது பற்றியும், ஒருவருக்காக மற்றொருவர் தியாகம் செய்வது என்பது பற்றியும் இவனுக்கு இவ்வளவு தூரம் 'ஸென்ட்டிமென்ட்டலாக'-உணர்ச்சி வசமான கருத்துக்கள் கிடையாது என்று கருதிக் கொண்டிருந்த அவளுக்குச் சமீப காலமாக இவன் பேசி வருவதைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

ரோஜாச் செடி வளர்ப்பதையும், ஒரு நாளை அன்பு காட்டிக் கொஞ்சுவதையும் டம்பம் என்று நகைக்கிற வறட்டு அரசியல்வாதியான இவனுக்குக் காதல் என்கிற இந்த அசட்டுத்தனம் உயர்வாகப் போனது இவனது இயல்புக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றியது அவளுக்கு.

எனவே அவள் சொன்னாள்: "நீங்கள் இப்படிப் பேசறது எனக்கு ஆச்சரியமா இருக்கு. எங்க நாடகங்களிலே இப்படி ஒரு சீன் வந்தா நீங்க அதை எப்படி நய்யி நய்யினு நச்சி விமரிசனம் எழுதுவீங்க! இந்தப் பட்டம்மா காதலும் எனக்கு அப்படித்தான் ஒரு 'மெலோ டிராமா'வா

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கு. அந்த வயசிலே எல்லோருக்கும் அப்படித் தோணும். யாரும் அதுக்காகச் சாகறதும் இல்லே: அப்படிச் சாகறது புத்திசாலித்தனமுமில்லே."

கல்யாணி சொன்னது அவனுடைய அறிவுக்கு ஒத்திருந்த போதிலும், அதே மாதிரி ஒரு வாதத்தை அவனே செய்யக் கூடியவன்தான் என்றாலும், அவனிடமிருந்தே இது மாதிரி அவள் பேசக் கற்றுக்கொண்டாள் எனினும் இப்போது அவள் தன்னை மறுத்துப் பேசியதில் கொஞ்சம் மனம் சிணுங்கிக் கொண்டான் ரங்கா. ஆனாலும் அந்தச் சிணுங்கலை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவன் பேசினான்.

“நீயும் ஒரு பெண். பட்டுவின் மனசு உனக்குத் தெரியணும். இந்த மாதிரி உணர்ச்சியிலே அவங்களை மாதிரி ஜோடிகள் தற்கொலை செய்து கொள்கிறதை மனிதாபிமானத்தோட பார்க்கணும். அது அனுதாபத்துக்குரியது இல்லையா? அந்த மாதிரி எல்லாராலேயும் இருக்க முடியுமா? அந்த உணர்ச்சிகளைக் கௌரவிக்க வேணும்னு நெனைக்கறேன் நான்" என்றான்.

கல்யாணி அத்துடன் ஏனோ விடுவதாக இல்லை. அண்ணாசாமி மௌனமாக இவர்கள் வாதத்தைக் கவனித்துக்கொண்டு சாப்பிட்டார். அவருடைய பெண் பரிமாறினாள். அண்ணாசாமியின் மனைவி விருந்தை மட்டுமே கவனித்து உள்ளேயிருந்து மகளுக்கு ‘இதைக் கொண்டுபோய், இன்னும் கொஞ்சம் வேணுமான்னு கேளு" என்று யோசனை சொல்லிக் கொண்டிருந்தாள். இவர்கள் வாதத்தை அவள் கவனிக்கவில்லை.

கல்யாணி சொன்னாள்: “தாமு நல்ல பையன். இது நல்ல சம்பந்தம்தான்னு நான் ஒப்புத்துக்கிட்டேனே ஒழிய இவள் செத்துப் போறேன்னு காட்டின பூச்சாண்டிக்குப் பயந்தில்லே. அப்ப அவ சொன்னது நிஜமாகவே இருக்கலாம். ஆனால், இதுக்காக எல்லாம் அவ செத்துடமாட்டாள்னு எனக்குத் தெரியும். கொஞ்ச நாள்லே எல்லாம் சரியாகி இருக்கும். எங்க சித்தி இருக்குதே அது படபடன்னு இருக்கும். மகள் செத்துப் போயிடுவாளோன்னு பயம் வந்தவுடனே ஒரேயடியா விழுந்துட்டுது- பட்டுவுக்கு அம்மாவைக் கடைசியா எப்படிப் பணிய வைக்கறதுன்னு தெரிஞ்சிருக்குது. அவ கெட்டிக்காரி. காதலாவது? கத்திரிக்காயாவது?" என்று சிரித்தாள் கல்யாணி.

ரங்கா ஒரு கைத்த சிரிப்புடன் சொன்னான்: “நீ உன்னை வெச்சே உலகத்தைப் பார்க்கறே. அந்த மனோநிலையைப் புரிஞ்சுக்கவே ஒரு மனம் வேணும். உனக்கு அந்த மனசு இல்லே."

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“நான் அதைப் புரிஞ்சுதான் சொல்றேன். அந்த மனோநிலையெல்லாம் மாறும். அதுக்காக உயிரை விட்டுடலாம்னு கூடத் தோணும். அப்படித் தோணறதனாலேயே அது மாறும். அப்படி யாரும் உசிரை விட்டுடறேன்னு சொல்லிக்கிட்டு விடறதில்லே: விடறதும் சரியில்லேங்கறது வேற விஷயம்” என்று தனது தீர்மானத்தை அவள் உறுதியாகச் சொன்னாள்.

“அப்படியெல்லாம் உசிரை விடறாளோ இல்லையோ.... உயிரை விடறேன்னு சொல்கிற மனநிலை இருக்கே, அதுக்குப் பேர் தான் காதல்” என்றார் அண்ணாசாமி கடைசியாக.

அண்ணாசாமி வீட்டு விருந்தின்போது நடந்த விவாதத்தைக் கல்யாணி அங்கேயே மறந்துவிட்டாள்.

கல்யாணி மிகுந்த சுதந்திரத்தோடும், மகிழ்ச்சியோடும், இவனது உடனிருப்பால் பெருமையோடும், இவனோடு விவாதம் செய்வதில் பெருமிதத்தோடும் தன்னை மறந்த ஆனந்தத்தில் மிதந்துகொண்டு பேசுவதால் அந்த அனுபவத்தோடு அந்தப் பேச்சுக்களும் மகிழ்ச்சியில் கலந்து இழைந்து விடுகிறதே அல்லாமல் அது எங்கேயும் நினைவில் உறுத்திக்கொண்டு நிற்பதில்லை.

ஆனால், ரங்காவோ வீட்டுக்கு வந்த பின்பும் அது பற்றியே நினைத்துக்கொண்டு இருந்தான். அவன் மனம் ஏனோ கலங்கியும் குழம்பியும் இருந்தது.

கல்யாணியைப்பற்றி மிகவும் ஆழமாக அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்: ‘இவள் ஒரு ரசிகை. இவள் ஒரு கலைஞை. இவள் ஒரு ரோஜாப் பூவை எப்படி நேசிக்கிறாளோ அதுபோல, தனது அழகையும் மேக்கப்பையும் நாடகத்தையும் நடிப்பையும் எப்படியெல்லாம் ‘தனது சந்தோஷம்’ என்கிற ஒன்றை அடிப்படையாயும் லட்சியமாயும் கொண்டு விரும்பிப் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறாளோ, அது போலவேதான் என்னையும் தன் வாழ்க்கையின் துணையாகக் கொண்டிருக்கிறாள்’ என்று நினைத்த ரங்கா, ‘அதில் என்ன தவறு?’ என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

‘அவ்வளவுதானா வாழ்க்கை? அவ்வளவுதானா மனித நேசம்? ஒருத்தி தன்னுடைய மகிழ்ச்சிக்காக, தன்னுடைய விருப்பத்துக்காக, தான் சுவாதீனம் கொள்கிற பொருள்கள் உடைமைகள் போல் ஒரு மனித உறவையும் ஏற்படுத்திக் கொள்வது நேர்மைதானா?’ என்று அவன் தன்னைத்தானே, அவளுக்காகப் பரிந்து நினைத்த தனது நினைப்பையே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

திருப்பிக் கேட்டுக்கொண்டான்.

‘இந்த வசதியான உடன்படிக்கைக்குக் காதல் என்று பெயர் சொல்லுவதா? இது வெறும் வியாபார ஒப்பந்தம் மாதிரியானது அல்லவா? இதைவிட நம்முடைய பழைய முறையான வாழ்க்கைப் பிணைப்பு எவ்வளவோ உயர்வானது ஆயிற்றே?’ என்று அவன் யோசித்தான்.

‘அந்தத் தாமுவின் பொருட்டு, பட்டு உயிரையே விடுவதற்குச் சித்தமானாளோ, அது-எவ்வளவு பேதைமையானது எனினும், அந்தத் தியாகமும், அந்த உறுதியும், அந்தப் பிடிவாதமும்தான் காதல். அது வெறும் சுயவிருப்பின், சுயநலத்தின், பரஸ்பர சௌகரியத்தின் மேல் எழுந்த உடன்படிக்கை அல்ல. அந்த மாதிரி உணர்ச்சி எல்லாருக்கும் வருவதுமில்லை.... எல்லாருக்கும் கிட்டுவதுமில்லை’ என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான் ரங்கா.

அவன் கல்யாணியோடு பேசிச் சிரித்து மகிழ்ந்து இருந்தாலும், அடிக்கடி ஆழ்ந்த சிந்தனையிலும் நீண்ட பெருமூச்சுகளிலும் ஆழ்ந்து போனான். விருந்துக்குப் போய் விட்டு வந்த அன்று இரவு படுக்கையில் மல்லாந்து படுத்து யோசித்துக் கொண்டிருந்தான் ரங்கா.

கல்யாணி வெற்றிலை போட்டுக்கொண்டாள். அண்ணாசாமி இல்லாதபோது அவள் புகையிலை போடுவதில்லை. சில சமயங்களில் அண்ணாசாமி இல்லாத போது புகையிலை போட்டாலும் இவன் இருக்கும்போது போடுவதில்லை. அதற்கு இரண்டு காரணம்: இவனுக்குப் புகையிலைப் பழக்கம் இல்லாதது ஒன்று. புகையிலை போட்டுக் கொண்டால் இவனுடன் பேச முடியாமல் போவது இன்னொன்று.

ஆனால் இன்று ரங்கா இவளிடம் பேசவில்லை. மௌனமாகப் படுத்துத் தலைக்கு மேலே சுழல்கின்ற ஃபேனை-அதில் உள்ள நிக்கல் பிளேட்டில் தெரிகிற தனது உருவத்தை – அந்த இரட்டைக் கட்டிலின் மீது கிடந்த பச்சை விரிப்பில் ஒரு பொம்மை மாதிரி சிறிதாகத் தெரியும் - தன் பிம்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் கழித்துக் கல்யாணியும் வந்து அவன் பக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

அவன் எதைக் குறித்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கி இருக்கிறான் என்று அவளுக்குத் தெரியாதாகையால் மிகுந்த ஸ்வாதீனத்துடன்அவன் மார்பின்மீது சாய்ந்து அவன் காதில் ரகசியம் போல் கேட்டாள்:

“என்ன யோசனை?”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“மத்தியானம் பேசிக்கிட்டிருந்தோமே, அதைப் பத்தி யோசிக்கிறேன்.”

“மத்தியானம் என்னத்தைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தோம்?” என்று உதட்டைக் கடித்துக்கொண்டு யோசித்தாள் கல்யாணி.

அதுவே ஒரு நடிப்பு போலவும், அவளுக்கு நிச்சயம் அது ஞாபகமிருக்கும் என்றும், வேண்டுமென்றே தனது எண்ணங்களைச் சாமான்யமாகத் தட்டிக் கழிக்கிற தோரணையில் அவள் இப்போது இப்படி மறந்துவிட்டது மாதிரி கேட்கிறாள் என்றும் அவன் நினைத்தான். எனவே அவளுக்கு அதை நினைவூட்ட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை: மௌனமாய் வாய் திறவாமல் இருந்தான்.

“சொல்லுங்க... என்ன பேசினோம்...?” என்று கொஞ்சலாக அவன் மோவாயை அவள் திருப்பினாள்.

“ம் காதலைப் பற்றி...” என்று அவள் இரண்டு மூன்று முறை கேட்டபின் கூறினான் ரங்கா.

கல்யாணி அவனை இறுக அணைத்துக்கொண்டு அவன் பிடரி கிளுகிளுக்கிற மாதிரி சிரித்தாள். பிறகு அவனை முத்தமிட்டுக் கொண்டே-ஒவ்வொரு வார்த்தைக்கு ஒவ்வொரு முத்தமாகச் சொன்னாள்!

“காதலைப்பத்தி-பேசறதுக்கு-நமக்கென்ன இருக்கு? –நாமதான் காதல்-செய்கிறோமே!-காதல்-பேசிப் புரியறதா, என்ன?-என்னத்துக்காம்-வெறும்-பேச்சு?-ம்...ம்... சொல்லித் தெரிவதில்லை...” என்று அவள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசியவாறு குவிந்த இதழோடு தன்னை நெறுக்கியும் நெருங்கியும் முத்தமிட்டுக் கொண்டிருக்கையில் அவன் அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, தீர்க்கமாக அவள் வழிகளின் உள்ளே கூர்ந்து பார்த்தவாறு கேட்டான்: “நீ நெஜமாகவே என்னைக் காதலிக்கிறயா? உனக்குக் காதல்னா என்னன்னு தெரியுமா?”

அந்தக் குத்தலான கேள்வியைக்கூட அவள் தப்பாகப் புரிந்து கொள்ளவில்லை. அந்தக் கேள்விக்கு அவள் வார்த்தைகளால் பதில் சொல்லவில்லை.

“காபி ஆறிப் போகுது. காப்பித் தம்ளரைக் கையிலே வெச்சுக்கிட்டு, காப்பியைக் கூடக் குடிக்காமல் என்ன யோசனை?” என்று அவனருகே நெருக்கமாக-டைனிங் டேபிளின் பக்கம் கிடந்த நாற்காலிகளில் ஒன்றை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு ரங்காவின் தோளைத் தொட்டாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வெறும் பனியன் அணிந்த அவனது திறந்த தோளை அவள் ஆதரவாக வருடித் தலையைச் சாய்த்து அவன் பிடரியில் மோவாய் பதித்துக் காதுமடலைத் தனது உதடுகள் ஸ்பரிசிக்க மீண்டும் கேட்டாள். “ம்…. என்ன யோசனை?”

தன் தோள்மீது கிடந்த அவள் கரத்தை அவன் இறுகப் பற்றினான். அவளறியாமல் தன்னுள்ளே கிடந்து மறுகும் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ள அவன் வெட்கமுற்றான்: அந்த உணர்ச்சிகளுக்குத் தெளிவான உருவம் கொடுத்துத் தன்னாலேயே காணமுடியவில்லை என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். அவளைப் போல் தான் தெளிவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியவில்லையே என்று அவன் மனசுள் ஏங்கினான். இந்தத் தவிப்புக்கும், குழப்பத்துக்கும் தானே பொறுப்பு என்றும் அவன் உணர்ந்தான். இதனை ரகசியமாகத் தானே தீர்த்துக் கொள்வதுதான் முறையானது என்று அவன் தீர்மானித்தான். அப்படி தீர்மானித்துக் கொள்ளுவதற்கு அனுகூலமான சில தெளிவுகள் தனக்கேற்பட வேண்டும். சில ஐயங்கள் தீர்க்கப்பட வேண்டும். சில நம்பிக்கைகள் பிறக்க வேண்டும். அதனை இவள் தான் செய்ய முடியும். அந்தத் தெளிவினைக் கல்யாணிதான் தரமுடியும், அந்த ஐயங்களை இவள் தான் தீர்க்க முடியும். அந்த நம்பிக்கைகளை இவள்தான் வளர்க்க முடியும் என்ற எண்ணத்தில் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான் ரங்கா.

அவனது விழிகளில் தேங்கிய ஏக்கத்தையும், முகத்தில் குடிகொண்டிருந்த சிந்தனையையும் கண்டு அவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத கல்யாணி அவனை ஒரு குழந்தை மாதிரித் தேற்றிக் காபியைக் குடிக்க வைத்தாள்.

அவன் காபியைக் குடித்துக் கொண்டிருப்பதையே பார்த்தவாறு இருந்த கல்யாணிக்குத் தோன்றிற்று: ‘இவன் என் பொருட்டு எல்லா உறவுகளையும் உதறிவிட்டு என்னோடு தன் வாழ்க்கையைப் பிணித்துக் கொண்டவன். இவன் மனம் கோணாமல் நடந்து இவனை மகிழ்ச்சியாக நான் வைத்துக் கொள்ள வேண்டும். இவன் உணர்ச்சிவசப்பட்டோ, தான் ஒரு ஆண் என்கிற கர்வத்திலோ தவறாக நடந்து கொண்டாலும் நான் அதனைப் புரிந்து கொண்டு இவனைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்’ என்றெல்லாம் வார்த்தைகளற்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

“எனக்கு இன்னிக்கு ரொம்ப வேலை இருக்கு: சாயங்காலம் நாடகம்: மத்தியானம் ஒத்திகை வேற வெச்சிருக்குது-நீங்க குளிக்க வர்ரீங்களா?” என்று எழுந்துபோய் பாத்ரூமில் அவனுக்குக் குளிக்க ரெடி பண்ணினாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்கா காபியைக் குடித்தபின் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ஹாலில் வந்து கிடந்த தமிழ், ஆங்கில தினசரிகளை அப்படியே தரையில் விரித்துக் கொண்டு குத்துக் காலிட்டு உட்கார்ந்தவாறு அவசரமாகப் படித்தான்.

குளிக்கத் தயார் செய்துவிட்டு அவனைக் கூப்பிட வந்த கல்யாணி அவன் பேப்பரில் குனிந்திருப்பதைப் பார்த்து ‘சரி இன்னும் அரை மணி நேரமாகும்” என்று நினைத்து அடுக்களைக்குச் சென்றாள்.

ரங்கா, பத்திரிகைச் செய்திகளிலும் அரசியல் விவகாரங்களிலும் மனம் செலுத்த ஆரம்பித்தால் சூழ்நிலையையே மறந்து விடுவான் என்று அவளுக்குத் தெரியும்.

அவன் குளிக்கும்போது அவள் கூடவே வந்து பாத்ரூம் வாசலில் நிற்பாள். அவனை ஒன்றுமே செய்யவிடாமல் குழந்தை மாதிரி நிறுத்தி அவனைக் குளிப்பாட்டுவாள். அவனது கால் நகங்களைக்கூட விடாமல் சுத்தம் செய்து துடைப்பாள். அவனுக்கு மேலெல்லாம் பவுடரைக் கொட்டி, மிருதுவாகத் தடவுவாள். தன்னை அவள் எப்படியெல்லாம் போஷிக்கிறாள் என்ற நினைப்பில் கனிந்து போவான் அவன்.

அவன் தலைவாரிக் கொண்டு டிபன் சாப்பிட வரும் போது மணி ஒன்பதாயிற்று. கல்யாணி அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். இப்போது அவளுக்கு வேலையொன்றும் இல்லை. அவனை ஆபீசுக்கு அனுப்பி விட்டுத் தான் அவள் அடுத்த பகுதி வேலைகளைத் தொடங்க வேண்டும். பின்கட்டில் வேலைக்காரி இவள் ஒழித்துப் போட்ட பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் துவைப்பதற்குப் போடும் துணிகளை எடுப்பதற்காகக் கல்யாணி படுக்கை அறைக்கு வரும்போது அவன் எதிரில் வந்தான்.

“உக்காருங்க…இதோ வந்துட்டேன்” என்று அவசர அவசரமாகத் துணிகளை வாரிக்கொண்டு போய்ப் பின்கட்டில் வேலைக்காரியிடம் எறிந்துவிட்டு டைனிங் ஹாலுக்கு வந்தாள் கல்யாணி. அவன் இடது கையில் மடித்துப் பிடித்த பேப்பரைப் படித்துக்கொண்டே டிபன் சாப்பிடத் தயாராய் உட்கார்ந்திருந்தான்.

கல்யாணி தினந்தோறும் அவனை இந்தக் கோலத்தில் பார்ப்பதும் ‘சாப்பிட்டப்பறம் படிக்கிறது’ என்று செல்லமாகக் கண்டிப்பதும் ஒரு பழக்கமாகிவிட்டது. அந்தப் புதுப் பழக்கம் இவளுக்கு ஏற்பட்டதே தவிர அவனுக்குப் பத்திரிகை படித்துக் கொண்டு சாப்பிடுகிற பழக்கம் நீங்கவில்லை. எனவே வாய்க்குள் சிரித்துக் கொண்டே வந்து அவன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பக்கத்தில் அமர்ந்து வழக்கம்போல் பத்திரிகையைப் பறித்தாள். அவனும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டே பத்திரிகையை டேபிளின் மீது வைத்தான்.

கல்யாணி அவன் தட்டில் டிபனைப் பரிமாறினாள். அவன் சாப்பிட்டுக் கொண்டே அந்தப் பத்திரிகையை எடுத்துச் சற்று முன்னர் தான் படித்துக் கொண்டிருந்த ஒரு செய்தியைக் காட்டி அவளையும் படித்துப் பார்க்குமாறு கொடுத்தான்: பேசவில்லை.

அது ஆங்கிலப் பத்திரிகை. 'ஸிங்கிள் கால'த் தலைப்பில் மிகச் சின்னதாக வெளிவந்திருக்கிற செய்தி அது. 'என்ன அவ்வளவு முக்கியம்!' என்ற நினைப்போடு கல்யாணி அதைப் படித்துப் பார்த்தாள்.

எங்கேயோ ஒரு ஹோட்டலில் ஓர் இளம் காதல் ஜோடி தற்கொலை செய்து கொண்ட செய்தி அது. இதை ஏன் தன்னிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லுகிறான் இவன்? என்று புரியாத குழப்பத்தாலும் இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்க நேர்வதால் ஏற்படுகின்ற அருவருப்பாலும் அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

அவன் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பின்னர் தலைநிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவளுக்கு அந்தச் செய்தியில் ஓர் ஆங்கிலப் பதத்துக்கு அர்த்தம் தெரியவில்லை. 'லயய்ஸான்'னா என்ன அர்த்தம்?" என்று கேட்டாள். அவன் ஒவ்வொரு எழுத்தாக உச்சரிக்கச் சொல்லி "இந்த இடத்தில் இதற்குக் கள்ளக் காதல்னு அர்த்தம்" என்று சொல்லி அந்த வார்த்தையை முறையாக உச்சரிக்கவும் கற்றுத் தந்தான்.

"அன்னக்கிப் பட்டம்மா சொன்னது ஞாபகம் வந்திச்சு-இந்த மாதிரி இவங்க மனசு உடைஞ்சு... தற்கொலை செய்துக்கறதுக்குக் காரணமே இவ்வளவு சின்ன வயசிலே இவங்க காதலிக்கிறதுதான்...இல்லே?" என்று மிகவும் பொருத்தமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுகிற தோரணையில் கேட்டான் ரங்கா.

"பைத்தியம் பிடிக்கிறதுக்கு வயது உண்டா என்ன" என்றாள் கல்யாணி.

'ஹவ் கேன் யூ பி ஸோ க்ரூட்?' என்று மனசில் முனகிக் கொண்ட ரங்கா அவளிடம் கேட்டான்! "இதைப் படிக்கிறபோது உனக்கு என்ன உணர்ச்சி ஏற்படுகிறது?"

"வருத்த உணர்ச்சிதான் ஏற்படுது! அதெப்பத்தி யோசிச்சா அருவருப்பு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உணர்ச்சியும் ஏற்படுது…” என்றாள் கல்யாணி.

“அருவருப்பா? அனுதாப உணர்ச்சி ஏற்படலே?” என்று கேட்டான் ரங்கா.

“ம்….ஏற்படுது. அதெத்தான் நான் வருத்தம்னு சொன்னேன்”…

“சரி” என்று ஒரு பிரச்னை தீர்ந்தது மாதிரி சாப்பிட்ட தட்டில் கையலம்பிகொண்டே அடுத்த பரீட்சைக்கு அவளை ஆளாக்குகிறமாதிரி கேட்டான்: “இவங்களைக் கோழைகள்னோ வாழத் தெரியாதவங்கன்னோ நீ சொல்லுவியா?”

“கோழைகள்னு சொல்லமாட்டேன்: வாழத் தெரியாதவங்கள்னு சொல்லுவேன். வாழ விரும்பாதவங்கன்னு சொல்லுவேன். மனோ வியாதி பிடிச்சவங்கன்னுகூடச் சொல்லுவேன்”

ரங்கா ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். இவன் உட்கார்ந்திருக்கிற தோரணையைப் பார்த்தால் இன்னும் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருப்பான் போலத் தோன்றியது அவளுக்கு. இவனோடு பேசிக் கொண்டிருப்பது அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆனால் இப்போது பேசிக் கொண்டிருக்கிற விஷயம் அவ்வளவு பிடித்ததாக இல்லை. அதுவுமில்லாமல் அவளுக்கு நிறைய வேலைகள் குவிந்து கிடந்தன. இவனை ஆபீசுக்கு அனுப்பிவிட்டு அவற்றில் ஈடுபடக் காத்திருந்த அவளுக்கு இவன் எதையோ பேச இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்ளும் போது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. எனினும் அவனுடைய திருப்திக்காக ‘என்ன குடி முழுகிப் போகிறது’ என்று அவளும் இன்னொரு நாற்காலியில் அவனுடன் பேசுவதற்குச் சித்தமாக உட்கார்ந்து கொண்டாள்.

“நீ சாப்பிடேன்” என்றான் ரங்கா.

“நான் அப்புறம் சாப்பிடறேன். தலைக்கு ஷாம்பு பண்ணிக்கணும்: நெறைய வேலைகெடக்கு…” என்று அவள் சொன்னதை அவன் கவனிக்கவே இல்லை.

“ஒருத்தர் மேலே ஒருத்தருக்கு எவ்வளவு காதல் இருந்தால்-ஒருத்தருக்காக ஒருத்தர் சாகத் துணிஞ்சி ரெண்டு பேருமே கடைசியிலே இப்படிச் சாகமுடியும்!” என்று சொல்லிப் பிரமித்தான் ரங்கா.

“நீங்க என்ன ரெண்டு பேரும் சாகறதிலே போயிக் காதலோட பெருமையைப் பாக்கறீங்க? அவுங்க ரெண்டு பேரும் சாகாம ஒண்ணா வாழ்ந்திருந்தா அவுங்க வாழற விதத்திலேருந்துதான் அந்தக் காதலோட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பெருமையை என்னாலே உணர முடியும்” என்று சிரித்தாள் கல்யாணி.

அவனுக்கு அவள் கூறிய, மிகவும் ஆரோக்கியமான அந்தப் பதில் முகத்தில் அடித்தாற் போலிருந்தது. ஆனால் இப்போதும் அவன் சிரித்துக் கொண்டே தான் இருந்தான். அவள் மனசைக் குத்திக் கிழிக்கிற மாதிரி ஏதாவது சொல்ல வேண்டும் என்று வார்த்தைகளையும், விஷயங்களையும் அவன் மனசில் தேடினான்.

கல்யாணி –முப்பது வயசுக்கப்புறம் நீ என்னைக் காதலிக்காட்டியும் போகுது. ஆனா நீ எந்த வயசிலேயாவது யாரையாவது காதலிச்சிருக்கியா?” என்று சிரித்துக் கொண்டே, மிகவும் வஞ்சகமாய் ஒரு எதிரிமாதிரி அவள் மனசைச் சரேலெனக் குத்திவிட்டான் ரங்கா.

“ஒ!” என்று அவள் வாய் பிளந்தது. நிதானித்து ஒரு விநாடியில் மனசை இரும்பாக்கிக் கொண்டு அந்த வலிய தாக்குதலை உறுதியாகத் தாங்கிக் கொண்டாள்.

‘என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது தங்கள் இருவருக்குமிடையிலும்?’ என்று அவள் இப்போதுதான் முதன்முதலாக நம்ப முடியாத அதிர்ச்சியுடன் புரிந்து கொண்டாள்.

அவளால் சற்று நேரம் ஒன்றும் பேசமுடியவில்லை. பரிதாபமாக ஒரு முறை அவனைப் பார்த்து அவள் சிரித்தாள். ‘தான் இவனைக் காதலிக்கவில்லை’ என்று அவ்வளவு தீர்மானமாக இவனால் எப்படிச் சொல்ல முடிந்தது?’ என்கிற அந்த ஒன்றே அவள் மனசை அழுத்திற்று.

‘நான் இவரைக் காதலிக்கவில்லையோ?’ என்று அவள் தன் மீதே சந்தேகம் கொண்டாள்.

‘ஒரு வேளை இவர் சொல்லுவதுதான் உண்மையோ?’ என்று அவள் யோசித்தாள்.

‘எனக்கு இவரைக் காதலிக்கிற தகுதி இல்லையோ?’ என்று மனம் தடுமாறினாள்.

‘இவர் என்னைப் பற்றித் தவறாக முடிவு செய்வாரா? மாட்டாரே. என் காதலை இவருக்கு நான் உணர்த்தத் தவறிப் போனேனோ?... இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, இவ்வளவும் நடந்த பிறகு, இப்படியொரு பிரச்னை எழுவதில் உள்ள சிக்கலை எப்படித் தீர்ப்பது? எப்படிப் புரிய வைப்பது? என்னத்தைப் புரிந்து இனி என்ன செய்வது?’ என்று அவள் பிரமித்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இவன் பல சமயங்களில் மௌனமாய் இருப்பதும், பெருமூச்செறிவதும், ஆழ்ந்த நீண்ட சிந்தனைகளில் அமிழ்ந்து போவதும் எதனால் என்று அவளுக்கு இப்போது புரிகையில் உடல் ரீதியாகவே நெஞ்சுள் எங்கோ நொந்து வலித்தது.

“கல்யாணி…. ஏன் ஒண்ணுமே பேசலே? நான் ஏதாவது தப்பாக் கேட்டுட்டேனா?” என்று குற்றம் குறுகுறுக்கும் மனசோடு அவன் சிரித்தவாறே அவளைத் தொட்டான்.

அவன் கரத்தை அவள் அழுத்திப் பிடித்தாள். அவளுக்கு அழவேண்டும்போல் இருந்தது. ஆனால் மிகுந்த பிடிவாதத்துடன் தான் அழலாகாது என்று அவள் திடம் கொண்டாள். இப்போது அவனுடைய இந்தக் கேள்விக்குப் பிறகு தான் அழுதால், நான் ஏதோ எனது நிறைவேறாத காதலை எண்ணி அழுகிறேன் என்று இவர் நினைத்துக் கொள்வார். எனவே நான் அழக்கூடாது’ என்று மனசுக்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.

ரங்காவுக்குத் தான் அவளை அப்படிக் கேட்டிருக்கக் கூடாது என்று தோன்றியது.

“கல்யாணி… நாம்ப எவ்வளவோ விஷயத்தைப் பத்தி விவாதம் பண்றோம். அந்த மாதிரிதான் இதுவும். நான் கேட்கிற எதையும் நீ தப்பா எடுத்துக்கக் கூடாது” என்று அவளுக்கு அவன் சமாதானம் கூறினான்.

அவள் புன்னகை செய்தாள். அந்தப் புன்னகையிலேயே அவள் மனசின் வேதனை தெரிந்தது.

“ஐ ஆம் ஸாரி…. வருத்தப்படாதே: எனக்கு நாழியாகுது… உனக்கும் நிறைய வேலை இருக்கு. மத்தியானம் பேசுவோம்…” என்று அவன் அவளை நெருங்கி நெற்றியில் முத்தமிட்டு விட்டு, ஆபீசுக்குப் புறப்படுவதற்காக உடையணிந்து கொள்ள ஓடினான்.

‘இந்தக் கடிதம் எங்கிருந்து வருகிறது என்று உங்களால் ஊகிக்க முடிந்தால் என்னை வந்து சந்திக்கவும்’ என்று தான் கையெழுத்தே இல்லாமல் எழுதிய கடிதத்திலிருந்து தன்னை இவரால் எப்படி அடையாளம் காண முடிந்தது என்பதை இப்போது கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்குப் பிறகு அவள் யோசித்துப் பார்த்தாள்.

அதை அவனிடம் கேட்டபோது அவன் சொன்ன அந்தப் பதில்களை எல்லாம் அவள் நினைத்துப் பார்த்தாள்…

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

‘அன்னிக்கு மேக்கப் ரூமிலே மிஸ்டர் அண்ணாசாமியோட வந்து நின்னப்ப என்னை நேராப் பார்க்காமல் கண்ணாடியிலேயே நீ பார்த்துக்கிட்டு இருந்தது ஒரு காரணமா இருக்கலாம்’ என்று ஆரம்பித்து…

அண்ணாசாமி அறிமுகம் செய்து வைத்த போது தன்னுடைய நாடக விமரிசனங்களை அவள் பாராட்டியதையும், பத்து வருடங்களுக்கு முன்னால் அவன் எழுதிய கதைகளை நினைவில் வைத்துக் கொண்டிருந்து அவள் புகழ்ந்ததையும், அவன் மேக்-அப் ரூமில் சிகரெட் பிடித்துக் கொண்டு நிற்க நாடக அரங்கின் இருளில் நின்றவாறு அவள் கண்கள் பளபளக்கப் பார்த்ததையும் காரணமாக வைத்து அவளை அந்தக் கடிதத்தின் மூலம் தான் கண்டு கொண்டதாகச் சொன்னானே… அவற்றையெல்லாம் இப்போது வரிசைக் கிரமமாய் எண்ணிப் பார்த்தாள் கல்யாணி.

அவன் ஆபீசுக்குப் புறப்படத் தயாராய் வெளியே வந்தபோது இவ்வளவு நேரமாய்த் தான் இங்கேயே உட்கார்ந்திருப்பதை உணர்ந்து கல்யாணி தனது சிந்தனைகளை உதறிக்கொண்டு எழுந்தாள்.

அவன் மீண்டும் அவளருகே வந்தான். “கல்யாணி”? என்று கனிவாய் அழைத்தான்.

அவள் எப்போதும் போலவே புன்ன

கை செய்ய முயன்று சிரித்தாள்:

“நான் உன்னை அந்த மாதிரி கேட்டிருக்கக் கூடாது. தப்புதான்…” என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் ரங்கா.

அவள் அதற்குப் பெருந்தன்மையாகச் சிரித்துக் கொண்டே “ஆபீசுக்கு நேரமாச்சி! மத்தியானம் பேசுவோம்” என்றாள்.

“உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே!” என்றான் ரங்கா.

“வருத்தமில்லாமல் இருக்குமா? இல்லேன்னு பொய் சொல்றதா?…. வருத்தப்பட்டால் என்ன?…. வருத்தம் தரவரங்கதான் சந்தோசம் தருவாங்க” என்று மென்மையாகக் கூறினாள் அவள்.

அவன் அவளருகே நெருக்கமாய் வந்து, பின்கட்டிலிருக்கும் வேலைக்காரியைப் பார்த்ததும் “கல்யாணி இங்கே வா” என்று அறைக்குள் அழைத்துப் போனான்.

பின்னர் மகிழ்ந்து சிரித்தவாறே இருவரும் வெளியே வந்தனர்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“கன்னத்தில் மை” என்று முந்தானையை விரலில் சுற்றிக்கொண்டு எக்கி நின்று துடைத்துவிட்டாள் கல்யாணி.

அவன் ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு போய்த் தெருவில் நிறுத்தி ஸ்டார்ட் செய்தான்.

கையை ஆட்டினான். அவளும் மலர்ந்த முகத்துடன் கையசைத்து விடை தந்தாள்.

அவன் போன பிறகு மறுபடியும் வந்து டைனிங் டேபிளின் அருகே அந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாள். இப்போது அவள் முகத்தில் சிரிப்பு இல்லை.

‘எதனால் அவர் அப்படிச் சொன்னார்?’ என்று தனிமையில் எண்ணிப் பார்க்கும்போது கண்களில் பெருகிய கண்ணீரை அடக்க முடியாமல் ரகசியமாய் அழுதாள் அவள்.

தான் அவளை அப்படிக் கேட்டிருக்கக் கூடாது என்ற உணர்ச்சி ரங்காவின் மனசை உறுத்திக்கொண்டே இருந்தது. அவள் தன்னைக் காதலிக்கவில்லை என்ற எண்ணம் எதனால், எப்போது தன்னுள் நுழைந்தது என்று தனது நினைவுகளையும் அவளோடு தான் சம்பந்தம் கொண்ட இந்த ஓராண்டுக்கால வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் அவன் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தான்.

அவன் தன்னையும் அவளையும் ஒரு மூன்றாம் ஆளாக நின்று பயின்று பரிசீலிக்க முயன்றான். சுய விருப்பு வெறுப்புகளையும் சுய நம்பிக்கைகள், கொள்கைகளையும், வளர்ந்த, வளர்த்த பண்பாட்டுப் பின்னணிகளையும் ஒதுக்கி வெறும் மனுஷ மதிப்பீடுகளில் மட்டும் அளந்து, தன்னையும் அவளையும் அறிய முயல்வது மிகுந்த சிரமத்திற்கு அவனை ஆளாக்கிற்று. அது சாத்தியமே இல்லை போல் தோன்றியது. அது சாத்தியமில்லையெனில் இந்தக் குழப்பத்திற்கும், இந்த மன உளைச்சலுக்கும், இந்தப் பயிற்சிக்கும் பரிசீலனைக்கும் அவசியம் இல்லை என்று அவன் தீர்மானித்தான்.

தான் என்னதான் படித்தவனாக இருந்தபோதிலும் உலக நடப்புக்கள், இலக்கிய விவகாரங்கள், அரசியல் நிகழ்ச்சிகள் முதலியவை குறித்து என்னதான் அறிவுபூர்வமான சிந்தனாவாதியாக இருந்தபோதிலும் சொந்த வாழ்க்கையில் அந்தரங்கமான உணர்ச்சியுலகில், ஆதிகேசவலு நாயக்கரின் சரியான சந்ததியாகவே தான் வாழ்வதை அவன் அறிவு கண்டது, அதற்காகச் சில சமயங்களில் அவன் வெட்கமும் கொண்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஆனால் அதில் ஓர் அடிப்படை நியாயமும் இருக்கிறது என்று அவனது தர்க்க அறிவு கண்டது.

கல்யாணி பிறந்த குலத்தாலும் வளர்ந்த வளர்ப்பாலும் வாழ்ந்த முறையாலும் இயல்பாய்க் குடிகொண்ட குணத்தாலும் ஒரு கலைஞையாயும் ரசிகையாயும் இருப்பதால் 'பிரபுத்துவ மரபுகள்' அவளையறியாமல் அவளுள் கனமாய்ப் பதிந்திருப்பதை அவன் அறிந்தான். ஆனால் அவற்றையும் 'தனது' அனுபவம் என்ற மமகாரமாகவே அவள் கொண்டிருக்கிறாள் என்று அவன் நினைத்து – அங்கேதான் தடுமாற்றம் கொண்டான். அவ்விதம் அவள் தானெனத் தனித்து ஒதுங்கியிருப்பது சரியில்லை என்றும், அதில் உயர்வில்லை என்றும், அந்தத் தாம்பத்தியத்துக்கு அர்த்தமில்லை என்றும் அவன் எண்ணினான்.

தனக்காக, தன் பொருட்டு அவள் எதையும் இழக்கவோ அல்லது சுமக்கவோ தயாராகமாட்டாள் என்று அவன் நினைக்கும்போது இந்த உறவு எவ்வளவுபசையற்றது என்று எண்ணி நெஞ்சு உலர்ந்தான் ரங்கா. இப்படிப்பட்ட இந்த உறவை, இந்தத் தொடர்பை, இந்த நட்பை உறுதிப்படுத்திக் கலியாணம் என்ற பந்தத்தில் தான் அவளை உட்படுத்தியதும், தன்னையும் உட்படுத்திக் கொண்டதும் கொஞ்சம் அவசரப்பட்டுச் செய்துவிட்ட காரியமோ? என்று இந்தக் குழப்பத்தின் உச்ச நிலையில் இன்று தான் முதன் முறையாக அவன் யோசித்தான்.

ஆனால் அதற்காக அவளைப் பொறுப்பேற்க வைக்க அவன் மனம் இம்மியும் இடந்தர மறுத்தது. அவள் இந்தக் கல்யாணத்தை நினைக்கவோ வற்புறுத்தவோ இல்லை என்ற உண்மையை அவன் மறுத்து நினைக்கவில்லை. அவள் இவனது நட்பை-எப்படி வேண்டுமானாலும் எதையுமே எதிர்பார்க்காமல், நிரந்தரம் அல்லது நிரந்தரம் என்ற வாக்குறுதி, எதன் பேராலோ எதையோ எதிர்பார்க்கின்ற உவமை என்ற-எதையுமே பிரதியாகக் கருதாமல் எப்படி வேண்டுமானாலும் இந்த உறவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாள். இப்போதும் அப்படி இருக்கிறாள் என்பதை மறக்காமலிருக்கும் ரங்காவுக்கு-இந்தக் கல்யாணம் எவ்வளவு அவசரப்பட்ட, முன் பின் யோசிக்காத காரியமாகத் தோன்றினாலும் அதற்காக அவள் மீது ஒரு மாத்திரை பொறுப்பினைச் சுமத்துவது கூடச் சரியென்று தோன்றவில்லை. தானே அதற்கு முழு முதற் பொறுப்பு என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான்.

அதுதான் அவனது இந்த நிலைமைக்கே ஆதி வித்து என்பதையும் அவன் அறிந்தான். அவள் இவனது உறவு விஷயத்தில் கைக்கொண்ட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பிடிகொடுக்காத தன்மை, ஈடுபாடு இல்லாத செயலாகத் தன் மனத்தில் வேர் ஊன்றியதோ என்று பரிசீலித்து அறிந்தான். தானே வலியச் சென்று அவளை வலையிட்ட மாதிரி ஓர் உணர்வு உறுத்தலுக்கு அவன் ஆளானான்.

ரொம்பவும் லோகாயதமாக இந்த உறவை அவள் ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்ற சம்சயம் அவனுக்கு ஆத்மார்த்தமான ஓர் அவமதிப்பாகிவிட்டது.

சில சமயங்களில், தானே எல்லாவற்றையும் அதீதமாய்க் கற்பனை செய்து அவற்றுக்கு உருவமும் உயிரும் தந்து தன்னையே அரித்துக் கொள்ளும் அசட்டுத்தனமோ இவை? என்று எண்ணி அவன் சிரம் உலுப்பி அவற்றை விலக்கவும் முயன்றான். ஆயினும் என்ன? குளப்பாசி கல்லெறிதலில் விலகி மீண்டும் கூடுவது மாதிரி இந்த மனப்பாசி கவிகிறதிலிருந்து அவனால் விலக முடியவில்லை என்பதையும் உணர்ந்து அவன் தவித்தான்.

அவளோடு பேசி, விவாதித்து வாழ்க்கை பற்றிய, காதல் பற்றிய, இருவர் உடன்பட்டு ஒன்றி வாழும் தாம்பத்தியம் பற்றிய அவளது பிடி தராத கொள்கையை மாற்றிவிட முடியும் என்று அவன் நம்பியே அவளோடு பேசத் துவங்கினான்.

ஆனால் ஒவ்வொரு முறையும் பேசியபோதெல்லாம் அவனே தனது பேச்சின் நோக்கை மறந்து அவள் மனம் புண்படுகிற விதமாகவோ, குத்திக் காட்டுகிற மாதிரியோ தன் திருப்திக்கு எது எதையோ சொல்லிவிட்டான்.

ரங்கா எது குறித்துப் பேசினாலும், எப்படிப் பேசினாலும் அதிலே ஓர் அர்த்தமும் அழகும் காணும் மனம் படைத்த கல்யாணி எந்தக் குத்தலிலும் எந்த வேதனையையும் அடையாமல் இவனோடு இணைந்தே பேசி, இணைந்தே விவாதித்தாள். அது எதிர்ப்பேச்சோ எதிர்வாதமோ அல்ல: தன்னையும் தனது அறிவாற்றலையும்இவன் அறிந்து பாராட்டி மகிழ்ந்து போவான் என்கிற தைரியத்திலும் ஆசையிலும் அவள் மிகவும் விசேஷ சிரத்தை காட்டி இவனோடு விவாதம் செய்தாள்.

ரங்கா பேசாமல் இறுதியில் மெளனமாகும் போதெல்லாம், தனது முற்போக்கான கருத்துக்களையும் பேச்சையும் இவன் மனத்துள் பாராட்டுகிறான் என்றுகூட அவள் திருப்தியடைந்ததுண்டு! மேலும் இவனது கொள்கைகளுக்கு இசையவே தான் சிந்திப்பதாயும் பேசுவதாயும் அவள் நம்பிக்கை கொண்டாள். இப்படி அவள் சொல்லுகிற

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

விஷயங்களை மறுத்தும், அதற்கு மாறாகவும் ரங்கா பேசும்போது, தான் பேசி விவாதிக்கிற இந்தக் கருத்துக்களில் தனக்கிருக்கும் பிடிப்பை அவன் பரிசோதிக்கிற முறையில் மாறி நின்று கேள்வி கேட்கின்றான் என்று அவள் நினைத்தாள்.

அவன் மனசின் புழுக்கம் அவளுக்குப் புரிந்ததில்லை. அதற்குக் காரணம் இருப்பதாகவும் அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால் இன்று காலை ரங்கா கல்யாணியைக் கேட்ட அந்தக் கேள்விக்கு ஆதாரமான அவனது அந்த அவ நம்பிக்கை, அதிலே இருந்த அவனது தவிப்பும் ஏக்கமும் அவளுக்குத் திடீரென ஏதோ திரை கிழிந்தது மாதிரி இருந்தது. அவள் அந்த விநாடி முதல் முழுமையாக மனசில் வெறுமையுற்றாள்.

அந்தக் கேள்வியை அவள் சந்தித்தபொழுது அவளுக்கேற்பட்ட முதல் உணர்ச்சி ஒரு வெறுமைதான். பக்கத்திலிருந்த எல்லாத்துணைகளும் திடீரென அந்தர்த்யானமானது போன்ற ஒரு பரிதாபகரமான தனிமையின் வெறுமை அது.

அடுத்த விநாடி அவன் அவள் பக்கத்தில் வந்து நின்று அந்த வெறுமையை மாற்றியபோதும், தான் அப்படிக் கேட்டதற்காக வருந்துகிறவனாக அவளைச் சமாதானப்படுத்திய போதும் அவளும் அதனை மறந்து மகிழ்ச்சியுற்றான்.

ஆனால் அவன் போனபின்பு அவள் மீண்டும் அந்த வெறுமை உணர்ச்சிக்கு ஆளானாள். தனக்குக் காதலிக்கத் தெரியவில்லையோ? என்று அவள் யோசித்தாள். தன் காதலை இவர் புரிந்து கொள்ளாமற் போனதென்ன? என்று அவள் குழம்பினாள். தான் யாரையும் காதலிக்கும் தகுதி இல்லாதவளோ? என மனத்தால் தாழ்வுற்றாள். அவனது அந்த எண்ணத்தை மாற்றுவதை எண்ணி மலைப்புற்றான். அவள் தனது அன்றாடக் காரியங்களில் முனைந்திருந்தாலும், மனம் அடிக்கடி இதனை எண்ணி எண்ணிக் குழம்பிற்று.

ஆபீசுக்குச் சென்ற ரங்கா ஒரு வேலையும் ஓடாமல் தனது இருக்கையில் உட்கார்ந்திருந்தான். சிகரெட் புகைத்தான். ஓரிரு 'காலிக'ளைப் ப்ரூப் திருத்தினான். எவ்வளவோ எழுத வேண்டும். ஒன்றிலும் செயல் ஓடவில்லை.

கல்யாணி சமாதானமடைந்து விட்டாள் என்று அவன் நம்பினான். ஆயினும் தன்னை இவ்வளவு வெளிப்படையாகக் காட்டிக்கொண்ட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

செயலால் அவன் தன் அமைதியைக் குலைத்துக் கொண்டான். அவன் அடிக்கடி மணி பார்த்தான். அவனுக்கு இப்போதே அவளிடம் ஓடிவிட வேண்டும் போலிருந்தது. அவளோடு பேசவேண்டும் போலிருந்தது. காலையில் பேசிய தகாத பேச்சை மறந்து அவளோடு காதல் புரிந்து எல்லாவற்றையும் அந்த மயக்கத்திலும் மகிழ்ச்சியிலும் கரைத்து விடவேண்டும் போலிருந்தது.

ரங்கா மத்தியானம் வீட்டுக்கு வரும்போது அவள் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். இன்று கொஞ்சம் முன்னாலேயே வந்துவிட்டான். இந்தப் புது வீட்டுக்கு வந்ததிலிருந்து மத்தியானத்தில் சாப்பிட அவன் வீட்டுக்கே வருகிறான், ஏதோ சில நாட்களைத் தவிர.

வந்தவுடன் அறைக்குள் போய் உடை மாற்றிக் கொண்டவன் சாப்பிட வருவான் என்று அவள் காத்திருந்தாள். பத்து நிமிஷமான பிறகு அவளே சென்ற பார்க்க அவன் கட்டிலில் சாய்ந்து படுத்திருந்தான். தூக்கமில்லை. கல்யாணி அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

“சாப்பிட வரலே?” என்று கேட்டாள். ரங்கா அவள் கையைப் பற்றிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து அவளைப் பார்த்து நட்புறவுடன் புன்னகை செய்தான். அவளும் சிரித்துக்கொண்டே “என்ன” என்றாள்.

இருவர் மனசிலும் ஒரே விஷயம்தான். ஒரே நிகழ்ச்சி தான் நெருடுகிறது என்று அந்த மனம் மறந்த சிரிப்பிலேயே தெரிந்தது. மறைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாததால் அந்தச் சிரிப்பில் பொய்யின் கனம் இல்லை.

அவர்கள் இருவரும் உடலால் மிக நெருக்கமாய்-அவன் கட்டிலில் உட்கார்ந்து எதிரில் நின்றிருந்த அவள் இடையைச் சுற்றிக் கரத்தால் வளைத்து, அவனது கழுத்தில் அவளது கைகள் தழுவ-இணைந்திருந்தனர்.

“நான் அப்படி உன்னைக் கேட்டிருக்கக்கூடாது: அப்படி நினைச்சாலும் நான் கேட்டிருக்கக்கூடாது.”

“நீங்க அப்படி நினைக்கிறபோது கேட்டதனாலே என்ன தப்பு?”

“ஆமாம்.... நான் அப்படி நினைக்கிறேன்…”

அவள் ‘ஏன் நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள்?’ என்று கேட்கவில்லை. அப்படிக் கேட்பது அர்த்தமற்றது எனத் தோன்றியது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் இப்போது மறுபடியும் அவளிடமிருந்து வாய் மூலம் ஓர் இணக்கமான பதிலை எதிர்பார்த்துக் கேட்டான். அவன் அப்போது ஒரு ‘டீன்-ஏஜர்’ மாதிரி தோன்றினான். அவனுக்கு அது பொருத்தமாக இல்லை.

“டூ யூ லவ் மீ?” என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

அவள் சொன்னாள். “எனக்குத் தெரியலீங்க. நான் அப்படித்தான் நெனச்சிக்கிட்டு இருந்தேன். நீங்க கேக்கறதெப் பார்த்தா நான் அப்படி நெனச்சிக்கிட்டு மட்டும் தான் இருந்தேனோன்னு தோணுது. ஆனா ஒண்ணு, அது –அதாவது நீங்க சொல்ற காதல் - அப்படி ஒண்ணும் வாழ்க்கைக்கு அவசியம்னு தோணலே…”

அவள் சொல்வது அவனுக்கு மிகுந்த வியப்பைத் தந்தது: புருவம் நெரித்த குழப்பத்துடன் அவள் சொல்வதில் ஆழ்ந்தான்: “வேற என்னதான் ரொம்ப அவசியம்னு நெனைக்கிறே? ரோஜாப் பூவா? மேக்கப்பா? உங்க நாடகமா? இல்லேன்னா ஓர் ஆணும் பெண்ணும் கூடி இருக்கிறதா?” என்று படபடவென்று அவன் கேட்டான்.

அவள் தன் உதடுகளுக்குள்ளாகச் சிரித்துக் கொண்டாள். பிறகு அவனுடைய நெற்றி வியர்த்திருப்பதைக் கண்டு தன் சேலைத் தலைப்பால் அதை ஒற்றியவாறே சொன்னாள்: “வாழ்க்கைக்கு ரொம்ப அவசியம் நேர்மை, உண்மை, ஒழுக்கம், ஆதரவு” என்று சொல்லிக்கொண்டே வந்தவள் ஆங்கிலத்தில் “ஸின்ஸியரிடி, ஹானஸ்டி, கம்ப்பாஷன்” என்று மறுபடியும் சொன்னாள்:

இதுதான் ரொம்ப அவசியம்… நான் உங்களுக்கு ஸின்ஸியரா – உண்மையா இருக்கேன்…. என்னைக்கும்ஆதரவா இருப்பேன். அதேமாதிரி உங்க ஆதரவும் எனக்கு இருக்கு. காதல்னா அதுக்கு ஒவ்வொருத்தர் ஒவ்வொரு அர்த்தம் வெச்சிக்கிட்டு இருக்காங்க. அதனாலேதான் சொல்றேன். அது கதைகளுக்கும் நாடகத்துக்கும் அவசியமா இருக்கலாம். வாழ்க்கைங்கறது கொஞ்சம் ஸீரியஸான விஷயம்… அது நாடகம் இல்லே. நீங்க எப்பவோ சொன்னதாக எனக்கு ஞாபகம்-நாம ஒண்ணும் ‘டீன் ஏஜர்ஸ்’ இல்லேன்னு… நீங்க எனக்கு நான் சந்திக்கிற முதல் ஆணோ, இல்லாட்டி நான் உங்களுக்கு நீங்க சந்திக்கிற முதல் பெண்ணோ இல்லே. நாம்ப ஒருத்தருக்கு ஒருத்தர் ஸின்ஸியரா, ஹானஸ்டா, காம்பஷனேட்டா இருப்போம். இதுக்குப் பேர் காதல் இல்லேன்னா அந்த உயர்வான காதல் அது இருக்கிற உசரத்திலேயே இருந்துட்டுப் போகட்டும். அதனாலே ஒண்ணும் கெட்டுப் போகாது. இப்ப வாங்க சாப்பிடலாம்” என்று மிகவும் லேசாக மனசையும், இந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நிலையையும் மாற்றி அவனை அழைத்துக் கொண்டு போனாள்.

அவன் மௌனமாய் அவள் பின்னே நடந்தான்.

அவன் மௌனமாகவே சாப்பிட்டான். ‘இது இவள் பேசக்கூடிய பேச்சு அல்ல’ என்று தோன்றிற்று அவனுக்கு. ஒரு பிஸினஸ் ஒப்பந்தத்துக்குக் கூட இந்த ‘ஸின்ஸியரிடி’ ஓர் அவசியத் தேவை என்று பட்டது. ‘இருமனம் ஒன்றுபட்ட வாழ்க்கைக்கு இது மட்டுமா அடிப்படை?’ என்று அவன் மனம் கிளர்ந்தது. அதிலே அறிவும் தர்க்கமும் விலகி நிற்கிற ஒருவகை மன அவசம் வேண்டும் என்று அவன் நினைத்தான். அப்படித் தர்க்கம் செய்து அறிவு பூர்வமாக எல்லாவற்றையும் முடிவு செய்வதெனின்கல்யாணம் எதற்கு? தாம்பத்தியம் எதற்கு? என்றும் யோசிக்கலாமே! அப்படி யோசித்தவர்கள் தாமே அவற்றையெல்லாம் விட்டு விலகிச் சென்றிருக்கிறார்கள். இதென்ன சம்சார வாழ்வில் ஒரு சந்நியாசத் தன்மை! வாழ்க்கையின் அவசியத் தேவைபற்றி என்னவோ லெக்சர் செய்கிறாளே இவள்! எந்த வாழ்க்கை? வெறும் உயிர் வாழ்க்கைக்கு எனின் இதோ எனக்குப் பரிமாறுகிறாளே இந்தச் சாப்பாடு மட்டும் போதும்… ஏன் இதுவே அதிகம். இதில் புளிப்பென்ன? உறைப்பென்ன? வகை என்ன? வண்ணமென்ன? வாழ்க்கை என்பது என்ன, ஒன்றா? அது எத்தனை! தாம்பத்திய வாழ்க்கைக்கு-ஒருவனும் ஒருத்தியும் சம்பந்தப்பட்ட-நேற்றுவரை யாரோவாக இருந்த இருவர், இன்று முதல் எல்லா அனுபவங்களிலும் பங்கேற்றுப் பகிர்ந்து கொள்ளுகிற பந்தயத்துக்கு உட்பட்ட-ஒருவர் மற்றவரின் இனிய பாதியாக இருவரும் முறையே மாறிப் போன உறவில் ஒன்றுபட்டவர்களின் உணர்ச்சி பூர்வமான வாழ்க்கைக்குக் காதல் அவசியம் அல்லவாமே-அப்படியெனின் பெர்னாட்ஷா சொன்னது போல இது அங்கீகரிக்கப்பட்ட விபசாரமல்லவா?” என்றெல்லாம் யோசித்தவாறே அவன் மௌனமாய்ச் சாப்பிட்டான்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள நேர்ந்தபோது புன்சிரிப்புக் கொண்டனர். அவன் இன்று சரியாகச் சாப்பிடவில்லை என்று குறைப்பட்டுக் கொண்ட கல்யாணி தன் அவசரச் சமையல் நன்றாக இல்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

இரண்டு மணிக்கு எல்லாரும் ஒத்திகைக்கு வந்துவிடுவார்கள் என்ற நினைப்பு வந்தது கல்யாணிக்கு.

தாமுவிடம் வரும்போது பட்டுவையும் அழைத்துக் கொண்டு வரச்சொல்லி இருந்தாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்கா கை கழுவிக் கொண்டபின் கை துடைக்க டவல் கொண்டு வந்த கல்யாணி அவனிடம் சொன்னாள்:

“மத்தியானம் பட்டு வருவாள். சொல்லி அனுப்பி இருக்கேன். நாடகத்துக்கு இருந்துட்டுப் போகலாம்னு சொன்னேன். நீங்களும் நாடகம் பார்க்க வருவீங்களா?”

“பார்ப்போம். நான்தான் பார்த்திருக்கேனே” என்ற வாறே டைனிங் டேபிளினருகே வந்து உட்கார்ந்து கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான் ரங்கா.

“நீ சாப்பிடேன்... மணி ஒண்ணரை ஆகுது. ரெண்டு மணிக்கு அவங்க வருவாங்கன்னு வேறே சொல்றே!” என்று கூறி “நான் உனக்குப் பரிமாறட்டுமா?” என்று கேட்டவாறு அவள் தட்டில் கொஞ்சம் கறியை அள்ளி வைத்தான்.

“போதும்....போதும். ரொம்பத் தாங்க்ஸ்-நீங்க பேசாமல் கூட உக்காந்து இருங்க...” என்று சிரித்துக் கொண்டே அவன் கையிலிருந்த கரண்டியை வாங்கி வைத்தாள் கல்யாணி.

அவன் அவளெதிரே அமர்ந்து சிகரெட் புகையை ஊதியவாறே தேவகியை-செத்துப் போன மனைவியை-சம்பந்தமில்லாமல் நினைத்துக் கொண்டான்.

அப்போது இது மாதிரியான உணர்ச்சிகளுக்கு எல்லாம் இவன் ஆளானதே இல்லை. வாழ்க்கைக்கு ஒரு பெண்ணின் துணை அவசியம் என்பதால் ஏற்றுக்கொண்ட அந்த உறவுக்கு அவன் மரியாதை தந்தான். அவளை அவன் நேசித்தான். அன்பு செய்தான். அவள் இறந்த போது வருந்தினான்.

அப்போதெல்லாம் காதல் என்பது ஓர் அசட்டுத்தனம் என்றே அவனும் நம்பி இருந்தான். அவளை அவன்-இப்போது அவனுக்கு இருக்கிற மனோநிலையுடன்-காதலித்தது இல்லை.

முப்பத்தைந்து வயதில் இப்போது இவனுக்கு இப்படியொரு மனோநிலை இவள்பால் வர, அதன்மீது இவளே இவ்வளவு விமர்சனங்களையும் விவாதங்களையும் தொடங்கி வைக்க நேருகிற விசித்திர அநுபவத்தை நினைத்துச் சிறிதே விரக்தியோடு அவன் சிரித்துக் கொண்டான்.

அவன் சிரிப்பை அவள் தலை நிமிர்ந்து பார்த்தபோது இடையே சிகரெட் புகை திரையிட்டது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சற்று நேரத்துக்கெல்லாம் மியூஸிக் பார்ட்டிக்காரர்களும் அண்ணாசாமியும் ஒத்திகை பார்த்துக் கொள்வதற்காகக் கூட்டமாக வந்து ஹால் நிறைய-ஜமக்காளத்தை விரித்து உட்கார்ந்து கொண்டார்கள். பட்டுவையும் அழைத்துக் கொண்டு வரவேண்டியிருப்பதால் தாமு இந்தக் கோஷ்டியுடன் வரவில்லை.

சாப்பிட்டபின் வெற்றிலை போட்டுக்கொண்டு ரங்கா பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த கல்யாணி டாக்ஸி சத்தம் கேட்டு, பட்டுதான் வந்திருக்கிறாளோ என்று எழுந்து வந்து பார்த்தாள். அண்ணாசாமியைக் கண்டதும், "வாங்க சாமி… வெத்திலை போட்ட வாய்க்குப் புகையிலை குடுக்கறதுக்கே வந்தவர் மாதிரி வந்து நிக்கிறீங்களே" என்று வெற்றிலைப் பெட்டிக்காகக் கை நீட்டினாள்.

கல்யாணியிடம் வெற்றிலைப் பெட்டியைத் தந்து விட்டு அண்ணாசாமி ஜமக்காளத்தில் போய் உட்கார்ந்து கொண்டு தாமு வராததால் தபலாவை எடுத்துத் தட்ட ஆரம்பித்தார். சற்று நேரத்துக்கெல்லாம் ஆர்மோனியமும் கிளாரினட்டும், வைலினும் சேர்ந்து ஒரே சப்தமாக முழங்க ஆரம்பித்தது.

ரங்கா காதைப் பொத்திக்கொண்டு "எனக்கு நேரமாச்சு. நான் புறப்படறேன்" என்று கல்யாணியிடம் சொல்லிவிட்டு உடையணிந்து கொள்வதற்காகச் சென்றான். அண்ணாசாமி, அவன் ஹாலைக் கடந்து செல்லும்போது, வேண்டுமென்றே தபலாவில் 'கும்' கொடுத்து வாசித்தார்.

ரங்கா உடையணிந்து கொள்ளும்போது கல்யாணி சற்று நேரத்துக்கெல்லாம் அவனைப் பின்தொடர்ந்து அறைக்குள் வந்தாள். அவள் வாய் நிறைந்த வெற்றிலையோடும் புகையிலையோடும் வருவதைப் பார்த்து 'கொஞ்சம் தூரத்திலேயே நில்' என்கிற மாதிரி சைகையால் தடுத்து நிறுத்தினான் ரங்கா.

"ஏனாம்…பன்னீர் புகையிலைதான் போட்டிருக்கேன்" என்று சொல்லிக்கொண்டே அவனை நெருங்கி வந்தாள் கல்யாணி: "நீங்க ஊதுறீங்களே அந்தச் சிகரெட்டுப் புகைக்கு இது ஒண்ணும் கெட்டுப் போகலே…"

"சிகரெட்டுப் புகை காத்தோட போகுது இதுமேலே பட்டுடுமோன்னு பயமா இருக்கு. அது சரி, என்ன அண்ணாசாமி தபலாவை வெளுத்து வாங்கறார்? வீட்டிலே மாமிகிட்ட கோபமா வந்தாரோ?" என்று சிரிப்புடன் கேட்டான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“அவர் டிராமா சம்பந்தப்பட்ட விஷயத்திலே ஆல்ரவுண்ட். ஆனா டைலாக் மட்டும் உளறுவார். இன்னக்கிப் பாடம் பாத்துக்க வரச்சொன்னதே அவருக்காகத்தான். சாமி! என்னா உளறல்! என்னா உளறல்” என்று நெற்றியில் கைவைத்துக்கொண்டு புலம்பிய கல்யாணி, அண்ணாசாமியின் டைலாக் உளறல் நிகழ்ச்சிகளில் ஒன்றை நினைத்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

“என்ன ஏதாவது எக்கச்சக்கமாக உளறிட்டாரோ?” என்று குறுகுறுப்புடன் சிரித்தவாறே கேட்டான் ரங்கா. கல்யாணி பதில் ஒன்றும் சொல்லாமல் சிரிக்கவே, அவளைப் பிடித்து இழுத்து “என்ன உளறினார் சொல்லு, சொல்லு....” என்று அணைக்க, அவள் சிரித்தவாறே அவனிடமிருந்து திமிறினாள். பிறகு வாயிலிருக்கும் புகையிலைச் சாற்றைக் காட்டித் துப்பிவிட்டு வருவதாகக் கெஞ்சினாள். அவன் பிடியைத் தளர்த்தினான். ஜன்னலருகே போய் வெளியே துப்பிவிட்டுச் சிரித்துக் களைத்த அலுப்புடன் அவிழ்ந்த கூந்தலை முடிந்தவாறே அவள் திரும்பி வரும்போது மறுபடியும் கேட்டான் ரங்கா:

“என்ன உளறினார்? சொல்லேன்.”

அவள் அதை வாய்விட்டுச் சொல்லக் கூசி அவன் காதருகே போய் ரகசியமாக அவன் தோளைத் தழுவிக் கொண்டு சொன்னாள். சொல்லும்போதே அவள் சிரித்ததால் அவனுக்குத் தெளிவாக புரியவில்லை.

“சொல்லிவிட்டுச் சிரி, ஒண்ணும் புரியலை” என்று செல்லமாக அவளை அடித்தான்.

கல்யாணி சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் காதில் என்னவோ சொன்னாள். வெளியே முழங்கும் வாத்திய கோஷ்டி இரைச்சலையும் தாண்டி ரங்கா சிரித்த சிரிப்பொலி பேரோசையாகக் கேட்டது. அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“மிஸ்டர் அண்ணாசாமி” என்று கூவிக்கொண் டே அதை அவரிடம் கேட்க ஓடியபோது கல்யாணி அவனை விடாப்பிடியாக இழுத்து நிறுத்தினாள்:

“சீ! அதையெல்லாம் கேக்காதீங்க... என்னைப் பத்தி அசிங்கமா நெனச்சுக்குவாங்க...” என்று சிரிப்பிடையே சீரியஸாக அவனை நிறுத்தினாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்கா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.

“போதும் நாழியாச்சு, புறப்படுங்க” என்று அவன் சிரிப்பை அடக்கிவிட்டு, அவள் அறையைவிட்டு வெளியே சென்றபோது அவன் மறுபடியும் அவளை இழுக்கக் கை நீட்ட, அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு அவள் வந்த வேகத்தில் மூடிய ஒரு கதவில் இடித்துக் கொள்ளக் கதவு அதிர்ந்தது.

அண்ணாசாமி திரும்பிப் பார்த்தார். ஒன்றுமே நடக்காதது மாதிரி, கல்யாணி சாதாரண முகபாவத்துடன் வந்து அவர்கள் மத்தியில் உட்கார்ந்து கொண்டாள்.

அப்போது தாமுவும் பட்டுவும் வந்தார்கள்.

“வாடியம்மா…. சொல்லி அனுப்பினால்தான் வருவியா? உனக்கா வந்து அக்காவைப் பார்க்கணும்னு தோணாதா?… இங்கே வா சொல்றேன்…” என்றொரு செல்லமான கண்டிப்புடன் அவளை வரவேற்றாள் கல்யாணி. பட்டு வெட்கத்துடன் கல்யாணியின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு சொன்னாள்: “நான் தினம் தினம் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கேன் அக்கா. அவர் கூட்டிக்கிட்டு வந்தால்தானே? அவருக்கே வீட்டுக்கு வர ராத்திரி பத்துப் பதினொண்ணாகுது…”

“இங்கே வாங்க-உங்க ஹீரோயின் வந்திருக்கா” – ரங்காவைக் குரல் கொடுத்து அழைத்தாள் கல்யாணி.

கூலிங் கிளாஸைத் துடைத்துக் கொண்டே வெளியில் வந்த ரங்கா பட்டுவையும் தாமுவையும் முகமலர்ச்சியுடன் விசாரித்தான்: “என்னம்மா பட்டு? எப்படி இருக்கு வாழ்க்கை?”

அவள் அடக்கமாகப் பதில் சொன்னாள்:

“நம்ப மனசு எப்படி இருக்கோ, அப்படி இருக்குது வாழ்க்கை!”

“அடே அப்பா: ரெண்டு மாசத்திலே ரொம்பக் கத்துக்கிட்டு இருக்கியே… கேட்டியா கல்யாணி, உன் தங்கச்சி சொல்றதை: ‘மனசு எப்படி இருக்கோ அப்படி இருக்குதாம் வாழ்க்கை…’ எவ்வளவு சாதாரணமாக எவ்வளவு ஆழமான விஷயத்தைச் சொல்லிடறாங்க சில பேர்…” என்று வியந்தான் ரங்கா.

ரங்காவின் மனம் பட்டு கூறிய அந்த வார்த்தைகளை மீண்டும் அலசிப்பிற்று: ‘மனசு எப்படியோ, அப்படி வாழ்க்கை,”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அண்ணாசாமி திடீரென்று ஏதோ குஷியில் தபலாவைத் தடதடவென்று தட்டி முழக்கினார்.

“என்ன ஸார்-தபலா பழகறீங்களா? கொஞ்சம் உங்க ‘லைன்ஸெ’ப் பார்த்துக்குவமா? அங்கே வந்து அப்பறம் உளறப் போறீங்க” என்று தபலாவைத் தள்ளி வைத்தாள் கல்யாணி.

“ஐயோ! அது உளறல்னு நெனச்சியா நீ? சும்மா ஒரு காமெடி எஃபக்டுக்காக அப்படி...” என்று மழுப்பினார் அண்ணாசாமி.

“ஸார்-உங்களுக்கு உளறல் மன்னன்’னு பட்டம் குடுக்கலாமா?” என்று தாமு ஏதோ சொல்ல ஆரம்பித்ததும்.

“யூ ஷட் அப்?” என்று கோபித்துக் கொண்டார் அண்ணாசாமி.

“சாமி, நீங்க செய்யற அக்ரமத்திலேயே ‘டாப்’ என்ன தெரியுமா” என்ற கல்யாணி ரங்காவைப் பார்த்து “உங்களுக்கு அது தெரியாதே! ஆபீசுக்கு நாழியானாலும் இதைக் கேட்டுட்டுப் போங்க...ஒரு நிமிஷம்” என்று கூறியபடி எழுந்தோடி வாயிலிருந்ததைத் துப்பிவிட்டுச் சிரித்துக் கொண்டே வந்து, என்றோ ஒரு நாள் மேடையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விளக்க ஆரம்பித்தாள். அவள் அதை விவரித்துச் சொல்ல ஆரம்பித்தவுடனேயே அது பற்றி ஏற்கனவே தெரிந்தவர்கள் ‘ஓ’வென்ற கைதட்டி சிரிக்க ஆரம்பித்தனர்.

“வீடும் வெளியும் நாடகத்திலே கிளைமாக்ஸ் சீன்... பரமசிவன் வந்து என் கழுத்தை நெரிப்பான். அப்பா ரோல் இல்லியா, இவர்-வந்து பதறிப் பேசற டைலாக்-நிறைய இருக்கும். எனக்குத் தெரியும் நிச்சயம் உளறப் போறார்னு. ஆனாலும் பாதகமில்லே... அந்த டென்ஷன்லே உளறினாலும் இயற்கையா இருக்கும்னு நெனச்சிக்கிட்டேன்...மனுசன் வந்தவர் பேசாம மரமாட்டமா நிக்கறார்...இவர் டைலாக்குக்கு அப்புறம்தான் அவன் என் கழுத்தை விட்டுட்டு இவர்கிட்டே பேசணும். இவர் பேசாம நிக்கறார். அவன் கழுத்தை நெரிச்சுக்கிட்டே இருக்கான்: நான் இவருக்கு ஞாபகப் படுத்தற மாதிரி ‘அப்பா என்னப்பா பேசாம நிக்கறீங்க?... பேசுங்கப்பா’ன்னு கூடக் கத்தறேன். மனுசன் திருதிருன்னு முழிச்சுட்டு மேடையிலேயே ‘என்னம்மா பேச? மறந்துட்டுதே’ன்னு ‘பிராம்ப்படர் எங்கே!’ன்னு கேட்டாரே....” என்று கூறக் கல்யாணியும் ரங்காவும் எல்லோருமாகச் சேர்ந்து ‘ஓ’ வென்று சிரித்தனர்.

‘நோ! நோ! திஸ் இஸ் டூ மச்: நான் டைலாக்கை மறந்துட்டுக் கொஞ்ச நாழி முழிச்சது வாஸ்தவம் தான். பிராம்ப்டரைக் கூப்பிட்டேன்கறதெல்லாம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சும்மா கற்பனை!” என்று இடைமறித்துக் கத்தினார் அண்ணாசாமி.

“ஐயிரு சமாளிக்கிறாரு… சமாளிக்கிறாரு” என்று கத்தினான் தாமு. அண்ணாசாமிக்கு முகம் சிவந்து போயிற்று.

“நீங்க யாரும் உளர்றதே கெடையாதா?.... எனக்கு ஒரு வேலையா குடுத்து இருக்கீங்க? சபாக்காரங்களைப் பார்த்துப் பேசறதும் நான்தான். ஒவ்வொருத்தரும் டிபன் சாப்பிட்டாங்களா, காப்பி சாப்பிட்டாங்களான்னு கவனிக்கறதும் என் வேலைதான். வடைக்குச் சட்னி இல்லேன்னு பிரிச்ச பொட்டலத்தோட முகத்திலே விட்டெறியமாதிரி இந்தத் தாமு வந்து எங்கிட்டக் கத்தறான். லைட்டுக்காரனை விசில் குடுத்தவுடனே இடுப்பிலே நிமிண்டிட்டு, அடுத்த சீனுக்கு ஓடிவரணும் மேடைக்கி. சில சமயத்திலே ‘பிட்’லேயே உக்காந்துண்டு ‘டைமிங்’ வேற குடுக்கணும்னு என் கையிலே இரும்பு வளையத்தைக் குடுத்துடறான் இவன். இத்தனை வேலையும் செஞ்சுண்டு டைலாக் மறந்து போறது” என்று பரிதாபகரமாகப் புலம்பினார் அண்ணாசாமி.

“என்ன ஸார்…. நீங்க எவ்வளவு கஷ்டப்படறீங்கன்னு அவுங்களுக்குத் தெரியாதா?.... நாடகக் கம்பெனியிலே நாலுபேர் சேர்ந்தா-தமாஷாப் பேசறதுன்னா யாரு, எப்ப உளறினாங்கன்னு பேசிக்கறதுதானே?” என்று அவருக்குச் சமாதானம் கூறினான் ரங்கா-“ நான் பொறப்படறேன்” என்று கூலிங்கிளாசை அணிந்து கொண்டு வெளியேறினான். கல்யாணி அவனைத் தொடர்ந்து சென்று வழியனுப்பினாள்.

தெருவில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.

மத்தியானம் ஆபீசுக்கு வந்து காலையில் எழுதாமல் இருந்த விஷயங்களைப் பரபரவென்று கிறுக்கிப் போட்டான் ரங்கா. எதுபற்றியும் யோசிக்காமல் வேலை செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்துடன் நான்கு மணி வரை எழுதிக் கொண்டிருந்தான்.

நாலரை மணிக்கு எல்லோருக்கும் டீ வாங்கிக் கொண்டு வரும் கான்ட்டீன் பையன் இவனுக்கும் டீ கொண்டு வந்தான்.

அப்போது மணி நாலரையாகிவிட்டது என்பதை உணர்ந்த ரங்கா, டீயைக் குடித்துவிட்டு ஒரு சிகரெட் டைப் பற்ற வைத்துக் கொண்டு இரண்டு மணி நேரமாக மேஜையில் குனிந்திருந்த நிலை மாறி, நாற்காலியில் சாய்ந்து அண்ணாந்து தலைக்கு மேலே சுழல்கிற ஃபேனைப் பார்த்தான்.

‘நம்ம மனசு எப்படி இருக்குமோ அப்படி இருக்குது வாழ்க்கை’ என்று பட்டு கூறினாளே, அதை இப்போது நினைத்துக் கொண்டான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“ஆமாம்: அவள் சாதாரணமாகச் சொன்ன அந்த வார்த்தைகள் ரொம்பப் பொருள் செறிந்தவை” என்று மனசில் சொல்லிக் கொண்டான்.

‘வாழ்க்கை என்பது தான் என்ன? ஒரே வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. காரணம் அவரவர் மனோபாவம் தானே? ஒத்த மனோபாவமுடைய இருவர் ஒன்றுபடுகையில் அந்த வாழ்க்கையில் பிரச்சனையே ஏற்படுவதில்லை. எப்படியிருந்தால் என்ன? ஒருவரை ஒருவர் பயன்படுத்திக் கொண்டோம், ஒருவருக்கொருவர் பயன்பட்டோம் என்று வாழ்கிற வாழ்க்கையில் பிரச்னைக்கே இடமில்லை: அப்படித்தான் நான் வாழ்ந்திருக்கிறேன்: தேவகியோடு நான் வாழ்ந்த வாழ்க்கை அப்படிப்பட்டது தான். அதில் எனக்குப் பிரச்னைகள் ஏதும் எழுந்ததில்லை. அப்போது என் மனசு அப்படி இருந்தது: எனவே வாழ்க்கை அப்படி இருந்தது: ஆனால் இவளைச் சந்தித்த நாளிலிருந்து இவளுக்காக நான் என்னென்ன உணர்ச்சிகளுக்கெல்லாம் ஆட்பட்டு விட்டேன்? அந்த உணர்ச்சிகளுக்கு அர்த்தம் இல்லையா, என்ன? பயன்படுவதும் பயன்படுத்திக் கொள்வதும் தானா? அதுவும்கூடப் பரஸ்பரம் முடிந்த அளவுக்குத் தானா….? காதல் ஒன்றும் வாழ்க்கைக்குத் தேவை இல்லை என்கிறாளே கல்யாணி… இதன் பொருள் என்ன? இவள் என்னைக் காதலிக்கவில்லை என்பதுதானே! அப்படியொரு நம்பிக்கையை என்னிடம் ஏற்படுத்துவதன் மூலம் தான் எதிலோ கட்டுப்பட நேரிடும் என்ற அச்சத்தினால் ஏற்படும் ஜாக்கிரதை உணர்ச்சியோ? அப்படியானால் அந்த அச்சமும், அந்த ஜாக்கிரதை உணர்ச்சியும் என் மீதுள்ள அவநம்பிக்கையின் அடையாளமா? இவ்வளவு தனித்த போக்கும் ஜாக்கிரதை உணர்வும் உடையவள் என்னை ஏன் இவ்வளவு தூரம் இழுத்தாள்? அவளாக இழுக்கவில்லையென்றாலும், நான் இவ்வளவு நெருக்கமாக வர ஏன் அனுமதித்தாள்? ஏன் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள் என்றெல்லாம் யோசித்தவாறே வெகு நேரம் உட்கார்ந்திருந்த பின் வீட்டுக்குப் புறப்பட எழுந்தான் ரங்கா.

ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருக்கும் போதுதான் ரங்காவுக்கு நினைவு வந்தது: கல்யாணி வீட்டிலிருக்க மாட்டாள்: நாடகத்துக்குப் போயிருப்பாள். அதனாலென்ன? அவனிடமும் ஒரு சாவி இருக்கிறது. இருந்தாலும் தனியே வீட்டில் போய் இருக்க அவனுக்கு வெறுமையாய் இருந்தது. அந்த நினைப்பே பிடிக்கவில்லை. தானும் நாடகத்துக்குப் போகலாமா என்று யோசித்தான்.

ஏனோ அந்த எண்ணமும் சரியெனத் தோன்றவில்லை. ஏதாவது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சினிமாவுக்குப் போகலாம் என்று தோன்றியது. அதற்கும் வீட்டுக்குப் போய்க் குளித்து வேறு உடை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நினைத்தபோது – அதன் பிறகு சினிமாவுக்குப் போவதற்காக என்று – வெளியே கிளம்புவதை நினைக்க ஒரு சலிப்புத் தோன்றியது.

அவனுக்குத் திடீரென ஆதிகேசவலு நாயக்கர் தெருவையும், சின்ன நைனாவையும், தொத்தாவையும் டீக்கடைக் காக்காவையும் பார்க்கலாமே என்று தோன்றியது.

ஆறு மாதத்துக்கு மேலாகிவிட்டது என்ற எண்ணமும், இந்த ஆறு மாதத்தில் அவர்களைப் பற்றித் தான் ஒரு தடவை கூட நினைத்துப் பார்த்ததில்லை என்ற உறுத்தலும் அவனுக்கு ஏற்படவே மிக விரைவாக அவன் ஸ்கூட்டரைத் திருப்பி ஓட்டினான்.

ஆதிகேசவலு நாயக்கர் தெருவில் அவன் நுழைகிற போது குழாயடியில் நின்றிருந்த பெண்கள் சிலர் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தனர். இவன் வருவதைத் தூரத்திலிருந்தே பார்த்துவிட்ட ஏழுமலை, ரங்காவின் வருகையைத் தெரிவிப்பதற்காக வீட்டுக்கு ஓடினான்.

ஆறு மாதங்களுக்கு முன் தினசரி ஆபீசிலிருந்து சொந்தமாகத் தன் வீடு என்ற உணர்வோடு வருவானே அதே மாதிரி இந்த ஆறுமாதப் பிரிவைத் தனியாக விலக்கி வைத்தவன் போல ஸ்கூட்டரைக் கொணர்ந்து வீட்டருகே நிறுத்திய பின் இறங்கிப் படியேறி உள்ளே வந்தான் ரங்கா.

“வாப்பா வா” என்று வாய் நிறைந்து அழைத்தவாறு தொத்தா வந்தாள்: “ வழி தெரிஞ்சுதா? எங்களையெல்லாம் நெனப்பு வச்சிக்கினு இருக்கியா?... இங்கு யாரு வந்திருக்கிறதுன்னு வந்து பாரு…” என்று புருஷனை அழைத்தாள். அங்கே இருக்கிறவர்கள் புருஷனை ‘நீ, வா போ’ என்று அழைக்கும் ஒருமை விளி இப்போது ரங்காவுக்கு மிகவும் வித்தியாசமாகத் தெரிந்தது. முன்பெல்லாம் அது மிகவும் சாதாரணம். ஏன், தேவகி கூடத் தன்னை அப்படித்தான் அழைப்பாள் என்கிற நினைப்பு வந்தது அவனுக்கு.

வீட்டின் பின்னம் பக்கத்திலே ஏதோ தச்சு வேலை செய்வதில் ஈடுபட்டிருந்த சின்ன நைனா மேலே படிந்திருந்த மரத்தூளைத் தட்டிக்கொண்டே வந்தார்: “வாங்க ஸார், வாங்க” என்று சந்தோஷத்தோடும் பரிகாசத்தோடும் வரவேற்றார். “சௌக்கியமா இருக்கியா?... டேய் ஏழுமலை, சாவியெடுத்து அண்ணாத்தெ ரூம்பெத் தெறந்துவுடு-அப்படியேதாம்பா வெச்சிருக்கேன். வாரத்துக்கு ஒரு நாளு தெறந்து கிளீன் பண்ணி வெக்கறது. அவ்வளவுதான். மேலே ஒரு ரூம்பு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கட்டலாம்னு… அதுக்காகத்தான் கொஞ்சம் வேலை பார்த்துக்கினு இருக்கேன்…! என்று சொல்லிக் கொண்டே ஏழுமலை திறந்துவிட்ட ரங்காவின் பழைய ரூமுக்குள் அவனையும் அழைத்துக் கொண்டு வந்தார் சின்ன நைனா.

ரங்கா அறையை ஒரு நோட்டம் முற்றிலும் பார்த்தான். அவனது புத்தகங்கள், அறைக்குக் குறுக்கே அவன் கட்டிவைத்த ஒரு கொடிக் கயிறு, உட்கார்ந்து எழுதுகிற மேஜை நாற்காலி, ஒரு பக்கம் சுருட்டி கட்டி வைத்திருக்கிற அவனது பழைய தனிப் படுக்கை-எல்லாவற்றையும் ஓர் ஏக்கத்தோடு அவன் பார்த்தான்.

“குந்துப்பா” என்று அவனுக்கு நாற்காலியை இழுத்துப் போட்டுத் தனது மேல் துண்டால் தூசு தட்டினார் சின்ன நைனா.

“அடிக்கடி வந்து போய்க்கினு இரு. நாங்களல்லாம் உன் மனுஷாளு இல்லியா? இப்ப நீ போயி எம்மா நாளு இருக்கும்?”

“ஆறு மாசம் ஆகுது” என்றான் ரங்கா.

“ஆறு மாசமாயிடுச்சு? நேத்து மாதிரி இருக்குது. ஆறு மாசமா எங்க நெனப்பே வரலியா உனக்கு! உன் பொண்ணு எப்படி இருக்குது? அதெனாச்சும் அடிக்கடிப் போயிப் பாத்துக்கினு இருக்கியா? மாசா மாசம் பணம் அனுப்புறியா?” என்று விசாரித்தார் சின்ன நைனா.

“அதெல்லாம் எப்பவும்போல ஒழுங்கா அனுப்பிடறேன்” என்று கடைசியாகக் கேட்ட அவரது கேள்விக்கு மட்டும் பதில் சொன்னான் ரங்கா.

“எந்தா ஸாரே! சுகமாயிட்டு இருக்குதா? இந்தப் பக்கமே வரலியே…” என்று டீக்கடைக் காக்காவின் குரல் கேட்டு-

“வாங்க, இருக்கேன்-சௌக்கியம்தானே” என்று பதிலுக்கு இவனும் விசாரித்தான்.

“இருக்கட்டும்…. நீங்க வந்ததைப் பார்த்தேன்: ரொம்ப நாளாச்சே பாத்து… சாயா அனுப்பித்தரட்டா?” என்று கேட்டுவிட்டுப் போனான் அவன்.

அறைக்கு வெளியே அந்த வீட்டைச் சேர்ந்த சிறுவர்களும் சிறுமிகளும் இவனை வேடிக்கை பார்க்க வந்து குழுமி இருந்தனர். தொத்தாவும் வந்து நின்று கொண்டாள்.

கல்யாணியைத் தான் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இவர்களுக்கெல்லாம் பிடிக்கவில்லையென்றாலும், அதனைப் பொருட்டுபத்தாமல் எப்போதும் போல் தன்னிடம் பழகுகிற அன்பினை உணர்ந்து உள்ளூர நெகிழ்ந்தான் ரங்கா.

சற்று நேரத்துக்கெல்லாம் டீக்கடைப் பையன் முகம் மலர்ந்த சிரிப்புடன் ஸாஸரால் மூடிய டீக்கப்பை ஏந்தி வந்து இவனிடம் நீட்டினான்.

“என்னடா எப்படி இருக்கே?” என்று அவன் முதுகில் தட்டி விசாரித்தான் ரங்கா.

“இருக்கேன் ஸார்” என்று பவ்யமாகப் பதில் சொன்னான் பையன். “நீங்கதான் எங்களையெல்லாம் விட்டுட்டு எங்கேயோ பூட்டுதே! இப்ப ஸார் எங்கே இருக்குது?” என்று விசாரித்தான்.

“ஆபீஸ்லே வந்து பாரேன்...” என்றான் ரங்கா.

“ஒரு தடவை வரேன் ஸார்.... நம்ப ஆபீஸ்லே கான்டீன் இருக்குதில்லே?” என்று விசாரித்துக் கொண்டான்.

“ஏன்? காக்கா கடையை வுட்டுடலாம்னு பாக்கிறியா?” என்று கேட்டான் ரங்கா.

“அது இல்லே ஸார்-இவங்க ஆளுகாரு நெறைய ஆயிட்டாங்க.... கொஞ்சம் பேரு அப்பிடி வேற இடம் கெடைச்சா போயிடணும்... ஆனா எங்கே போனாலும் நமக்கு இந்தத் தெருவையும் மனுஷாளையும் விட முடியாது ஸார்.... மறுபடி இங்கே வந்துடும்” என்றான் பையன்.

“பாருப்பா... அவன், எங்கியோ ஊருவுட்டு ஊரு பொழைக்க வந்தவனுக்கு இருக்கிற அபிமானம் உனக்கு இல்லியே-நீ உம்பாட்டுக்குப் போயிட்டியே.

”அபிமானம் இல்லாமலா இப்ப வந்திருக்கேன்” என்று கூறினான் ரங்கா.

“அதுக்கில்லே-அவனுக்கு இருக்கிற ஒரு பிரியத்தைப் பாரு” என்று விளக்கினார் நைனா.

அறை வாசற்படியில் நின்றிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு தொத்தா வந்தாள். அவள் கையில் ஒரு சிறு தட்டில் ஏதோ பலகாரம் கொண்டு வந்தாள்.

கையிலிருந்த டீ கப்பை மேசைமேல் வைத்துவிட்டு அதை வாங்கிக் கொண்டான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சின்ன நைனா தரையில் குத்துக்காலிட்டுச் சுவரோரமாக உட்கார்ந்து கொண்டார்.

வேடிக்கை பார்க்க வந்த சிறுவர் சிறுமியர் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்தனர்.

“அப்பாலே வந்து எடுத்துக்கறேன் ஸார்” என்று சலாம் வைத்துவிட்டுப் போனான் டீக்கடைப் பையன்.

சின்ன நைனா மடியிலிருந்து ஒரு சுருட்டை எடுத்து விரலால் நசுக்கி, லேபிளைப் பிய்த்து, முனையைப் பல்லால் கடித்துத் துப்பிவிட்டு அவனிடம் கேட்டார்: “ஏம்பா-நெஜமாலுமே அந்த டிராமாக்காரப் பொண்ணே ரிஜிஸ்தர் கல்யாணம் செய்துக்கினியா?”

“ஆமாம்...” என்று சொல்லிவிட்டு இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது என்று பார்த்தான் ரங்கா. இவன் பதிலைக் கேட்டு அவர் ஏனோ வாய்க்குள் சிரித்துக் கொண்டார். அவருக்கு இது ரொம்ப வேடிக்கையாக இருந்தது போலும்.

“அது எப்படியப்பா முடியும்? நாலு பேரோட பயகறவ.... வேசம் போட்டுக்கினு சபையிலே ஆடறவ... குடும்பத்துக்குச் சரியா நடந்துக்க முடியுமா?....” என்று மிகவும் கவலையோடு விசாரித்தார். பிறகு தொத்தா இருக்கிறாளா என்று அறைக்கு வெளியே எட்டிப் பார்த்து விட்டுச் சொன்னார்: “நீ பொறக்கறதுக்கு மின்னாடி கதை. அப்பல்லாம் டிராமாவிலே பொம்பளிங்க ஏது? சின்னச் சின்னப் பசங்கதான்.... எப்பிடி இருப்பானுங்க. தெரியுமா? பொம்பளிங்க கெட்டாளுங்க போயேன்... பொம்மனாட்டிங்க வர மாட்டாங்க.... அப்பதான் ரெண்டு மூணு பேரு தலை காட்னாளுங்க... என்னா மாதிரி ஜனங்க கூடும் தெரியுமா? சபா ரஞ்சிதம்னு கேள்விப்பட்டிருக்கியா?... ஆரவல்லி சூரவல்லியிலே தங்கச்சிக்காரியா வருவா. தெக்கத்திக்காரி....ஜாதியே அதான். சும்மா அவகிட்டே பேசறதுக்கு ஒவ்வொருத்தனும் வந்து நிப்பானுங்க... எப்பேர்ப்பட்ட ஆளுங்க! ஜமீன்தாருங்க.... ஸேட்டுங்க.... அவ கேட்டா: ....’ இத்தினி பேரு இப்படியெல்லாம் வரீங்களே-எவனாவது என்னைக் கல்யாணம் கட்டிக்கினு சம்சாரம் நடத்திறீங்களாடா’ன்னு...சும்மா வாய்ப் பேச்சிக்கிக் கேட்டதுக் கோசரம் அடிக்கப் பூட்டானுங்களே அவளை-அப்படி ஒரு காலம்.... சரி போவட்டும். உம் மனசுக்குப் புடிச்சமாதிரி நல்ல பொண்ணா இருந்துதுனா நடந்தது நடந்திடுச்சி-இனிமே டிராமாவும் வேணாம், சினிமாவும் வேணாம், கொண்ணாந்து இங்கே வெச்சிக்கினு சம்சாரம் பண்ணு. அத்தெவுட்டுட்டு அவ பின்னாலே போறது நம்ப

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சாதிக்காரனுக்கு நல்லா இருக்குதா? நாலுபேரு அசிங்கமா பேசமாட்டாங்க" என்றார் சின்ன நைனா.

ரங்கா புருவம் நெரிய யோசிக்கலானான்.

"ஆமாம்... அந்தப் பொண்ணு என்னா ஜாதி?" என்று மேலும் துருவினார் சின்ன நைனா. அதற்குப் பதில் சொல்ல விரும்பாத ரங்கா,

"என்ன ஜாதியோ-இந்தக் காலத்தில் யாரு நைனா அத்தெயெல்லாம் கேக்கறாங்க! நம்மமாதிரி ஜாதியாத் தான் இருக்கும்..." என்று சொல்லிவிட்டு அவர் சற்றுமுன் கூறிய யோசனை பற்றிப் பரிசீலித்தான்.

வாழ்ந்த பழக்கத்தினாலோ என்னவோ இங்கேயுள்ள மனிதர்களின் வாழ்க்கை மிகவும் அர்த்தம் செறிந்ததாக அவனுக்கு இருந்தது. இங்கே வந்து உட்கார்ந்திருக்கிற இந்த ஒரு மணி நேரமாக அவனுக்கு மனசில் ஏதோ ஒரு ஆறுதல் ஏற்படுகிறது. இவர்களை விட்டுத் தான் போய் ஏதோ ஒரு பொய்யான வாழ்க்கையில் எதையோ பூசிக் கொண்டு நிற்பது போல் தோன்றியது ரங்காவுக்கு.

"இங்கே வாழ்கிறவர்கள் எல்லாருமே கஷ்டப்பட்டு உழைக்கிறவர்கள், எனவே வாழ்க்கையின் இன்பம் இவர்களுக்கு மிகுந்த மரியாதையோடு கிட்டுகிறது. இவர்களிடம் பொய்யான ரசனைகளும், போலித்தனமான ஆடம்பரங்களும் இல்லை. ரோஜாச் செடிகளுக்காகவும் குரோட்டன்ஸுக்காகவும் ஆயிரக் கணக்கில் பணத்தை அள்ளியிறைக்கும் அநியாயத்தை இவர்களால் சகித்துக் கொள்ள முடியாது: அப்படிப்பட்ட ரசனைகள் இவர்களுக்குப் புரியாது. புருஷனுக்காக இவர்கள் எதையும் விட்டுக் கொடுப்பார்கள். இந்தக் குழந்தைகள் தெருவோரம் விற்கிற வடையையும் சுண்டலையும் வாங்கித் தின்பதிலே வாழ்வின் சுகத்தை அனுபவிக்கிறார்கள். அந்தவடையின் மணம் நன்றாகத்தான் இருக்கிறது. எளிமையான இந்த வாழ்க்கையில் உறவுகள் மிகவும் இறுக்கமாக இருக்கின்றன. நாம் பார்க்கவும் கூசுகிற மாதிரி இருக்கிற பெண்களையும் குழந்தைகளையும் இங்கே வாழ்கிற ஆண் மகன் உயிருக்குயிராய் நேசிக்கின்றான். இவர்களிடையே இருக்கின்ற உறவுகள் மரணத்தால் மட்டுமே பிரிக்கப்படுகின்றன. இவர்கள் இன்னும் சிறிது பொருளாதார மேம்பாடு மட்டுமே அடையவேண்டும். அப்போது இங்குள்ள சிறு குறைகள் அகன்று போய்விடும். இதை விட்டுவிட்டு ஹோட்டல் வாசம் மாதிரி ஒரு வாழ்க்கை நடத்த நான் போய்விட்டேனா?' என்றெல்லாம் யோசித்தான் ரங்கா.

இவன் யோசிக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட சின்ன நைனா

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சொன்னார்: "ஒண்ணும் அவசரமில்லே, நல்லா யோசிச்சுப்பாரு: நீ ஆம்பளை. வேற ஜாதியிலே போயி ஒருத்தியே இட்டாந்து வெச்சிக்கினாக்கூட அதுக்காக யாரும் ஒன்னைத் தள்ளிட முடியாது. தோ, மெத்த மேலே இரண்டு ரூம்பு போடப் போறேன்: நம்ப மனுஷாளோட மனுஷாளா வந்து இரு... யாருமில்லாத அனாதி மாதிரி ஏன் எங்கியோ போயி இருக்கணும்? இது உன் பாட்டன் பேரு கொண்ட தெருவு, இங்கே இருக்கிற மரியாதை வருமா?"

"அதெல்லாம் நடக்கிற காரியமில்லே நைனா.... என்னை வேணுமானா சொல்லு.... வாரத்துக்கு ஒரு தபா வந்து போய்க்கினு இருக்கேன். அதெல்லாம் இங்கே வந்து இருக்கிறதுக்குச் சரிப்பட்டு வராது! என்றான் ரங்கா.

"நல்லாருக்குதுப்பா நீ சொல்றது? அதுக்குச் சரிப்பட்டு வராதுன்னா அப்பாலே நீ மட்டும் எதுக்குப் போயி அப்படி அங்கே குந்திக்கணும்? உனக்குப் பொண்ணா இல்லே? எனக்கு என்னமோ நீ பேசறது கெவுருவமா இல்லே? ஆதிகேசவலு நாகிரு பரம்பரையிலே பொம்பளை பின்னாலே போனவன் நீதாம்பா... சே சே! சரி எப்படியோ... இப்படிப் போறவன் என்னைக்காவது புத்தி வந்து திரும்பி வருவான். யோசிக்காம பொம்பளையைத் தொட்டுடலாம்... யோசிக்காம பொம்பளைப் பேச்சியெக் கேட்டுக்கினு அவகூடப் போவக்கூடாது... உன் வழிக்கு அவளைக் கொண்டாரணும்... அந்தச் சம்சாரம்தான் நல்லா இருக்கும். நீ படிச்சபுள்ளை... ஆசை அறுபது நாலு, மோகம் முப்பது நாலுன்னு... சரிதான்!" என்று அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவன் உள்ளே புதிய கலக்கத்தையும் ஏதாவது உறுதியான ஒரு முடிவில் தான் நிலைபெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

சின்ன நைனா சொல்வது மிகவும் பழைய வாதம் போல் தோன்றினாலும் - புதுமை என்றும், நாகரிகம் என்றும் நம் நிம்மதியைக் கெடுத்துக்கொண்டு, சுயமரியாதையை இழந்து நிற்பதை விடவும் சரியான வாழ்க்கை நெறி என்று தோன்றியது.

ஆனால் அப்படியொரு யோசனையைக் கல்யாணி ஏற்றுக் கொள்வாள் என்று அவனுக்கு நம்பிக்கை இல்லை. தான் இதைச் சொல்லி அவள் மறுத்துவிட்டாள் என்றால் அதன் பின் தான் என்ன செய்வது என்று குழம்பினான் ரங்கா.

அவளுக்குத் தன்னிடம் உண்மையான காதல் இருந்தால் எப்படி இந்த யோசனையை மறுப்பாள்? காதலின் பொருட்டு அரச கிரீடத்தை

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இழந்தவர்கள் உண்டே? எத்தனை ஐரோப்பியப் பெண்கள் இந்தியர்களை மணந்து தங்களுக்கு முற்றிலும் புறம்பான கலாசாரத்தைக்கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்!... அப்படியானால் தானும் அவளோடு சேர்ந்துவிட்டது காதலின் விளைவுதானே! இப்போது ஏன் இப்படிக் குழம்ப வேண்டும்?' என்று தன்னையே அவன் கேள்வி கேட்டுக் கொண்டான்.

'யாராவது ஒருவர் யாரோடாவது இணைந்தாலே உறவு ஏற்பட்டுவிட்டது என்றுதானே புரிந்துகொள்ள வேண்டும்? அதுதான் நான் அவளோடு என் வாழ்வைப் பிணைத்துக் கொண்டதன் மூலம் ஏற்பட்டுவிட்டதே! இதை மறுபடியும் கிளறிப் பிரச்னைகளை நான்தான் உருவாக்குகிறேனோ?' என்று அவன் தன்மீதே ஒரு மனோநிலையில் குற்றம் கண்டான்.

தனது இந்தக் குழப்பங்களை எல்லாம் வெளியே தெரியாமல் சமத்காரமாக அவன் மறைத்துக் கொண்டான்.

தொத்தா கொண்டுவந்த பலகாரங்களையும் டீயையும் சாப்பிட்டான் ரங்கா.

"இருந்து சாப்பிட்டுட்டுப் போப்பா" என்று அன்புடன் வந்து வேண்டினாள் தொத்தா.

"இன்னொரு சமயம் வரேன் தொத்தா. இப்ப இந்த பக்கம் ஒரு வேலையா வந்தேன்..." என்று புறப்பட்டான் ரங்கா.

அவன் வெளியில் வந்தபோது அங்கிருக்கும் இரண்டு போட்டி மன்றங்களைச் சேர்ந்த இளைஞர் சிலர் இவனைக் காண்பதற்காக ஒன்றாகச் சேர்ந்து வந்து காத்து நின்றிருந்தனர்.

"ஸார், நீங்க இங்கேருந்து போனது எங்களுக்குத் தான் ரொம்பக் கஷ்டமாப் பூட்டுது" என்றான் ஒருவன்.

"போன வாரம் காப்ரேஷன்லேருந்து ஒரு நோட்டீஸ் வந்திச்சி. நீங்க இருந்தீங்கன்னா என்னான்னு படிச்சுக் காமிச்சு உடனே அதுக்கு என்னா செய்யணும்னு சொல்லுவீங்க... இப்ப கை ஒடிஞ்ச மாதிரி இருக்குது" என்றான் ஒருவன்.

"அதுக்கு என்ன? இனிமே வாரத்துக்கு ஒரு தபா வரேன்..." என்று அவர்களிடம் சொன்னபோது அவர்களது மகிழ்ச்சியை அவனால் உணர முடிந்தது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

என்னதான் இந்த வாழ்க்கை தன்னை வலையிட்டு இழுத்த போதிலும், இதற்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத கல்யாணியைக் கொண்டுவந்து இந்த வாழ்க்கைக்கு நிர்ப்பந்திப்பது நியாயமல்ல என்று தன்னுள் தீர்மானம் கொண்டான் ரங்கா.

நாடகம் முடிந்து கல்யாணி வீட்டுக்கு வரப் பத்து மணி ஆயிற்று. ரங்கா எட்டரை மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திருந்தான். சற்று நேரம் ரேடியோவில் ஏதேதோ நிகழ்ச்சிகளை ஒவ்வொரு ஸ்டேஷனாக மாற்றி மாற்றிக் கேட்டபின், எதிலும் திருப்தியில்லாமல் எரிச்சலுடன் ரேடியோவை நிறுத்திவிட்டு, முன்புறத்தில் ரோஜாச் செடிகளின் நடுவே- நான்கு அடி அகலத்துக்கு, இரண்டு பக்கமும் செங்கற்களை முக்கோணமாகத் தெரிகிற மாதிரிப் புதைத்திருக்கும் நடைபாதை மணலில் ஒரு சாய்வு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டுப் பக்கத்தில் ஒரு மோடாவின் மீது ஆஷ்-டிரேயும், சிகரெட் பாக்கெட்டும் நெருப்புப் பெட்டியும் கொண்டு வந்து வைத்துக்கொண்டு நிம்மதியாகச் சாய்ந்து வானத்து நட்சத்திரங்களை வெறித்துக் கொண்டிருந்தான்.

இன்றைக்கு நிலா இல்லை: எனவே இருட்டாக இருந்தது. தெருவிளக்கின் வெளிச்சத்தை அந்தத் தூங்கு மூஞ்சி மரத்தின் கிளை திரையிட்ட மாதிரி மறைத்தது.

ரங்கா ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். சாயங்காலம் சின்ன நைனா சொன்ன யோசனையைப் பற்றி மீண்டுமொரு முறை சிந்தித்துப் பார்த்தான்.

சின்ன நைனாவின் கோணத்திலிருந்து பார்க்க அவரது நியாயம் மிகவும் சரியானதே என்று தோன்றியது. ஆனால், தன்னளவில் கல்யாணியை நடிப்புத் தொழிலைக் கைவிடச் சொல்லிக் கேட்பதும், தன்னோடு ஆதிகேசவேலு நாயக்கர் தெருவில் வந்து குடித்தனம் நடத்தும்படி வற்புறுத்துவதும் அக்கிரமமான, மனமறிந்து செய்கிற அத்துமீறல் காரியம் என்று அவனுக்குப் பட்டது.

'அது சரியான காரியமாகாது. அவளை அப்படி ஒரு தர்மசங்கடமான நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்துவது ஒரு நம்பிக்கைத் துரோகம் ஆகும். ரொம்பவும் சமத்துவமாகவும், நாகரிகமாகவும் பழகி உறவுகொண்டு, அந்த உறவினாலேயே அவளை அடிமை கொண்டு அதன் பின்னர் மிகவும் மோசமான, பட்டிக்காட்டுத்தனமான ஒரு தாம்பத்திய வாழ்க்கையின் தொழுவத்தில் கொண்டு அவளைக் கட்டுகின்ற முயற்சியாகும் அது' என்றெல்லாம் அவன் எண்ணமிட்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஆனாலும் தன்மீது இவள் கொண்ட காதலின் பொருட்டு எந்த வாழ்க்கைக்கும் சித்தப் படுவாளானால் தன்னிலும் பாக்கியவான் யாரும் இருக்க முடியாது என்று அவன் கற்பனை செய்தான். அப்படியொன்றும் இவளை ஓர் அடிமைச்சியாக ஆக்கி மகிழ்கிற குணம் தனக்கில்லை என்றும் அவன் தன்னைப் பற்றியே யோசித்தான். நான் இவளை எனது மனைவி என்கிற, எனது எஜமானி என்கிற பீடத்தில் வைத்து மரியாதையோடும் அன்போடும் காதலோடும் வாழ்ந்து காட்டுவேனே என்று தன்னுள் அவன் திடம் கூறிக் கொண்டான்.

‘இதற்கெல்லாம் என் பொருட்டு இவள் கொண்டுள்ள காதலுக்கு அடையாளமாக எதையேனும் விட்டுக் கொடுக்க, தியாகம் செய்ய இவள் தயாரா?’ என்று குழம்பினான் ரங்கா.

இவள்தான் ‘காதலே வேண்டாம்’ என்கிறாளே என்று உதடு பிதுங்க முனகிக் கொண்டு மனம் வெதும்பினான் ரங்கா.

சின்ன நைனா சொல்லுகிறமாதிரி கல்யாணியை அழைத்துக் கொண்டு போய் ஆதிகேசவேலு நாயக்கர் தெருவில் குடிவைத்து, தேவகியோடு இதற்கு முன்னர் ஒருமுறை வாழ்ந்திருக்கிறானே அதே தாம்பத்தியத்தைத் திரும்ப ஒருமுறை வாழ அவன் விரும்பவில்லை. அந்த எண்ணமே அவனால் சகிக்க கூடியதாக இல்லை. அப்படிப்பட்ட வாழ்க்கை அவனைப் பொறுத்தவரை யாந்திரிகமானது. அவனுக்கு மீண்டும் அவ்விதம் வாழ ஆசையும் இல்லை. அதில் இவளையும் கொண்டுபோய் அமுத்தி விடுவதில் லாபமும் இல்லை என்பதை அவன் அறிந்தான்.

எனினும் கல்யாணியை, அவளது காதலை, தன்மீது அவளுக்கு அவளேயறியாமல், காதல் இருக்கிறதா என்று அவளது உள் மனத்தை-சோதித்தறியும் பொருட்டு சின்ன நைனா கூறிய யோசனையை அவள் முன் வைத்து அதற்கு அவன் எவ்விதம் பிரதிபலிப்புக் கொள்கிறாள் என்று காண அவன் திட்டமிட்டான்.

‘நான் ஏன் இப்படியெல்லாம் திட்டமிடுகிறேன்? நான் ஏன் இவ்விதமெல்லாம் அவளைச் சோதிக்க முயல்கிறேன்? நான் ஏன் அவள் காதலைச் சந்தேகிக்கிறேன்?’ என்று திடீரென மாறி நின்று அவன் யோசித்தான்.

‘கல்யாணி என் மனைவி, சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்ட உறவில் அவள் என் மனைவி... இந்த உண்மை ரொம்பவும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகிறதே, ஏன்?

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

‘அவளுக்கு இப்படிப்பட்ட குழப்பங்கள், அச்சங்கள், சந்தேகங்கள், என்னைச் சோதிக்க வேண்டுமென்ற உறுத்தல் ஒன்றுமே இல்லையே, ஏன்?’

‘அவள் மீது நான் கொண்டுள்ள நேசம் குறைவுடையது அல்ல என்று எனக்கு நிச்சயம் தெரிகிறது. என்னளவு – நான் அவள் மீது கொண்டுள்ள காதலின் அளவு – அவள் என்மீது கொண்டிருக்கவில்லை என்பதே இதன் காரணமா?’

‘யார், யார் மீது கொண்டுள்ள காதலின் அளவு அதிகபட்சமானது என்று எதைக்கொண்டு அளப்பது? எனது அவநம்பிக்கையை வைத்து எனது நேசம் அதிகமென்பதா? அவளது நம்பிக்கையை வைத்து அவள் என்மீது கொண்டுள்ள காதலின் அளவு குறைவு என்பதா? இது எப்படிச் சரியாகும்?” என்றெல்லாம் அவன் குழப்பமடைந்தான். தனது இந்தக் குழப்பங்களை அவள் தான் தீர்த்து வைக்க முடியும் என்று அவன் நம்பினான்.

பத்து மணிக்குக் கல்யாணி வந்தாள். வாசலில் டாக்ஸி வந்து நின்றபோது கண்களை மூடி யோசனைகளில் ஆழ்ந்திருந்த ரங்கா, டாக்ஸி வந்து நிற்கிற சத்தம் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தான். டாக்ஸியில் வேறு யாரோ நாடகம் சம்பந்தப்பட்டவர்கள் இருந்தனர். அவள் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வருவதற்குள் ஈசிச்சேரை மடக்கி எடுத்துக்கொண்டு உள்ளேபோனான் ரங்கா. ஆஷ்டிரே வைத்திருந்த மோடாவை எடுக்க அவன் திரும்ப வந்தபோது கல்யாணி அவன் எதிரே வந்து அருகே நின்று கேட்டாள்.

“நீங்க வந்து ரொம்ப நாழியாச்சா? நாடகத்துக்கு வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்...”

ரங்கா பதில் ஒன்றும் சொல்லாமல் ஒரு புன்னகையோடு அவளைப் பார்த்தான். அவள் ‘மேக்-அப்’பைக் கூடக் கலைக்காமல் வந்திருந்தாள். அவள் கையிலிருந்த சிறு பெட்டியை வாங்கிக்கொண்டு அவளை வீட்டிற்குள் வெளிச்சத்துக்கு அழைத்துவந்து நன்றாகப் பார்த்தான் ரங்கா. அவள் ‘மேக்-அப்’பில்.... அந்த நாடக அலங்காரத்தில் மிக அழகாக இருந்தாள்.

“இன்னக்கி நாடகம் எப்படி இருந்தது?” என்று விசாரித்தான் ரங்கா.

“ரொம்ப நல்லா ரசிச்சாங்க...” என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் சென்றாள் கல்யாணி. ரங்கா அவளுடன் சென்று, அவள் கண்ணாடியில்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

முன்னே நின்று 'மேக்-அப்'பை அழிக்கிறபோதும், உடை மாற்றிக் கொள்ளும் போதும் சிறு பையன் மாதிரி பக்கத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

"பட்டு எங்கே? அப்படியே போயிட்டுதா?" என்று அவன் கேட்ட கேள்விக்கு, முகத்தில் க்ரீமைப் போட்டுக் குழப்பித் துடைத்துக் கொண்டிருந்த கல்யாணி, 'ஆமாம்' என்று தலையாட்டி விட்டுச் சற்று நேரம் கழித்துச் சொன்னாள்:"பாவம், நீங்க நெனைக்கிறமாதிரி அவள் ஒண்ணும் அந்தக் காதலினாலே அப்படியே சந்தோஷக் கடலிலே மிதக்கலேன்னு தெரியுது... மத்தியானம் என்னமோ கேட்டதுக்கு என்கிட்டே தனியா வந்து அழுதா. எனக்கு மனசு கஷ்டமா இருந்ததனாலே அதெப்பத்தி ஒண்ணும் துருவிக் கேக்கலே... விட்டுட்டேன். பொண்ணு கஷ்டப்படறா, நாம என்னா செய்யறது? யார்கிட்டே போயி அவள்தான் சொல்லிக்க முடியும்? தானே தேடிக்கிட்ட வாழ்க்கை தானே?"

கல்யாணி பட்டுவுக்காக உள்ளூர வருத்தம் கொண்டிருக்கிறாள் என்று அவள் முகத்தைப் பார்த்துப் புரிந்து கொண்டான் ரங்கா.

"வாழ்க்கைன்னா சந்தோஷமும் இருக்கும், கஷ்டமும் இருக்கும்" என்று கல்யாணிக்கு ஆறுதல் கூறினான் ரங்கா.

கல்யாணி ரங்காவைக் கண்ணாடியினூடே பார்த்துச் சொன்னாள்: "நீங்க சொல்றது சரி. ஆனால், அந்தக் கஷ்டம் இன்னொருத்தர் கிட்டே கண்ணீர் விட்டுச் சொல்ற அளவுக்கு ஆயிடக்கூடாது. அப்படி ஆச்சுன்னா அது சாதாரணமா? 'வாழ்க்கைன்னா கஷ்டமும்தான் இருக்கும்'னு சொல்ற மாதிரியான கஷ்டம் இல்லே. அதெ நெனச்சித்தான் நான் வருத்தப்படறேன்" என்று அவள் விளக்கியபோது அவள் கூறுவது சரிதான் என்று ஏற்றுக் கொண்ட ரங்கா, பட்டுவுக்கு என்ன அவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று யோசித்தான்.

"ஏன், என்னவாம்? தாமு கஷ்டப்படுத்தறானா?" என்று பதைப்போடு கேட்டான் ரங்கா.

"நான் அதெப்பத்தி அவகிட்ட அதிகமாக் கேக்கலேன்னு சொன்னேனே... சரி, உங்களுக்குப் பசிக்குதா? ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சுச்சாப்பிடலாம்னா நான் குளிச்சிட்டு வந்திடறேன்" என்று அவனிடம் உத்தரவு கேட்டாள் கல்யாணி.

"ம்....சீக்கிரம் வா" என்று அவள் கூடவே சென்று பாத்ரூம் வாசலருகே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கைப்பிடிச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான் அவன்.

அவன் காத்திருப்பதையும், பசித்திருப்பதையும், நேரமாவதையும் உணர்ந்து அவள் அவசரமாகக் குளித்து விட்டு வந்தாள். அவன் ஒரு குழந்தை மாதிரி, அவள் கூடவே போய்க்கொண்டும் அவளருகே நின்று கொண்டுமிருந்தான். அவளும் அவனெதிரிலேயே உடம்புக்குப் பவுடர் போட்டுக் கொண்டாள்: உடை மாற்றிக் கொண்டாள். சில நிமிஷங்களில் அவள் சாப்பிடத் தயாராகிவிட்டாலும், இவ்வளவு நேரம் அவனைக் காக்க வைத்து விட்டதை உணர்ந்து அவனுக்குச் சமாதானம் கூறுவது மாதிரி அருகில் கட்டிலில் உட்கார்ந்து சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த ரங்காவின் நெற்றியில் முத்தமிட்டாள் கல்யாணி:

“வாங்க....சாப்பிடலாம். மத்தியானம் சமைச்சது.... எல்லாம் ஆறிப்போயிருக்கும்...” என்று சொல்லிக் கொண்டே அவள் முன்னால் நடக்க அவளைப் பின் தொடர்ந்து அவன் டைனிங் டேபிளுக்குப் போனான்.

சாப்பிட்டானதும்ரங்கா மாடிக்குப் போனான். அது வெறும் மொட்டை மாடி. எப்போதாவது இரவில் சற்று நேரம் சிமெண்ட் தரையில் படுத்துக்கிடந்து அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பார்கள். கல்யாணி சாப்பாட்டு வேலை முடிந்து எல்லாவற்றையும் சுத்தப்படுத்திவிட்டு மாடிக்கு வருவாள் என்று அவன் காத்திருந்தான். கல்யாணி விளக்குகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அணைத்துவிட்டு, அறைக்குள் போய்க் கொஞ்சம் பாக்கை எடுத்து வாயிலிட்டுக் கொண்டாள். இரண்டு வெற்றிலையும், விரலில் சுண்ணாம்பும் எடுத்துக் கொண்டபின் அறை விளக்கையும் அணைத்தாள். இப்போது அறைக்குள் ஒரு நீல விளக்கு மட்டும் மங்கலாக எரிந்தது. மொட்டை மாடிக்கு வந்தாள்.

“என்ன தூங்கிட்டீங்களா?” என்ற அவளது குரலுக்குப் பதில் சொல்வதுபோல் அவன் சிகரெட்டைப் புகைக்க நெருப்புக் கனிந்தது.

கல்யாணி அவனருகே வந்து உட்கார்ந்து கொண்டாள். வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

“இன்னிக்கி சாயங்காலம் நான் சூளைக்குப் போயிருந்தேன்...” என்று ரங்கா ஆரம்பித்தான். அதைக் கேட்டு அவள் சந்தோஷப்பட்டாள்.

“ஆமாம்... இவ்வளவு நாள்லே ஒரு தடவைகூட நீங்க அந்தப் பக்கமே போகலே, இல்லே?.... உங்க மனுஷாளை எல்லாம் பார்த்தீங்களா?

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உங்களைப் பார்த்ததிலே அவங்களுக்கும் ரொம்ப சந்தோஷமா இருந்திருக்கும் இல்லே?" என்று உற்சாகமாகக் கேட்டாள் கல்யாணி.

ரங்கா பெருமூச்செறிந்தவாறே சொன்னான்: "எனக்கென்னவோ அங்கே இருக்கிறவங்க வாழ்கிற வாழ்க்கை தான் எனக்குச் சம்பந்தமுள்ளது மாதிரி இருக்கு..."

"இருக்காதா என்னா! நீங்க பிறந்ததிலேருந்து வளர்ந்த இடம் இல்லியா? சொந்த வீட்டுக்கு வெளியூர்லே இருந்துட்டு வர்றமாதிரி இருந்திருக்கும். எனக்கு அப்பிடிப் பட்ட இடமும் கெடையாது. மனுஷாளும் கிடையாது. ஆனாலும் உங்க உணர்ச்சியை என்னாலே புரிஞ்சுக்க முடியுது..." என்றாள் கல்யாணி.

"எங்க சின்ன நைனா வீட்டுக்கு மேலே தளம் போட்டு மாடியும் ரூமும் கட்டறார். இங்கேயே வந்து இருந்திடுன்னு கூடச் சொன்னாரு. நான் ஒண்ணும் சொல்லலே..." என்று சொல்லி அதற்கு அவள் என்ன பதில் சொல்லுகிறாள் என்று கவனித்தான் ரங்கா. அவள் அதற்குப் பதில் ஏதும் கூறவில்லை. சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு-அந்த மௌனமான நிமிஷத்தில், அவன் காலையில் அவளிடம் நீ 'என்னைக் காதலிக்கவில்லை' என்று கூறிய விஷயத்தை நினைத்துக் கொண்டான். அவள் கரத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டே அவன் சொன்னான்:

"காலையிலே உன் மனசை நான் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்... ஆனாலும் என் மனசிலே படறதை மறைச்சு வெச்சிக்கிட்டு இருக்கணும்னு நீ சொல்லுவியா என்ன? – நீ சொல்கிறமாதிரி நீ என்கிட்டே 'ஸின்ஸிய'ரா இருக்கே. உன்னை நான் நம்பறேன். நீ எனக்கு ரொம்ப ஆதரவா இருக்கே... கௌரவமா நடந்துக்கறே.... இதெல்லாம் நான் இல்லேன்னு மறுக்கமாட்டேன். ஆனா நீ என்கிட்ட, நான் உன்கிட்ட இருக்கிறமாதிரி-திரும்பத் திரும்ப இந்த வார்த்தையெ சொல்றதுக்குக்கூட வெட்கமாகத்தான் இருக்கு – நீ என் மேலே காதல் கொண்டு இருக்கிறதா எனக்குத் தோணலே... இப்படி நான் சொல்றதுக்காக என்னைத் தப்பா நெனச்சுக்காதே. நான் இப்படி நெனைக்கிறது தப்பா இருக்கணும்னுதான நானே ஆசைப்படறேன்... என்ன கல்யாணி, பேசமாட்டேங்கறே?" என்றவாறு அவன் எழுந்து உட்கார்ந்தான்.

இருளில் அவள் கண்கள் ஒளிவீசுகிறமாதிரி மிக அழகாய் மின்னுவதை அவன் ரசித்துப் பார்த்தான்.

'நான் உங்களுக்கு ஒண்ணு சொல்லட்டுமா?" என்று தொண்டையைச் செருமிக்கொண்டு அவளும் நிமிர்ந்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“சொல்லு….” என்று அவன் ஆர்வமாய் அவளை நெருங்கினான்: அவள் சிறிதே கண்மூடி ஆழ்ந்து யோசித்தாள்.

“அதுக்கு முன்னே நானும் உங்களை நீங்க என்னைக் கேட்ட மாதிரி சில கேள்விகள் கேட்கலாமா?”

“ஒ, எஸ் கேளேன்…”

“உங்க முப்பத்தியாறு வயசு வாழ்க்கையிலே நீங்க யாரையாவது காதலிச்சிருக்கீங்களா?”

‘இல்லே! அப்படியொரு வார்த்தையின் மேலே எனக்கு நம்பிக்கைகூட இருந்ததில்லே. முதல் தடவையா உன்கிட்டேதான் எனக்கு இதுமாதிரியான உணர்ச்சிகளும் பிரச்னைகளும் ஏற்படுது…”

“இதுக்குக் காதல்னு பேரு இல்லே. இதுக்குப் பேரு ‘ரொமான்ஸ்.’ நீங்க இப்பதான் ரொமான்டிக்கா இருக்கீங்க: வாழ்க்கையை, உலகத்தை நீங்க அறிவாலேதான் அளந்து பார்த்திருக்கீங்க இதுவரை. அனுபவத்தாலே நீங்க எதையும் பார்த்தில்லேன்னு புரியுது. உலகத்திலே எவ்வளவு அயோக்கியனுங்க, காமுகனுங்க, நயவஞ்சகனுங்க வேசைங்க இந்த ‘ரொமான்டிக்’ மயக்கத்தாலே தான் காதல்னும் தியாகம்னும் வாழ்க்கையையே பாழாக்கி மனுஷ உணர்ச்சிகளையே அசிங்கப்படுத்தி அருவருப்பாக்கிட்டுப் போயிடறாங்க தெரியுமா? எனக்கு உங்ககிட்டே ஏற்பட்ட ஈடுபாட்டுக்குக் காரணம் நீங்க அப்படிப்பட்ட மயக்கத்துக்கு எல்லாம் அப்பாலே உள்ள ஒரு அறிவாளியா இருக்கிறதுதான்…”

“கல்யாணி” என்று எதையோ தெளிவுபடுத்துவதற்காக அவன் அவளை அழைத்தான். தன்னை மறந்து பேசிக்கொண்டிருந்த அவள் வார்த்தைகள் ‘சட்டென’ நின்றன.

“சொல்லுங்க” என்றாள்.

“காதலின் பேராலே உலகத்திலே தப்பு நடக்குதுங்கற காரணத்தைச் சொல்லி ஒரு புருஷனும் மனைவியும் ‘நாம காதலிக்க வேண்டாம்’னு தீர்மானம் பண்ணிக்க வேணுமா என்ன?” என்றான் ரங்கா.

“ஒரு ஆணும் பெண்ணும் கல்யாணம் பண்ணிக்கனும்னு தீர்மானம் பண்ணி அந்த உறவை ஏற்படுத்திக்கறதுலே இல்லாத காதலை, புரியாத மனசை வேறே எதிலே புரிஞ்சிக்க முடியும்?” என்று கேட்டாள் கல்யாணி.

“அதெப்படி நிச்சயமா சொல்லமுடியும்? காதல் இல்லாத தாம்பத்யமும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நான் வாழ்ந்திருக்கேனே. அந்த மாதிரி ரொம்பப் பேர் ஒரு கடமைக்காக வாழறாங்களே... நான் கேக்கறேன்... நீ உன் நடிப்பு, நாடகக் கம்பெனி எல்லாத்துக்கும் முழுக்குப் போட்டுட்டு அந்த ஆதிகேசவேலு நாயக்கர் தெரு வீட்டிலே எனக்கு மனைவியா குடும்பம் நடத்த என்னோட வருவியா? எனக்காக, அந்த வாழ்க்கைக்காக நீ எதையாவது தியாகம் பண்ண முடியுமா?- அப்பதான் அது காதல்னு அர்த்தம்' அதையும் ஒரு நிர்ப்பந்தத்தினாலே இல்லாமல் சந்தோஷமாக, ஒருத்தியோ, ஒருத்தனோ அவளுக்காக-இல்லாட்டி அவனுக்காகச் செய்யணும். அப்படி இல்லேன்னா சும்மா ஒரு வசதிக்காகச் செய்துக்கிட்ட 'பிஸினஸ் அக்ரிமெண்ட்' மாதிரிதான் அந்த வாழ்க்கை. அதுக்கு அர்த்தமுமில்லை பெருமையுமில்லை. அந்த வாழ்க்கையே வீண் தான். காதல் இல்லாத சம்சாரம் விபசாரம்தான்... என்று படபட: வென்று பேசிவிட்டான் ரங்கா.

கல்யாணி மிகவும் வருத்தத்துடன் சிரித்துக் கொண்டாள். இவன் இந்த விஷயத்தில் மிகவும் கடுமையான வாதம் கொண்டிருக்கிறான் என்று, அவள் புரிந்து கொண்டாள். அவள் மிகவும் நிதானத்துடன் பணிவாகச் சொன்னாள்.

"தியாகம்-சமர்ப்பணம் என்கிற காரியத்துக்கெல்லாம் ரொம்பச் சாதாரணமான நடத்தையிலே அர்த்தம் கண்டு புடிச்சிக்கறது தன்னைத்தானே ஏமாத்திக்கறதுன்னு எனக்குத் தோணுது. தியாகம்கறது பேரமா என்ன? நீங்க சொல்ற மாதிரி உங்களோடு வாழணும்கிற ஆசைக்காக நான் என் நடிப்பு, நாடகக் கம்பெனி இதையெல்லாம் விட்டுட்டு வரேன்னு வச்சிக்குங்க-அதுவே நம்ம ரெண்டு பேருக்கும் இடையே இருக்கிற உறவுக்குத் தீமை செய்கிற காரியமாகக்கூட ஆயிடும்- ஏன்னா அதிலே உங்களுக்குத் திருப்தியும், எனக்கு ஏதோ ஒரு விதத்திலே அதிருப்தியும் தான் வரும் இல்லியா?"

"நிஜமாலும் என் மேலே உனக்குக் காதல் இருந்தால் அதிலே அப்படி அதிருப்தி வரக்கூடாது" என்று குறுக்கிட்டுச் சொன்னவன், "நான் வந்திருக்கேனே" என்று முனகிக் கொண்டான்.

"நீங்களாதானே, உங்க விருப்பப்படித்தானே வந்தீங்க! என்னோட வற்புறுத்தலினாலே நீங்க வந்திருந்தால், இல்லாட்டி நான் வற்புறுத்தி இருந்தால் அது தப்பாத்தான் போயிருக்கும். உங்கள் யோசனைப்படிதான் இதுவரைக்கும் நடந்திருக்கேன் நான். இதிலேயெல்லாம் என் மனசை நீங்க புரிஞ்சுக்க முடியலையா, என்ன?" என்றாள் கல்யாணி.

"கல்யாணி நீ எவ்வளவு சொன்னாலும் நான் எதிர்பார்க்கிற அளவுக்கு உன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மனசிலே நம்ப உறவுக்கு நீ இடம் கொடுக்கலேன்னுதான் எனக்குத் தோணுது. நான் இவ்வளவு வெளிப்படையாப் பேசறது நாகரிகமில்லே தான். ஆனாலும் சொல்றேன் நீ ரொம்பவும் 'ஸெல்ஃப் ஸென்ட்டர்ட் வுமன்'. அதிலே நீ பிடிவாதமாகவும் இருக்கே. நீ வளர்க்கிற ரோஜா மாதிரி, உன் சந்தோஷத்துக்காக நீ முகத்திலே பூசிக்கிற சாயம் மாதிரி உனக்கு நானும் வேண்டி இருக்கு... அவ்வளவுதான். ஒரு ரோஜாச் செடியின் மேலே நீ எவ்வளவு பாசம் வெச்சிருக்கியோ அது மாதிரி பலமடங்கு ஒரு மனுஷனான என் மேலேயும் நீ வெச்சிருக்கேன்னு எனக்குப் புரியுது. ஆனா ஒரு நல்ல மனுஷன், தன் மனைவி மேலே உண்மையான காதல் கொண்டிருக்கிற புருஷன் இதிலே திருப்தி அடைஞ்சுட முடியாது. ஒரு மனைவிங்கிற முறையிலே அவள் இன்னும் எதையோ அதிகமா அவனுக்காக விட்டுத்தரணும்: நிரூபிக்கணும். அது உன்னாலே முடியாது. நான் முன்னேமாதிரி இருந்திருந்தால் எனக்கு இதெல்லாம் தோணாது. நான் காதல் வசப்பட்டிருக்கேன். நீ சொல்கிறமாதிரி நான் வாழ்க்கையிலே கொஞ்சம் 'ரொமான்டிக்'கா ஆகி இருக்கேன் போல இருக்கு நீ அப்படியெல்லாம் ஆகாத அளவுக்கு உன்னை இழந்துடக் கூடாதுன்னு ரொம்ப ஜாக்கிரதையா இருக்கே. இந்த ஜாக்கிரதை உணர்ச்சி மனமொத்த குடும்ப வாழ்க்கைக்கு உதவாது..." அவன் சொல்கிற நியாயங்கள் அவளுக்குப் புரிந்தன. அவள் அவனுக்காக வருத்தப்பட்டாள்.

இந்த இழுப்புக்கு இறங்க ஆரம்பித்தால் இதற்கு ஒரு எல்லையற்று 'இன்னும் இன்னும்' என்று இது போய்க் கொண்டே இருக்கும் என்று அவள் புரிந்து கொண்டிருந்தாள். இவனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று அவளுக்குப் புரியவில்லை. அவள் திடீரென்று சுமதியை- இவனுக்காகக் கல்யாணமே செய்து கொள்ளாமல் இவன் குழந்தையைத் தன் குழந்தையாக வளர்ப்பதிலேயே வாழ்வு நிறைவு கண்டு கொண்டிருக்கும் அந்தச் சுமதியை – நினைத்துக் கொண்டாள்.

தியாகமும், விட்டுக்கொடுப்பதும் தான் காதலின் நிரூபணம் என்று இவன் கருதுவது உண்மையானால் சுமதியின் வாழ்க்கையை விடவும் உயர்ந்த காதலின் நிரூபணம் எது? என்று அவள் யோசித்தாள்.

அவள் சொன்னாள்: "எனக்குத் தியாகம்னா என்னன்னே தெரியாது. தன்னோட மனசுக்கு ஏற்காத ஒரு காரியத்தை, இன்னொருத்தருக்காகச் செய்யறதுதான் தியாகம்னா எனக்கு அந்தத் தியாகத்தின் மேலே நம்பிக்கையுமில்லே... ஏதோ ஒரு லட்சியத்துக்காகத் தியாகம் செய்யலாம். ஆனால் தியாகம் செய்யறதையே ஒரு லட்சியமா, ஒரு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வாழ்க்கையா ஏத்துக்க முடியுமா, என்ன? ஆனா அப்படிச் சில பேர் இருக்காங்க. ஏன் உங்க சுமதி இல்லே? இந்த மாதிரியான எண்ணமுள்ள நீங்க அந்தச் சுமதியை ஏன் கல்யாணம் செய்துக்கலே?... அந்தப் பொண்ணோட தியாகத்தை நீங்க ஏன் காதல்னு புரிஞ்சுக்கலேன்னு இப்ப நான் யோசிக்கறேன்" என்று சொன்னாள் கல்யாணி.

ரங்காவுக்குத் திடீரென கோபம் வந்துவிட்டது. ஆனால், அவளிடம் அவனுக்காகக் கோபித்துக் கொண்டு பழக்கமில்லை. இவள் எவ்வளவு தூரம் மனசில் ஒட்டுதல் இல்லாமல் இருக்கிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

அவன் தெளிவான குரலில் பிசிறில்லாமல் பேசினான். "இப்போ எனக்கு எல்லாம் தெளிவா இருக்குது, கல்யாணி. யூ ஆர் ரைட்! நாம ரெண்டு பேரும் சரியா எதிர் எதிரே 'பொஸிஷன்' எடுத்து நின்னுட்டோம். நீ ஒருத்திதான் என்னை 'சுமதியைக் கல்யாணம் செய்துக்கோ'ன்னு சிபாரிசு பண்ணாதவள். என்னை முழுக்கவும் தெரிஞ்சுக்கிட்டு நீ இப்ப சொல்றது சரியாகத்தான் இருக்கும். ஆனா, இப்ப அது டூ லேட் இல்லே? காலம் கடந்து போன யோசனை இல்லே?" என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. அவன் மனம் வருத்தப்படுகிறது என்று அவள் புரிந்துகொண்டு சொன்னாள்: "நீங்க ஒளிவு மறைவு இல்லாமல் பேசறமாதிரி அதுக்குப் பதிலுக்கு நானும் வாதத்துக்காகத்தான் இவ்வளவும் பேசறேன்... தப்பாவோ வருத்தப்படற மாதிரியோ ஏதாவது சொல்லிட்டேனா?" என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

"தப்பில்லே கல்யாணி, ரொம்பச் சரியாக ஒண்ணொண்ணும் சொல்லி இருக்கே.... தாங்க்யூ" என்று அவள் கைகளின் மேல தட்டிக் கொடுத்தான் ரங்கா. அவன் கண்கலங்கி அப்போது அழுதுகொண்டிருந்தது இருளில் அவளுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவன் மனம் வாடிவிட்டதைப் புரிந்து கொண்ட கல்யாணி,

"வாங்க ரொம்ப நாழியாச்சு... படுத்துக்கலாம். எனக்கு ரெண்டு மணி நேரம் ஸ்டேஜ்லே நின்னுகிட்டே இருந்தது உடம்பெல்லாம் வலிக்குது. இதெப்பத்திக் காலையிலே பேசுவோம்.... வாழ்க்கை பூரா வேணுமானாலும் பேசலாம்..." என்று விவகாரத்தில் கனத்தைக் குறைத்து, விளையாட்டாக அவன் கன்னத்தில் தட்டினாள்.

அவன் மௌனமாக அவளுடன் போனான். கீழே போய் அவள் தண்ணீர் குடித்தாள். அவனிடமும் தண்ணீர் தம்ளரைக் கொண்டு வந்து நீட்டினாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் தண்ணீரை வாங்கிக் குடித்தான். இருவரும் போய்ப் படுக்கையில் படுத்த சற்று நேரத்துக்கெல்லாம் கல்யாணி தூங்கிப் போனாள்.

ரங்கா மட்டும் மொட்டை மாடிக்குச் சென்று தனியே வெகு நேரம் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான்.

விடியற்காலையில் படுக்கையில் தன் பக்கத்தில் அவன் இல்லாததைக் கண்டு அவனைத் தேடிவந்த கல்யாணி, மொட்டை மாடியில் சிமெண்டுத் தரையில் அவன் படுத்துக் கிடப்பதைப் பார்த்துப் பதறிப் போனாள்.

## 4

நேற்று இரவு முழுவதும் சிறு தூறலாகவும், பேரோசையோடு வர்ஷிக்கும் பெரு மழையாகவும் வானம் பெய்து கொண்டே இருந்தது. கல்யாணி தன்னந்தனியாளாக உறக்கமில்லாமல் மழையை வேடிக்கை பார்த்தவாறு ரங்காவுக்காகக் காத்திருக்கிறவள் மாதிரி, கட்டிலின் மேலே உட்கார்ந்திருந்தாள்.

அவன் வரமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். இப்போது கொஞ்ச நாட்களாகவே அவன் எப்போது வருவான், எப்போது இருப்பான் என்ற திட்டமெதுவும் இல்லாமல் எப்போதோ வந்து எப்போது வேண்டுமானாலும் போய் விடுகிறான். அவன் வருகிறபோது அவனைப் புன்முறுவலோடு வரவேற்று, அவன் இருக்கிற போது அவனை அன்போடு உபசரிக்கிறாள் கல்யாணி.

தங்களிடையே குரல் கனத்த பேச்சோ, சச்சரவோ, ஊடலோ, வாதப் பிரதிவாதங்களோ எதுவும் இல்லாத ஒருவகை மனஸ்தாபம் உறுதியாகிக் கெட்டிதட்டிப் போய்விட்டதை ரங்காவின் முகத்தோற்றத்தில் மட்டுமே அவள் கண்டாள். அதற்குத் தான் ஏதும் செய்யமுடியாத தனது கையறு நிலையை எண்ணிச் சில சமயங்களில் அவள் ரகசியமாகத் தனது தனிமையில் வருந்தினாள். அவள் அதற்காக அப்படி வருந்துகிறாள் என்பதுகூட அவனுக்குத் தெரியாது. அவள் தனது இந்தப் பாராமுகத்தினால் வருந்துவாள் என்றும் அவன் நினைக்கவில்லை. இவள் வருந்துகிறாள் என்று யாராவது சொன்னாலும் அவன் நம்பமாட்டான். அவளைப் பற்றி அவன் தீர்மானமான ஒரு நிர்ணயிப்புக்கு வந்துவிட்டான்.

தான் இவளைக் கல்யாணம் செய்து கொண்டது அவசரப்பட்ட காரியம் என்றும், அதிகபட்சக் காரியம் என்றும் அவன் மனசார உணர்ந்துவிட்டான். அந்தக் கல்யாண ஏற்பாட்டை அவள்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எதிர்பார்க்கவில்லை என்பது மட்டுமல்ல, தனது திணிப்பினால் அவளது நல்ல சுபாவத்தின் காரணமாக அதை அவள் ஏற்றுக்கொண்டு விட்டாள் என்று இப்போது அவன் புரிந்து கொண்டான். ஒரு வேளை இந்தக் கல்யாண யோசனையை அவன் முன் வைத்தபோது அதனை அவள் ஏற்றுக் கொள்ளாவிடில் தான் அவளை விட்டு விலகி வந்துவிட அது காரணமாக ஆகிவிடலாகாதே என்பதால் அவள் ஏற்றுக் கொண்டாள் போலும் என்றும் அவன் நினைத்தான். தான் அவளைக் கல்யாணம் என்று செய்து கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவள் இப்போது இருப்பதுபோல் எப்போதும் இருந்திருப்பாள் என்று உணர்கையில் இந்தக் கல்யாணம் அவளைப் பொறுத்தவரை எவ்விதமான அர்த்தமும் பெறவில்லை என்றறிந்தான். ஒரு முக்கியமான ஆத்மபந்தம் எப்படி இவள் விஷயத்தில் வியர்த்தமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டது என்பதை எண்ணித் தனது பேதைமைக்காக அவன் வருந்தினான்.

இப்போதும் அவள்மீது அவனுக்குக் கோபமோ வருத்தமோ இல்லை. தான் அவள் விஷயத்தில் மோகவயப்பட்டு விட்ட நிலைக்காகவே, அதனால் தான் செய்து விட்ட அசட்டுத்தனங்களை எண்ணியே அவன் சற்று நிதானித்துக் கொள்ள முயன்றாள்.

தான் இவளிடமிருந்து சற்று விலக்கம் கொள்ளுவது இருவருக்கும் நல்லது என்று அவன் தீர்மானித்தான். அவ்விதம் தான் இருப்பது சரியில்லை எனில் அவள் அதனைச் சொல்லித் தன்னை நெருக்கம் கொள்ளச் செய்யட்டுமே என்று அவன் எண்ணினான். ‘அவ்விதமான முயற்சியில் அவள் இறங்காவிட்டால் தனது விலக்கத்தை அவள் அப்படியே அங்கீகரித்தால்-அந்த மனோநிலையைப் புரிந்து கொள்ளாமல் நானாக வலிந்து சென்று விழுவதால் வரும் மனத்தாங்கல்களை நான் தானே அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இது என் தவறு எனின்-தள்ளி நிற்பதன் மூலம் அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியதுதானே’ என்று இப்போதெல்லாம் அவன் அவளது உறவிலிருந்து மெள்ள மெள்ள விலகலானான்.

துரதிருஷ்டவசமாக அவனது தவறான முடிவுகளை உறுதி செய்வது போல் தனது நல்லியல்புகளின் காரணமாகக் கல்யாணி அவன் போக்கில் தலையிடாமல் இருந்தாள்.

அவன் எப்போது வந்தாலும் வராமலிருந்தாலும் அவள் அவனை ஏதும் கேட்காமலிருந்தாள். அதனால் தான் கொள்கிற வருத்தத்தைக்கூட அவனுக்குக் காட்டாமல் இருந்தாள். அதற்காகத் தான் வருத்தம் கொள்ளாதிருக்கவும் அவள் தன்னைப் பக்குவப்படுத்திக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் கணவன்-மனைவியாக இல்லாமல் நல்ல இரண்டு நண்பர்கள் மாதிரிப் பழகிக் கொள்ள ஆரம்பித்தனர்.

அன்று இரவு மனம் வருத்தமுற்று, அவளோடு படுக்கையில் படுத்திருந்தவன் எழுந்து போய் அடம் கொண்ட குழந்தை மாதிரி மாடியில் வெறுந்தரையில் படுத்துத் தூங்கினானே... விடிந்த பிறகு வந்து கல்யாணி மனம் பதைத்து அவனை எழுப்பி விசாரித்தபோது ‘தரையில் சில்லென்று படுத்திருப்பது நன்றாக இருக்கிறது’ என்று அவன் சாதாரணமாகக் கூறிய விளக்கத்தை அவள் அப்படியே நம்பினாள்.

ஆனால் அதன் பிறகு ஒவ்வொன்றாய் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் சம்பாஷணைகளும் அவன் மனமுறிவை அவளுக்கு உணர்த்தின. அவனது அறிவிலும், அவனது குணத்திலும் நம்பிக்கை கொண்ட அவள், அவன் செய்கிற எந்த முடிவுக்கும் தயாராய் இருந்தாள்.... அது பற்றிய தனது அபிப்பிராயத்தை அவன் கேட்கும்போது தனது எண்ணங்களை மறைக்காமல் அவள் அவனிடம் பேசினாள். அவளிடம் பேசாமல் அவனாக முடிவு செய்து கொள்ளுகிற எதிலும் குறுக்கிடுவது தனக்குச் சரியாகாது என்ற தன்னடக்கத்துடன் அவள் தனித்து நின்றாள்.

இந்த ஆறு மாத காலத்தில் அவன் எத்தனை இரவுகள் இங்கு தங்கினான் என்று அவளால் எண்ணிவிட முடியும். அதற்காக அவனைக் கேள்வி கேட்பதோ அல்லது வற்புறுத்துவதோ கெஞ்சுவதோ மேலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவள் புரிந்து வைத்திருந்தாள். எல்லாமே ஒரு முடிவுக்கு வரப்போகிறது என்ற உண்மையை வருத்தமோ விரக்தியோ இல்லாமல் அவள் உணர ஆரம்பித்தாள். அவள் எப்போதுமே எதற்கும் தயாராகவே-மகிழ்ச்சியுடன் தயாராக இருக்க வேண்டும் என்கிற முயற்சியோடு-காத்திருந்தாள்.

அவள் தனிமையில் வாழ்ந்திருக்கிறாள். ஆனால் இப்போது அவன் இல்லாத தனிமை அவளுக்குத் தன்மீதே ஒரு பரிதாபத்தை ஏற்படுத்துகிறது.

அம்மாவும் போய்விட்டாள்: பட்டு கொஞ்சநாள் கூட இருந்து அவளும் தன் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு போய்விட்டாள். தனக்கு ஒரு துணை இருக்கிறது என்ற எண்ணத்துடன் அனுபவிக்கிற இந்தத் தனிமை பரிதாபகரமாய் இருந்தது.

அவள் இரவெல்லாம் விளக்கைப் போட்டுக் கொண்டு விழித்திருக்கிறாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அல்லது கண்களை மூடிக்கொண்டு தூங்காமல் குருட்டு யோசனைகளுடன் படுத்திருக்கிறாள். சில சமயங்களில் ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கிறாள். எப்போதோ சற்றுத் தூங்குகிறாள்.

வெளியே இரவெல்லாம் பெய்து கொண்டிருந்த மழை முற்றாக நின்றிருக்கிறது. வானம் வெளுத்து இருப்பது ஜன்னல் வழியே தெரிகிறது. கோயில் மணியும் ஒலிக்கிறது. நான்கு மணியிலிருந்து படுக்கையில் உட்கார்ந்து முழங்கால்களின் மேல் பதித்த மோவாயுடன் மேற்புறக் கதவுகள் திறந்திருக்கும் ஜன்னல் வழியே வானத்து இருளையும் மின்னலையும் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி விடிந்தது தெரிந்து எழுந்து வந்து ஜன்னலருகே நின்று வெளியே உள்ள ரோஜாச் செடிகளைப் பார்த்தாள்.

ரோஜாச் செடிகள் மழையில் நனைந்து பூவிதழ்களில் தண்ணீர் முத்துக்கள் தளும்ப, காற்றில் சிலவற்றின் இதழ்கள் சிதறிக் கிடந்ததைப் பார்க்கும்போது அவள் மனம் பதைத்தது. பால்காரன் வருகிற வரைக்கும் அவள் அங்கேயே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

வேலைக்காரியோ தோட்டக்காரக் கிழவனோ வருவதற்கு இன்னும் இரண்டு மணி நேரமாகும். அதுவரை அவள் தனியாகத்தான் இருக்க வேண்டும். இது மாதிரி தனியே நின்று வேடிக்கை பார்க்கவும் தன் போக்கில் எதையாவது யோசிக்கவும் அவள் பழகிவிட்டாள். அதற்குப் பக்குவமாகி விட்டாள்.

போன மாசத்தில் எப்போதோ ஒரு நாள் இது மாதிரி தான் இரவெல்லாம் காத்திருந்து விட்டுக் காலையில் ரோஜாச் செடிகளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த போது இரண்டு நாட்களாக இங்கு வராதிருந்த ரங்கா விடியற்காலை நேரத்தில் ஸ்கூட்டரில் வந்து சேர்ந்தான்.

அவன் வந்ததும் அவன் வராதிருந்ததையெல்லாம் மறந்து மகிழ்ச்சியுடன் அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள் கல்யாணி. அவன் மிகவும் களைத்திருந்தான். ஒரு வேளை இவனும் இரவெல்லாம் தூங்கவில்லையோ என்று அவள் எண்ணினாள்.

அவள் அவனுக்காகக் காப்பி கலந்து எடுத்துக் கொண்டு வந்தாள். அவன் அப்போது கண்களை மூடி ஆழ்ந்து எதையோ யோசித்தவாறு படுக்கையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டிருந்தான். அவள் அவனது நெற்றியைத் தொட்டதும் கண்விழித்து எழுந்து உட்கார்ந்தான் அவன். கல்யாணி அவன் கையில் காப்பித் தம்ளரைத் தந்தாள். தரும்போது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அன்போடு புன்னகை செய்தாள். அவனும் புன்முறுவலுடன் அதனை வாங்கிக் கொண்டான். அவன் காப்பியைக் குடித்துக்கொண்டே "நான் இப்போ கிராமத்திலிருந்து வரேன். காலையிலே மூணு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டேன்....” என்றான்.

“குழந்தை எப்படி இருக்கா...?” என்று மகிழ்ச்சியுடன் விசாரித்தாள் கல்யாணி.

“இந்த ஒரு வருஷத்திலே இன்னும் கொஞ்சம் பெரிய பொண்ணா வளர்ந்திருக்கிறது...” என்றான் ரங்கா. “நான் அதுக்காகத்தான் போனேன். அதுக்கு நான் யாரோ ஒரு அந்நியன் மாதிரி இருந்தாலும் தகப்பன்கிற சொந்தத்துக்காக நான் அடிக்கடி போய்ப் பார்த்துக்கணும் இல்லையா?” என்று அவனாகவே விளக்கம் சொல்லிக் கொண்டான்.

இந்தப் புத்தி தனக்கு வருவதற்குக் காரணமாயிருந்த சின்ன நைனாவை அவன் நினைத்துக் கொண்டான். இங்கு வராத நேரங்களை அவன் வேறு எங்கேயும் போய்க் கழித்து விடுவதில்லை. தனது பழைய இடமான ஆதிகேசவலு நாயக்கர் தெரு பதினோராம் நம்பர் வீட்டு மாடியில் இப்போது புதிதாகக் கட்டிய போர்ஷனை மறுபடியும் குடிக்கூலிக்கு எடுத்துக் கொண்டிருக்கிறான் ரங்கா.

எத்தனையோ காலம் வாழ்ந்த அந்தத் தனி வாழ்க்கையில் ஏற்படாத சலிப்பு கல்யாணியோட வாழ்ந்த ஒரு வருஷத் தாம்பத்தியத்தில் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. இப்படி விலகி வந்துவிட்ட பிறகு தன் மனம் நிம்மதியாக இருப்பதை அவன் உணர்கிறான். அவனைப் பொருத்தவரை எந்த வாழ்க்கையையும் அதன் முழுமையான அர்த்தத்தோடு வாழ்வது தவிர, மற்ற ஈடுகட்டும் முறைகள் எதுவானாலும் ஒரு வகை ஒழுக்கக் கேடாகவே தோன்றுகிறது.

கல்யாணியின் நண்பனாக இருந்து அவளுடைய பழக்கத்திலும் நட்பிலும் மகிழ்கிற, நிறைவு காண்கிற ஒரு வாழ்க்கையைத் தான் தேர்ந்தெடுத்துக் கொள்ளாததற்காக இப்போது அவன் அடிக்கடி பெருமூச்செறிகிறான். கல்யாணியினுடைய இயல்புகள் மனைவிக்கு உரியவை அல்ல என்பது அவளுக்கே புரியாமற் போனதற்காக அவள்மீது தான் மனஸ்தாபம் கொள்வது சரியல்ல என்று அவன் இப்போது பின்வாங்கிவிட்டான்.

‘மனைவிக்கு என்று ஒன்றும் தனி இலக்கணம் இல்லை. அது கணவனைப் பொறுத்தது’ என்று யோசித்து அறிகையில் கல்யாணி போன்ற ஒருத்திக்குக் கணவனாயிருக்கும் இயல்புகள் தனக்கு இல்லை என்று அவன் புரிந்து கொண்டதனாலும் இந்த முடிவு அவனுக்குச் சரியாகவே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பட்டது. அவனுக்கு வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணமோ ஆசையோ எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனாலும் கல்யாணியோடு ஏற்பட்டுவிட்ட இந்த விவாக பந்தத்தை முறித்துக் கொள்வது தனக்கும் அவளுக்கும் நன்மையையும் மன நிம்மதியையும் தரும் என்று அவன் அறிவுபூர்வமாகத் தீர்மானித்திருந்தான். தனது இந்தத் தீர்மானத்தை அவளிடம் எப்படிச் சொல்வது என்று அவன் தயங்கினான். அந்தத் தயக்கத்திற்காகக்கூட அவன் வெட்கப்பட்டான். அதைச் சொல்வதற்கு முன்னால் அதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியால்தான் அவன் மறுபடியும் ஆதிகேசவலு நாயக்கர் தெருவுக்குக் குடிபோனான். கல்யாணியும் தானும் வாழ்கிற வீடுதான் தன் வீடு என்று பழக்கப்பட்டுப் போன நடைமுறையைக் குலைத்தான். ஆயினும் இந்த வீட்டுக்கான பொறுப்புக்களை அவளுடன் பகிர்ந்து கொள்வதினின்றும் அவன் விலகிக் கொள்ளவில்லை.

எனவே அவர்களிடையே உள்ள பாந்தவ்யம் எதுவும் பழுதடையவில்லை. பரஸ்பரம் வெறுப்பு ஏதும் இல்லாததால் அவர்களிடையே பகைமையும் இல்லை. காதலும் மயக்கமும் பேதைமையும் தியாகமும் இல்லாத தாம்பத்தியம் வெறும் வியவகார ஞானத்தோடுவாழ்கிற முறைமையாக மாறினால் இப்படித்தான் ஆகும் என்று காட்டுகிற மாதிரி அவன் சுயமரியாதையோடு, அவளோடு நட்பு முறையில் இந்தத் தாம்பத்தியத்துக்கு ஒரு முடிவு காண அவாவினான்.

காப்பியைக் குடித்துவிட்டுத் தம்ளரைப் பக்கத்திலிருந்த சிறு மேஜையின் மேல் வைத்தபின் தம்ளரை வாங்குவதற்காக நீட்டிய கல்யாணியின் கையைத் தன் இரு கைகளுக்குள்ளும் அழுந்தப் பிடித்துக் கொண்டு அவன் கேட்டான்.

“நீ சந்தோஷமா இருக்கியா?”

“ம்.... இப்ப சந்தோஷமாத்தான் இருக்கேன்... நீங்க வந்திருக்கீங்களே.”

“அப்போ, நான் வராதபோது வருத்தமா இருந்தியோ?”

“அப்படி இல்லே... நீங்க வந்தால் எனக்கு சந்தோஷம்: நீங்க வரலேங்கறதுக்காக நான் வருத்தப்படமாட்டேன். ‘ஏன் வரலே’ன்னு யோசிப்பேன். ஏதாவது காரணமிருக்கும்னு நினைச்சுக்குவேன். நீங்க வராததுக்காக நான் கஷ்டப் பட்டேன்னா’ ஏன் நீங்க வரலேன்னு? உங்களைக் கஷ்டப்படுத்தறவளா ஆயிடுவேன். அதனாலேயே நான் கஷ்டப்படறதில்லை.”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“இது ரொம்ப சௌகரியமான ‘பிரின்ஸிபிள்’ தான்… வந்தால் சந்தோஷம்: வரலேன்னா ஒண்ணுமே இல்லை!... நீ ரொம்பக் கெட்டிக்காரி… நான் இங்கே வராமல் இருந்துட்டா? அதுக்காக வருத்தப்படாமலே இருப்பியா நீ?” என்று கேட்டு அவள் முகத்தை அவன் கூர்ந்து பார்த்தான்.

அவள் அவனது இரண்டு கைகளையும் தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு சற்றுமுன் சிரித்த புன்சிரிப்பு மாறாமல் இன்னும் கொஞ்சம் சிரித்துக் கண்களை மூடி அவன் சொன்ன அப்படி ஒரு நிலைமைக்கே போய்விட்டவள் மாதிரி இந்த நிகழ்காலத்தையே ஒரு இறந்த காலமாகக் கற்பிதம் கொண்டு தனக்குத்தானே பேசிக்கொள்கிறவள் மாதிரி சொன்னாள்:

“நிச்சயமா நான் எப்பவுமே வருத்தப்படமாட்டேன் நீங்க வராம இருக்கிற காலமெல்லாம் நீங்க என்னோடு இருந்த காலத்தை நினைச்சுச் சந்தோஷப்பட்டுக்குவேன். உங்களோடு சம்பந்தப்பட்ட எதையும் நினைச்சு நான் ஒரு நாளும் வருத்தப்படமாட்டேன்.”

அப்போது அவள் கண் இமைகளில் ஈரம் படர்ந்தது. அவள் கண்களைத் திறந்து எதிரே இருக்கும் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் அவளுக்குச் சமாதானம் கூறுகிற தோரணை அவளை இழுத்துப் பக்கத்தில் இருத்திக்கொண்டு சொன்னான்: “நாம ரெண்டு பேரும் நிச்சயம் ஒருத்தருக்கொருத்தர் நல்ல சிநேகிதர்களாக இருப்போம்… இப்பவே அப்படித்தான் இருக்கோம்…”

அவள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவன் அவள் இதற்கு ஏதேனும் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்துக் கேட்டான். ‘ஏன் ஒண்ணும் சொல்லாமல் இருக்கே-நாம்ப ரெண்டு பேரும் நல்ல ‘ஃபிரண்ட்ஸா’ ஆயிடுவோமா?”

அவள் தெளிவான குரலில் தனது நிலையை விளக்கிக் கூறினாள்: “நான் உங்களை முதல் முதல்லே ஒரு நாள் விருந்துக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டு என்னையே உங்களுக்குக் கொடுத்தேனே, அப்பவே நான் நெனச்சிக்கிட்டதை இப்ப சொல்றேன். நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்குவீங்கன்னு எல்லாம் நான் அன்னைக்கு நெனைக்கவே இல்லை. அதுக்கு அடுத்த நாள்ளேருந்து நீங்கள் வராமல் போயிருந்தால்கூட நீங்க என்னை ஏமாத்திட்டீங்கன்னோ, நான் ஏமாந்து போயிட்டேன்னோ நஷ்டப்பட்டுப் போயிட்டேன்னோ நான் நெனச்சி இருக்க மாட்டேன். நீங்க வந்த அந்த ஒரு நாளை நான் பெரிய லாபமா நெனச்சிருப்பேன். நம்ப ரெண்டு பேருக்கும் என்ன மாதிரி சொந்தம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கணும்னு எந்தச் சொந்தத்திலே நாம் இப்படி இருக்கிறதுன்னு எல்லாம் நான் யோசிச்சதே இல்லே. நம்மைப் பத்தி மத்தவங்க என்ன பேசுவாங்க, பேசறாங்கன்னு கூட நான் கவலைப்பட்டது இல்லே... ஏன்னா எனக்கு உலகத்தைப் பத்தித் தெரியும். மனுஷாளுங்க சொல்ற வார்த்தைகளும், அவங்களாக் கற்பனை பண்ணிக்கிற பொய்ங்களும், எவ்வளவு கேவலமானதுன்னு தெரியும்... எனக்கு வாழற வாழ்க்கையும், சுத்தமான மனசும்தான் முக்கியம். உங்களோட நான் சம்பந்தப்பட்டிருக்கேனே அது ஒண்ணுபோதும் எனக்கு. நீங்க கல்யாணம்னு சொன்னீங்க-என் தலையிலே ஒரு கூடை புஷ்பத்தைக் கொட்டினமாதிரி இருந்திச்சு... அது நடந்தா என்ன, நடக்கலேன்னா என்ன...? நாளைக்கு, ‘டைவர்ஸ்’ பண்ணிக்கலான்னு சொன்னீங்கன்னா நான் அதுக்கும் மாட்டேன்னு சொல்லமாட்டேன். நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டீங்கன்னா அங்கேயும் வந்து நின்னு உங்களைப் பாத்து சந்தோஷப்படுவேன் நான்... நீங்க என்ன வேணுமானாலும் செய்யலாம்.... நான் உங்களுக்கு ஒரு சுகமாத்தான் இருக்க ஆசைப்படறேன்.... எப்பவும் உங்களுக்கு நான் ஒரு சுமையா இருக்கமாட்டேன்...” என்று அவனைத் தழுவித் தழுவி முத்தமிட்டவாறு அவள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பல சமயங்களில் தான் வருகிறபோதெல்லாம் தொடர்ந்து ரங்காவைக் காணாத அண்ணாசாமி இரண்டு நாட்களுக்குமுன் ஒருநாள் இரவு பத்துமணி வரைக்கும் ஒரு புதிய நாடகத்தின் ஒத்திகை காரணமாகக் கல்யாணியின் வீட்டில் தங்க நேர்ந்தபோது ரங்காவைப் பற்றி விசாரித்தார்: ரங்கா வந்த பிறகே தான் போவதாகச் சொல்லி எல்லாரையும் அனுப்பி வைத்துவிட்டுக் கல்யாணியிடம் பேசிக் கொண்டு இருந்தார். இன்றைக்குப் பார்த்துவிட்டுத்தான் போகணுமாம்: ரங்காவைப் பார்த்து இவருக்கு ரொம்ப நாளாச்சாம்!

கல்யாணிக்கு மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. இன்று இரவு முழுவதும் காத்திருந்தாலும் ரங்கா வரப்போவதில்லை என்று அவள் மனத்துக்குத் தெரிந்தது. இந்த விஷயத்தை இவரிடம் எப்படிச் சொல்வது என்று அவளுக்குச் சங்கடமாக இருந்தது. இப்படியென்று தெரிந்திருந்தால், முன்னாலேயே ‘இன்னைக்கு அவருக்கு ஏதோ வேலையாம். ராத்திரி பன்னெண்டு மணியாகும்னு சொல்லிவிட்டுப் போனார்’ என்று ஏதாவது பொய்க் காரணம் கூறித் தப்பித்துக் கொண்டிருந்திருக்கலாம். இப்போது அப்படியெல்லாம் சொல்வது நன்றாக இருக்காதே என்று சங்கடப்பட்ட கல்யாணி நினைத்தாள்:

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

‘இவரிடம் ஏன் இதையெல்லாம் மறைக்கவேண்டும்? என்னுடைய தாம்பத்திய வாழ்க்கையின் ரகசியங்களை நான் யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமோ நியாயமோ கிடையாது. என்றாலும் எல்லாவற்றையும் ஒருநாள் எல்லாருமே அறியும்படி ஏதோ நடக்கத்தானே போகிறது. அப்போது மற்றவர்கள் யாரும்-என்னைப் பற்றி ஏதோ பேச விஷயம் கிடைத்தது என்று பேசுவது தவிர வேறு எந்த விதத்திலும்-கவலைப்படப் போவதில்லை. அதனால் பிறரைப்பற்றி எனக்குக் கொஞ்சமும்கவலை இல்லை. அவர்கள் பேசப் போவதும், புரிந்து கொள்ளப் போவதும் எப்படி இருந்தாலும் எனக்கு அதுபற்றி அக்கறை இல்லை. பிறர் விஷயத்திலும் நான் இவ்விதம் இருப்பதும், இருக்கப் போவதும் ரொம்பவும் சரியானது தான். ஆனால் அந்த அண்ணாசாமி இருக்கிறாரே, இவர் எனக்கு அப்படிப்பட்ட பிறரில் ஒருவரா? எனது வாழ்க்கையில் எவ்விதமான சம்பந்தமுமில்லாமல், என்னோடு எவ்விதத்திலும் உறவு இல்லாதவராய் விலகி நிற்கும் இவரை விட என் சுகதுக்கங்களில் அக்கறையும், என் வாழ்க்கையில் நான் மகிழ்ச்சியும், நிறைவும் கொள்ள வேண்டுமென்கிற அக்கறையும் உடைய இன்னொரு உறவினர் எனக்கு யார் இருக்கிறார்கள்?

நாளைக்கு ஏதாவது திடீர் என்று நடந்த பிறகு இவருக்குத் தெரியவந்தால் இவர் எவ்வளவு மனக் கஷ்டத்துக்கு ஆளாவார்! ஒரு வேளை இதற்கெல்லாம் தானும் காரணம் என்று நினைத்துக்கூட வருத்தப்படுவார். என் மீது இவ்வளவு அன்பும் அக்கறையும் கொண்ட இவர் அப்படியொரு வருத்தத்துக்கும் அதிர்ச்சிக்கும் திடீரென ஆளாகாமலிருக்க வேண்டும் என்கிற காரணத்துக்காகவாவது இவருக்கு என்னுடைய குடும்ப வாழ்க்கையில், ரங்காவுக்கும் எனக்குமிடையே ஏற்பட்டு வருகிற, ஏற்படப் போகிற மாற்றங்களை லேசாகக் கோடி காட்டிவிட வேண்டும்’ என்று கல்யாணிக்குத் தோன்றியது.

அண்ணாசாமியை ஹாலிலே உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்று வந்த கல்யாணி,

“ஏன் சாமி, மணி ஒம்பதரை ஆகுதே. உங்களுக்கு பஸ் ஏதாவது கெடைக்குமா?” என்று கேட்டவாறே தரையில் கதவோரமாகத் தெருப்பக்கத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்தாள்.

ஒரு நாற்பது பக்க நோட்டுப் புத்தகத்தில் பள்ளிக்கூடத்துப் பையன் மாதிரி முழுக் கவனத்தோடு புதிய நாடகத்தின் தனது வசன வரிகளை நகல் செய்து கொண்டிருந்த அண்ணாசாமி தலைநிமிர்ந்து கல்யாணியிடம் சொன்னார்:

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“பஸ் கெடைக்கலேன்னா ஒரு டாக்ஸியிலே போறது. இல்லேன்னா உன் புருஷன்கிட்ட சொல்லி ஸ்கூட்டர்லே கொண்டுபோயி விட்டுடச் சொல்லேன். ஆமா, என்ன ரங்காவை இன்னம் காணோம்” என்று கடிகாரத்தைப் பார்த்தார்.

“உங்களுக்குக் கொஞ்சம் பாலோ காப்பியோ கொண்டு வரட்டா… சாயங்காலம் அந்த ஓட்டல் டிபன் சாப்பிட்டது தானே?” என்று எழுந்தாள் கல்யாணி. அவள் மனசில் தான் இவரோடு இது விஷயமாகப் பேச ஆரம்பித்தால் நாழியாகும் என்று தோன்றியது.

“ஒண்ணும் வேண்டாம் அம்மா. சாயங்காலம் சாப்பிட்ட அந்த மசாலா தோசையும் வடையும் இன்னம் நெஞ்சைக் கரிக்கிறது. பசி இல்லே… சிரமப்படாதே-எழுந்தது எழுந்துட்டே. ஜில்லுனு கொஞ்சம் ஜலம் குடு…” என்று சொல்லிக்கொண்டே அவரும் எழுந்து வெளியெ சென்று தாம்பூலம் துப்பிவிட்டு வந்தார்.

கல்யாணி ஒரு செம்பில் தண்ணீரும் அதன்மீது தம்ளரும் கொண்டுவந்து அவரருகே வைத்தாள். அண்ணாசாமி வாயில் தண்ணீர் ஊற்றிக் கொப்பளித்துத் துப்பி விட்டு இரண்டு தம்ளர் குடித்தார். மறுபடியும் வந்து உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போடலானார். வாயில் சீவலைப் போட்டுக்கொண்டு இரண்டு வெற்றிலைகளையும் ஆள்காட்டி விரலில் சுண்ணாம்பும் எடுத்துக் கொண்டு அந்த எவர்சில்வர் வெற்றிலைப் பெட்டியைக் கல்யாணி உட்கார்ந்து இருக்கும் இடம் நோக்கி ‘மொஸைக்’ தரையில் சர்ரென்று தள்ளிவிட்டார்.

கல்யாணியும் அதைத் திறந்து வெற்றிலை போட்டுக் கொண்டே இவரிடம் விஷயத்தை எங்கிருந்து எப்படி ஆரம்பிப்பது என்று யொசித்தாள்.

தெருவில் ஒரு மோட்டார் சைக்கிள் போன சத்தத்தைக் கேட்டு ரங்கா வந்துவிட்டான் என்ற நினைப்பில், “இதோ வந்தாச்சு” என்று கூறினார் அண்ணாசாமி. கல்யாணி திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

“அநேகமா ராத்திரிக்கு அவரு வரமாட்டாருனு தோணுது” என்று அந்த மோட்டார் சைக்கிள் இந்த வீட்டைக் கடந்துபோன பிறகு தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறமாதிரி கூறினாள் கல்யாணி.

“என்ன…. என்ன சொன்னே? அவன் வரமாட்டானா? ஏன்? அப்பிடி எதுக்கு ராத்திரி பகலா வேலை செய்யறானாம்?... குழந்தையா, குட்டியா? அப்படிக் கஷ்டப்பட்டுக் காப்பாத்தணும்னு…” என்று விளையாட்டாகச் சொன்னார் அண்ணாசாமி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி அண்ணாசாமியை ஒரு விநாடி கூர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் ஒரு முறையீடும், அவள் எது பற்றியோ என்னவோ சொல்ல விரும்புகிறாள் என்கிற பரிதாபமும் அண்ணாசாமிக்குப் புரிவதற்கு முன்பாக அவள் சொன்னாள்: “இப்பல்லாம், அவர் பல நாள் வீட்டுக்கே வர்ரதில்லே.... சூளையிலே இருந்தாரே, அங்கேயே மறுபடியும் ஒரு ரூம் வெச்சிருக்காராம். எப்பவாவது தான் இங்கே வர்ரார்” என்று சொல்லி விட்டுத் தான் வருத்தப்படுவதாக இவர் புரிந்து கொள்ளக் கூடாதே என்று புன்முறுவல் செய்தாள் கல்யாணி.

“என்னடீ பொண்ணே, இதைச் சிரிச்சுண்டு அடுத்த வீட்டுச் சமாசாரம் மாதிரி சொல்றயே.... என்ன நடந்தது? ஏதாவது சண்டையா? மனஸ்தாபமா?.... ரங்கா ரொம்ப நல்லவனாச்சே...” என்று விசாரித்தவாறே நாற்காலியிலிருந்து எழுந்து வந்து அவளெதிரே தரையில் உட்கார்ந்து வெற்றிலைப் பெட்டியிலிருந்து புகையிலையை எடுத்து உள்ளங் கையில் இட்டு நெரித்தார் அண்ணாசாமி. அவர் முகம் கலவரமடைந்து இருந்தது. என்னவோ விபரீதம் நடந்து கொண்டு இருக்கிறது என்ற உணர்வில் கல்யாணியின் மீது ஒரு பரிதாப உணர்ச்சி பிறந்தது அவருக்கு.

கல்யாணி மீண்டும் ஒரு புன்முறுவலுடன் சொன்னாள்,

“எங்களுக்குள்ளே சண்டையோ, மனஸ்தாபமோ ஒண்ணும் கெடையாது. இப்பவும் அவர் எப்ப வந்தாலும் இங்கே வந்து அவர் இருக்கிறபோது ரெண்டு பேரும் சந்தோஷமாத்தான் இருக்கோம். சந்தோஷமா இருந்தால் மட்டும் அது சம்சாரமாயிடுமா?...”

அண்ணாசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. சந்தோஷமா இருந்தால் மட்டும் அது சம்சாரமாயிடுமா?' என்று அவள் கேட்டதைப் பற்றி அவர் யோசித்துக் கொண்டார்.

“ம்... மேலே சொல்லு... எனக்கு எல்லாம் தெரிஞ்சாகணும்... வரிசையா சொல்லு... என்ன நடந்தது? ஏன் அவன் இங்கே வராமல், உன்னைச் சொந்த வீட்டை வாடகைக்கு விடச் சொல்லி இங்கே கொண்டு வந்து விட்டுட்டு, அவன் சூளையில் இருக்கிற வாடகை வீட்டுக்குப் போயிட்டானாம்!” என்று படபடவென்று கேட்டார்.

“யோசித்துப் பார்த்தால் எங்களுக்குள்ளே இப்படி ஒரு பிரிவு வரதுக்கு என்ன நடந்திச்சுன்னு எனக்குத் தெரியலே. அவரைக் கேட்டாலும் அவரும் அப்படித்தான் சொல்வார்னு எனக்குத் தோணுது. அதனாலேதான் இதை எப்படி இன்னொருத்தர்கிட்டே சொல்றதுன்னு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வாயை மூடிக்கிட்டு ரெண்டுபேரும் இருக்கோம்” என்று நிதானமாகக் கூறினாள் கல்யாணி.

“சரி, கல்யாணி, எனக்கு அதெல்லாம் புரியறது. புருஷன் பெண்டாட்டிக்குள்ளே வந்த சண்டைகளையெல்லாம் உக்காந்து யோசித்துப் பார்த்தால் பல சண்டைகள் பைத்தியக்காரத்தனமாத்தான் இருக்கும்: பலதுக்கு என்ன காரணம்னு நெனச்சு நெனச்சிப் பார்த்தால்கூட ஞாபகம் வராது. இதெல்லாம் நான் புரிஞ்சுக்கறேன். ஆனா அவன் ஆத்துக்கும் வராமல் வேறெ ஒரு இடத்திலே ஜாகையை மாத்திக்கிறதுன்னா... அதுக்கு என்ன அர்த்தம், சொல்லு” என்றார் அண்ணாசாமி.

“என் மனசுக்குப் புரியறது, இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்னு. நான் எப்பவும் எதுக்கும் தயாரா நல்ல விஷயங்களை மட்டுமே நம்பி வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். நாளைக்கு உங்களுக்குத் தெரிஞ்சு நீங்க வருத்தப்படக் கூடாதுன்னுதான்-இன்னிக்கு உங்ககிட்ட சொல்லிடுவோம்னு நெனச்சிக்கிட்டேன்” என்று கூறிப் பின் சற்றுத் தலை குனிந்து யோசித்து, “எங்க சம்சார உறவு ரொம்ப நாளைக்கு நிலைக்காது சார்” என்று சூள் கொட்டினாள் கல்யாணி.

“ஏம்மா அப்படிச் சொல்றே? எப்பவும் நிலைக்கிற உறவுக்குத்தான் சம்சாரம்னு பேரு...” என்று மிகவும் வருத்தத்துடன் விளக்கினார் அண்ணாசாமி.

“அதெல்லாம் நீங்களும் உங்க வீட்டு மாமி மாதிரியும் இருக்கறவங்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கிற சம்சார உறவு சாமி. உங்களுக்கு அவங்களைப் பிடிக்கல்லேன்னாலும், உங்க காரியங்கள் அவங்களுக்குப் பிடிச்சு இருந்தாலும் சரி, பிடிக்கலேன்னாலும் சரி உறவு மட்டும் அப்படியே உறுதியா இருக்கிற சம்சாரம்கிறது வேறே. நான் என்ன இருந்தாலும் ஒரு நடிகைதானே? ஏதோ, நான் அவர் மேலே ஆசைப்பட்டேன். அந்த ஆசை இவ்வளவு சீக்கிரம் நிறைவேறிப் போச்சு... அவ்வளவு தான். இது கல்யாணம்னு ஆனதும், சம்சாரம் நடத்தினதும் நான் செஞ்ச பாக்கியம். எங்க கல்யாணத்திலே, தெய்வங்களோ சாஸ்திரமோ, பெரியவங்க ஆசீர்வாதமோ ஒண்ணும் கெடையாதே சாமி. சட்டம், ரிஜிஸ்ட்ரேஷன் இதெல்லாம் எவ்வளவு நாள் மனுஷ உறவைச் சேர்த்து வைக்க முடியும்? சொல்லுங்க...” என்று கேட்டுக் கொண்டே ஒரு வெற்றிலைக் காம்பினால் தரையில் ரங்கா என்று தன்னையும் அறியாமல் அவன் பெயரை எழுதினாள் கல்யாணி. அண்ணாசாமி அதைப் படித்துப் பார்த்தார். தான் அந்தப் பெயரைத்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தரையில் எழுதிக் கொண்டிருக்கிற நினைவே இல்லாததால் அவர் அதைப் படித்ததும் அவளுக்குத் தெரியவில்லை.

“என்ன நீ பைத்தியம் மாதிரிப் பேசறே? தெய்வங்களுக்கு சாஸ்திரங்களுக்கு எல்லாம் இருக்கிறதைவிட இந்தக் காலத்திலே நம்ப சட்டங்களுக்கு ரொம்ப ‘பவர்’ இருக்கு. தெரியுமோ? அப்படி ஒண்ணும் நெனச்ச மாதிரி, அவா அவா இஷ்டப்படி நடந்துக்க முடியாது. இவன்.... உன்னை விட்டுட்டுப் போயிடுவானோ? நீ அசடாட்டமா ஏதாவது உளறி, இல்லாத தைரியத்தை அவனுக்கு உண்டாக்கிண்டு இருக்காதே. எங்கே போயிடுவான்? ரிஜிஸ்டர் மேரேஜாக்கும்... ஒண்ணும் விளையாட்டில்லே...” என்று அவளுக்குத் தைரியம் கொடுப்பதற்காக – ஒரு குழந்தையிடம் நம்பிக்கையூட்டுவதற்குப் பேசுகிற தோரணையில் சொன்னார் அவர்.

கல்யாணி இப்பொழுது சப்தம் எழச் சிரித்தாள்.

“மனம் தான் சார் முக்கியம். சும்மா ஒருத்தரை சாஸ்திரத்தினாலேயும், சட்டத்தினாலேயும் கட்டிப் போடறதா சம்சாரம்? எனக்கு அவர் மேலே வருத்தமோ கோபமோ கிடையாது. நான் உங்ககிட்டே அவரைப் பத்தி ஏதோ புகார் சொல்றதாக நீங்க தப்பா நெனச்சுக்கக் கூடாது. இருக்கிற நிலைமை உங்களுக்குத் தெரியணும்னு சொன்னேன். நாளைக்கு இந்தக் கல்யாணத்தை அவர் ரத்து செய்து கொள்றப்ப உங்களுக்குத் தெரியத்தான் போகுது. நான் அதுக்கு என் சம்மதத்தைக் தந்துவிட்டேன். நாங்க ரெண்டுபேரும் புருஷன் பெண்டாட்டியா இருக்கிறதைவிட நல்ல சிநேகிதர்களா இருக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டோம்.”

“இப்படியெல்லாம் முடிவ பண்ணிக்க வேண்டிய அவசியம் வந்தது எதனாலே?” என்று விசாரித்தார் அண்ணாசாமி.

அதை எப்படி இவருக்கு விளக்கிச் சொல்வது என்றும், சொல்ல வேண்டியது அவசியம்தானா என்றும் கல்யாணி சிறிதே தயங்கினாள். தன்பால் அவ்வளவு அக்கறையும் தாய்போல் பரிவும் காட்டுகிற இவருக்கு இதனை அறிந்து கொள்வது உரிமை மீறிய செயலாகாது என்று அவள் நினைத்தாள். ஆனாலும் தனக்கே தெளிவில்லாத ஒன்றைப் பற்றி எவ்விதம் தான் விளக்கம் தருவது என்று அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவள் சொன்னாள்:

“இதுதான் காரணமான்னு நிச்சயமா எனக்கு ஒண்ணும் தெரியலே. இதுக்குக் காரணமா இன்னொரு காரணம் இருக்கும். அதுக்கு என்ன காரணம்னு எனக்கே தெரியாது. மேலோட்டமா இருக்கிற ஒரு காரணத்தை

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இப்ப சொல்றேனே-இதுன்னா இதுவே இல்லே... ஆனா இது மாதிரி ஒண்ணு-இல்லாட்டி, இதுவேன்னு வேணாம்னாலும் வெச்சுக்குங்களேன். நான் நடிக்கறதை, நாடகக் கம்பெனி நடத்தறதையெல்லாம் விட்டுட்டு அவரோடுபோயி இப்ப அவர் இருக்காரே அங்கே குடும்பம் நடத்தினால் அவர் சந்தோஷப் படுவார்னு வெச்சுக்குங்களேன். நான், அது முடியாதுங்கறேன். அப்படியெல்லாம் பேரம் பேசறது எனக்குப் பிடிக்கல்லேங்கறேன். ஏன்னா அப்பிடி ஆரம்பிக்கற பேரங்கள் எதுவும் அதோட நிக்கிறதில்லேன்னு நான் நெனக்கிறேன். ஆனா அவர் என்ன நெனைக்கிறார் தெரியுமா? சீ! இவளுக்கு நம்ம மேலே உண்மையான காதல் இருந்தால் இதை மாட்டேன்னு மறுப்பாளா? அவள் இஷ்டப்படி வாழ ஒரு வசதிக்காகத்தான் இவள் நம்மோட வாழறா. இதென்ன வாழ்க்கை...? சம்சாரம்னா, காதல்னா தியாகமும் ஒருத்தரோட வாழற இன்பத்துக்காக எதையும் இழக்கிற, விட்டுக்குடுக்கற மனோபாவமும் இருக்க வேணாமா? அது இல்லாத சம்சாரம் என்ன சம்சார'ம்னு அவர் நினைக்கிறார் - இது எப்படி முடியும் சொல்லுங்க?.... அப்படீன்னா நாம 'டைவர்ஸ்' பண்ணிக்கலாம்னு அவர் சொன்னார். சொல்லும்போதே 'எனக்கு ஒண்ணும் உன்னோடு இருக்கிற உறவை ரத்து செய்துக்கணும்னு ஆசை இல்லே. ஆனால் இப்படி ஒரு உறவுக்குக் கணவன்-மனைவிங்கற பந்தம் அவசியம் இல்லேங்கறதனாலே இதை ரத்துச் செய்துக்கலாம்னு தோணுது. கணவன் மனைவி உறவுதான் முக்கியம்னா நீ உன் முடிவை மாத்திக்கறியா, பார்க்கலாமே'ன்னார்..." என்று அவள் பேசிக்கொண்டே போவதைப் பொறுக்க முடியாமல் அண்ணாசாமி குறுக்கிட்டார்.

"என்னம்மா, எல்லாமே உங்களுக்கு விளையாட்டா இருக்கா? என்ன சொன்னாலும் அவன் உன் புருஷன் இல்லியா? நீ விரும்புகிற மாதிரி ஒரு காரியத்துக்கு அவன் சம்மதிச்சால் சரி, இல்லேன்னா மனைவி தான் புருஷன் சொல்றபடி கேக்கணும். கல்யாணி, ஒரு தகப்பன் இல்லே, ஒரு தாய் பொண்ணுக்குச் சொல்றமாதிரி சொல்றேன். நீ பிடிவாதம் பிடிக்காதே. இப்ப நீ நாடகத்துலே நடிச்சு உனக்கு லாபம் என்ன சொல்லு-எதுவோ நாங்கதான் ஆசைப் பட்டுண்டு அலையறோம். இதுக்காக ஒருத்தி நல்ல வாழ்க்கையைக் கெடுத்துக்குவாளோ? நாடகக் கம்பெனியுமாச்சு-வேஷம் போடற பொழப்புமாச்சுன்னு விட்டுத் தொலைச்சுட்டு அவன் சொல்றபடிதான் கேளேன். உனக்கும் தான் சினிமாவிலே நடிக்கணும்னோ, இந்தத் துறையிலே பெரிய ஆசைகளோ ஒண்ணுமில்லே. 'வேண்டாம் விட்டுட்டேன்'னு சொல்லிட்டு சந்தோஷமா, புருஷனுக்குப் பொண்டாட்டியா போய் இருந்துடேன்..." என்று புத்திமதி கூறினார்.

'நாடகத்தை விட்டுவிடு' என்று கூறுகிற அளவுக்கு அண்ணாசாமிக்குத் தன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மீது இருக்கும் அன்பை உணர்ந்து மனம் சிலிர்த்தாள் கல்யாணி.

“இல்லீங்க... நீங்க சொல்கிறபடி செய்தா, என் ஒரு வாழ்க்கை மட்டுமில்லே-அவரோட வாழ்க்கையும் கெட்டுப் போகும்னு நான் நினைக்கிறேன்” என்று உறுதியாகச் சொல்லி விட்டாள் கல்யாணி.

அண்ணாசாமி கடைசியாகச் சொன்னார். “ஆனாலும் டைவர்ஸ்ங்கிறது ஒண்ணும் ஹிண்டு மேரேஜ் ஆக்டுப்படி அவ்வளவு சுலபமா கெடைக்கிற சமாசாரம் இல்லே. இதென்ன வெஸ்டர்ன் கண்ட்ரீன்னு நெனச்சயா?” என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

கல்யாணி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

“சார், எங்க கல்யாணம் ஹிண்டு மாரேஜ் ஆக்டுக்குக் கீழே வராது. ஸ்பெஷல் மாரேஜ் ஆக்டின் கீழேதான் வரும். அதில் டைவர்ஸ் ஒண்ணும் அவ்வளவு சிக்கலா இருக்கும்னு நான் நெனைக்கல்லே-“

“என்ன இருந்தாலும் ஒரு குடும்பப் பெண் இப்படிப் பேசுவாளா?” என்று கேட்டார் அண்ணாசாமி.

“நான் எப்படி சார் ஒரு குடும்பப் பெண் ஆக முடியும்? நீங்களே இப்படிக் கேக்கிறீங்களே...” என்று சிரித்தாள் கல்யாணி. அந்தச் சிரிப்பில் வாழ்க்கை முழுவதும் அவள் மனசுள் தேங்கிய கசப்பு தெரிந்தது.

அண்ணாசாமி மௌனமானார்.

இந்தச் சம்பாஷணைக்குப் பிறகு பல தடவை அவர் வரும்போது ரங்கா இருந்திருக்கிறான். ஆனாலும் அவனோடு அண்ணாசாமி மனஸ்தாபம் கொண்டு முகம் கொடுத்துப் பேசவில்லை. அதைப்பற்றிக் கூட ரங்காவும் கல்யாணியும் பேசிச் சிரித்திருக்கின்றனர்.

பால்காரன் வந்தான். மழை நின்றிருந்தது. காலை ஒன்பது மணிக்கு மேலே ரங்கா வீட்டுக்கு வந்து டிபன் சாப்பிடுகிற போதுதான் இன்று ஞாயிற்றுக்கிழமை என்கிற ஞாபகம் வந்தது கல்யாணிக்கு.

“இன்னிக்கு நாம ரெண்டுபேரும் லாயர் வீட்டுக்குப் போகணும். நம்ம டைவர்ஸ் விஷயமா கன்ஸல்ட் பண்றதுக்காக”... என்றான் ரங்கா.

அவள் வழக்கமான புன்னகையுடன் அதற்குச் சம்மதம் தெரிவித்துத் தலையசைத்தாள்.

“இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமையாச்சே?” என்றாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“அதனாலேதான் வரச்சொன்னார். இந்த லாயர் என்னோட ஃபிரெண்ட், காலேஜ்லே என்கூடப் படிச்சவர். ரொம்ப அறிவாளி. என்னையெல்லாம் ஓரளவுக்கு அந்தக் காலத்திலே மோல்ட் பண்ணினவர் அவர் தான். பெரிய கம்யூனிஸ்டு: ஃபாரினுக்கு எல்லாம் போயிட்டு வந்திருக்கார்” என்று அவரைப் பற்றி உற்சாகமாகப் புகழ்ந்தான் ரங்கா.

ரங்கா விவகாரத்து விஷயமாக ஏற்கனவே கல்யாணியிடம் பேசி இருந்தான்.

தாங்கள் இருவரும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்குக் குறுக்கே தடையாக இருப்பது இந்தக் கணவன் மனைவி உறவுதான் என்று அவன் சொன்னான். ‘கணவன் மனைவியாய் இல்லாத ஆணும் பெண்ணும் அவர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்கிற உறவில்-அது எத்தகைய உறவாக-இருந்த போதிலும்-குறையே காணாமல், எதையும் எதிர்பார்க்காமல் இருப்பதில், கிடைப்பதில், கிடைக்க முடிவதில், பெற்றதில், தரமுடிந்ததில் பூரணமான நிறைவு காணமுடியும்’ என்று அவன் சொன்னான். காதல் இல்லாத கடமை வாழ்க்கைக்குக் கல்யாணம் என்கிற கட்டு மிகவும் அவசியம் என்றும், காதலோ-அல்லது காதலிக்க வேண்டுமென்ற நோக்கமோ இருக்கிற வாழ்க்கைக்குக் கல்யாணம் ஓர் இடையூறு என்றும் அவன் அவளுக்கு விளக்கிச் சொல்லி இருந்தான்.

அவன் சொன்னதெல்லாம் நியாயம் என்று ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அவன் அவ்விதமெல்லாம் சொல்வதற்குரிய நியாயங்களைக் கல்யாணி புரிந்து கொண்டாள்-அவனது கோணத்திலிருந்து பார்க்கும் போது அவனது யோசனைகள் சரி என்பது மாத்திரமில்லாமல் அதற்குத் தானும் ஒத்துழைக்க வேண்டுமென்றுகூட அவள் நம்பினாள்.

கணவனும் மனைவியுமாக இருந்து இரண்டு நல்ல நண்பர்களாகப் பழகிக் கொண்டு வாழ்வது முடியாத காரியமாகிறபோது, இரண்டு நண்பர்களாக இருவரும் மாறி, கணவனும் மனைவியும் மாதிரி வாழ்ந்து விடுவது என்று அவர்கள் தீர்மானம் செய்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் தாங்கள் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தோம் என்பதையும், அண்ணாசாமியின் யோசனையின் பேரில்தான்-இந்தப் பின் விளைவுகளை எல்லாம் எதிர்பாராமல் தங்களுக்குள்ள சுதந்திரத்தின் காரணமாகவும், பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் கொண்ட நம்பிக்கையினாலும் - தாங்கள் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்ததையும் அவர்கள் யோசித்துப் பார்த்தார்கள்.

அவள் இந்தக் கல்யாணத்தையும், இன்று இவனால் பேசப்படுகிற இந்த

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

டைவர்ஸ் விவகாரத்தையும் ஒன்று போலவே பாவித்தாள். அது ரங்காவுக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இது நிச்சயமாக அந்த விஷயத்தில் அவள் காட்டுகிற அசட்டை என்று தவறாகப் புரிந்து கொள்ளாத அளவுக்கு அவன் நல்லவனாகவும் அவள்மீது நல்ல நம்பிக்கை கொண்டவனாகவும் இருந்தான்.

வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் இவள் எப்படி இவ்வாறு பற்றில்லாத அன்பு கொண்டிருக்கிறாள் என்று அவன் யோசித்துப் பார்த்தான்.

இரண்டு மூன்று நாட்களாக இங்கே வராமல் இருந்து, இப்போது காலையில் அவன் வந்து மூன்று மணி நேரத்துக்கு மேல் ஆகியிருந்தது.

அவள் ஏதோ, இரவெல்லாம் தன்னோடு படுக்கையில் படுத்து இருந்து எழுந்து வருகிறவனுக்குத் தருகிற பாவனையோடு அவனுக்குக் காப்பி கொடுத்தாள். குளிப்பதற்கு வெந்நீர் வைத்தாள். வழக்கம்போல் அவன் குளிக்கும் போது உடன் இருந்து உதவி செய்தாள். அவன் பேப்பர் படித்து, முடிப்பதற்குள் தானும் குளித்துத் தயாராகி, டிபன் சாப்பிடுவதற்காக அவனை அழைத்தாள். எல்லாம் எப்போதும் போல நடுவில் ஒரு வெட்டு விழுந்து சில நாள் தவிர்த்திருந்த நிகழ்ச்சிகள் என்று தோன்றாதமாதிரி முறையாக நடந்ததை, அவன் ஒவ்வொரு தடவையும் பார்த்து ஆச்சரியமடைந்தான்.

கல்யாணி சமையலறையில் இருந்தாள். வேலைக்காரி அவளுக்கு ஒத்தாசையாகப் பேசிக்கொண்டே இருக்கிற சப்தம் கேட்கிறது. ரங்கா ஹாலில் சோபாவில் சாய்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தவன் சற்றுக் கண்மூடி அயர்ந்திருந்தான்.

“கொஞ்சம் சூப் சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டுக் கொண்டே வந்த கல்யாணி அவன் தூங்குவதைப் பார்த்து, அறியாமல் எழுப்பி விட்டதற்காகச் சங்கடப்படுகிறவள்போல் புன்முறுவல் செய்தாள்.

சோபாவில் நிமிர்ந்து உட்கார்ந்த ரங்கா, “ஓ! இன்னக்கி என்ன ‘மட்ட’னா?,’ என்றவாறே அவள் கையிலிருந்த கண்ணாடித் தம்ளர்களில் ஒன்றை வாங்கினான். அவள் தானும் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு அவன் எதிரே உட்கார்ந்தாள். பிறகு பின்னால் திருமபி, “ஆயா, அடுப்பிலே இருக்கிறதெக்கொஞ்சம் பார்த்துக்க” என்று வேலைக்காரியைக் கூப்பிட்டுச் சொன்னாள்.

இருவரும் சூப்பைக் குடித்தவாறே இருக்கையில் ரங்கா கேட்டான்: “பட்டு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வந்துதா எப்பவாவது?"

"சொல்ல மறந்துட்டேனே... அவ முழுகாம இருக்காளாம்" என்று சொல்லிவிட்டு, அதற்காகச் சந்தோஷப்படுவதை அடக்கிக் கொண்டு தொடர்ந்து சொன்னாள்: "ரெண்டு நாளைக்கு முன்பே வந்து சொல்லிட்டு, 'இப்ப எனக்கு இது ஒண்ணுதான் குறை'ன்னு பொலம்பினா... அந்தத் தாமுப் பையன் ஒண்ணும் சரியா இல்லே போல இருக்குது. அடிக்கடிக் குடிச்சுட்டு வரானாம். சாப்பாட்டுக்குக் கூடச் சரியாப் பணம் குடுக்கறதில்லையாம்... என்னென்னமோ சொல்லிக்கிட்டு அழுதா. உனக்குக் கஷ்டமா இருந்தா கொஞ்ச நாளைக்கு இங்கே வந்து இரேன்... இந்த மாதிரி இருக்கிறபோது நல்லா வேணுங்கறதைச் சாப்பிடணும், மனசு சந்தோஷமா இருக்கணும்னு சொன்னேன். அவ மாட்டேன்னிட்டுப் போய்ட்டா...." என்று அவன் காலியாக்கித் தந்த தம்ளரை வாங்கிக் கொண்டு எழுந்தாள் கல்யாணி.

"ஏனாம்?... இங்கே வந்து இருக்கறதுக்கு என்னவாம்?" என்று கேட்டான் ரங்கா.

"அவ பயப்படறா... அப்படியே விட்டுடுவானாம் அந்தப் பய... நான் வரதானா ஒரேடியாகத்தான் வரணும்'கறா... இதுதான் லவ்-ஒருத்தருக்காக ஒருத்தர் சாகற காதல்!" என்று அலுத்துக்கொண்டே உள்ளே போனாள் கல்யாணி. ரங்கா வாய்க்குள் சிரித்துக் கொண்டான்.

அவள் உள்ளே சென்று தம்ளர்களை வைத்துவிட்டு வரும்போது ரங்கா சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்.

"ஆமா நீங்க சொன்னீங்களே உங்க லாயர் ஃபிரண்ட்.... அவரைப் பார்க்க நாம்ப எத்தனை மணிக்குப் போகணும்?" என்று கேட்டாள் கல்யாணி.

"எப்ப வேணுமானாலும் போகலாம், 'ஞாயிற்றுக்கிழமை நான் வீட்டிலேயேதான் இருப்பேன், நீ எப்ப வேணுமானாலும் வரலாம்'னு சொன்னான். அவன் ஒரு 'பேச்லர்' வீட்டிலே, அவன், அவனோட வயசான தாயார், வேலைக்காரங்க அவ்வளவுதான்... ரொம்ப இன்ட்ரஸ்டிங் கேரக்டர். சாயங்காலமா போகலாம்" என்றான் ரங்கா.

"ஐயரா?" என்று கேட்டாள் கல்யாணி.

"ஆமாம்" என்ற ரங்கா சம்பந்தமில்லாமல் சொன்னான்: "பட்டுவை நெனைச்சா எனக்குப் பாவமா இருக்கே."

"அந்தப் பாவத்திலே நமக்கெல்லாம் கொஞ்சம் பங்கும் இருக்கு" என்றாள்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணி. ரங்கா அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை.

கல்யாணியே தொடர்ந்து பேசினாள்: "எனக்குத் தெரியும், இது இப்படியெல்லாம் ஆகலாம்னு. நெனச்சப்ப திரும்பி வரலாம்னு இருக்கிற இடத்திலேதான் யோசிக்காமப் புகுந்துடலாம்... போறது நம்ம கையிலே: வரது நம்ம கையிலே இல்லேங்கற இடத்திலே அவ்வளவு பிடிவாதமாப் போயி யோசிக்காம சிக்கிக்கலாமா?"

"நான் கவனிக்கலே, நீ சொன்னதை" என்றான் ரங்கா.

"ஒண்ணுமில்லே. இப்ப நாம்ப இருக்கோம்-நாம எப்படி வேணுமானாலும் இருக்கலாம். கல்யாணமும் பண்ணிக்கலாம்: டைவர்ஸும் பண்ணிக்கலாம். சேர்ந்தும் இருக்கலாம்: பிரிஞ்சும் வாழலாம். நம்மாலே முடியும். எல்லாராலேயும் அது முடியுமா? அதுக்குத்தான் அது முடியாதவங்க, அந்த மாதிரி பிடிவாதமா காரியம் சாதிக்கக் கூடாதுன்னு நான் அப்ப நெனைச்சேன்..."

ரங்கா அவள் பேசுவதைக் கருத்தூன்றிக் கவனித்தான். அவள் சாட்சி பூர்வமாக வாழ்க்கை பற்றிய, காதல் பற்றிய தனது கருத்தைத் தெளிவாக நிலை நிறுத்துவதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. அவள் மேலும் சொல்லிக் கொண்டிருந்தாள்:

"இந்தப் பட்டு அவ அம்மா சொன்னமாதிரி அவங்க பேச்சுக்குக் கட்டுப்பட்டு வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு இருந்தா இவ வாழ்க்கையும் நல்லா இருந்திருக்கும்: இவளோட காதலும் நல்லா இருந்திருக்கும். ஆமா.... இந்தக் காதலைப்பத்தி வெச்சிருந்த நல்ல எண்ணம் இப்படிக் கெடாமல் இருந்து இருக்குமில்லியா? நான் பட்டு – தாமு விஷயத்தை மட்டும் சொல்லலே... அம்பிகாபதி-அமராவதி கூடக் கல்யாணம் செஞ்சுகிட்டு இருந்திருந்தா இந்தக் கதிதான்னு நெனைக்கிறேன்... அவங்க காதலோட பெருமையே அது கைகூடாமப் போனதுதான்" என்று அவள் சகட்டுமேனிக்கு அடித்துவிடுவதைக் கேட்டு ரங்கா சிரித்தான்.

"அது எப்படி? காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கறவங்க எல்லாருமா அப்படி ஆயிடுவாங்க?" என்று கேட்டான் ரங்கா.

"நான் அப்படிச் சொல்லலே. இவங்க காதலிக்கிற லட்சணத்திலே அது தெரியும். 'நான் சாகறேன்' 'உன்னைத் தவிர நான் யாரையுமே நெனைக்கக்கூட மாட்டேன்', 'வாழ்ந்தால் உன்னோடு - இல்லாட்டி வாழ்க்கையே வேண்டாம்'னு பேசற காதல் பூராவும் கடைசியிலே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இப்படித்தான் ஆகும். இதுங்க கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் கஷ்டம்தான்: இல்லேன்னாலும் கஷ்டம்தான். இதுங்ககிட்டே அறிவு இல்லே, ஒரே உணர்ச்சிதான். வெறும் உணர்ச்சி மயமான எந்தக் காரியமும் பின்னாலே ரொம்ப கஷ்டத்தைத்தான் உண்டாக்கிடும். இல்லியா? இதுங்க புத்தியை உபயோகிக்கறதே இல்லியே... அதனாலேதான் எனக்கு அப்பவே தெரிஞ்சிது இது படப்போவுதுன்னு: நான் அப்ப அதெச் சொன்னா எம்புத்தி அப்படின்னு எல்லோருக்கும் தோணி இருக்கும். அதனாலே தான் சொல்லலே...” என்றாள் கல்யாணி.

அவள் சொன்னவற்றைப் பற்றி ரங்கா யோசித்தான்: ‘என்னைப் போல அறிவின் காரணமாக இல்லாவிட்டாலும் அனுபவத்தின் விளைவாக இவள் பல விஷயங்களைப் பற்றி யோசிக்கிறாள்’ என்று அவன் புரிந்து கொண்டான். அவள் சொல்வது ஓரளவு சரியென்றும் அவனுக்குத் தோன்றியது. அவன் நினைத்துக் கொண்டான்: ‘ரொம்ப அனுபவசாலிகள் வாழ்ந்து முடிந்துவிட்டவர்கள். வாழ்கிறவர்கள் என்பவர்கள் கஷ்டத்தையும், சுகத்தையும், கண்ணீரையும் சிரிப்பையும் கலந்து அனுபவிக்கறவர்கள் தான்.

அவன் அவளைக் கேட்டான்: “நீ எப்படி இந்த மாதிரிதான் இது ஆகும்னு அப்பவே நெனைச்சே?”

அவன் அடுத்த சிகரெட்டைப் பற்றவைக்க நெருப்புப் பெட்டியைத் திறந்த போது அதில் குச்சி இல்லாததால் ஜன்னல் வழியே விட்டெறிந்தான். கல்யாணி நெருப்புப் பெட்டி கொண்டு வருவதற்காகச் சமையலறைக்குப் போனாள். அவள் வரச் சற்றுத் தாமதமாகியது. அப்போது அடுப்பில் எதையோ வறுக்கின்ற கமறலும் கரண்டியினால் கிளறுகின்ற சப்தமுமாக அவள் குரல் அங்கிருந்து ஒலித்தது:

“ஒரு நிமிஷம் இருங்க. அடுப்பிலே இருக்கறதெ இறக்கி வெச்சிட்டு வர்றேன்” என்று சொல்லிச் சற்றுக் கழித்து முகத்து வியர்வையை முந்தானையால் துடைத்த வாறே அவனிடம் நெருப்புப் பெட்டியைக் கொண்டு வந்து நீட்டினாள்.

அவன் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே அவளிடம் கேட்டான்: “அடுப்படி வேலையெல்லாம் முடிஞ்சுதா?”

“ம்ஹும், இன்னும் ஒரு மணி நேரமாகும். எனக்கு அடுப்புக்கிட்டேயே நின்னுக்கிட்டுச் சமைக்கறதுன்னா ‘போர்’... சரி, நீங்க என்னமோ கேட்டீங்களே... ‘உனக்கு எப்படி இதெல்லாம் இப்படித் தோணுது’ன்னு... நீங்க நாடகம் பார்த்துட்டுச் சிலதெல்லாம் சொல்றப்போ, எழுதறப்போ

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எனக்கு அப்படித்தான் தோணுது. இவருக்கு மட்டும் இதெல்லாம் எப்படித் தெரியுது. நமக்கும், கூட இருக்கறவங்களுக்கும் தெரியறதில்லையேன்னு. அந்த மாதிரி இருக்குது நீங்க கேக்கறது... இப்ப எனக்கு முப்பத்து நாலு வயசாகுது... எவ்வளவு மனுஷாளை, எத்தனை காதல் விவகாரங்களை நானும் பார்த்திருக்கிறேன்!... நீங்க நாடகம் பார்க்கறமாதிரி நான் வாழ்க்கையைப் பார்த்துக்கிட்டு இருக்கேன்... 'நாடகமே உலகம்' 'வாழ்க்கையே நாடகம்'னு எல்லாம் ரொம்பப் பேர் சும்மா அதன் அர்த்தம் புரியாமல் சொல்லிக்கிட்டு இருக்காங்க. நான் பார்த்துப் பார்த்து நம்ப லைஃபை விட அற்புதமான நாடகம் இல்லேன்னு தெரிஞ்சுக்கிட்டு இருக்கேன். ஒரு பாத்திரம் பேசற டையலாக்கிலேருந்தே அவன் எப்படி இந்தக் கதையிலே ஆகப் போறான்னு தெரியும்னோ-தெரியணும்னோ நீங்க எழுதி இருக்கீங்க... அந்த மாதிரி நம்ப விஷயங்கள் தெரியாமலிருந்து பின்னாலே தெரியறப்போ அது ஒரு அனுபவமாகுது. அந்த மாதிரி பின்னாலே ஒரு சூழ்நிலை வரப்போ இந்த அனுபவம் வந்து அப்போ கைகுடுக்குது... நாம எல்லாருமே இப்படித்தான் அனுபவம் பெத்துக்கறோம்..." என்றாள் கல்யாணி.

"பரவாயில்லியே... அண்ணாசாமி மாதிரி 'நாடகமே வாழ்க்கை'ன்னு ஆகாமே-வாழ்க்கையை நாடகமா புரிஞ்சுக்கிட்டு இருக்கியே நீ" என்று பரிகாசமாகச் சொன்னான் ரங்கா.

"நான் வெளையாட்டுக்குச் சொல்லலீங்க: நெஜமாகவே எனக்கு என்னோட வாழ்க்கை நாடகம் மாதிரி தான் இருக்கு: நான் இருக்கிற உலகத்திலே வர்ர மனுஷங்க எல்லாம் புதுப்புது கேரக்டராத்தான் வராங்க. நாடகத்திலே வர்ர மாதிரி சில 'மெலோ டிராமா'க்கள் வாழ்க்கையிலேயும் நடக்குது. பட்டு-தாமு காதல் அப்படிப்பட்டதுதான் நாடகத்திலே. நாம் எதிர்பார்க்காத திடீர்த் திருப்பங்கள் வந்தால் சந்தோஷப் படறோம். வாழ்க்கையிலே வந்தால் மட்டும் ஏன் அதைத் தாங்கிக்கக் கூடாது'ன்னு எனக்குத் தோணுது"... என்று அவள் கேட்டபோது சற்றுமுன் அவன் சிந்தித்த ஒரு கேள்விக்கு இப்போது விடை கிடைத்தது போலிருந்தது.

"வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் இவள் எப்படி இவ்வாறு பற்றில்லாத அன்பு கொண்டிருக்கிறாள்?' என்ற கேள்விக்கு 'இவள் வாழ்க்கையை ஒரு நாடகம்போல் ரசித்துப் பார்க்கிறாள்' என்பது பதிலோ என்று அவன் யோசித்தான்.

இந்த நாடகத்திலே எனக்கும் பங்கு உண்டு: நாடகம் எவ்வளவு மோசமானதா இருந்தாலும்-நீங்க 'இது நாடகமே இல்லேன்'னு விமர்சனம் பண்றீங்களே... அந்த மாதிரி மகா மட்டமா இருந்தாலும்-நான் எனக்குக்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கெடைச்சிருக்கிற வேஷத்தை ஒழுங்காப் போட்டுக்கிட்டு சந்தோஷமா நடிக்கணும்னு நெனைக்கிற மாதிரிதான் வாழ்க்கையிலேயும் நடந்துக்கணும் இல்லீங்களா? அதனாலேதான் பட்டுவும் தாமுவும் கஷ்டப்படுவாங்கன்னு எனக்கு அப்பவே தெரிஞ்சிருந்தும்-என் 'ரோலை' நான் செய்யணும்னு சரி'ன்னு சொன்னேன். நாளைக்குக் கண்ணைக் கசக்கிக்கிட்டு இங்கே வந்து நிப்பா... இப்போ நம்ப 'ரோல்' அவங்களுக்கு உதவி பண்றது தான்... அதை நம்ம கடமையா நெனைச்சி சந்தோஷமா செய்யணும்னு இப்பவே நான் என்னைத் தயார் பண்ணிக்கறேன்" என்று அவள் பட்டு விவகாரமாகப் பேசுகிற இந்த உண்மைகளிலிருந்து இவளை அவன் மிகவும் உயர்வாகவும் சரியாகவும் புரிந்து கொள்ள முடிந்தது.

பட்டு விஷயத்திலேயே இவள் இப்படியெல்லாம் யோசித்துத் தயார்படுத்திக் கொள்கிறாள் என்றால் தன் விஷயத்திலும் தாங்கள் ரத்துச் செய்துகொள்ளப் போகிற இந்தத் தாம்பத்தியம் பற்றியும் தங்கள் உறவு பற்றியும் இவள் எவ்வளவு தீர்க்கமாக யோசித்திருப்பாள் என்று எண்ணி அவன் தன் மனத்தினுள் அவளறியாவண்ணம் வியப்படைந்தான்.

சாயங்காலம் நாலு மணிக்கு அந்த லாயர் வீட்டுக்குப் போவதாகத் தீர்மானமாயிற்று. அதுவரை, பகல் முழுதும் எங்கும் போகாமல் கல்யாணியுடன் பேசிக் கொண்டு வீட்டிலேயே இருந்தான் ரங்கா. இதுமாதிரி அவன் வீடு தங்கி ரொம்ப நாட்களாகி விட்டது.

தானும் அவளும் கணவன்-மனைவி என்ற பந்தத்திலிருந்து விலகி வெறும் ஆணும் பெண்ணுமாக, சிநேகிதர்களாக மாறவிருக்கும் இந்தச் சூழ்நிலையில் அவளை அவன் விருப்பு வெறுப்பின்றி நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு கணவன் என்கிற முறையில் தான் அவளுக்குச் சரியானவனாக நடந்து கொள்ளவில்லை என்பதை மிகவும் மனஉறுத்தலுடன் அவன் இப்போது உணர்ந்தான். தன்னால் அவ்விதம் இவளுக்கு ஏற்ற கணவனாக மாறுவது சிரமம் என்று அவன் புரிந்து கொண்டான். வாழ்க்கையைப் பற்றிய மனிதர்களைப் பற்றிய, சுக துக்கங்களைப் பற்றிய, கண்ணோட்டங்களில் அவளுக்கும் தனக்கும் அடிப்படையிலேயே முரண்பாடுகள் இருப்பதை இன்று அவன் தெளிவான புத்தியுடன் நிதானமாக அறிந்தான். அந்த முரண்பாடுகளை மாற்ற முயல்வது ஈவிரக்கமில்லாத கொடுமையான ஆன்ம துராக்கிரகம் என்று அவனுக்குத் தோன்றியது. இது மாதிரியான விஷயங்களில் யாருடைய கண்ணோட்டம் சரி, யாருடையது தவறு என்று தீர்மானிக்க முயல்வது நியாயமில்லாத நடவடிக்கையாகும்.

அன்று மத்தியானம் அவனும் அவளும் ஒன்றாக அமர்ந்து

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சாப்பிட்டார்கள். முதன் முதல் ஒரு நாள் அவனுக்கு அவள் விருந்தளித்தாளே அன்றுபோல் இன்றைய விருந்தையும் கல்யாணியின் உடனிருப்பையும் அவன் புதுமையாக அனுபவித்தான்.

சாப்பிட்டானதும் அவள் புகையிலை இல்லாமல் வெற்றிலை போட்டுக் கொண்ட போது அவனும் கொஞ்சம் பாக்கை எடுத்து வாயிலிட்டுக் கொள்வதைக் கண்ட கல்யாணி, அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். அவன் முதல் முறையாக இவள் கையால் தாம்பூலம் தரித்துக் கொண்டான். அவனுக்கு நாக்கும் உதடும் சிவந்து போனதை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்து ரசித்து அதற்காக அவனைப் பாராட்டுகிற மாதிரி, "ஐயோ! எப்படி உங்களுக்குச் சிவந்து போகுது" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள் கல்யாணி. அவனும் அவள் சொல்கிறதைக் காண விரும்பி நாக்கை நீட்டியும், உதட்டை இழுத்தும் பார்த்துக் கொண்டான்.

அவள் அவனுக்கு அதைக் காட்ட விரும்பி அவனை இழுத்துக் கொண்டுபோய்க் கண்ணாடியின் முன் நிறுத்தினாள். நிறுத்தி அந்த உதட்டுச் சிவப்பில் முத்தமிட்டாள்.

அவனை அவள் ஒரு குழந்தைமாதிரி சீராட்டிய போது அவன் சந்தோஷமும் வெட்கமும் கொண்டு அவள் மீது முகம் புதைத்துக் கொண்டான்.

பகல் மூன்று மணிக்குத் தூங்கிக் கொண்டிருக்கும் அவனை எழுப்பாமல் மெதுவாக நடந்து சென்று அடுக்களையில் காப்பி தயாரித்துவிட்டு வந்து-நாலு மணிக்கு வெளியே போகவேண்டுமென்பதால்-மூணரை மணி வரைக்கும் காத்திருந்துவிட்டு அவனை வந்து காப்பி சாப்பிட எழுப்பினாள்.

அவன் காப்பி குடித்தபின் எழுந்து முகம் கழுவச் சென்றான். அவளும் ஏதோ உல்லாசமாக அவனுடன் வெளியே போகிறவள் போல-விவாகரத்து விஷயமாக அந்த லாயரைச் சந்திக்க-உடை உடுத்திக் கொண்டாள்.

எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு இன்று அவளும் அவனும் ஸ்கூட்டரில் வெளியே புறப்பட்டனர். போகும் வழியெல்லாம் ரங்கா அவளிடம் அந்த லாயரை-ராகவனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டே வந்தான். கல்லூரியில் படிக்கும்போது அவன் எப்படி எல்லா மாணவர்களுக்கும் ஆதர்சமாக இருந்தான் என்பதை ஒரு வீர வழிபாடு மாதிரி அவன் உற்சாகமாக வருணித்துக் கூறினான். அவனைச் சந்திக்கும் போதெல்லாம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இப்போதும் அந்தப் பழைய கல்லூரிக்காலத் தோழமையுடன் அவன் பழகுகிற பண்பைப் புகழ்ந்தான்.

ஸ்கூட்டரில் அவன் பின்னால் உட்கார்ந்து அவன் தோளைத் தழுவிக் கொண்டு அவன் சொல்வதையெல்லாம் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் கல்யாணி.

"உங்களுக்கு ஃபிரண்ட்ஸ் யாருமே கிடையாதுன்னு நான் நெனைச்சிக்கிட்டு இருந்தேன்" என்றாள் அவள்.

"நீ நெனைக்கிறது சரிதான். நான் யாரோடயும் எப்பவும் நெருங்கிப் பழகறது இல்லே. அதனாலேயே மத்த பத்திரிகையிலிருந்து வர ரிப்போர்ட்டருங்களுக்கு என்கிட்டே மரியாதை உண்டு. என்னோட காலேஜ்லே படிச்சவங்களையெல்லாம் அத்தோட நான் மறந்துட்டேன். ஆனா, இவனை-ராகவனை யாரும் மறக்க முடியாது. அப்படியொரு டைனமிக் பர்ஸன்! ஆனா ரொம்பப் பெரிய எடம்... அதனாலே என் பிரண்ட்னுகூட அவனை நான் சொல்லிக்கிறது இல்லை. ஆனா, அவன் பார்த்தா விடமாட்டான். ரெண்டு நாளைக்கு மின்னே... டிரைவ்-இன் ரெஸ்டாரெண்ட்லே மாட்டிக்கிட்டேன். அப்பத்தான் இது விஷயமாக-நம்ப விஷயம் மாதிரி இல்லாம-பொதுவாப் பேசினோம்... அந்தக் காலத்திலேயே நாங்க ஏதாவது தமாஷுக்கு அவன்கிட்டே போயி ஒரு 'பிராப்ள'த்தை 'போஸ்' பண்ணுவோம். முன்கூட்டியே நாங்க பேசி வெச்சிகிட்டு, 'பாரேன் பெரிசா லெச்சர் அடிக்கப் போறா'ன்னு கண்ணைச் சிமிட்டிக்கினு ஒருத்தன் போயி இவன்கிட்ட கேப்பான்: உடனே அதுக்கு ரொம்ப சீரியஸா அரைமணி நேரம் பேசி ஒரு 'தீஸிஸே' குடுப்பான். நான் மட்டும் அவன் எவ்வளவு சீரியஸா பேசறானோ அதே மாதிரி ரொம்ப ஈடுபாட்டோட கேட்பேன். பெரிய ஜீனியஸ் அவன்! எல்லா ரெஃபரன்ஸும் விரல் நுனியிலேயே இருக்கும் அவனுக்கு. எந்த விஷயத்தையும்-எல்லா விஷயத்துக்குமே ஒரு ஆழமிருக்குமில்லையா? அந்த ஆழத்தோட தான் அவன் பேசுவான்... அது மாதிரி ஏதோ கேட்க வரப்போறேன்னு தான் நெனச்சிக்கிட்டு 'நாம முன்ன மாதிரி பேசிக்கிட்டிருக்கலாம்-நாளைக்கு வாயேன்'னான்... இதான் வீடு..." என்று ஆழ்வார்பேட்டையில், ஓர் ஆறேழு பங்களாக்கள் மட்டுமே உள்ள முட்டுசந்தினுள் ஒரு பெரிய காம்பவுண்டுக்குள் ரங்கா ஸ்கூட்டரைத் திருப்பினான்.

வாசலில் பித்தளைத் தகட்டில் பளபளவென்று ஆர்.ஸ்ரீனிவாசராகவன் என்ற எழுத்துக்களைப் படித்தாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஸ்கூட்டரை நிறுத்தியதும் கல்யாணி இறங்கி நின்று அந்த பங்களாவுக்கு முன் பெரிய மைதானம் மாதிரி இருந்த புல் தரையையும் இருமருங்கிலும் உள்ள ரோஜாச் செடிகளையும் பார்த்து மனம் பறிகொடுத்தாள்:

"எவ்வளவு பெரிய கார்டன்!... ரொம்ப நல்லா 'மெய்ன்டெய்ன்' பண்றாங்க" என்று முனகிக் கொண்டாள்.

அந்த வீடு அரண்மனை மாதிரி இருந்தது. தரையெல்லாம் பளபளவென்று பாலீஷ் செய்யப்பட்டு நடக்கும் போது நடப்பவர்களின் உருவம் பிரதிபலித்தது.

வீட்டிற்குள் நுழையும் சித்திர வேலைப்பாடுள்ள நிலைப்படிக்கு மேலே ஒரு பெரிய படம் மாட்டியிருந்தது. சிங்கம் மாதிரி தாடியும் தலை முடியும் கொண்ட, தீட்சண்யமான விழிகளுடன் பார்த்தாலே 'இவன் ஒரு சரித்திர புருஷன்' என்று தோன்றுகிற மாதிரி ஒருமனிதனின் உருவத்தைக் கண்டு இந்த லாயர் ஒரு கம்யூனிஸ்ட் என்று ரங்கா சொல்லிக் கேட்ட கல்யாணி-இந்த படத்திலிருப்பது ஒரு கம்யூனிஸ்ட்டுத் தலைவராக இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

"அது யார் சொல்லு" என்று ரங்கா அந்த படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணியைக் கேட்டான்.

தான் சொல்லுவது தப்பாகி விடக்கூடாதே என்ற தயக்கத்துடன் "மார்க்ஸா?" என்று கேட்டாள் கல்யாணி.

"பரவாயில்லையே-உனக்குத் தெரியாதுன்னு நெனச்சேன்…" என்று அவள் தோளைத் தட்டிப் பாராட்டினான் ரங்கா. "கார்ல் மார்க்ஸ்" என்று முழுப்பெயரையும் சொன்னான்.

"சோஷல் ஸ்டடீஸ்லே படிச்ச ஞாபகம்" என்றாள் கல்யாணி.

அப்போது, நாள் பூராவும் ரங்காவினால் புகழப்பட்டுப் பெரிய சித்திரமாக அவள் மனசில் தீட்டி வைத்திருந்த அந்த உருவத்தைச் சிதைக்கிற மாதிரி, அந்த ஸ்ரீனிவாசராகவன்-லுங்கியும், தொள தொளத்த ஷர்ட்டும், பரட்டைத் தலையும் வாயில் புகைகிற சிகரெட்டும், கனத்த கறுப்பு பிரேம் கண் கண்ணாடியுமாய் ஒரு நோஞ்சான் மனிதனாக உள்ளேயிருந்து வந்தான்.

"ஹாய்…ரங்கா!" என்று அவன் உற்சாகமாகச் சிரித்தான்.

ரங்கா கல்யாணியைத் தன் மனைவி என்று அறிமுகப்படுத்தி வைத்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் தனது பழுப்பு நிறப் பற்களைக் காட்டிச் சிரித்தபடியே இவளுக்கு வணக்கம் தெரிவித்தான்.

“தயவுசெய்து உட்காருங்கள்” என்று அவன் அவர்களிடம் கூறினான்: “மன்னிக்கணும் இந்த மாதிரி டிரஸ்லே இருக்கறத்துக்கு. மத்தியானம் தூங்கிட்டேன். நான் விடுமுறை நாளை முழுக்க முழுக்க விடுமுறை நாளாகக் கழிக்கிறவன்.” என்று ஆங்கிலத்தில் சொல்லி, ‘ஒண்ணும் முடியலேப்பா:....ஹியரிங்கும்-வாய்தாவும்-ஆர்க்யுமெண்டும்-இன்னிக்கு ஒருநாள் எல்லாத்தியும் மறந்துடணும்...” என்று நிறுத்தாமல் பேசிக்கொண்டே இருந்தான் அவன்.

“காப்பி, டீ என்ன சாப்பிடுகிறீர்கள்?” என்று கேட்டான்.

“இப்போதுதான் காப்பி சாப்பிட்டோம்” என்று ரங்கா சொன்னதற்கு-

“சரி கொஞ்சம் பொறுத்து டீ சாப்பிடுவோம்” என்று அவனே சொல்லிக் கொண்டான்: “நாம அங்கே லான்லே உக்காந்து பேசுவோமே” என்றான்.

கல்யாணி அதைத்தான் எதிர்பார்த்தாள். மூவரும் அந்தப் புல்வெளியில் வந்து நின்றனர். ஒரு வேலையாள் பிளாஸ்டிக் வலைபின்னிய மூன்று நாற்காலிகளையும், ஒரு டீபாயையும் கொண்டுவந்து புல்வெளியில் போட்டான்.

அவனிடம் சற்றுப் பொறுத்து டீயும் பிஸ்கெட்டும் கொண்டுவரச் சொல்லிவிட்டு ராகவன் அவர்களை அந்த நாற்காலிகளில் அமரச் சொன்னான். அவன் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசினான். தமிழில் அவன் வேலைக்காரர்களிடம் மட்டுந்தான் பேசுவான் என்று தோன்றியது.

“என்னம்மா, உங்க ஹஸ்பெண்ட் அந்தக் காலத்திலேயே கதையெல்லாம் எழுதுவார்... இப்ப எழுதறாரா? இவர் எழுதறதெல்லாம் நீங்க படிக்கிறீங்களா?” என்று கல்யாணியைக் கேட்டான்: “சாதாரண ஜனங்களுக்கு இவர் வியூஸ் எல்லாம் ரொம்பக் கஷ்டமாயிருக்கும்... உங்களுக்கு எப்படி?”

“எனக்கு இவரோட அநேகமா உடன்பாடு உண்டு. சில விஷயங்கள்ளே மாறான கருத்தும் உண்டு. உதாரணத்துக்கு ஒண்ணு சொல்றேன்: எனக்கு ரோஸஸ்’னா ரொம்பப் பிடிக்கும்-இவர் இந்த மாதிரி கார்டன் வெச்சிக்கிறது, லான் போடறது எல்லாம் வேஸ்டேஜ்னு சொல்லுவார். என்னாலே ஒப்புத்துக்க முடியாது” என்று விளக்கினாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“எதன் பேராலும் வேஸ்ட்டேஜ் இருக்கக் கூடாது” எனக்கு இந்த வீடும், இவ்வளவு வேலைக்காரர்களும் வேஸ்ட் தான். ஆனால், எங்க அம்மா இருக்கிறவரை நான் ஒண்ணும் பண்ணமுடியாது. எங்க தாத்தா திவானா இருந்தாராம். அதுக்காக இன்னும் அவ தன்னை ஜமீந்தாரிணின்னு நெனச்சுண்டு இருக்கா, எனக்குக்கூட ‘ரோஸஸ்னா ரொம்பப் பிடிக்கும்…ஐ லைக் ஆல் ஃப்ளவர்ஸ்… உனக்கு ஏம்பா பிடிக்கலை?” என்று ரங்காவைக் கேட்டான்.

ரங்கா அதற்குப் பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பினான்.

“அதுமட்டும் இல்லீங்க அவருக்குக் கிரிகெட் பிடிக்காது. கிரிக்கெட் காமன்டரி கேக்கறவங்களை அடியோடு பிடிக்காது” என்று கூறிச் சிரித்தாள் கல்யாணி.

“அது சரி. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு பிடிக்கும் ஒண்ணொன்னு புடிக்காது” என்று அந்த விஷயத்தை மேலே தொடராமல் முடித்தான் ராகவன்.

டீ வந்தது. மூவரும் டீ குடித்தார்கள். ராகவன் ரங்காவுக்குச் சிகரெட் தந்தான்: தானும் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு பேசினான்:

“சரி, விஷயத்துக்கு வருவோம். நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? கதை எழுத ரெஃபரென்ஸா?.... யாராவது நண்பர்கள் சம்பந்தப்பட்ட விவகாரமா?” என்று கேட்டான்.

ரங்கா ஆங்கிலத்தில் சொன்னான். “விஷயம் எங்கள் இருவர் சம்பந்தப்பட்டதுதான்.”

ராகவன் புருவங்களைச் சுளித்தான். ரங்கா தொடர்ந்து ஆங்கிலத்தில் சொன்னான்:

“நாங்கள் ஒன்றரை வருஷத்துக்கு முன்னே ரிஜிஸ்டர் திருமணம் செய்து கொண்டோம். இப்போது அந்தத் திருமண உறவை ரத்துச் செய்து கொள்ள விரும்புகிறோம். இதில் இருவருக்கும் ஆட்சேபனை இல்லை. என்ன ப்ரொஸீஜர்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இதில் ஏதாவது சிக்கல் வருமா?”

ராகவன் சிரித்துக் கொண்டான்: “என்ன செய்யணுங்கறதெ அப்புறமாச் சொல்றேன். அதிலே ஒண்ணும் சிரமம் இருக்காது. இப்படியொரு விசித்திரமான எண்ணம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது? நான் தெரிஞ்சுக்கலாமா? என்னுடைய ‘க்யூரியாஸிடி’யினாலே இதை நான்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கேக்கலே. நீங்க ஏதாவது ஒரு திட்டவட்டமான காரணத்தைச் சொல்லித்தான் டைவர்ஸுக்கு விண்ணப்பிக்க முடியும் நீங்க என்ன காரணம் சொல்றீங்க?"

"காரணம் என்ன? நாங்க ரெண்டு பேரும் கணவன்-மனைவியா இருக்க விரும்பலே-அதான் காரணம்!"... என்றான் ரங்கா.

"நீங்க கணவன் மனைவியா இருக்க விரும்பலேங்கறது தான் உங்க விண்ணபத்திலேயே தெரியுமே... அதுக்கு ஒரு காரணம் இருக்கணும். அதைச் சொல்லவேணும். உதாரணமா, உங்கள்லே யாராவது ஒருவர் தீராத வியாதி உடையவரா-அல்லது 'வெனீரியல் டிஸீஸ்' உடையவர்களா?"

"நோ...நோ!" என்று இடைமறித்தான் ரங்கா. "அந்த மாதிரி எதுவுமில்லே."

"இல்லேன்னா யாராவது ஒருவர் 'அடல்டரி' கமிட் பண்றவாளா?"

"நோ" என்று மறுத்தான் ரங்கா.

"இல்லையானா யாராவது ஒருவர் மலடுன்னு டாக்டர் கிட்டே சர்டிபிகேட் வாங்க முடியுமா?"

"ம்ஹூம். முடியாது... என்ன... கல்யாணி?" என்று ரங்கா அவளிடம் திரும்பிய போது அவள் சொன்னாள்: "இல்லே ஒரு தடவை வேறே தொந்தரவுக்காக டாக்டர் கிட்டே போன போது, 'உனக்கு ஒரு சின்ன ட்ரீட்மெண்ட் செய்தால் தான் குழந்தை பிறக்கும்'னு சொன்னாங்க. 'மலடு இல்லேன்'னும் சொன்னாங்க. நான் தான் நல்லதாப் போச்சுன்னு அந்த ட்ரீட்மெண்டுக்குப் போகவே இல்லே."

"சரி அதுவும் முடியாதுன்னா என்ன காரணம் சொல்லுவீங்க? உங்கள்லே, யாராவது ஒருத்தர் இன்னொருத்தரை வேறே மதத்துக்கு மாறணும்னு கட்டாயப்படுத்தறாங்கன்னு சொல்லுவீங்களா?" என்று கேட்டான் ரங்கா.

ரங்கா உறுதியாகச் சொன்னான்: 'நோ.... எந்தப் பொய்யான பழியையும் இதுக்காக நாங்க சொல்ல முடியாது. இந்த உண்மையைச் சொல்ல நாங்க தயார்: அது என்னான்னா. 'வீ டோண்ட் லவ் ஈச் அதர் (நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை). இது போதாதா? காதலிக்காத ரெண்டு பேர் ஒண்ணா வாழமுடியுமா? காதலிக்காத ரெண்டு பேரைச் சேர்ந்து வாழணும்னு சட்டம் நிர்ப்பந்தம் செய்ய முடியுமா, என்ன?" என்று கேட்டான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ராகவன் சிரித்தான்: “உங்களுக்கு எப்படித் தெரியும், நீங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை என்று? ஹவ் கேன் யூ புரூவ் இட்?” என்று கேட்டுவிட்டு அவன் மேலும் சிரித்தான்.

“ஹவ் டூ யூ நோ தட் யூ டோண்ட் லவ் ஈச் அதர்? – நீங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” ராகவன் திரும்பத் திரும்ப விரலை நீட்டி இருவரையும் மாறி மாறிக் கேட்டபோது இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்காத ரங்காவும் கல்யாணியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

அவன் அவர்கள் இருவரையும் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ‘இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கவில்லை என்று கூறுவது எவ்வளவு மடத்தமான பொய்!’ என்று அவன் புரிந்து கொண்டு விட்ட கேலி இருப்பதை அறிந்து கொள்ளாத ரங்கா அவனுக்கு ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். இதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தனக்கு இல்லாத மாதிரி கல்யாணி மௌனமாயிருந்தாள். ஆனால் ராகவன் ‘வெய்ட்’ என்று, ரங்கா ஏதோ சொல்ல வருவதனின்றும் அவனைத் தடுத்துத், தானே பேசலானான்.

“எனக்குக் காதலைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இனிமேல் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் இருக்காதென்று நெனைக்கிறேன்” என்று ஆங்கிலத்தில் கூறிக் கண்களைச் சிமிட்டிக் கொண்டான்: “ஆனால் நீ சட்டத்தைப் பத்தியில்லே கேட்டே-காதலிக்காத ரெண்டு பேரை நீங்க சேர்ந்து வாழனும்னு’ என்ன சொன்னே?” என்று சற்று முன் ரங்கா தமிழில் கேட்ட வாசகங்களைத் திருப்பிச் சொல்லுவதற்காக ரங்காவிடம் உதவி கேட்கிற மாதிரி அவன் தவித்தபோது ரங்கா திரும்பவும் தெளிவாகச் சொன்னான்.

“காதலிக்காத ரெண்டு பேரைச் சட்டம் சேர்ந்து வாழணும்னு நிர்ப்பந்தப்படுத்த முடியுமான்னு கேட்டேன்”

அந்தக் கேள்வியை நன்றாகப் புரிந்து கொண்டு இப்போது ராகவன் வாய்விட்டுச் சிரித்தபின் சொன்னான். “கல்யாணம் பண்ணிண்டிருக்கறவாளையெல்லாம் நீங்க காதலிச்சேதான் ஆகணும்னு சட்டம் ‘டிக்டேட்’ பண்ண முடியாது தெரியுமா? சட்டப்படி கல்யாணம் பண்ணிண்டவா எல்லோரும் காதலிச்சுப் பண்ணிண்டாளா இல்லையான்னு போய் ‘டிடெக்ட்’ பண்ணிண்டு இருக்கவும் முடியாது. நீங்க ரெண்டு பேருமாச் சேர்ந்து ‘நாங்க கல்யாணம் பண்ணிக்கறோம்னு சொன்னேள். சட்டத்தை மதிச்சுச் சட்ட பூர்வமான அங்கீகாரம் வேணும்னு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

போனேள்: சட்டம் உங்ககிட்டே எதிர்பார்க்கறதெல்லாம் அந்த மதிப்பை நீங்க எப்பவும் காப்பாத்தணும்கறதுதான். நீங்க ஒண்ணா இருக்கிறதும் பிரிஞ்சுபோறதும் சட்டத்துக்கு அவ்வளவு முக்கியமில்லை. ஆனால் அதை நீங்க சட்டப்படி செய்யறேளாங்கறதுதான் அதுக்கு முக்கியம். சட்டங்களுக்கு இருக்கிற ரொம்ப விசேஷமான அம்சம் என்னன்னா சட்டத்தையே கூட மாத்தலாம். ஆனா இன்னொரு சட்டத்தின் மூலமாத்தான் மாத்தலாம். இல்லாட்டிப் போனால் அதுக்குச் சட்டமீறல்னு பேரு. அது குற்றம்?" என்று சொல்லிச் சற்று நிறுத்தி யோசித்து விட்டு மேலும் தொடர்ந்து சொன்னான் ராகவன்:

"சட்டபூர்வமாக ஏற்படுத்திக்கிட்ட உங்க கல்யாணத்தை ரத்து செய்துக்கற உரிமையை உங்களுக்குச் சட்டம் கொடுத்திருக்கு. அந்த உரிமை சரியாகவும் நியாயமாகவும் பயன்படுத்தப்பட்டதான்னு பார்க்கறா. அவ்வளவுதான், அதுக்குத்தான் காரணம் கேக்கறா. காரணம் நீங்க சொன்னா மட்டும் பத்தாது. அதை நீங்க நிரூபிக்கணும். நீங்க ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கலேன்னு எப்படி நிரூபிக்கிறது? உனக்கு ரோஸஸ் பிடிக்கலேங்கறதையும் இவங்களுக்குப் பிடிக்கிறதுங்கறதையும் வெச்சா? நம்ப நாட்டுச் சட்டத்துக்கு இந்தக் காரணம் போறாது. என்னோட கொள்கையை இப்போ நான் பேசலே, கல்யாணம்கற உறவை நம்ப சட்டம் அவ்வளவு சாதாரண விஷயமா இன்னும் பார்க்கலே. அதை 'ரிடிக்யூல், பண்றதுக்கு, அதாவது அதைத் தாழ்த்தறத்துக்கு சட்டமும் துணையாயிடப்படாதுன்னு நம்ப நாட்டு நீதி நினைக்கறது. ஸோ.... யூ ஹாவ் டு ப்ரூவ் தட் யூ டோண்ட் லவ் ஈச் அதர்! சரி....இப்படிக் கேக்கறேன்: டூ யூ ஹேட் ஈச் அதர்? ஏம்மா! இவர் மேலே உங்களுக்கு வெறுப்பு இருக்கா?"

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் கல்யாணி சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே அவனுக்குப் புரிந்தது. இவளால் யாரையுமே வெறுக்க முடியாது என்று.

ராகவனின் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னால் "என்னைக் கொஞ்சம் பேசவிடறியா?" என்று தான் 'விவாகரத்து கோருவதற்கான காரணங்களைச் சற்று விரிவாக விளக்க எண்ணிக் கேட்டான் ரங்கா. இந்தப் பிரச்னையை ரொம்ப விளையாட்டாகக் கருதி இதனுடைய முக்கியத்துவத்தைக் குறைத்துத் தங்களைப் பற்றிப் பரிகாசமாக இவன் ஏதோ நினைக்கிறான் என்று புரிந்துகொண்ட ரங்கா கொஞ்சம் கோபம் அடைந்திருந்தான்.

"கோ அஹெட்" என்று அவன் பேசுவதைக் கேட்கத் தயாரானவனாய்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ராகவன் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

“நாங்க ரெண்டு பேரும் புருஷன் மனைவி என்கிற உறவு இல்லாதவங்களா இருந்தால் ரெண்டு நல்ல நண்பர்களா இருக்க முடியும்னு நினைக்கறோம். எங்க ரெண்டு பேருக்கும் இருக்கிற சிநேகத்தை ஒரு புருஷன்-மனைவிக்கு இடையே இருக்கிற உறவா நாங்க தப்பா நினைச்சு அவசரப்பட்டு இந்தக் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டோம். ஸோ வீ வாண்ட் டு கெட் பேக்.... இதுக்கு ஒருத்தரை ஒருத்தர் வெறுக்கணுமா? இல்லே குற்றம் சாட்டித் தூற்றணுமா? நாங்க சட்டத்தையோ கல்யாணத்தையோ ‘ரிடிக்யூல்’ பண்ணலே. ஆனால் அதுக்காக எங்களை நாங்க தாழ்த்திக்க முடியாது இல்லையா? மனித உணர்ச்சிகளை ‘ரிடிக்யூல்’ பண்ணக்கூடாது இல்லையா?” என்று அவன் பாணியிலேயே அவனைத் திரும்பத் திரும்பக் கேட்டான் ரங்கா.

“யூ ஆர் கம்ப்ளீட்லி மிஸ்டேக்கன் ரங்கா. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நீங்க டைவர்ஸுக்கு அப்ளை பண்ண முடியும்: அது ரொம்ப ‘ஸிம்பிள்’னு. ஆனால் அதுக்கு ஒரு காரணம் இருக்கணும்னு கேட்டேன். உனக்கு அந்தக் காரணத்தைச் சரியாகச் சொல்ல முடியாததனால் தான் நாம்ப இப்போ வளைச்சு வளைச்சுப் பேசிக்கிட்டிருக்கோம். ஒரு கேள்வியும் அதற்குப் பதிலும் இன்னும் இருக்குங்கற வரைக்கும் எந்த ஆர்க்யுமெண்டும் முடியறதில்லே. என்ன உங்களுக்குக் கல்யாணம் ஆகி ஒண்ணரை வருஷம் தான் ஆறதுன்னு சொல்றீங்க: கல்யாணம் ஆகி ஒண்ணரை வருஷத்துக்குள்ளே-அதாவது மூணு வருஷத்துக்கு முன்னே விசேஷ காரணங்கள் எதுவும் இல்லாம-யூ ஆர் நாட் எலிஜிபிள் டு அப்ளை ஃபார் எ டைவர்ஸ்-விவாகரத்து கேக்க முடியாது. நீ இந்தப் பாய்ண்ட்லேயே மாட்டிக்கறயே-அதனால்தான் நான் திரும்பத் திரும்ப இதையே ஸ்ட்ரெஸ் பண்றேன். உங்களுக்குள்ளே காதல் இல்லேங்கறதையே நான் ஒரு காரணமா வச்சிண்டாலும்-அப்கோர்ஸ் இது போதாது லா ஹாஸ் நத்திங் டு டூ வித் யுவர் லவ் பிஸினஸ். நீ எதை வச்சு அப்படி நினைக்கறேன்னு சொல்ல வேண்டாமா? ஏதாவது காரணம் இருந்தா மறைக்காமல் சொல்லு... நான் இப்படிக் கேட்கட்டுமா? எதை வச்சு நீங்க ரெண்டு பேரும் காதலிச்சதா முதல்லே நினைச்சீங்க?”

மறுபடியும் இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத ரங்காவும் கல்யாணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களின் பதில் சொல்லமுடியாத மௌனத்தை ராகவன் ரொம்ப ரசித்துச் சிரித்தான். இந்தக் கேள்வியிலேயே அவர்களை அதிகம் அழுத்த விரும்பாமல் ராகவன் அடுத்த கேள்விக்குப் போனான்:

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

"ஒருத்தர் காதலிக்கிறாங்களா, இல்லையாங்கறது அவங்க சொல்ற 'ஆமாம்' அல்லது 'இல்லை'ங்கற ரெண்டு வார்த்தையிலே அடங்கி இருக்குன்னு நினைக்கிறீங்களா?... ஐ டோண்ட் நோ மச் அபவ்ட் இட்.... சரியாகச் சொன்னா ஏதாவது தெரிஞ்சிக்கலாமே. காதலைப் பத்தின்னுதான் கேக்கறேன். விரும்பாத ரெண்டு பேர் சேர்ந்து வாழறது ரொம்ப நரகம் தான். நான் ஒப்புத்துக்கறேன். உங்க கேஸ்லே அது அப்படித்தானா?- ஒரு லாயர்ங்கற முறையிலே இல்லே-ஒரு பிரண்ட்ங்கற முறையிலே அதுகூடச் சரியில்லே.... காதலைப்பத்தி தெரிஞ்சுக்கிறதுக்கு ஆர்வமுள்ள ஒருத்தன்ங்கற முறையிலே கேக்கறேன்னு வச்சுக்கோயேன்-எனக்குச் சொல்லு, காதல்ங்கிறது அவ்வளவு தானா? நீங்க என்னம்மா' ஒண்ணுமே பேசமாட்டேங்கறீங்க?" என்று கல்யாணியையும் சம்பாஷணையில் இழுத்தான் ராகவன்.

அப்போது நேரம் கறுக்க ஆரம்பித்து விட்டதால் ஒரு வேலைக்காரன் வராந்தாவிலும் இவர்கள் உட்கார்ந்திருந்த புல்வெளியிலும் உள்ள விளக்குகளையெல்லாம் போட்டான். இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு மேலே ஒரு நீலநிற நியான் பல்ப் குளிர்ச்சியான வெளிச்சத்தைப் பொழிந்தது.

கல்யாணி மெதுவான குரலில் மிகவும் அடக்கத்தோடு அவனிடம் சொன்னாள்: "இந்த மாதிரி விஷயங்களுக்கெல்லாம் இப்படித்தான்னு ஒண்ணும் இலக்கணம் கிடையாது. நீங்க சொன்ன மாதிரி காதலிக்கிறோமா, இல்லையாங்கறதுக்கு 'ஆமாம்னு' சொன்னாலும் இல்லை'ன்னு சொன்னாலும் இரண்டுமே ஒரு 'அஸம்ஷ்ஷன்'-அதாவது பாவனைதான். அந்த நம்ப பாவனை உண்மையாகவும் ஆகலாம்: பொய்யாகவும் போயிடலாம். அது இரண்டையும் வாழ்ந்து பார்த்துத்தான் கண்டுபிடிக்கணும். எங்களைப் பொறுத்தவரைக்கும் அப்படிப்பட்ட பாவனை வாழ்ந்து பார்த்ததனாலே பொய்யாகப் போயிட்டிருக்கலாம் இல்லையா? அதைப் புரிஞ்சிக்கற அளவுக்கு நாங்க நல்லவங்களாகவும் அறிவு உள்ளவங்களாகவும் இருக்கோம். அதனால்தான் இவ்வளவு சுமூகமா இந்த விவாகத்தை ரத்து செய்யற விஷயத்திலேகூட எங்களாலே ஒத்துமையா இருக்க முடியுது. எங்களுக்குள்ளே காதல் இருக்கறது உண்மையோ பொய்யோ? நாங்களே அதை மறுக்கும் போது-அதுதான் ரொம்ப முக்கியம்-அந்த உண்மை-அது எப்படி இருந்தாலும் அது அவ்வளவு முக்கியம் இல்லே?" என்று அவள் யோசித்து யோசித்து நிதானமாகக் கூறியபோது இந்த விவாகரத்து யோசனையைக் கூறியவளே இவளாக இருக்குமோ என்று எண்ணினான் ராகவன். அதற்கான நியாயங்களை இவள் அளவு தெளிவாகச் சொல்ல முடியாமல் சற்று முன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரங்கா தவித்ததை இப்போது நினைத்துக் கொண்டு இருவரையும் மாறி மாறிப் பார்த்து இத்த விஷயத்தில் முன்கை எடுத்தது யாராக இருக்கும் என்று யோசிக்கலானான் ராகவன். அவனுக்கு எதையும் வெகு நேரம் மனத்தினுள்ளேயே யோசித்துக் கொண்டிருக்க முடியாது.

“இந்த விசித்திரமான எண்ணம் உங்கள் இரண்டு பேர் தலைகளில் யாருக்கு முதலில் தோன்றியது!” என்று வேடிக்கையாகச் சிரித்தபடியே ஆங்கிலத்தில் கேட்டு விட்டான்: “அது நீங்கதான்னு யூகிக்கிறேன். என்ன சரிதானே?” என்று அவன் கல்யாணியிடம் விரல் நீட்டிக் கேட்டான். கல்யாணி பெருந்தன்மையோடு சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பைப் பார்த்த ரங்கா, இவள் எவ்வளவு அற்புதமான நடிகை?' என்று அந்த விநாடி நினைத்தான்.

‘இவளால் இந்த ஒரு சிறு புன்னகையில் எப்படி இவ்வளவு பாவங்களைக் கொண்டுவந்துவிட முடிகிறது?' என்று அவன் வியந்தான். இந்தச் சிரிப்பு, ‘ஆம்' என்றும் அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம். ‘இல்லை. உன்னுடைய யூகம் தப்பு' என்றும் நினைத்துக் கொள்ளலாம், ‘எப்படி இவ்வளவு உறுதியாக ஒரு தப்பான முடிவுக்கு உன்னால் வரமுடிகிறது?' என்று கேட்கிறமாதிரியும் எடுத்துக் கொள்ளலாம். ‘இது என்ன அவ்வளவு முக்கியம்!' என்று மழுப்புகிற மாதிரியும் எடுத்துக் கொள்ளலாம். ‘இதுதான் நான் செய்த பாவம்' என்று நொந்து கொள்கிறமாதிரியும் புரிந்து கொள்ளலாம்.

“நோ-யூ-ஆர் ராங்” என்று குறுக்கிட்டு ராகவனிடம் சொன்னான் ரங்கா: “கல்யணத்துக்கு ‘ப்ரப்போஸ்' பண்ணினதும் நான்தான். இப்போ டைவர்ஸ் பண்ணிக்கலாம்னு யோசனை சொன்னதும் நான்தான். ரெண்டையும் மறுக்காமல் ‘சரின்னு' சொன்னதுதான் அவள்.”

ராகவன் பெருமூச்சு விட்டான்.

ரங்கா திடீரென்று நினைவு வந்தவனாக ராகவனிடம் சொன்னான்: “நான் சொல்ல மறந்துட்டேனே, கல்யாணி ஒரு புகழ் பெற்ற நடிகை.”

”இஸ் இட்? நான் படம் எல்லாம் பாக்கறதே இல்லே…” என்று தன்னுடைய ஆச்சரியத்தை தெரிவித்த ராகவன் அவளுடைய படங்களைப் பார்க்காததற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

“நடிகைன்னா சினிமா நடிகை இல்லே. ஸ்டேஜ் ஆர்ட் டிஸ்ட்! சொந்தமா அவளே ஒரு நாடகக் குழுவை நடத்திக்கிட்டு இருக்கா. சினிமாவிலே நடிக்கறதுக்கு அவளுக்கு விருப்பமில்லை. நாடகத்துக்கு அவ்வளவு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மரியாதை தரா. ஷி லவ்ஸ் டிராமா. அதனாலேதான் அவளுக்கு என்னைக் கூடக் காதலிக்க முடியலே” என்று சொல்லிவிட்டு, “சும்மா ஜோக்’குச் சொன்னேன். தப்பா நினைச்சுக்காதே” என்று கல்யாணியிடம் கூறினான் ரங்கா.

ராகவன் சிகரெட் கொளுத்தினான்: கண்ணை மூடிக் கொண்டு தலையை அண்ணாந்து சற்று நேரம் யோசித்தான். ஜில்லென்று காற்று வந்தது. அவன் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்து ரங்காவைப் பார்த்தான். பின்னர் சிரித்துக் கொண்டே சொன்னான்: “ஐ பெட்-நீங்க விவாகரத்துச் செய்துக்கப் போறதில்லே. சும்மா நீங்க இதை ‘ஃபேன்ஸி’ பண்றீங்க.... நான் இப்படிச் சொன்னா, அதுக்கு அர்த்தம் சட்டத்திலே இடம் இல்லேங்கறது இல்லே. எல்லாம் கூடி வந்தாலும் நீங்க பிரியமாட்டீங்கன்னு நினைக்கறேன். இது மாதிரி நான் பல கேஸ் பார்த்திருக்கிறேன்” என்று சொன்ன ராகவன் அவளைப் பாராட்டுகிற மாதிரித் தொடர்ந்து பேசினான்: “நீங்க செய்யறதுதாம்மா ரொம்ப சரி. அவன் போக்குக்கே விடுங்க... நீங்க ‘புரொடஸ்ட்’ பண்ணினீங்க... காரியம் கெட்டுடும்.. அவன் ஜெயிச்சுடுவான். கிவ் ஹிம் எ லாங் ரோப்...” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் ரங்கா குறுக்கிட்டான்.

“வாட் டூ யூ ஸே? ஏதோ உணர்ச்சி வசப்பட்டு நான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன்னு நினைக்கறியா? நல்லா யோசிச்சு ரெண்டு பேரும் பேசித்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கோம். நீ பார்த்ததா சொல்றயே அந்த மாதிரி கேஸ் இல்லே இது” என்று தன்னுடைய தீர்மானத்தின் உறுதித் தன்மையை ரங்கா நிலைநாட்ட முயன்றபோது ராகவன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துச் சிரித்தவாறு சொன்னான்:

“எஸ்.மிஸ்டர் ரங்கா, நீ சொல்றதை நான் ஒப்புத்துக்கறேன். இது புதுமாதிரி கேஸ்தான். நீ உணர்ச்சி வசப்பட்டு இந்த முடிவுக்கு வரலேன்னு ஒப்புத்துக்கறேன். நான் அப்படிச் சொல்லலே. நான் என்ன சொல்றேன்னா நீ உணர்ச்சி வசப்பட்டு இந்த முடிவை ஒரு நாள் மாத்திக்குவே. எனி ஹவ்... ‘ப்ரொஸீஜரை’ச் சொல்லிடறேன். ஃபர்ஸ்ட்திங் இப்போ நீங்க டைவர்ஸுக்கு அப்ளை பண்ண முடியாது. குறைந்தபட்சம் கல்யாணமாகி மூனு வருஷம் ஆகி இருக்கணும். நான் சொன்ன மாதிரி வேற காரணங்கள் எதுவுமில்லாமல் பரஸ்பர சம்மதத்தின் மேலே டைவர்ஸ் வேணும்னா அந்த அப்ளிகேஷன்லே குறைஞ்சபட்சம் ஒரு வருஷ காலமாவது நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சு தனித் தனியா வாழ்ந்துக்கிட்டு இருக்கீங்கன்னு காட்டணும். அதுக்கப்புறம் ஒரு வருஷம் வரைக்கும் நீங்க அதை ‘வித்டிரா’ பண்ணி அந்த மனுவை வாபஸ் பெத்துக்காம

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கணும். இதெல்லாம் 'லீகல் புரொஸீஜர்'. விவாகரத்தை ரத்துப் பண்ணிக்கணும்னு எப்போ ரெண்டு நபர் நினைக்கிறாளோ அப்பவே அவாளைப் பொறுத்தவரைக்கும் அது ரத்தாயிடுத்துன்னு தான் அர்த்தம். ஆனா, உங்க விஷயத்திலே என்னாலே அப்படி நம்ப முடியலே. ஸே!... இதுக்கு முதல்படியா நீங்க ரெண்டு பெரும் பிரிஞ்சு வாழ ஆரம்பிக்கணும். உங்க ரெண்டு பேராலே சேர்ந்து வாழ முடியலேங்கறதுக்கும், பிரிஞ்சு வாழமுடியும்கறத்துக்கும் அதுதான் நிரூபணம். ஏதோ கோர்ட்டுக்காக இல்லே. உங்களுக்கே அது சாத்தியம்னு நீங்க நம்பறத்துக்கு இதைச் செய்யணும்... பிரண்ட்லி மீட்டிங், சும்மா கொஞ்ச நாழி பார்த்துப் பேசறதுங்கறதெல்லாம் கூட நிறுத்திடணும். 'நாங்க காதலிக்கலே'ன்னு சும்மா வாயாலே சொன்னா போதாது. அது நிஜம்தானான்னு அப்பத்தான் உங்களுக்கே தெரியும். என்ன சரிதானே?" என்று அவன் ரங்காவைக் கேட்டான்.

"ஏறத்தாழ நாங்க இப்பவே அப்படித்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்" என்றான் ரங்கா.

"இந்த ஏறத்தாழ விஷயமெல்லாம் கூடாது. முழுக்க இருக்கணும்கறேன்" என்று கண்டிப்பாக விரலை ஆட்டிக் கூறினான் ராகவன்.

கல்யாணி ரங்காவின் முகத்தைப் பார்த்தாள். ஏதோ ஒரு சவாலை, அறைகூவலை ஏற்றுக் கொள்கிறவன் மாதிரி அவன் முகத்திலே ஒரு உறுதி பிறப்பதைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. அவன் எதையும் பிடிவாதத்துக்காகச் செய்யக் கூடியவன் என்று அவளுக்குத் தெரியும். 'கடைசியில் பிடிவாதத்துக்காகவா இதை இவன் செய்யப் போகிறான்?' என்று நினைத்த போது அவள் நெஞ்சுள் ஒரு அவல உணர்ச்சி கனத்தது.

மணி எட்டாகி இருந்தது. அவர்கள் விடை பெற்றுக் கொண்டு போகும் போது ராகவன் ரங்காவின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னான்: "ஒன்றும் அவசரமில்லை. நீ சொன்னது மாதிரி நன்றாக யோசித்து நீங்கள் இருவரும் நன்றாக விவாதித்து இதை முடிவு செய்யலாம். இன்னும் கூட ஆறுமாத காலம் நீ அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். இது உன் வாழ்க்கைப் பிரச்னை: உனக்கு எது சந்தோஷமோ அதை நீ செய்வதுதான் நல்லது."

அவர்கள் இருவரும் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு ஸ்கூட்டரில் ஏறிப்போனார்கள்.

அவள் அவனுக்குப் பின்னால் அவன் தோள்களைப் பற்றியவாறு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உட்கார்ந்திருப்பதைக் கண்ட ராகவன் வாய்க்குள் சிரித்துக் கொண்டான். அவள் ஒரு நடிகை என்பதனாலும், இந்த விஷயத்தில் ரங்கா காட்டுகிற தீர்மானமான உறுதியையும் எண்ணிய ராகவன் ஒருவேளை விவகாரத்துப் பெறுவதிலே ரங்காவின் முயற்சி வெற்றி பெறலாம் என்று இப்போது நினைத்தான். இவை எல்லாவற்றுக்கும் காரணம், ஒண்ணரை ஆண்டுகளுக்கு முன்னால் வரை நேற்று யாரோவாக வாழ்ந்த கல்யாணியின் கடந்த காலம் இவர்களது தற்காலத் தாம்பத்தியத்தில் நெருடுவதாக இருக்கலாமோ என்று ராகவன் நினைத்தான்.

அவன் பார்வையிலிருந்து ஸ்கூட்டர் மறைந்ததும் அவர்களைப் பற்றிய நினைவுகளை அந்த இடத்தோடு விட்டுவிட்டு உள்ளே போனான் ராகவன்.

வீடுவந்து சேரும் வரை வழியில் கல்யாணியும் ரங்காவும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சற்று முன் ராகவன் கூறிய ஓராண்டுக்காலம் இருவரும் பிரிந்திருக்க வேண்டிய அந்த யோசனையை பற்றிய தத்தமது சிந்தனைகளில் அவர்கள் இருவரும் தனித்தனியே ஆழ்ந்திருந்ததனால் அந்த மௌனத்தைப் பற்றிய நினைப்புக்கூட இல்லாதிருந்தனர்.

ரங்கா தன்னைப் பொறுத்தவரை அதனை சவாலாகக் கருதி அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ள விரும்பினான். அவளை விட்டுப் பிரிந்திருப்பதன் மூலம் தனக்கு வாழ்க்கையில் எந்தவிதமான புதிய மகிழ்ச்சியும் கிடைத்துவிடப் போவதில்லை. எனினும் தனது பிரிவு அவளுக்கு எந்தவிதமான வருத்தத்தையும் தராது எனில் அதனால் தனக்கு ஏற்படக்கூடிய சந்தோஷமின்மையைக் கூடத் தாங்கிக் கொண்டு அவளை விட்டுப் பிரிந்துவிடுவதே உசிதம் என்று அவன் எண்ணினான்.

‘இவளுக்கென்ன? இவள் சந்தோஷத்துக்கு ஒரு ரோஜாப்பூ போதும், ஒரு குரோட்டன்ஸ் இலை போதும்: இல்லாட்டி இவளே சொல்ற மாதிரி கண்ணாடி முன்னே உட்கார்ந்துக்கிட்டுத் தன்னைத் தானேபார்த்துக்கிட்டிருந்தாலும் போதும். வாழ்க்கை முழுவதையும் கண்ணுக்கு மை தீட்டிக்கிட்டே, புருவத்தை விதவிதமாக எழுதி எழுதிப் பார்த்துக்கிட்டே, நகத்தை வெட்டிச் சாயம் தீட்டி, அந்தச் சாயத்தை சுரண்டிட்டு இன்னொரு சாயம் தீட்டி... இவள் அந்த மாதிரியான விஷயங்களிலே லயிச்சு இருந்துடுவாள்... இவள் சந்தோஷத்துக்கு நான்தான் வேணுமா? என்னோட சுயமரியாதையை நான் காப்பாத்திக்கிறதுக்காகவாவது இவகிட்டேயிருந்து நான் பிரிஞ்சுடறதுதான் நல்லது. அது என்னாலே முடியணும்... இவளை விட்டுப் பிரிஞ்சா நான்தான் கஷ்டப்படுவேன்: நான்தான் இவளை

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நினைச்சு ஏங்குவேன். பரவாயில்லை! என்னோட கஷ்டமும் ஏக்கமும் இவளுக்குத் தெரியக்கூடாது. இவள் எப்போதும் போலச் சந்தோஷமா இருப்பாள் என் பிரிவு இவளை வருத்தப்படுத்தாது. இது தெரிஞ்ச பிறகும் இவளோட நான் இருக்கறது அவமானம். ராகவன்கூட என்னாலே இவளைப் பிரிஞ்சு இருக்கமுடியாதுன்னு நினைக்கிறான். அவனும் கூட இவளையில்லே ஆதரிச்சுப் பேசறான்! இட் இஸ் ஆல்ரைட்! அதெல்லாம் அவனவனுக்குத் தான் தெரியும். இந்த மனோநிலை இன்னொருத்தனுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. எப்படியாக இருந்தாலும் இப்போ இவளுக்குப் புருஷனாக இருக்கறது எனக்குச் சரியான காரியம் இல்லை. ஒரு வருஷத்துக்கு அப்புறம் மறுபடியும் நான் இவளை ஒரு 'ஃப்பிரண்டா' வந்து பார்ப்பேன். அப்போ இவ குரோட்டன்ஸை ரசித்தாலும், குட்டிச் சுவரை ரசித்தாலும் "ஆஹா நீ மஹா ரசிகை!" என்று நானும் பாராட்டிட்டுப் போகலாம்' என்று மிகவும் மூர்க்கமாக அவன் யோசித்தான் அவளும் இதுபற்றி யோசித்தாள்:

'இதெல்லாம் எதனாலே? இந்த உறவு ரெண்டு பேரோட சந்தோஷத்தையும் பாதிக்குது பாதிக்குதுன்னு இவர் சொல்றாரே! அப்படிச் சொல்றார்ங்கற ஒரே காரணத்துக்காகவே நானும் ஒப்புக்கறேன். ஆனால் இவர் ஏன் அப்படிச் சொல்றார்? உறவுங்கறது இந்தப் பேர்தானா? ஒரு வருஷம் பிரிஞ்சு இருந்து அதன் மூலமா இந்த உறவை மாத்திக்கணும்ங்கற அளவுக்கு இவருக்கென்ன இவ்வளவு பிடிவாதம்? இவர் பிடிவாதத்தினாலே அந்த மாதிரி இருப்பார். ஆனால் இப்பவும் இவருக்கு ஒரு விஷயம் புரியலை! ஒரு வருஷம் என்ன? இவர் திரும்பி வரதுன்னா ஒரு யுகத்துக்கு நான் காத்துக்கிட்டிருப்பேன். ஆனால் ஒரு வருஷம் இவராலே பிரிஞ்சு இருக்க முடிஞ்சுதுன்னா-முடியும்! அது இவராலே முடியும்-அதுக்கு அப்பறம் எந்த உறவையும் வச்சிக்கிட்டு இவராலே திரும்பி என்கிட்ட வரவும் முடியாது. இவர் திரும்பி வரவும் மாட்டார்- இந்த விஷயம் இவருக்குத் தெரியலியே. ஒரு யுகத்துக்கு வேணாலும் காத்திருப்பேன்னு நான் நினைக்கிறேனே. இதுகூட என் ஆசைதான். நாளை அப்படி இருப்பேனான்னு நிச்சயமாச் சொல்ல முடியாது. கொஞ்ச நாளான உடனே ஏன் அப்படி காத்துக்கிட்டு இருக்கணுமாம்?னு தோண ஆரம்பிச்சுடலாம்: இது மனுஷ இயற்கை. இதையெல்லாம் யோசிச்சுத்தான் அப்படி சட்டம் பண்ணி வச்சிருக்காங்க. இவர் யோசனைப்படி - இந்த முடிவு தப்பேயானாலும் அதை நான் தடுக்கறதனாலே ஒண்ணும் நல்லது நடந்துடும்கற நம்பிக்கை எனக்கு இல்லை ஒருத்தர் செய்யற தப்பை ஒருத்தர் திருத்தணும் என்கிற பொறுப்பு உணர்ச்சியெல்லாம் எனக்குத் தெரியும், ஆனால் அதுக்கு அடிப்படையா

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கவேண்டிய சில பண்புகள் எனக்கு இல்லை. அதனாலேயே நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்க வேண்டி இருக்கு, அவர் செய்யறது தப்பேயானாலும் அதை நான் திருத்தற முறை அதுக்கு உடன்படறதுதான்' என்று யோசித்து யோசித்து அவன் செய்கிற எந்த முடிவுக்கும் இன்முகத்தோடு தலையசைப்பதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள் கல்யாணி.

அவர்கள் வீட்டுக்கு வந்த பிறகு, கதவைத் திறந்து விளக்கைப் போட்டு அறைக்குள் சென்றதும் வெளிச்சத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டார்கள். அந்தப் புன்னகை இருவருக்குமே பரிதாபகரமானதாகத் தோன்றியது.

கல்யாணி அவனைச் சாப்பிட அழைத்தாள். அவன் தனக்குப் பசியில்லை என்று கூறி மௌனமான யோசனையுடன் வந்து ஹாலில் உட்கார்ந்து கொண்டு சிகரெட் புகைத்தான். கல்யாணி உடைமாற்றிக் கொண்டு வந்தாள், அப்போது தான் தானும் உடைமாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பு வந்து ரங்கா எழுந்து அறைக்குள் சென்றான். அவன் போகும்போது ஆஷ் டிரேயில் வைத்து விட்டுப் போன சிகரெட் புகைந்து கொண்டிருப்பதைப் பார்த்தவாறு கல்யாணி உட்கார்ந்திருந்தாள்.

அவன் உடை மாற்றிக் கொண்டு வந்து இதை எடுத்துப் புகைக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். அவன் வருவதற்குள் இந்தச் சிகரெட் வீணாய்ச் சாம்பலாகி விடக்கூடாதே என்று அவன் வருகையை அவள் சீக்கிரம் எதிர்பார்த்தாள்: அதற்காக அவள் படபடப்போ பயமோ கொள்ளவில்லை. சும்மா மனசினுள் எதையாவது நினைத்து எதனோடவாவது சம்பந்தப்படுத்திக் கொள்கிற ஒரு சின்ன மனோ-விளையாட்டு அது. அவள் நினைக்கிற மாதிரி அவன் அறைக்குள்ளிருந்து வருவதற்குள் அந்தச் சிகரெட் முழுக்கக் கருகிப் போனால் அதற்காக ஒன்றும் அவள் பெரிதாக வருத்தப்படமாட்டாள்: ஆனாலும்,

நல்லவேளை, அவன் வந்து அந்தச் சிகரெட்டை எடுத்துக் கொண்டான், அவள் முகத்தில் அவனறியாத ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

“நீ என்ன நினைக்கிறே?” என்று திடீரென்று அவன் கல்யாணியிடம் கேட்டான், அவன் எதுபற்றிக் கேட்கிறான் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. இருந்தாலும் கேட்டாள்.

“என்னத்தைப்பத்தி?”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“இப்போ ராகவன் சொன்னானே, அதெப்பத்தி”

“ஆமாம்: சட்டம் அப்படி இருக்கு. நமக்கு அது வேணாம்னா, பிரிஞ்சு போகறதுன்னு முடிவு செஞ்சுட்டா விவாகரத்துக்குப் பின்னாலேதான் பிரிஞ்சு இருக்கணுமா, என்ன? முன்னாலேயே நமக்குள்ளே ஒரு ரத்து ஏற்படுத்திக்கிட்டு அதுக்கப்புறமா கோர்ட்டு மூலமா அதை பெத்துக்கணும்னு வெச்சிருக்காங்க....” என்று தனது உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல் சொன்னாள் கல்யாணி.

ரங்கா பெருமூச்செறிந்தான்:

“நாம்ப ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல், பேசாமல் இருக்கிற அளவுக்கு நமக்குள்ளே சண்டையோ மனஸ்தாபமோ ஒண்ணும் இல்லையே” என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ரங்கா,

அவளும் சிரித்தாள்: “அதுக்காக நாம ஒரு சண்டை போட்டுக்க முடியுமா, என்ன” என்று கேட்டுவிட்டுச் சற்று முகம் மாறிய மௌனத்துடன் தலைகுனிந்து யோசித்தான். பின் தயக்கத்துடன் சொல்ல ஆரம்பித்தான்.

‘நான் உங்களுக்கு யோசனை சொல்லலே உங்க யோசனையை மறுக்கிறதுக்காகவும் சொல்லலே. நீங்க என சொன்னாலும், என்ன செய்தாலும் நானும் சரின்னு சொல்றவ. ஆனாலும் நீங்க கேக்கறீங்களே. அதனாலேஎன் மனசிலே பட்டத்தைச் சொல்றேன்... எனக்கேஇன்னும் கொஞ்சம் தெளிவாக்கிக்கிறதுக்காகக் கேட்கிறேன்-இப்ப இதுக்கெல்லாம் என்ன அவசியம் வந்தது? இவ்வளவு பிடிவாதமாக நாம் இந்த விஷயத்திலே இருக்கணுமா? விவாகரத்துப் பண்ணிக்கிட்டா அதுக்கப்புறம் நாம எப்படி இருப்போம்னு நீங்க நினைக்கிறீங்களோ, அதே மாதிரி இந்த நிமிஷத்திலே இருந்து நாம்ப இருக்க ஆரம்பிச்சுடலாமே. என்னைப் பொறுத்தவரைக்கும் எப்ப நீங்க இந்த விவாகரத்து விஷயமா பேச ஆரம்பிச்சீங்களோ அப்பவே அது ரத்தான மாதிரிதான். நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவள்ங்கிற உண்மையை எங்கேயும் எப்பவும் வந்து நிரூபிக்க மாட்டேன் நீங்க சொல்ற மாதிரியே ரெண்டு நல்ல சிநேகிதர்களாக நாம்ப பழகுவோம். சிநேகிதர்னா ஒருத்திக்கு எத்தனையோ பேர் இருக்கலாம். ஆனா நம்ப மாதிரி சிநேகிதம் எனக்கு அப்பிடி ஆகாது. அதை எந்தப் பேர்லே சொன்னாலும் எனக்கும் உங்களுக்கும் இருக்கும் உறவு ஆரம்பத்திலே இருந்து இப்பவரை ஒரே மாதிரிதான் இருக்கு. அதனாலே நம்மைப் பொறுத்தவரைக்கும் இந்தக் கல்யாணத்தை ரத்து செய்துக்குவோம். இப்ப நீங்க இருக்கிற மாதிரியே இருக்கலாம்னு எனக்குத் தோணுது. என்னோட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நீங்க செய்துக்கிட்ட கல்யாணம் எந்தவிதத்திலும் உங்களைக் கட்டுப்படுத்தாது...” என்று மனம் விட்டுப் பேசினாள் கல்யாணி.

அவன் உடனே பதில் சொல்லவில்லை. ஒரு வருஷ காலத்திற்குப் பார்க்காமலும் பழகாமலும் இருப்பதற்கு இவளும் விரும்பவில்லை என்று அவன் புரிந்து கொண்டான். இவளுடைய பெருந்தன்மையைத் தான் பயன்படுத்திக் கொண்டு தாழ்ந்து போகிற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

“ஆமாம் நான் கேட்கிறேன் - நீ எதுக்கு அப்படி எந்த உரிமையும் இல்லாமல் நம்ப உறவு இருக்கணும்னு விரும்பறே?” என்று கேட்டான்.

“நான் அதைச் சொன்னால்-நீங்க நம்பமாட்டீங்க! நான் நினைக்கிறேன், இதான் காதல்னு, அன்புன்னு, ஒரு ஆம்பளைக்கு ஒரு பொம்பளை தர்ர மரியாதைன்னு... என்ன பேர் சொன்னா என்ன? இந்த நம்பிக்கையும், இந்த உறவும் இல்லாத ‘ஒப்பந்த உறவு’கள் எந்தப் பேர்லே இருந்தாலும் அது வெறும் பேர்தான்னு நான் நெனைக்கிறேன்’-இதைச் சொல்லும்போது அவள் குரலில் ஒருவிதக் கடுமையும் கண்களில் லேசான கலக்கமும் ஏற்பட்டது.

அவன் அவளைச் சமாதானப்படுத்துவதற்காக அவள் கரத்தைப் பிடித்து அழுத்தினான். அவள் அந்த விநாடியே உணர்ச்சிகள் சமனப்பட்டு மென்மையுற்று முகம் மாறி நெற்றியில் விழுந்திருந்த சிகையை ஒதுக்கிக் கொண்டு புன்முறுவல் செய்தாள்.

“இந்த வாழ்க்கை உங்களுக்குப் பழசாகிப் போச்சுன்னு நெனைக்கிறேன். எனக்கு ஒரு ஆம்பளையை மயக்கிவெச்சிக்கிற சாகசம் போதாது. எப்பேர்ப்பட்ட ஆம்பளைக்கும் பொம்பளையின் இந்தப் பொய்ச் சாகசம் கொஞ்சம் வேணும் போல இருக்கு! ஒரு பொம்பளை நல்லவளா இருந்தா மட்டும் போதாது போல இருக்கு.”

“கரெக்ட் நவ் யூ ஹாவ் காட் தி பாய்ண்ட்! இப்ப நீ சரியான இடத்தைப் பிடிச்சுட்டே” என்று சொல்லிக் கொண்டே எழுந்த ரங்கா, “வா.... சாப்பிடலாம்: மணியாகுது” என்று டைனிங் டேபிளுக்கு நடந்தான். போகும் போதே அவன் சொன்னான்:

“நாம்ப என்னதான் பேசினாலும், படிச்சாலும் நமக்கு நாம்ப வாழற வாழ்க்கையோட புத்தி நெறையப் படிஞ்சிருக்கு. அதாவது இந்தக் காலத்தின் புத்தி: இந்தச் சமூகத்துப் புத்தி. பொம்பளைங்கிறவள் எவ்வளவுதான் நல்லவளா, உயர்ந்தவளா, ஒழுக்கமானவளா இருந்தாலும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவளுக்குன்னு ஒரு 'ஸெல்ஃப்' இருக்கறதை நம்ப சமூகத்துக ஆம்பளையாலே தாங்கிக்க முடியலே. அதை அவனாலே ஜீரணிக்க முடியலே. அந்த வியாதிதான் எனக்கு வந்திருக்கு. இது என்னோட அறிவுக்குப் புரியுது. உனக்கு அந்த 'ஸெல்ஃப்' இருக்கு. அதாவது 'நான் இப்படித்தான்'னு ஒரு போக்கு. இந்த 'ஸெல்ஃப்'க்குத் தமிழிலே உனக்குப் புரியற மாதிரி என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலே..." என்று யோசித்தான்.

"சொல்லுங்க. எனக்குப் புரியுது."

"நான் பொதுவாகப் பேசறேன். பொதுவாகப் பேசறதனாலே நமக்குப் பொருந்தாதுன்னு இல்லே..." என்று சிரித்தவாறே அவன் சொன்னான்.

மூளை இல்லாதவளா, எந்தவித 'லெவலும்' இல்லாதவளா இருக்கிற ஒருத்தியோடு கூட நம்ப சமூகத்து ஆம்பளை வாழ்ந்துடுவான். சண்டையோ சமாதானமோ ரெண்டுக்கும் அந்த வாழ்க்கையிலே அர்த்தமில்லை. ஆனா எல்லா நல்ல குணமும் இருந்தாலும் இந்த 'ஸெல்ஃப்' இருக்கிற ஒரு பொம்பளையோட பழகவும், சிநேகிதம் கொண்டாடவும் விரும்புகிற ஒருத்தனாலேகூட அவளோட வாழ முடியறதில்லே இங்கே.... இந்த 'ஸெல்ஃப்' தான் உன்னை இந்த வாழ்க்கையிலே இந்த நிலைக்கு உருவாக்கி வெச்சிருக்கு. இதை யாருக்காகவும் நீ இழக்கக் கூடாது: இழக்கவும் முடியாது. அப்படி இழக்கறது சரியில்லே எனக்கு இது புரியுது. உன்னோட அந்த 'ஸெல்ஃப்' என்னாலே அழியறதும் சரின்னு எனக்குத் தோணலே, அது அழியாது. அதனாலேதான் நான் விலகிக்க விரும்பறேன். இவ்வளவும் தெரிஞ்ச நானே தெரிஞ்சதனாலே தான்-இப்படி இருந்தாலும்-இதை இப்படின்னு எடுத்துச் சொல்ல முடியுது. இதுதான் உண்மைன்னா இதுக்காக வெட்கப்படறதுதான்-இருக்கிறது கூட இல்லே-அப்படி வெட்கப்பட்டு மனசுக்குள்ளே வெச்சி மறுகறதுதான் 'ஹிப்பகிரஸி'ன்னு நான் நினைக்கிறேன். என்னாலே பாதிக்கப்பட முடியாத, ஒரு பலமான தனிச்சபோக்கு உள்ள ஒரு சுயேச்சையான பொம்பளையோடமனம் கலந்த, உணர்ச்சி நிறைஞ்ச வாழ்க்கை வாழ முடியாதுன்னு உன்னோட வாழ்ந்து பார்த்து நான் புரிஞ்சுக்கிட்டேன்."

அவர்கள் டைனிங் டேபிளில் வந்து உட்கார்ந்து கொண்டார்களே தவிர சாப்பிட வேண்டுமென்ற எண்ணமே இருவருக்கும் ஏற்படவில்லை. அவன் பேசிக் கொண்டிருந்தான்: அவள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"சந்தோஷங்களை அது எப்படி இருக்குமோ அப்பிடித் தான் நம்ப

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அனுபவிக்க முடியும். அதிலேதான் நிம்மதியும் நிறைவும் கெடைக்கும். நிம்மதியும் நிறைவும் தராத சந்தோஷம் இருக்க முடியாது. அறிவுக்கு-நாம எங்கேயோ படிச்சதுக்கு, அந்தத் தேசத்துலே அப்பிடி இருக்கே, அவங்க இப்படி இருக்காங்களே, நாகரிக வாழ்க்கைன்னா இப்படி இருக்கணுமேன்னு நெனைச்சி சந்தோஷங்களையே ஒரு ஆடம்பரமாக்கிக்கிறது தான் 'ஸ்நாபரி'. எனக்கு இதைச் சொல்றதுக்கு வெக்கமில்லே. உன்னைக் காப்பாத்தி இருக்கிற, உனக்கு ஒரு தனித்தன்மையை உண்டாக்கி இருக்கிற-முதல்லே, என்னை உன்கிட்டே இழுத்த அந்த உன்னோட 'ஸெல்ஃ்பை'த் தாங்கிக்கிட்டு உன் புருஷனா வாழ என்னாலே முடியலே... நீ அதை இழக்க முடியுமாங்கறதுக்கும், நானே அதை அழிக்கிறதுக்கும் என்னை அறியாமலேயே நான் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துட்டேன். யூ ஆர் வெரி ஸ்ட்ராங்-கடைசியிலே உன் பலம் என் பலவீனத்தை எனக்குப் புரிய வெச்சிட்டுது. இதை நான் ஒத்துக்கணும். இது என்னோட 'ஸெல்ஃ்ப்'-அவ்வளவுதான்..."

அவன் பேசப் பேச அவனது நியாயங்கள் அவளுக்குப் புரிந்தன.

மணி பத்துக்கு மேலாகிறது. பேசிக்கொண்டே இருவரும் சாப்பிடாமல் இருப்பதை உணர்ந்த கல்யாணி, அவன் தட்டில் உணவைப் பரிமாறினாள்.

அவன் சோற்றையும் குழம்பையும் கலந்து பிசைந்து கொண்டே சாப்பிடாமல் பேசிக்கொண்டேயிருந்தான். அவன் கையில் சோறு குழைந்து கொண்டிருந்தது.

அவள் அவனது பேச்சையும், அவன் சாப்பிடாமலிருப்பதையும் கவனித்துக் கொண்டிருந்துவிட்டுச் சற்று நேரத்துக்குப்பின்,

"சாப்பிட்டுக்கிட்டே பேசுங்க" என்று நினைவுபடுத்தினாள்.

அவன் சாப்பிட ஆரம்பித்தான்:

"உன்னை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறது எனக்கு ஒண்ணும் சந்தோஷம் தர்ர காரியம் இல்லே. உன்னோட உறவும், உன்னோடு சேர்ந்து வாழற வாழ்க்கையும் எனக்குப் பழசாய்ப் போயிட்டதாக நீ சொல்றது என்ன அர்த்தத்திலேன்னு எனக்குப் புரியலே-சலிச்சுப் போச்சுன்னு சொல்றியா?" என்று அவன் அவளைக் கேட்டான்.

"ம்... அந்த அர்த்தத்திலேதான் சொன்னேன்" என்று அவள் ஒப்புக் கொண்டாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“இல்லை” என்று அவன் அதை மறுத்தான்: காலத்தாலே உறவுகள் பழசாகிப் போகலாம். ஆனா அது எப்படி சலிச்சுப் போகும்? நான் உன்னை விட்டுட்டு ஒரு வருஷம் எப்படிப் பிரிஞ்சு இருக்கறதுன்னு நெனைச்சிப் பாக்கறப்போ மலைச்சுப் போறேன். இல்லேன்னா, இந்த வாழ்க்கையை நாம-நாமன்னு சொல்றது தப்பு-நான் ரொம்ப பாழாக்கிடுவேன்னு எனக்குப் பயமா இருக்கு! ஆல்ரெடி இட்இஸ் டாமேஜ் இனஃப்!” என்று அவன் முனகிக் கொண்டான்.

“ஏன் அப்படிச் சொல்றீங்க?” என்று கேட்பது மாதிரி அவள் வழி உயர்த்திப பார்த்தாள் அவனை.

“ஆமாம். நாம் சேர்ந்து வாழப்போற வாழ்க்கை எப்படி இருக்கும்னு நான் எதிர்பார்த்தேனோ அப்படி நான் உன்னோட வாழலே. அப்படி வாழமுடியாததுக்குக் காரணம் நீ இல்லே: நானே தான். நான் என்னதான் பெரிய அறிவாளியாக-இன்ட்டலக்சுவலாக இருந்தாலும்-அதெல்லாம் அறிவு சம்மந்தப்பட்ட வெளியுலக வாழ்க்கைதான்னு புரிஞ்சுக்கறேன்-தனி வாழ்க்கை ஆம்படையான்-பொண்டாட்டி வாழ்க்கையை இன்ட்டல்க்சுவலாக வாழறதுங்கறது என்னைப் பொறுத்தவரைக்கும் ரொம்பக் கஷ்டம். ஐ கேன் நாட் லிவ் இன்ட்டலக்சுவலி மை இன்ட்டிமேட் லைஃப்…னு புரிஞ்சிட்டுது… ‘ல்வ’ங்கறதும் செக்ஸ்ங்கறதும் அறிவோட விடவும் அதிகமா உணர்ச்சியோட சம்பந்தப்பட்டது. வெறும் அறிவுபூர்வமாகப் பார்த்தா ‘ல்வ்’ங்கறது ரொம்ப அபத்தமா அர்த்தமில்லாததாத்தான் தோணும். அறிவைக் கொஞ்சம் தள்ளி வெச்சிட்டு உணர்ச்சி பூர்வமான ‘ரிலாக்ஸேஷனுக்குத் தான் எனக்குக் குடும்ப வாழ்க்கையே வேண்டி இருக்கு. இங்கேயும் ஒரு ஸீரியஸான ‘பாலன்ஸ்’ பண்ற- ‘ஸ்டிரெயின்’ பண்ணிக்கிற டென்ஷனை எப்படித் தாங்கிக்கறது?” என்று கேட்டுவிட்டு மௌனமான யோசனையுடன் நெற்றியைச் சுளித்துக் கொண்டு அவன் இரண்டு கவளம் சாப்பிட்டான். பிறகு சொன்னான்:

“நான் சரியான ஆதிகேசவேலு நாயக்கர் பரம்பரை. நான், உன்னளவு, நானே ஆசைப்படற அளவுக்கு-நான் இன்னம் என் பெர்ஸனல் லைஃப்லே ‘ஸாபிஸ்டிகேடட்’ மனுஷனா ஆகலே, நான் கொஞ்சம் ஸாபிஸ்டிகேடட் மனுஷனா உன்னோட ‘ஸெல்ஃப்’பை மதிச்சி அதை வளர்க்கிற மனுஷனா இருந்தால்தான் நம்ப வாழ்க்கை நல்லா அமையும். அது முடியாதுன்னு தோண்றபோது உன் ‘ஸெல்ஃபை’ மதிக்கிற நண்பனா-முன்னே இருந்த மாதிரி ஆயிடறதுதானே நல்லது? அதனாலே உன்னை விட்டுப் பிரிஞ்சு போக நான் ஆசைப்படறேன்னு நெனைக்காதே.”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“இன்னும் கொஞ்சம் சாதம் வெச்சி” என்று அவள் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் தட்டில் கைகழுவி விட்டான்.

“நீங்க சரியாகவே சாப்பிடலையே” என்று முகம் வாடிக் கேட்டாள் கல்யாணி.

“சாயங்காலம் அங்கே பிஸ்கெட்டும் டீயும் சாப்பிட்டதனாலே பசியே இல்லை” என்று அவன் அவளுக்குச் சமாதானம் கூறினான்.

இரவு முழுவதும் அவர்கள் பேசிக்கொண்டே இருந்தனர். ஒரு மணி ஆகிறவரைக்கும் உட்கார்ந்து கொண்டிருந்து விட்டு ‘மணி ஒண்ணாகுது-போய்ப் படுக்கலாம்” என்று அறைக்குள் வந்து கட்டிலில் படுத்துக் கொண்டு அதன் பிறகும் பேசியவாறிருந்தனர்.

நாளைக்கோ ஒரு மாதம் கழித்தோ அல்லது ராகவன் சொன்னமாதிரி ஆறு மாதத்திற்குப் பிறகோ ரங்கா கல்யாணியை விட்டுப் பிரிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை-எந்தக் காரணத்தை வைத்தும் அதைத் தவிர்க்கக் கூடாதென்பதை-அவர்கள் இருவரும் பேசிப் பேசி ஒருவாறு மனம் ஒப்பி ஏற்றுக் கொண்டனர்!

அவன் தன்னை விட்டுப் பிரிந்திருக்கின்ற நாளிலும் தான் இந்த வீட்டைக் காலி செய்துவிட்டுத் தன் சொந்த வீட்டுக்குப் போகப் போவதில்லை என்று அவள் சொன்னாள். அப்படிச் செய்கிற ஒரு காரியம் தனக்கும் அவனுக்கும் ஏற்பட்டுவிட்ட ஓர் உறவை மறுத்து வாழ்க்கையில்தான் வந்து நின்றிருக்கிற ஓர் இடத்திலிருந்து பின் வாங்குவது என்று அவள் நினைத்தாள். அதைப் பற்றி அவனிடம் விரிவாகப் பேசுவது அவனைப் பற்றிய விமரிசனமாகி விடுமோ என்ற அச்சத்தில் அவள் மௌனமாகி அதைப் பற்றி யோசித்தாள்.

‘இவரோடு சேர்ந்து வாழத்தொடங்கிவிட்ட இந்த வாழ்க்கையில், எனக்குப் பிடித்த, பிடிக்காத சந்தோஷம் தருகிற அல்லது துன்பம் தருகிற எந்தவிதமான மாற்றங்கள் வேண்டுமானாலும் ஏற்படலாம்: ஏற்படும். அதையெல்லாம் இவரோடு சேர்ந்து வாழுகிற வாழ்க்கை சம்பந்தப்பட்டதாக நான் எடுத்துக் கொண்டு அந்த வாழ்க்கையை மேலும் தொடர்ந்து அதன் போக்கிலேயே வாழ்ந்து விடுவதுதான் எனக்கே என்மீது மரியாதையை ஏற்படுத்தும். அல்லாமல் இதற்கு முன்னால் இருந்த ஒரு நிலைமைக்குத் திரும்பிப்போய் உட்கார்ந்து கொள்வது இவரோடு சேர்ந்து வாழ்ந்த அந்த ஒண்ணரை வருஷ வாழ்க்கையின் தோல்வி என்று நானே ஒப்புக் கொள்வதாக ஆகிவிடும். எனக்கு இது ஒரு தோல்வி அல்ல. அதனால் நான் இங்கேயே தொடர்ந்து இவரோடு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சேர்ந்தோ அல்லது பிரிந்தோ மேற்கொண்டு இந்த வாழ்க்கையையே வாழவேண்டும். இதை நான் இவரிடம் சொன்னால், இப்போது இவர் திரும்பிப் போக வேண்டுமென்று சொல்கிறாரே அதைத் தடுப்பதற்காக நான் சொல்வதாக ஆகிவிடும். ஒருவேளை அவருக்கு இந்த ஒண்ணரை வருட வாழ்க்கை தோல்வியாகப் போய் விட்டதோ? என்னவோ?- ' போய் விட்டதோ என்னவோ? என்ன? – போய் விட்டதாகத்தான் இவரே சொல்கிறாரே…சரி: இது அவரைப் பொறுத்த விஷயம், எனக்கு இது தோல்வி இல்லை என்பதனால் நான் திரும்பிப் போகமாட்டேன்' என்று கல்யாணி தன் மனத்தில் தீர்மானம் செய்து கொண்டாள்.

அவள் அவனிடம் கேட்டாள்:

“இந்த ஒண்ணரை வருஷம் வாழ்ந்த வாழ்க்கை ஒரு வீண்-அப்படின்னு உங்களுக்குத் தோணுதா? அதுக்காக நீங்க வருத்தப்படுறீங்களா?”

“இல்லை, கல்யாணி! ஏன் அப்படிக் கேக்கறே? இந்த ஒண்ணரை வருஷமா வாழ்க்கையைச் சரியா வாழாம நான் தப்பு பண்ணிட்டதாகத் தோணுது. அதுக்காகத் தான் நான் வருத்தப்படறேன். உங்க அண்ணாசாமி சொன்ன யோசனையைக் கேட்டு அவசர அவரசமாய் நாம்ப கல்யாணம் பண்ணிக்காம இருந்திருந்தோம்னா ரொம்ப சந்தோஷமா, ரொம்ப உயர்வா, நாம வாழ்ந்திருப்போம். இந்த நிலை நமக்கு ஏற்பட்டிருக்காது. ஒரு வருஷத்துக்குப்புறம் நாம எப்படி இருக்கணும்னு நான் ஆசைப்படறேனோ அதே மாதிரி நாம வாழ்ந்துக்கிட்டிருந்திருப்போம். இப்பக்கூட நாம் 'டைவர்ஸ்'னு ஒண்ணு பண்ணிக்காமலே அந்த மாதிரி வாழ்ந்துட முடியும்னு எனக்குத் தோணுது. ஏன்? இப்ப ஒரு ஆறு மாசமா அப்படித்தானே வாழ்ந்துக்கிட்டிருக்கோம்: ராகவன் சொன்னானே, “சும்மா 'டைவர்ஸ்'ங்கறதை நீங்க 'ஃபேன்ஸி பண்ணிப் பார்க்கறீங்கன்னு… அந்த மாதிரிதான்… நமக்கு அது முடியும்னா அதை ஏன் செய்து கொள்ளக் கூடாதுன்னுதான் நான் யோசிச்சேன். உனக்கும் எனக்கும் நடுவிலே இன்னும் கொஞ்சம் அதிகமான சுதந்திரம் உண்டாகும். அந்தச் சுதந்திரத்தோட நாம ஒருத்தருக்கு ஒருத்தர் வேண்டியவங்களா இருக்கிறது நமக்கு மத்தியிலே பிரச்னைகள் ஏற்படாமல் தடுக்கும். என் மனசிலே என்ன இருக்கும்னு இன்னம் நான் தெளிவா சொல்லாதமாதிரி இருக்கு…” அவன் சிகரெட்டைக் கொளுத்தினான்:

“நான் ஒண்ணும் அவசர அவசரமாய் நாளைக்கே உன்னை விட்டுப் போய்விடமாட்டேன்… ராகவன் சொன்னானே 'பார்க்காமல், பேசாமல் இருக்கணும்'னு… நம்மாலே அப்படியெல்லாம் இருக்க முடியாதுன்னு நெனச்சி அவன் சொன்னான். முடியாதுங்கறது இல்லே: அதுக்கு

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவசியம் இருக்கிறதா எனக்குத் தோணலே. மூணு வருஷம் கழிச்சி நாம்ப டைவர்ஸுக்குக் கோர்ட்டுக்குப் போகும்போது ‘ஒரு வருஷம் பிரிஞ்சிருந்தோம்-ஒரு வருஷமாகவே பிரிஞ்சுதான் இருக்கோம்’னு காட்ற அளவுக்கு நாம்ப தனித்தனியே வாழணும். அவ்வளவுதான்! அது சரி. நீ ஏன் அப்பவும் இந்த வீட்டிலேயே இருப்பேன்னு சொல்றே?” என்று கேட்டான் ரங்கா.

கல்யாணி சிரித்தாள்: “இந்த வீட்டிலே இருக்கறதனாலே நஷ்டம் ஒண்ணும் இல்லையே! அந்த வாடகையை வாங்கி இங்கே குடுக்கறோம். இங்கே இருந்தா உங்களோட இருக்கிற மாதிரியே ஒரு நினைப்பு இருக்கும். நீங்க ஆபீசுக்குப் போயிருக்கிற மாதிரியோ வெளியூர் போயிருக்கிற மாதிரியோ இருக்கும். அங்கே போயிட்டா உங்களை விட்டுப் பிரிஞ்சு வந்துட்ட அந்தத் தனிமை அதிகமாகத் தெரியும்…

சற்று யோசித்துவிட்டு-தனது தனிமையை எண்ணிய பரிதாபத் தோற்றத்தை முகத்திலிருந்து மாற்றிய சமாதானத்தோடு சொன்னாள் கல்யாணி: “இன்னம் ரெண்டு மூணு மாசத்திலே பட்டு பிரசவத்துக்காக வந்துடமாட்டாளா? அவளுக்குத் தாய்வீடு இதுதானே?”

ரங்கா சிகரெட்டைப் புகைத்தெறிந்தான். இவ்வளவு நேரமும் பேசிக்கொண்டிருந்த அவளருகே அவனும் படுத்துக் கொண்டான். அவன் மௌனமாகக் கண்களை மூடிக்கொண்டு பேசாமல் படுத்திருப்பதைக் கண்ட கல்யாணி, அவன் தூங்குகிறான்-அல்லது தூங்கப் போகிறான் என்று நினைத்து ‘விளக்கை அணைத்துவிடவா?” என்று கேட்டவாறு எழுந்தாள்.

“ஏன் உனக்குத் தூக்கம் வருதா?” என்று கண் விழித்து அவளைப் பார்த்தான் ரங்கா.

“தூக்கமில்லை உங்களுக்கு விளக்கு கண்ணை உறுத்துதோன்னு கேட்டேன்.

“ம். சரி…. விளக்கை அணைச்சுட்டுத் தூக்கம்வரும் போது தூங்கலாம். மணி ரெண்டரை ஆகுது” என்று கையிலிருந்த வாட்சில் மணி பார்த்து அதைக் கழற்றி அவளிடம் தந்தான்.

கல்யாணி ரிஸ்ட் வாட்சை அலமாரிக்குள் வைத்தாள். விளக்கை அணைத்துவிட்டு இருள் தெரிகிறமாதிரி எரியும் நீல விளக்கைப் பொருத்திவிட்டு வந்து படுத்தாள்:

“நீங்க என்னை விட்டுவிட்டு எங்கேயும் போயிடமாட்டீங்கன்னு எனக்குத்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தெரியும். நீங்க எதுக்காக இந்த 'டைவர்ஸ்' விஷயத்தை வற்புறுத்தறீங்கன்னும் என்னாலே புரிஞ்சுக்க முடியுது. எனக்கு வருத்தமில்லை. நீங்க இப்ப இல்லியா? சமயத்தில் ரெண்டு மூணு நாளைக்குக் கூட வராமல் இருக்கீங்க... அந்த மாதிரி இருக்கப்போறீங்க. இதிலே ஒண்ணும் யோசிக்கவோ, 'பிளான்' போடவோ, எனக்குச் சமாதானம் சொல்லவோ வேண்டாம். நான் எப்பவும் போலவே இருப்பேன். நான் ரோஜாச் செடியையோ, ஒரு குரோட்டன்ஸையோ, எங்க நாடகத்தையோ பார்த்துக்கிட்டே வாழ்க்கையைச் சந்தோஷமா நடத்திடுவேன். சந்தோஷம்கறது நம்ப மனசிலே இருக்கறதுதான். இனிமே எனக்கு என்ன? ஆன வயசு எல்லாம் ஆயிடுச்சு. பெரிய திருப்பங்களோ மாற்றங்களோ ஒண்ணும் ஒரு பொம்பளைக்கு இந்த வயசுக்கு மேலே ஏற்படாது... ஒரு பொம்பளை தன் வாழ்க்கையிலே அடிக்கடி திருப்பங்களையோ, மாற்றங்களையோ எதிர்பார்க்கறதும் கெடையாது. நான் வெறும் ஒத்தை மனுஷி இல்லே. நான் ஒரு சின்ன 'இன்ஸ்ட்டிட்யூஷன்' இல்லீங்களா? என்னை – அதாவது நம்ப நாடகக் கம்பெனியை நம்பி எத்தனை பேரு இருக்காங்க!... அதிலே எனக்கு இருக்கிற கடமையையும் நான் செய்ய வேண்டிய காரியங்களையும் பார்த்துக்கிட்டு இருந்தா தனியா இருக்கேன்ங்கிற நெனைப்பே வராது: வர்றதுமில்லே" என்று தன்னுள் பேசிக்கொள்வது போலச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"உங்களுக்குக் குளிருதா... ஃபேனை நிறுத்தட்டுமா?" என்று கேட்டாள் கல்யாணி. ரங்காவுக்கு ஆச்சரியமாக இருந்தது. உண்மையில் அவனுக்குப் புழுக்கமாக இருந்தது. கழுத்தினடியிலும் முதுகிலும் வியர்வை கசகசத்தது.

"உனக்குக் குளிருதா, என்ன?" என்று அவள் நெற்றியிற் கைவைத்துப் பார்த்தான். "காய்ச்சல் இல்லை" என்று சொல்லிக் கொண்டான். ஆனாலும் அவள் நெற்றி கதகதப்பாய் இருந்தது.

"சில சமயத்தில் அடிக்கடி இந்த மாதிரி-கொஞ்சம் நெறைய வேலை செய்யறதனாலே உடம்பு களைச்சுப் போயி இந்த மாதிரி ஆகுது. டிராமா இருக்கிற நாளில் கால்தான் என்னமாக் குடையுது... அப்பத்தான் இந்தக் குளிரும் ஜுரமும் வர்றமாதிரி ரொம்ப அதிகமா இருக்குது" என்று உடம்பை முறித்துப் படுக்கையில் புரண்டு நன்றாகப் போர்வையால் மூடிக்கொண்டாள் கல்யாணி.

ரங்காவும் அதற்குமேல் அவள் உடல் நிலையைப் பற்றி எதையும் கற்பனை செய்துகொள்ள வேண்டாம் என்று விட்டுவிட்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருவரும் மௌனமாகத் தூங்க முயன்றனர். தூக்கம் வரவில்லை. ஆளுக்கொருபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்த நிலையில் ரங்கா கேட்டான்: “அண்ணாசாமிக்கு இந்த விஷயமா ஏதாவது தெரியுமா?”

“ம். சொன்னேன். அவருக்கு ரொம்ப வருத்தம். அன்னக்கிக்கூட ‘ஐயிரு ஏன் என்கிட்டப் பேசமாட்டேங்கறாரு’ன்னு கேட்டு நீங்க சிரிச்சீங்களே, அதான் விஷயம். அவருக்கு மட்டும் நான் அதிகாரம் குடுத்தேன்னா உங்களோட சண்டை போட்டு இந்த வீட்டிலேயே போட்டுப் பூட்டி வெச்சிடுவாரு” என்று சிரித்துக்கொண்டே இந்தப்புறம் திரும்பினாள் கல்யாணி.

“அவருக்கு நாம்ப கல்யாண விருந்து குடுக்கலேன்னு ரொம்பக் குறைபட்டுக்கிட்டாரே.... ஒரு ‘ஃபேர்வெல் பார்ட்டி’ வெச்சா என்ன?” என்று கிண்டலாக ஒரு யோசனை தெரிவித்தான் ரங்கா.

“பாவம்! நம்பமேலே அன்பு வெச்சிருக்கிறவங்க உணர்ச்சிகளோட விளையாடக்கூடாது” என்று அவனைக் கண்டிக்கிற மாதிரி சொன்னாள் கல்யாணி.

“சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன்” என்று தனது கேலி வார்த்தைகளுக்காக வருந்துவதுபோல் கூறினான் அவன். அவன் அண்ணாசாமியைப் பற்றி யோசித்தான். அந்த மனிதர் கூறிய கல்யாண யோசனையை முன்பின் யோசிக்காமல் தான் ஏற்றுக் கொண்டது தான் இந்தச் சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் காரணம் என்பதை அவன் இப்போது எத்தனையோ முறைகள் நினைத்ததைப் போல் நினைத்துக் கொண்டு அவளிடம் சொன்னான்:

“எல்லாம் இந்த அண்ணாசாமியால் ஏற்பட்டது தானே? அவர் மட்டும் அந்தக் கல்யாண யோசனையைச் சொல்லாமல் இருந்திருந்தால்.”

“அவர் சொல்லாமல் இருந்திருந்தா நீங்களே சொல்லி இருப்பீங்க... அவர் சொன்னது ஒரு காரணம்தானே தவிர அவர் சொன்னதுக்காக ஒண்ணும் நாம் கல்யாணம் செஞ்சுக்கலே. அந்த அளவு அது சரின்னு தோணும் படியா நம்ப மனசும் இருந்ததனாலேதான் உடனே ஒப்புத்துக் கிட்டோம்: நம்மோட காரியத்துக்கு நாமதானே பொறுப்பு? இதனாலே நம்ப வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. எனக்கு நாம கல்யாணம் பண்ணிக்கிட்டது ஒரு தப்பான காரியம்னு தோணலே. நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கறதுக்கும், நம்மையே நாம்ப தெரிஞ்சிக்கறதுக்கும் இந்தக் கல்யாணமும் இந்த ஒண்ணரை வருஷ வாழ்க்கையும் நமக்கு உதவி பண்ணி இருக்கு இல்லையா?” என்று கூறி அவனது மனோ

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நிலையைச் சமாதானப்படுத்துவதற்காகவோ, குளிரினாலோ இவனை அணைத்துக் கொண்டாள் கல்யாணி.

“ஆமாம். என்னைப் பத்தி நான் புரிஞ்சுக்கறதுக்கு இந்தக் கல்யாணம்தான் உதவி பண்ணியிருக்கு” என்று முணுமுணுத்துக்கொண்ட ரங்கா கூறினான். “நான் மட்டும் இதுக்காக வருத்தப்படறேனா என்ன? நாம கல்யாணம் பண்ணிக்காமல் இருந்திருந்தால் நீ இப்படி இருக்கணும் அப்படி இருக்கணும்னு நான் எதிர்பார்க்காமல் இருந்திருப்பேன்: அதனாலே-இதையே நான் திரும்பத் திரும்பச் சொல்றேன் இல்லே!” என்று அலுத்துக் கொண்டான். “எனக்கு இதுவே ஒரு “அப்ஸஸனாயிடுச்சி...” என்று சொல்லிக் கொண்டான்.

அவனது குழப்பத்தை, உணர்ச்சியை எளிதாக்குவதற்காக அவள் சிரித்தாள்: “நம்ம வீட்டிலே பூக்கற ரோஜாப் பூ இருக்கு பாருங்க. இதை நான் ரொம்ப ரசிக்கிறேன்... நீங்களும் ரசிப்பீங்க. ஆனா யாரும் ஒரு ரோஜாப்பூவை விமரிசனம் பண்றது இல்லை, இல்லீங்களா?” என்று அவள் கேட்பது எதற்காக, எது சம்பந்தமாக என்று புரியாமல் அவன்-

“இப்ப எதுக்கு இதைப்பத்தி சொல்றே?” என்று கேட்டான்.

”ஏன்னா ஒரு ரோஜாப்பூவிலே இன்னும் ஒரு இதழ் கூட இருந்தாத் தேவலாம்னோ, இந்த வாசனையோட கொஞ்சம் மல்லிகை வாசனையும் கலக்காம இருக்கிறது ஒரு குறைன்னோ நாம்ப நெனைக்காமல் இருக்கிறதுக்குக் காரணமே-ஒரு ரோஜாவை நாம்ப ரோஜாவாகவே எடுத்துக்கிறதுதான். அதைப்பத்திக் கற்பனைகளோ, எதிர்பார்க்கிற காரியமோ ஒண்ணும் இல்லை. நாம்ப ரோஜாகிட்டே எதிர்பார்க்கிறதெல்லாம் ஒரு ரோஜா தான். அந்த மாதிரி மனுஷாள் கிட்டயும் இருந்துட்டா-அவங்க இருக்கிற மாதிரியே அவங்களை ஒப்புத்துக்கறதுன்னு இருந்தா - இந்த மாதிரிப் பிரச்னையே இருக்காது.

“கல்யாணம் பண்ணி மனைவின்னோ புருஷன்னோ ஆனவுடனே அவங்களைப் பத்தி எதிர்பார்க்கறதும் கற்பனைகளும் அதிகமாகிக் கஷ்டம் வருது...” என்று அவள் பேசிக்கொண்டே இருந்தாள்.

ரங்கா சொன்னான். ரோஜாகிட்ட அது இப்படி இருக்கணும் அப்படி இருக்கணும்னு நாம் எதிர்பார்க்காமல் இருக்கிறதுக்கும், அதை விமரிசனம் செய்யாம இருக்கறதுக்கும் காரணம் என்ன தெரியுமா? அதுவும் நம்பகிட்ட அந்த மாதிரி எதையும் எதிர்பார்க்கிறதில்லே: விமரிசனம் செய்யறதில்லே: நாம் இப்பிடி இப்பிடி இருக்கணும்னு நம்மை நிர்ப்பந்தப்படுத்தறதில்லேங்கறதுதான். ஆனா மனுஷ உறவு அப்படி

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கறதுன்னா நடைமுறைக்கு ஒத்துவராது… அதனாலே இதிலே பிரச்னைகள் வரதும், சிக்கலுங்க வரதும் இயற்கை-அதனாலேதான் அதிலே ஜாக்கிரதையா இருந்திருக்கலாம்னு எனக்குத் தோணுது. – என்ன நான் சொல்றது சரிதானா?"

"நான் உங்ககிட்டே என்ன எதிர்பார்த்தேன்?" என்று 'நறுக்'கென்று கேட்டாள் கல்யாணி. அவனால் உடனே அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"நீ என்கிட்டே எதையாவது எதிர்பார்க்கணும்னு நான் எதிர்பார்த்தேன்…"

"ஏன்? நீங்க என்கிட்டே எதிர்பார்க்கறதெல்லாம் நியாயம்னு ஆக்கிக்கிட்டு 'இன்னும்…இன்னும்'னு எதிபார்க்கத்தானே?"

"அதுக்கு பயந்துதான் நீ ரொம்ப ஜாக்கிரதையா என்கிட்டே எதையும் எதிர்பார்க்காம இருந்தியா?"

"இல்லே, அப்பிடி நான் இருந்திருந்தா இந்நேரம் நாம்ப பிரிஞ்சிருப்போம். ஒருத்தரை ஒருத்தர் வெறுத்து இருப்போம். இப்ப பிரச்னைகளும் சிக்கல்களும் உங்களுக்குத்தான்: எனக்கில்லே. நான் நிறைவா இருக்கேன். நான் பேசறதெல்லாம் உங்க பிரச்னைக்கும் உங்க சிக்கல்களுக்கும் ஏதாவது வழி காண்றதுக்குத்தான். எனக்கு வருத்தமில்லே: ஏமாற்றமில்லே. உங்களைப் பத்தி பயமும் இல்லே. நான் உங்களுக்கு ஒண்ணு சொல்லணும்னு நினைக்கிறேன். நாம இனிமே டைவர்ஸைப் பத்தியோ, சேர்ந்து வாழறதைப் பத்தியோ அதிகமாகப் பேசவேண்டாம்: வேணுங்கறவரைக்கும் நாம்ப பேசியாச்சு, இனிமே எப்படி வேணுமானாலும் வாழ்வோம். திட்டம் போட வேண்டாம். எது சரி, எது தப்புன்னு விவாதம் பண்ண வேண்டாம். நீங்க எப்படி வேணுமானாலும் இருங்க. சந்தோஷமா இருங்க… அதுக்கு நான் என்னாலே ஆனதைச் செய்வேன்…" என்று சொல்லிக் கொண்டே தூக்கம் கண்ணை அழுத்த அவனை அணைத்தவாறே பேசிக்கொண்டே உறங்கிப் போனாள் கல்யாணி.

அவள் உடம்பு ஜுரம் காய்வது மாதிரி சுட்டது.

அப்போதே பொழுது விடிகிற நேரமாகிவிட்டது.

ரங்கா சற்றுநேரம் கழித்துப் படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும் கல்யாணியின் அருகே உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தான்.



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ஆதிகேசவலு நாயக்கர் வீட்டு மாடியில் புதிதாகக் கட்டி முடித்த அந்தப் புதிய போர்ஷனில் நிரந்தரமாகவும் நிலையாகவும் குடி வந்து விட்டான் ரங்கா.

முன்பு மாதிரியே காக்கா கடைப் பையன் காலையில் டீ கொண்டு வந்து வைக்கிறான்: பேப்பர் வாங்கி வந்து தருகிறான். ரங்கா ஆபீசுக்குப் போகிற வழியில் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டுக் கொள்கிறான். மத்தியானத்தில் வெளியே எந்த இடம் என்று குறிப்பாக இல்லாமல் எங்காவது சாப்பிடுகிறான். இரவில் முன் மாதிரியே பதினோரு மணிக்கோ அதற்குமேல் நாழி கழித்தோ மவுண்டு ரோடு ஹோட்டலில் பிரியாணி சாப்பிடுகிறான். வாழ்க்கை முன்பு மாதிரியே சுற்றிச் சுற்றித் தடம் பதித்த செக்குமாட்டுப் பாதையில் மறுபடியும் சுழல ஆரம்பித்திருக்கிற மாதிரி அவனுக்குத் தோன்றுகிறது.

‘அதற்கென்ன? எல்லா வாழ்க்கையும் ஏதோ ஒரு வகையில் செக்குமாட்டுத் தடம்தான்’ என்று தனக்குத் தானே சமாதானமும் கொள்கிறான்.

கல்யாணியோடு தனக்கேற்பட்டுவிட்ட தாம்பத்திய உறவை ரத்துச் செய்து கொள்வதற்காக ஒரு நாள் மாலை அந்த வக்கீல் நண்பரைப் பார்ப்பதற்காகச் சென்ற பிறகு கழிந்த இந்த ஆறுமாத கால வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக ரங்கா அவளிடமிருந்து விலகலானான்....

வாரத்திற்கொருமுறை ஆரம்பத்தில் அவளைப் போய் பார்த்து வந்த ரங்கா சிறிது சிறிதாக அந்த இடைவெளியைத் தள்ளிப்போட்டு இப்போது மூன்று மாத காலமாய் அவளைப் பார்க்காமலே இருப்பதற்குத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டான்.

இதனை ஒரு சத்தியசோதனை மாதிரி மிகுந்த வைராக்கியத்தோடு பயின்றான் அவன்.

ஒவ்வொரு நாளும் படுக்கையிலே இருந்து விழித்தெழுகிற போதும் இரவில் தன்னை மறந்து கண்ணயரும் போதும் அவன் கல்யாணியின் முகத்தையே கண்டு அவள் நினைவே நெஞ்சில் பெருகி வழிவதை உணர்கிறான். அவனது அறையில் அவளது போட்டோ ஒன்றினைப் பெரிதாகப் ‘பிரேம்’ செய்து மாட்டி இருக்கிறான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மேக்கப் எதுவுமில்லாமல் எளிய உடையும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, வாராமல் விரிந்த கூந்தலுமாய் இருக்கும் அவளுடைய அந்தப் படத்தைப் பார்க்கிற போதெல்லாம் அவள் தன்னிடம் காட்டிய அன்பும், தனக்களித்த ஆதரவும், இனிமையாய் விவாதம் புரிகின்ற முறையும், அன்பு மார்க்கத்தை உபதேசிக்கின்ற இனிய அவளது குரலும் அவனுக்கு நினைவில் வந்து நிற்கிறது. அவளைத் தான் காதலிக்கிறோம் என்றல்ல: தான் அவளை வழிபடுவதையே அவனால் இப்போது புரிந்துகொள்ள முடிகிறது.

இப்படி விலகி வந்து பார்க்கிற போதுதான் அவளோடு தான் கழித்த அந்த நாட்கள் எவ்வளவு மகத்தானவை என்று அவனுக்குப் புரிந்தது.

அவன் பல சமயங்களில் அவளைப் பற்றி நினைவுறும் போது, தன்னையும் எண்ணி, 'அவளது தரத்திற்கும் தன்மைக்கும் நான் தகுதியற்றவனோ?' என்று ஐயுறுகிறான். அவள் தன்னிலும் வேறுபட்ட உயர்ந்த உலோகத்தின் வார்ப்பு என்று கருதி இவ்வளவு பிரச்னைகளுக்கும் தனது தாழ்வு மனப்பான்மைதான் காரணம் என்ற முடிவுக்கும் அவன் வருகிறான்.

வர்க்கங்களும் ஜாதிகளும் இனபேதங்களும் அழிந்து போனாலும் தனி மனிதர்களின் தனி வாழ்வில், அந்தரங்கமான அகவாழ்வில் அவற்றின் தன்மைகள், அவற்றின் பாதிப்புக்கள் கொஞ்ச காலத்திற்கு – ஏன் வெகு காலத்திற்கு-ஏற்பட்டுக் கொண்டுதானிருக்குமோ என்று அவனுக்குத் தோன்றியது.

ஆணும் பெண்ணும் சமம் என்பதும் மனிதர்கள் எல்லாரும் ஒரே நிறை என்பதும், உயிர்கள் அனைத்தும் பரமாத்மாவினின்றும் தோன்றுகிற அதன் அம்சங்களே என்பதும்-ஜனநாயக நாகரிகம், சோஷலிசம், அத்வைதம் என்று இவற்றுக்கு என்ன பெர்ய கூறினாலும்-இவை எல்லாமே வாழ்க்கையை அறிவாலும், அறிவு சார்ந்த மனத்தாலும் புரிந்து கொள்ளுகிற, அவ்விதம் ஆக்குகிற முயற்சிதானே தவிர, சமம் எனப்படுபவை எல்லாம் இரண்டும் ஒன்று என்றாகிவிடாது. முரண்படுவதும், ஒத்திசைவதும் பொதுவான இயற்கையின் இயல்பாக இருக்கையில், சமம் என்ற மனோபாவத்தினால் மட்டும் முரண்பாடுகளே இல்லாமற் போய்விடுகிறது என்பது கற்பனை அல்லவா? எனவே கல்யாணியும் தானும்சட்டத்தின் முன்பும் சமுதாயத்திலும் ஜனநாயக நாகரிகத்தின் தயவினாலும் சமமாகவே இருந்தாலும் அவள் எல்லாத் தன்மைகளிலும் தன்னைவிட இயல்பாகவே மேம்பாடாக இருப்பதை அவன் அவளோடு பழக நேர்ந்த ஒவ்வொரு விநாடியையும் எண்ணி

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எண்ணி நிரூபணம் காண்கிறான்.

பசிக்கிறபோது தன் பசியளவு வேட்டையாடித் தின்று மிச்சத்தைத் திரும்பிப் பாராமல் ஒதுக்கிவிட்டுத் திரிந்தலையும் கம்பீர இயல்பு பொருந்திய சிங்கமும் பிணத்தலையும் மேய்ந்து, அழுகலையே தின்று அதிலேயே உழலும் கழுதைப் புலியும்-மிருகம் என்கிற பொதுவான பிரிவின் பொதுவான பிறப்பு, இறப்பு, உயிர் தரிப்பு. வம்ச விருத்தி, நாலு கால், ஒரு வால் என்கிற பொதுத் தன்மைகளினால் மட்டும் ஒன்றாகி விட முடியுமா?

இவ்விதமான மனத்தினுள் நடத்தும் தர்க்கம் காரணமாய்-அவளை விட்டு விலகி இருக்கிறபோது அவளைப் பேருருவமாகவும் தன்னைக் குறை மலிந்தவனாகவும் உணர்ந்து பல சமயங்களில் வருந்தினான் ரங்கா.

இந்தச் சோதனைகளிலும் வைராக்கியத்திலும் தன்னை அவளுக்குச் சமமாக வளர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினாலேயே அவன் இவ்விதம் இருந்தான். அவளைப் பார்க்காமலும், பேசாமலும், பழகாமலும், அவளது பணிவிடைகளிலும் இன்பங்களிலும் பங்கு பெறாமல்-தான் விரும்புகிற நேசிக்கிற அவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதனால் தனது பலமும், தரமும், தன்மையும் மேன்மையுறும் என்று அவன் எண்ணினான்.

ஆனால் இங்குள்ளவர்கள் -சின்ன நைனா, தொத்தா உட்பட-ஏதோ ஒரு நாடகக்காரியின் மோகத்தில் கொஞ்ச நாள் எங்கோ போய் இருந்தபின் மோகம் தணிந்து ஆசை அடங்கி அவளை உதறிவிட்டு மறுபடியும் இங்கே வந்திருக்கிறான் ரங்கா என்று தான் நினைத்தனர். அவர்களுக்குள் அப்படித்தான் பேசிக்கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை-எங்கே வெளியில் கிளம்பினால் ஏதாவது ஒரு மனோ நிலையில் கல்யாணியைப் பார்க்க போய்விடுவோமோ என்கிற ‘தன் பய’த்தால் அவன் அறையிலேயே அடைந்து கிடந்தான். மற்ற நாட்களில் ஆபீஸ் வேலைகளிலும் வேறு ஈடுபாடுகளிலும் அவன் தன்னை மறந்த மும்முரத்தோடு முனைந்து விடுவான். ஞாயிற்றுக்கிழமைகள் தான் அவனுக்கு அவளோடு கழித்த பல நாட்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது. எனவே அறையிலே படிக்கிற, எழுதுகிற வேலைகளை இழுத்து வைத்துக் கொண்டு அடைபட்டுக் கொண்டிருந்த ஒருநாள் சின்ன நைனா சுருட்டுப் புகை பரப்பும் நாற்றக் கமறலுடன் மாடிக்கு ஏறி வந்து அவன் எதிரே தரையில் உட்கார்ந்து கொண்டு-மூச்சு இளைக்க இளைக்க

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அந்த அறையில் மாட்டியிருந்த கல்யாணியின் படத்தைப் பார்த்து, வாய்க்குள் சிரித்துக் கொண்டார்.

“என்னாத்துக்கு நைனா இப்படி மூச்சு வாங்கற மாதிரி மெத்தப்படிக்கட்டு ஏறி வந்தே, ஒரு கொரலு குடுத்திருந்தீனா, நானே வந்திருப்பேனே...” என்று உபசாரமாகவும், ‘என்ன உபத்திரவம்’ என்று சலித்துக் கொள்கிற மாதிரியும் சொன்னான் ரங்கா,

“இது என்னா பெரிய படிக்கட்டு! தலையிலே செமை வச்சிக்குனு எம்மாம் பெரிய ஏணியெல்லாம் ஏறி எறங்காமலா நானு வூடு கட்டிக்கினேன்! இன்னா புள்ளைப்பா நீ?... ரெண்டு நாளா இரும்பலு... அதான்” என்று நெஞ்சில் களகளக்கும் சளியுடன் இருமிவிட்டு சுருட்டுப் புகையை இழுத்தார் சின்ன நைனா.

ரங்கா கையிலிருந்த புத்தகத்திலே ஆழ்ந்திருந்தான். ஆனாலும் சின்ன நைனா சுவரில் தொங்கும் அந்தப் படத்தை உற்றுப் பார்ப்பதை அவரறியாமல் அவன் கவனித்தான். ஆனால் அவரோ இதில் ஒளிவு மறைவு ஏதுமின்றி அதற்காகவே வந்தவர் போன்று எழுந்து சென்று அந்தப் படத்தின் அருகே நின்று கண்ணாடியின் மீதிருந்து அடிக்கிற ‘கிளேர்’ பார்வையைச் சலனப்படுத்துவதால்-கையால் ‘பிரே’மைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நன்றாகப் பார்த்தார்.

“சினிமாக்காரி டிராமாக்காரி மாதிரியே இல்லியே... நம்ப வூட்டு பொம்பளைங்க மாதிரிதான் இருக்கு’ என்று அவனைப் பார்த்துச் சிரித்தார்,

‘ஐயே! நம்ப வீட்டுப் பொம்பளைங்க லட்சணம்!’ என்று மனத்தினுள் முனகிக் கொண்டான் ரங்கா. “சரி, அதான் ஒரு மாதிரியா ஒயிச்சிட்டு வந்துட்டியே-இப்ப இன்னத்துக்குப்பா இந்த படத்தெக் கட்டிக்கினு இருக்கே. ஊருக்குப் போயி உம்மச்சினிச்சியைக் கட்டிக்கினு, உம் பொண்ணையும் கொண்ணாந்து வெச்சிக்கினு குடுத்தனம் பண்ணனும்னு உம்புத்திக்கு இன்னம் படலியா” என்று கேட்டார் சின்ன நைனா.

அவன் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவர்மீது கோபமா இப்படியெல்லாம் நினைக்கிறார்களே என்ற வருத்தமோ ஒன்றும் அவனுக்கு ஏற்படவில்லை. தனது மனநிலைமையையும் கல்யாணியோடு தனக்கிருக்கிற ஈடுபாட்டையும் இவர்கள் புரிந்து கொள்ளவும் முடியாது: அது அவசியமுமில்லை என்று கருதிய அவன் மௌனமாக அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

எதையோ நினைத்து தனக்குள் சிரித்துக்கொண்டே சொன்னார் சின்னநைனா: “ஆம்பளை எல்லா விசயத்திலேயும் வீரனா இருந்தாலும் பொம்பளைங்க விசயத்திலே அம்பேல்தான்…” என்று சொல்லிச் சப்தமாகச் சிரித்தார்.

“இப்ப இன்னமோ கோவத்திலே வந்துட்டியாங் காட்டியும்-எனக்கு அப்பவே தெரியும். அந்தப் பொண்ணை உன்னாலே உட முடியாது. இன்னா இப்போ? உன்னே யாரு உட்டுடச் சொல்றாங்க? அதும்பாட்டுக்கு அது ஒரு பக்கம் இருக்குது. நீ உம் மச்சினிச்சியைக் கட்டிக்கினு குடும்பத்தைக் கொண்ணாந்து இங்கே வச்சிட்டு எங்கனாச்சும் போயென்-வாயேன்… அப்பத்தான் உனுக்கு அங்கேயும் மரியாதி: இங்கியும் மரியாதி. இன்னொண்ணு சொல்றேன்” என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டு அவன் அருகே நகர்ந்து வந்தார். குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னார்- “அந்த மாதிரி ஒண்ணு இருந்தாத் தான் இவளுங்களும் -யாரு? வூட்டிலே கட்டிக்கினு வந்து இருக்காளுங்களே - இவளுங்களும் மரியாதையா இருப்பாளுங்க. போட்டியிலேதான் இருக்குது பொம்பளைங்க ஆசை பாசம் எல்லாம்!

சின்ன நைனா இன்னிக்கு நல்ல ‘ஜாலிமூட்’லே இருக்கிறார் என்று நினைத்துக் கொண்ட ரங்கா அவர் சொன்னதைக் கேட்டு வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று எவ்வளவு முரணான நியாயங்களை வைத்துக் கொண்டு வாழ்கிறான் என்று சிந்தித்தான்.

‘சின்ன நைனா-உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நானு இவளைச் சட்டப்படி ரிஜிஸ்டர் கல்யாணம் கட்டிக்கிட்டேன்-சொன்னேனில்லே…”

“ஆமா…சொன்னே… அதுக்கு இன்னா?” என்று மிகவும் சாதாரணமான சிரத்தையுடன் சுருட்டைக் கடித்தவாறு கண்களை மூடிப் புகையிலைக் காரத்தை நாவில் ருசித்தார் சின்ன நைனா.

“அதுக்கு இன்னாவா? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கினா மணவறையிலேயே வெள்ளிக் காப்புப் போட்டுத் தள்ளிக்கினு பூடுவான் போலீசிலே…” என்று சொல்லி அவரைப் பழிந்துக் காட்டுவது மாதிரி சிரித்தான் ரங்கா.

“அந்தப் பொம்பிளை அப்பிடியெல்லாம் செய்யறவளா?.... கல்யாணம் கட்டிக்கின எவளும் தன் புருஷனை ஜெயில்லே கொண்டு வைப்பாளா, இன்னா?” என்று அந்தப் படத்தைப் பார்த்தவாறு யோசித்தார் சின்ன நைனா,

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“செய்வாளான்னு தெரியாது. செஞ்சான்னா? சட்டத்திலே எடம் இருக்கே…?”

“இதுக்குத்தான் சொன்னேன்… எதையும் ஒரு தபாவுக்கு நாலு தபா யோசின்னு-கேட்டியா? இப்ப இவ கையிலே நல்லா மாட்டிக்கினு வந்து நிக்கிறியே…. நீ இன்னாத்தெப் படிச்சிப் பாயாப் போனே, போ!” என்று அலுத்துக் கொண்டு தலையைச சொறிந்தார்.

“ஏன்? இப்படி செஞ்சா?”

“எப்பிடி?”

“எனக்கும், உனக்கும் ஒண்ணுமில்லேன்னு கொஞ்சம் துட்டைக்குடுத்து எயுதி வாங்கிக்கினா?”

“அது சரிதான்-அதுக்கு அவ ஒப்புக்கணுமே”

“அவ ஒப்புத்துக்காட்டி-நாம்ப அவ மேலே கேஸ் போடறது. நீ படிச்ச புள்ளைதானே!… அதுக்கு எதினாச்சும் சட்டத்துலே எடம் இருக்கும்…”

“சின்ன நைனா…. அதுக்கு மூணு வருஷமாகணும்… ரிஜிஸ்டர் பண்ணிக்கினோமே அந்தத் தேதியிலேருந்து மூணு வருஷமானாத்தான் அதை ரத்துப் பண்ணிக்கிறதுக்கு மனுவே போடலாம்னு சட்டம் இருக்கு…” என்று அவருக்கு விளக்கினான்.

“இப்ப எம்மா நாளாச்சி…?”

“ரெண்டு வருஷம் ஆவப்போகுது”

“சரி வுடு-இன்னம் ஒரு வருஷம் தானே? அப்பாலே அவுத்து வுட்டுடு…. வேணாம். ‘கல்யாணம்-குடும்பம்’ எல்லாம் இதுங்களோட வெச்சிக்கக்கூடாது….” என்றார் சின்ன நைனா.

இன்னும் ஒரு வருஷத்துக்கு இனிமேல் இது விஷயமாக இவர் வாய்திறக்க மாட்டார் என்கிற நிம்மதி பிறந்தது ரங்காவுக்கு. அது மட்டுமல்லாமல் இந்த விஷயத்தை அங்குள்ள எல்லோரிடமும் சொல்லி விடுவார் சின்ன நைனா: தன்னிடம் யாருமே ஒரு வருஷத்துக்கு கல்யாண விஷயமாகப் பேச வரமாட்டார்கள் என்று தைரியமாக இருந்தான் ரங்கா.

காலை நேரம், மணி ஏழுகூட ஆகவில்லை. ரங்கா அரை விழிப்பும் அரைத் தூக்கமுமாய் படுக்கையில் படுத்திருந்தான்.

எதிர் டீக்கடையிலிருந்து ரேடியோ சத்தம் கேட்கிறது. கீழே குழாயடியில்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பாத்திரம் தேய்க்கிற ஓசை, தண்ணீர் பிடிக்கிற பெண்களின் இரைச்சல்... தெருவிலே ஒரு ரோட் ரோலர் அதிர்ந்து போகிற சத்தம், மில்லுக்கு வேலைக்குப் போகிற ஜனங்களின் சந்தடி இவற்றினிடையே ஒரு கார் வந்து வீட்டு வாசலில் நிற்பதும், அதன் மீட்டர் 'கட்' பண்ணப்படுகிற மணியோசையும், யாரிடமோ, யாரோ, தன் பெயரைக் குறிப்பிட்டுக் கேட்கிற விசாரிப்பும் கேட்டு – தனது கற்பனையா, நிஜமா? என்று தெரிந்து கொள்வதற்காகப் படுக்கையிலிருந்து விருட்டென எழுந்த ரங்கா மாடியிலிருந்து படுக்கைக்கு நேரேயுள்ள ஜன்னல் வழியாகக் கீழே பார்த்தான்.

அண்ணாசாமி கையில் பையோடு நின்றிருந்தார். அவரை இறக்கிவிட்ட டாக்சி தெருவில் 'ரிவர்ஸ்' எடுத்துத் திரும்பிக் கொண்டிருந்தது.

வெறும் லுங்கியோடு இருந்த ரங்கா மேலே ஒரு துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு, மாடிப் படிகளில் இறங்கிக் கீழே ஓடினான்.

"வாங்க சார்.... வாங்க-குட்மார்னிங். எங்கே? இந்தப் பக்கம்... இவ்வளவு தூரம்? வாங்க மேலே போவோம்...." என்று அவரை அன்போடு அழைத்தான்.

"குட்மார்னிங்-உங்களை பார்க்கத்தான் வந்தேன்" என்று எந்தவித உணர்ச்சியும் முகத்தில் காட்டாத கடுமையுடன் அவனுக்குப் பதில் சொல்லிக்கொண்டே அவனைப் பின்தொடர்ந்து மாடிப்படிகளில் ஏறிப் போனார்.

"உட்காருங்க ஸார்"-என்று தான் எழுதுகிற மேஜைக்கு அருகேயுள்ள நாற்காலியில் அவரை அமரச் செய்தான்.

அவர் அதில் உட்கார்ந்து எதிரே இருந்த கல்யாணியின் பெரிய படத்தைப் பார்த்தார்-அவர் பார்வை அதிலேயே நிலைத்தது. கண் கலங்கிற்று. 'இவன்தான் அவளைப் பார்க்கக்கூட வரதில்லையே சும்மா ஒரு அலங்காரத்துக்கு மாட்டி வெச்சிருக்கானோ?' என்ற நினைப்போடு அவனையும் பார்த்தார்.

"ஆபீசுக்குத்தான் வரணும்னு முதல்லே நினைச்சேன்.... அங்கே ஒண்ணும் உம்மோடப் பேச முடியாது. நீரும் 'போயிட்டுவாய்யா'ன்னு விரட்டிடுவீர்னு தெரிஞ்சுண்டுதான் கார்த்தாலங்காட்டியும் பிடிக்கணும்னு உம்ம விலாசத்தைத் தேடிண்டு நேரே இங்கேயே வந்துட்டேன். நான் இந்தப் பக்கமெல்லாம் வந்ததே இல்லை.பம்பாய்லேயும் கல்கத்தாவிலேயும் சில 'ஏரியா'விலே போயிருக்கேன், அது மாதிரின்னா

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

இருக்கு...” என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் காக்காக் கடைப் பையன், இங்கு ஒரு விருந்தாளியும் வந்திருப்பது கண்டு இரண்டு ‘கப்’களில் டீ கொண்டு வந்தான்.

அவன் முன் யோசனையோடு செய்த இந்தக் காரியத்துக்காக அவனைப் பாராட்டுகிற மாதிரி சிரித்துக் கொண்டே “பேப்பர் எங்கடா?” என்று அவனிடம் கை நீட்டினான் ரங்கா.

“இனிமேதான் வரும்... இன்னக்கி நீங்க சீக்கிரம் எய்ந்திருச்சிட்டீங்க...” என்றான் பையன்.

இருவரும் டீ குடித்தனர்.

“நீர் என்னோட இப்பவே புறப்படணும்... போகும் போது பேசிக்குவோம்” என்றார் அண்ணாசாமி.

“போகும்போதும் பேசுவோம், இப்பவும் பேசலாமே- என்ன விஷயம்? சொல்லுங்க” என்று அமைதியின்றி அவசரப்பட்டான் ரங்கா,

“கல்யாணி இஸ் நாட் வெல்... ரெண்டு மாசமா நர்ஸிங் ஹோமிலே இருந்துட்டு நேத்துத்தான் ஆத்துக்கு வந்தாள்...” என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ”என்ன? என்ன ஆச்சு?” என்று கேட்டவாறே எழுந்தான் ரங்கா.

“என்னென்னமோ ஆச்சு. சீக்கிரம் டிரஸ் பண்ணிண்டு பொறப்படும்” என்றார் அண்ணாசாமி.

“இதோ ஒரு நிமிஷத்திலே குளிச்சுட்டு வந்துடறேன்...” என்று சொல்லி டவலும் சோப்பும் எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்கு ஓடினான் ரங்கா.

பாத்ரூமுக்குள் போன ரங்கா அவசர அவசரமாகக் குளித்தான்.

குளித்துக்கொண்டே அவன் பல மாதிரி எண்ணமிட்டுக் கலவரமடைந்தான். கல்யாணிக்கு என்ன உடம்புக்கு என்று விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல், கேட்டால் அண்ணாசாமி என்ன சொல்லிடுவாரோ என்று கேட்கப் பயந்தவன் மாதிரி அவளைப் பார்க்கப் போக வேண்டுமென்ற அவசரத்தில் அவன் பாத்ரூமுக்குள் வந்து புகுந்துகொண்ட போதிலும், அவன் அவளைப் பற்றிய நினைவுகளுடன் இரண்டு நிமிஷத்திலே வேக வேகமாய்க் குளித்துவிட்டுத் தலையைத் துவட்டிக் கொண்டே வெளியே வந்தான்.

அவள் கொஞ்ச காலமாகவே காலையிலோ மாலையிலோ இரவிலோ

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

சோர்ந்து சோர்ந்து அடிக்கடி படுத்ததையும், 'ஜுரம் இருக்குதா பாருங்க' என்று இவன் கையைப் பிடித்து நெற்றியில் வைத்துக் கொண்டதையும் நாடகமோ ஒத்திகையோ இருக்கிற நாளில் 'இடுப்பு வலிக்கிறது கால் வலிக்கிறது' என்று படுத்துப் புரள்வதையும் இப்போது எண்ணிப் பார்த்தான் ரங்கா. அப்போதெல்லாம் அவளுக்கு ஒன்றும் இருக்கக்கூடாது என்கிற ஆசையினால் 'அதெல்லாம் ஒண்ணுமில்லே- அலுப்புத்தான்' என்று சமாதானம் கூறியதையும், தானே அவளுக்கு ஒன்றுமில்லை என்று நம்பியதையும் இப்போது ரங்கா நினைவுபடுத்திக் கொண்டான்.

'அவளுக்கு உடம்புக்கு என்னவாக இருக்கும்' என்று யோசித்த ரங்கா, அண்ணாசாமியின் எதிரில் வந்து நின்று கொண்டு கேட்டான்: "சொல்லுங்க ஒண்ணும் ஸீரியஸ் இல்லையே?"

அண்ணாசாமி தலை நிமிர்ந்து அவனைப் பார்த்துக் கொண்டே மடித்த வெற்றிலையை வாயிலிட்டுக் கொள்ளாமல் அவனிடம் கேட்டார்:

"நீர் கல்யாணியைப் பார்த்து ரெண்டு மாசம் இருக்கும் இல்லையோ?"

தினசரி அதை எண்ணி நினைவில் வைத்துக் கொண்டிருப்பதனால் அவனால் அந்தக் கேள்விக்கு உடனே சரியாகப் பதில் சொல்ல முடிந்தது: "இன்னியோட ரெண்டு மாசமும் இருபத்திரண்டு நாளும் ஆகுது!"

அண்ணாசாமி பெருமூச்செறிந்தவாறே வெற்றிலையை வாயிலிட்டுக் கொண்டபின் தாம்பூலப் பெட்டியை மூடிக் கைப்பைக்குள் வைத்துக் கொண்டார்.

ரங்கா அவரோடு பேசிக்கொண்டே அவசர அவசரமாக உடம்புக்குப் பவுடர் போட்டுக் கொண்டு உடை மாற்றிய பின் தலைவாரிக் கொண்டான்.

அண்ணாசாமிக்கு இவனோடு சுமுகமாகப் பேச முடியவில்லை. பேசினால் என்ன பேசிவிடுவோமோ என்கிற பயத்தினால் தான் அவருக்குப் பேச முடியவில்லை. 'இவன் மற்ற விஷயங்களில் எல்லாம் எவ்வளவு வக்கிரமாக இருந்தபோதிலும், சொந்த வாழ்க்கையில் மனிதர்களோடு பழகுகிற பண்பில், அன்பு செலுத்துகிற முறைமையில் மிகவும் உயர்ந்தவன், நிதானமானவன்' என்றெல்லாம் ரங்காவைப் பற்றி எண்ணி இருந்த அண்ணாசாமிக்கு இவன் இப்படி அவளை நிர்க்கதியாக விட்டு விட்டுத் தனியே வந்துவிட்டதில் இவன்மீது அசாத்தியக் கோபம். இருந்தாலும் கோபப்பட்டுப் பலனில்லை என்று தன்னைத்தானே அடக்கிக் கொண்டிருக்கிறார், அதற்குக் காரணம் கல்யாணி இன்னமும் இவன்மீது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருப்பதுதான். இவனைக் கோபித்தால் அவளைக் கோபித்த மாதிரி என்று அவருக்குப் புரிந்ததனால் அவர் தனது கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தார். எனினும் இவனோடு பேச அவரால் முடியவில்லை.

“இஸ் ஷி ஆல் ரைட் நவ்?” – அவள் இப்போது நன்றாக இருக்கிறாளா?- என்று கேட்டுக் கொண்டே புறப்படத் தயாராக அவர் எதிரே வந்தான் ரங்கா.

“தட் இஸ் வாட் டாக்டர்ஸ் ஸே” என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் அண்ணாசாமி: “டாக்டர் குணமாயிட்டுதுங்கறார். ஆனாக்கா இன்னும் நடக்க முடியலை. காலெல்லாம் வெளுத்துச் சூம்பிப்போச்சு… முன்ன மாதிரி எழுந்து நடமாடறதுக்கு முடியவும் முடியலாம்: முடியாமலும் போகலாம். டாக்டர் என்னவோ ரொம்ப நம்பிக்கையாகத்தான் சொல்றார்.”

ஒரு விநாடி ரங்காவுக்கு ஒன்றும் புரியவில்லை. ‘இவ்வளவு ஸீரியஸாக அவளுக்கு என்ன வந்துவிட்டது?” என்று அவன் மனது பதைத்தது. இந்த நிலையில் அவளைத் தனிமையில் விட்டுவந்தோமே என்று உறுத்திற்று. ஏன் தனக்குச் சொல்லியனுப்பவில்லை என்று எவரிடமும் போய்க் கேட்கத் தனக்கு என்ன நியாயம் இருக்கிறது என்று நினைத்துக் குனிந்த தலையுடன் அவரைப் பார்த்தான்.

‘ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை’ என்று கேட்பான்…. பாய்ந்து விடுவது என்றிருந்த அண்ணாசாமியின் மனம் அவனுக்குப் புரிந்தது. அதனால் அவன் அதற்கு இடம் வைக்கவில்லை.

“வாங்க ஸார்…. போகலாம்” என்று புறப்பட்டான் ரங்கா. அவன் உள்ளூர வருந்துகிறான் என்று உணர்ந்த அண்ணாசாமி அவனது பரிதாபகரமான முகத்தைப் பார்த்து அனுதாபம் கொண்டார்.

‘அவன் தான் என்ன செய்வான்? நன்னா இருந்த கொழந்தைக்கு இப்படியெல்லாம் வரும்னு கண்டானா? நாம சண்டை போடறவாளுக்கு வையறவாளுக்குமெல்லாம் நாளைக்கு இப்படி வரும்னு நெனைச்சா யாரோடயும் சண்டையே போடமாட்டோம்… யாருக்கு முன் கூட்டியே தெரியும்!...’ என்று அவனுக்குப் பரிவாக நினைத்துக்கொண்ட அண்ணாசாமி, அவன் அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு மாடிப்படி இறங்கி வருகையில் பின்னால் வந்து கொண்டே சொன்னார்:

“ரெண்டு மாசமாச்சு…. டாக்டர்கிட்ட போகாமலே அலட்சியமாக இருந்துட்டாள். டெய்லி ராத்திரியிலே ஜுரம் வந்துண்டு இருந்திருக்கு.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரிகர்ஸல், டிராமா-ஒண்ணும்விடறதில்லே. அதுக்கப்பறம் ராத்திரியெல்லாம் இவள் படற கஷ்டம் யாருக்கும் தெரியறதில்லே, சொன்னாத்தானே தெரியும்?.... கடைசியிலே ஒரேயடியா படுத்துட்டா... நல்ல வேளையா அந்தச் சமயம் பார்த்து ஒத்தாசைக்குப் பட்டு வந்திருந்தா... இன்னமும் இருக்கா.... அவளுக்குப் பேறு காலமோ என்னமோ? அவதான் கவனிச்சுக்கறா... கொண்டுபோயி நர்ஸிங்ஹோமில் அட்மிட் பண்ணோம்...” இதைச் சொல்லும்போது ரங்கா அவரைக் கீழ்ப் படியில் திரும்பிப் பார்த்தான்.

“என்ன பார்க்கிறீர்?.... நான் அப்பவே சொன்னேன்: உமக்குச் சொல்லி அனுப்பணும்னு.... கல்யாணி பிடிவாதமா வேண்டாம்னுட்டா. உமக்குத் தெரியுமாம்... ‘நீர் வரப்போ வந்தாப் போதும், உம்மைக் கஷ்டப்படுத்த வேண்டாம்.... நான் ஒண்ணும் செத்துப் போயிட மாட்டேன். நான் சொல்றப்ப போய் அழைச்சுண்டு வாங்கோ - இப்ப வேண்டாம்’னு கண்டிப்பா சொல்லிட்டா. நான் என்ன சொல்ல முடியும்? உங்களுக்குள்ளே என்ன விவகாரமோ? அவள் சொன்னால் ஏதோ ஒரு நியாயத்திலே ஒரு காரணத்தோடதான் சொல்லுவாள்னு எல்லாருமே பேசாமல் இருந்துட்டோம்”.... என்று சொல்லிக் கொண்டிருக்கையில் கீழ் வீட்டில் தாழ்வாரத்தின் ஓரமாக நிறுத்தி இருந்த ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு வந்தான் ரங்கா. அவன் முகம் மிகவும் இறுக்கமாகிக் கலவரமடைந்திருந்தது. அண்ணாசாமி சொல்வதை அவன் கவனித்துக் கொண்டிருந்தான். தெருவில் ஸ்கூட்டரின் அருகே நின்று இருவரும் ஏதோ பொது விவகாரமோ, வியாபார விஷயமோ பேசிக் கொண்டிருப்பதுபோல ஒரு தோற்றம் கொள்ள – அவர் சொல்வதை அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

“எக்ஸ்ரே, பிளட்-டெஸ்ட் எல்லாம் பண்ணிப் பார்த்துட்டுக் கல்யாணிக்கு டி.பி.ன்னா ‘ஸ்பைனல் கார்ட்’லே.... அதனாலேதான் முதுகுவலி கால்வலின்னு அவஸ்தைப் பட்டுண்டு இருந்திருக்கா, ஒரு மாசத்திலே ஆளு பாதியான்னா ஆயிட்டாள்!... இப்போ கொஞ்சம் தேறி இருக்கு உடம்பு.... ஆனாக்கா ரெண்டு காலும் சுத்தமா மரத்துப் போயிடுத்தாம்... எனக்கு அதான் பயமா இருக்கு.... டாக்டர் சொல்றார்: ‘கொஞ்ச நாளாகலாம் - ஆனால், நிச்சயம் நடக்க முடியும்’னு. பகவான் இருக்கார்” என்று கண்கலங்கினார் அண்ணாசாமி.

“சரி, ஏறுங்க-போகலாம்” என்று அண்ணாசாமியைப் பின் ஸீட்டிலே உட்கார வைத்துக்கொண்டு ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து மிகுந்த ஓசையெழ வேகமாகப் புறப்பட்டு மறைந்தான் ரங்கா.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் தனது உணர்ச்சிகளை மிகுந்த சிரமத்துடன் வெளியில் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

அவன் வரும்போது அறைக்குள்ளிருந்து வெளியே வந்த பட்டம்மாள், கல்யாணி தூங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னாள்.

“காலையில் டாக்டர் வந்தாரா?” என்று விசாரித்தான் ரங்கா. “இனிமேல்தான் வருவார்” என்று பட்டு தெரிவித்தாள். தினமும் வந்து ஊசி போடுவதாகச் சொன்னாள்.

பட்டு ரங்காவைப் பார்த்ததும் ஏனோ அழுதாள். அது அவனுக்கு ரொம்பச் சங்கடமாக இருந்தது. அவளது அழுகையின் காரணத்தைப் புரிந்து கொள்வது அவனுக்குச் சிரமமாக இருந்தது. அவள் ‘அவளுக்காக அழுகிறாளா? அல்லது கல்யாணியின் நிலைமையில் இப்படி விட்டு விட்டுப் போய் விட்டீர்களே என்று முறையிடுகிறாளா?’ என்று புரிந்து கொள்ள முடியாத சிக்கலாக இருந்ததால் அவன் அதற்குப் பொதுவாகக் கூடச் சமாதானம் கூறாமல் மௌனமாய் அறைக்குள் சென்றான்.

அண்ணாசாமி ஹாலிலேயே உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போடலானார்.

ரங்கா அறைக்குள் சென்று தூங்கிக் கொண்டிருக்கும் கல்யாணியின் கட்டிலினருகில் கிடந்த ஒரு ஸ்டூலின்மீது உட்கார்ந்து கொண்டு அவளையே வெறித்துப் பார்த்தான். அவன் மனம் கலக்கம் கொண்டது, தான் அழக்கூடாது என்று அவன் மனசைத் திடப்படுத்திக் கொண்டான்.

அவள் வெளுத்து, ஒரு குழந்தை மாதிரி முகத்தோடு பிரக்ஞையேயில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தாள். கட்டிலின் மீதிருந்த மெத்தையில் அவள் உடம்பு பதிந்து வெறும் மெத்தை கிடப்பது மாதிரி, தலையணையின்மீது தலை மட்டும் தெரிந்தது. கட்டிலுக்கு அந்தப் பக்கத்தில் இரண்டு தலையணைகள் வைத்து ஒரு சக்கர நாற்காலி இருந்தது. ஜன்னல்கள் திறந்திருந்தன. வழக்கமாக மூடி இருக்கும் கீழ் ஜன்னலில் ஒன்றுகூட லேசாகத் திறந்திருந்தது: அதன் வழியே ஒரு ரோஜாப்பூ தெரிந்தது. அந்தச் சக்கர நாற்காலி இருக்கின்ற கோணமும் அதில் தலையணைகள் இருக்கின்ற கோலமும் பார்க்க ‘இவள் காலையிலோ நேற்று மாலையிலோ அங்கே உட்கார்ந்து கொண்டு இருந்திருக்கிறாள்’ என்று ரங்காவுக்குத் தோன்றியது. அதை நினைக்க அவன் மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

இவள் தனிமையில் ஜுரத்தோடும் வேதனையோடும் எப்படியெல்லாம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

துன்பப்பட்டிருப்பாள் என்று அவன் எண்ணிப் பார்த்தான். ‘இவள் ஏன் தனக்குச் சொல்லி அனுப்ப வேண்டாமென்று சொன்னாள்’ என்று அவன் யோசித்தான். தன்மீது கொண்ட கோபத்தினாலோ வருத்தத்தினாலோ தனக்குத் தெரிவிக்கவேண்டாம் என்று இவள் சொல்லி இருப்பாள் என இதைப் புரிந்து கொள்வது தான் இவளுக்குச் செய்த பிழைகளிலேயே பெரும் பிழையாகிப் போகும் என்று அவன் உணர்ந்தான். அவள் தனக்குச் செய்திருந்த பணிவிடைகளையும் உபசாரங்களையும் அவன் இப்போது நினைத்துப் பார்த்தான். ‘எப்படி ஓய்ச்சல் ஒழிவில்லாமல் தோட்ட வேலையிலே இருந்து நாடகத் தயாரிப்பு வரைக்கும் ஒரு நாளைக்கு இவள் எவ்வளவு வேலைகள் செய்வாள்!” என்று யோசித்து, இப்போது ஒன்றுமே தெரியாத, எதற்குமே ஏலாத ஒரு சவலைக்குழந்தை மாதிரி அவள் படுத்திருக்கிற கோலத்தை அந்தப் பழைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அப்போதெல்லாம் கூட இருந்து இவளது உழைப்பையும் உபசரிப்பையும் உரிமையோடு பெற்றுக் கொண்ட தான் இவளுக்கு உடம்பு முடியாமற் போன போது, கூட இருந்து ஒரு வேளை மருந்து கூடக் கொடுக்க முடியாதவனாய்ப் பிரிந்திருந்த செயலை எண்ணி அவன் மிகவும் வருந்தினான்.

அவளது கால்களைப் பார்க்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. லேசாகப் போர்வையை அவன் விலக்கினான். வாழைத்தண்டுகள் மாதிரி வெளுத்து மெலிந்து, சூம்பி, தன் வசமிழந்து கிடந்த முழங்காலிலும் பாதத்திலும் பச்சை நரம்புகள் வரைந்த மாதிரித் தெரிந்தன. அவன் அவள் கால்களைத் தொட்டான். அவள் முகத்தைப் பார்த்தவாறே தொட்டான் அவன். அவன் தொடுவதை அவள் உணராததால் அவள் தூங்கிக் கொண்டே இருந்தாள். அவன் போர்வையை இழுத்து மூடியதால் ஏற்பட்ட சிறு சலசலப்பில் அவள் லேசாகக் கண் திறந்து பார்த்தாள். இவனைக் கண்ட மாத்திரத்தில் அவள் உறக்கம் முற்றாகக் கலைந்தது. கண் விழித்த மலர்ச்சியில் புன்முறுவலுடன் இவனை வரவேற்கப் போர்வைக்குள்ளிருந்து கையை வெளியே எடுத்து இவனை நோக்கி நீட்டினாள். ரங்கா அவள் கையைத் தன் இரண்டு கைகளிலும் பற்றிக்கொண்டான்: குச்சிபோல் மெலிந்து, சாயம் உரிந்த நகங்களோடு அவளது கை வெளிறி இருந்தது.

அவர்கள் இருவரும் வெகு நேரம் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் முகத்தில் இவனைக் கண்டதும் ஏற்பட்ட மலர்ச்சியும் சிரிப்பும் இன்னும் மாறவில்லை. அவன் அவள் கையில் முகம் புதைத்துக் கொண்டான்.

அவள் ஒற்றைக் கையால் அவனது மோவாயை ஏந்திக் கன்னங்களைத்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

தடவி, சிகையைக் கோதி, வார்த்தைகள் இல்லாமல் அவனுக்கு ஆறுதல் அளித்தாள்.

அவன் மனசுக்கு மிகவும் சுகமாகவும், வருத்தம் கலந்த ஆனந்தமாகவும் நெஞ்சில் என்னவோ அடைத்தது. அவன் குழந்தை மாதிரி அந்தரங்கமாக அழுதான்.

"எனக்கு ஏன் நீ சொல்லி அனுப்பலே?" என்று ஒரு நியாயமில்லாத கேள்வியைக் கேட்கிறோம் என்ற தயக்கத்தோடு கேட்டான் ரங்கா.

அவள் கணீரென்று சிரித்தாள். அவள் உடல் குணமடைந்து எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறாள் என்று அந்தச் சிரிப்பில் புரிந்து கொண்டான் ரங்கா. அவள் பேசும்போது அதிகம் பேசாமல் இருக்கின்ற காரணத்தாலோ என்னமோ – அவள் குரல் மிக இனிமையாகவும் தெளிவாகவும் இருந்தது. அவள் சொன்னாள்:

"நான் சொல்லி அனுப்பித்தானே ஐயர் வந்தார்? அதைச் சொல்லலியா? முதல்லே ரெண்டு மூணு நாளிலே நீங்களே வருவீங்கன்னு நினைச்சேன். ஆனால் உங்களை இந்தப் பக்கமே காணோம். நீங்க போன ஒரு பதினைந்து நாளைக்கெல்லாம் எனக்கு உடம்பு ரொம்ப மோசமாயிடுச்சி. நீங்களே வருவீங்கன்னு நினைச்சேன்.... அவ்வளவு நாள் வராமப்போகவே, சரி நீங்க வரவேண்டாம்னு இருக்கறீங்கன்னு நினைச்சுக்கிட்டேன். உங்க உறுதியை நான் கலைச்சுடக் கூடாதுன்னுதான் நான் சொல்லி அனுப்பலே. இப்பக் கூட நம்ப விவாகரத்தை உடனே ஏற்பாடு பண்ணிக்கிறதுக்கு உங்களுக்கு உதவி செய்யத்தான் உங்களை வரச்சொன்னேன்" என்று புன்னகை மாறாமல் அவள் சொல்லுவதை நெற்றியைச் சுருக்கிக் கொண்டு எந்தவிதமான உணர்ச்சியுமில்லாமல் கவனித்தான் ரங்கா.

ஒன்பது மணிக்கு மேல் டாக்டர் வந்தார். ரங்காவைப் பார்த்து 'இவன் இவள் புருஷன்' என்று அவர் தெரிந்து கொண்டதையும், இவ்வளவு நாள் இவனைக் காணோமே? என்கிற எண்ணம் அவர் முகத்தில் தோன்றுவதையும் புரிந்து கொண்ட ரங்கா, தன்னைத்தானே அவரிடம் அறிமுகம் செய்துகொண்டு, தான் குடும்பக் காரியமாகப் பிரிந்திருந்த நேரத்தில் இவளுக்கு உடம்பு இப்படியாகி விட்டது என்றும் தனக்குச் செய்தி தெரிந்ததும் வந்திருப்பதாகவும் தெரிவித்தபின் அவளது உடல் நிலையைப் பற்றி விசாரித்தான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“உங்கள் மனைவி மிகவும் மனஉறுதி படைத்தவர்” என்று பாராட்டிவிட்டு, “இப்போது முற்றிலும் குணமடைந்துவிட்டார் என்றே கூறலாம்” எனத் தெரிவித்தார் டாக்டர்: “என்றாலும் முன்பு மாதிரி நடமாடுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் பிடிக்கும்... சில கேஸ்களில் ஓரிரு வருடங்கள்கூட ஆகும். ஆனால் நிச்சயம் நடமாட முடியும்” என்று நம்பிக்கை தெரிவித்தார்.

“நீங்க எழுந்து நிக்கவும், நடக்கவும் கொஞ்சம் கொஞ்சம் ‘டிரை’ பண்ணிக்கிட்டே இருக்கணும். சிரமமாகத்தான் இருக்கும். இப்பத்தான் இவர் பக்கத்திலே இருக்காரே... தனியா இருக்கும்போது முயற்சி பண்ணாதீங்க... ஆபத்து. சும்மா இவர் தோளைப் பிடிச்சிக்கிட்டு நிக்கப் பாருங்க... அப்பறம் மெதுவா... ‘வீல்-சேர்லே’ போயி உக்காரப் பாருங்க... அவசரப் படாமல் நிதானமா... கொஞ்சம்... கொஞ்சமா... என்று கல்யாணியிடம் விளக்கிக் கூறினார் டாக்டர்.

அவளுக்கு இன்ஜக்ஷன் போட்டுவிட்டுப் போகிற போது ரங்கா தெருவரை டாக்டரோடு சென்று வழி அனுப்பிவிட்டு மறுபடியும் வந்து அவளருகே உட்கார்ந்து கொண்டான்.

அண்ணாசாமி அறை வாசற்படியில் வந்து நின்று கொண்டு கல்யாணியிடம் சொன்னார்: “அப்போ நான் புறப்படறேன் கல்யாணி... எனக்கு ஆபீசுக்குப் போகணுமே என்ன மிஸ்டர் ரங்கா.... நான் வரட்டா” என்று புறப்படுகையில் கல்யாணியிடம் திரும்பி “நான் சாயங்காலம் வரேன்” என்று மறுபடியும் சொல்லிக் கொண்டார்.

அண்ணாசாமி போனபிறகு தன் பக்கத்தில் அமர்ந்து கையைப் பற்றிக் கொண்டிருந்த ரங்காவிடம் கல்யாணி கேட்டாள்: “நீங்க ஆபீசுக்குப் போகவேண்டாம்?”

“இல்லே... ஒரு மாசம் லீவு போட்டுட்டு உன்னோடயே இருக்கப் போறேன்... நீயா எழுந்திரிச்சி அந்த வீல் சேர்லே போய் உட்கார்ற வரைக்குமாவது நான் கூடவே இருக்கணும். நீ ரொம்ப முடியாம இருக்கறப்போவெல்லாம் நான் உன் பக்கத்திலே இல்லாமல் போயிட்டேனே.... ‘ஹஸ்பெண்ட்’னு சொல்றே.... இவ்வளவு நாலு எங்கடா போயிருந்தேன்’னு டாக்டர் கேட்டுடுவாரோன்னு நெனச்சி என் மனசு எப்பிடி உறுத்திக்கினு இருந்திச்சு தெரியுமா?”

அவள் மெதுவாகப் புன்முறுவல் செய்தாள். தான் இவனை அழைத்துவரச் சொன்னதற்கான காரணத்தை இப்போது இவனிடம் சொல்லுவதா, வேண்டாமா என்று கல்யாணி யோசித்தாள்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மூன்று மாதமாக இந்தப் பக்கமே இவன் வராததால் ஓராண்டுக் காலம் பிரிந்திருந்து விவாகரத்துக்கு மனுச் செய்ய இவன் தீர்மானமாக முனைந்திருக்கிறான் என்று புரிந்து கொண்டிருந்தாள் கல்யாணி.

இவனது முயற்சிக்கு வசதியாக-ஒரு வருஷம் காத்திருக்கவேண்டிய அவசியமில்லாமல்-உடனடியாக விவாகரத்துப் பெறுவதற்கு இப்போது தகுந்த காரணம் கிட்டிவிட்டது என்பதைத் தெரிவிக்கவே அவள் அண்ணாசாமியிடம் இவனை அழைத்துவரச் சொல்லி இருந்தாள்.

தனக்கு இப்படி ஒரு மோசமான வியாதி வந்து கால் விளங்காமல் படுத்த படுக்கையாகிவிட்ட இந்த ஒரு காரணம் உடனடி விவாகரத்துக்குப் போதுமே என்று அவள் நினைத்தாள். அவன் மனத்தைப் புண்படுத்தவோ விரக்தியும் துயரமும் கொண்டோ அல்லாமல் அவனுக்குத் தான் உதவி செய்கிற விதமாகவே அவள் அவ்விதம் எண்ணினாள்.

ஆனால் இப்போது இவன் தன்னைப் பார்த்து வருந்துவதையும், ஆரம்பத்திலிருந்தே தான் கூட இருக்கவில்லையே என்று குற்றம் புரிந்துவிட்டவன் போல் புலம்புவதையும், ஒரு மாதத்துக்கு லீவு போட்டுவிட்டு இங்கேயே தன்னுடன் இருக்கப்போவதாகக் கூறுவதையும் கேட்ட பிறகு தான் அவனுக்குக் கூறவிருந்த யோசனையை இப்போது இவனிடம் சொல்லுவது இவனை அவமதிப்பதாகவும் கொடுமையானதாகவும் இருக்கும் என்றெண்ணிய கல்யாணி, அவன் வந்திருப்பதற்காகவும் அவனது அன்புக்காகவும் தான் அடைகிற மகிழ்ச்சியினால் அவனைப் பார்த்து அடிக்கடி அன்புததும்பப் புன்னகை செய்தாள்.

டாக்டர் போன சற்று நேரத்துக்கெல்லாம் கல்யாணியிடம் ரங்காவைக் கொண்டுவந்து சேர்த்துவிட்ட நிம்மதி உணர்ச்சியோடு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அண்ணாசாமியும் புறப்பட்டார்.

ரங்கா ஆபீசுக்குப்போய் லீவுபோட்டுவிட்டு மத்தியானம் ஒரு மணிக்கு வந்தான்.

வீட்டில் யாரும் ஆண் துணை இல்லாததால் பகலில் கூட வாசற்கதவுகள் உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. ஸ்கூட்டர் சத்தம் கேட்டுப் பட்டம்மாள் எழுந்துவந்து கதவைத் திறந்தாள். இவ்வளவு நாழி அவள் படுத்திருந்தாள் என்பது மட்டுமில்லாமல் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்பதிலிருந்து அவள் படுகிற வேதனையும் அவனுக்குப் புரிந்தது. “என்ன பட்டு.... ‘மிட்வய்ஃபை’க் கூப்பிட்டனுப்பணுமா?” என்று கேட்டான்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“வேணாம்... மத்தியானத்துக்கு அவளே இன்னக்கி வருவா” என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் பட்டு.

இவளுக்குப் பிரசவமாகி இவளும் படுத்துக் கொண்டால் இந்த வீட்டையும் கல்யாணியையும் இவளையும் யார் கவனித்துக் கொள்வது என்று யோசித்தான் ரங்கா. அப்போது பட்டுவின் தாய் சுந்தரவல்லி அம்மாளை அவன் நினைத்துக்கொண்டே உள்ளே சென்றபோது ஹாலில் மூட்டை முடிச்சுகளுடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த சுந்தரவல்லி அம்மாள் இவனைக் கண்டு மரியாதையுடன் எழுந்து நின்று “வாங்க தம்பி-சௌக்கியமா?” என்று விசாரித்துக் கண்கலங்கியவாறு “எனக்கு நேத்து தாங்க தபால் கிடைச்சுது கல்யாணிக்கு உடம்பு இப்படியாயிட்டுதே.... நீங்களாவது முன்னயே எனக்கு ஒரு கடுதாசி எழுதியிருக்கக் கூடாதா?” என்று புலம்பினாள்.

ரங்கா பதில் ஏதும் சொல்லவில்லை. பெருமூச்சுவிட்டு அவளிடம் மன்னிப்புக் கேட்பது மாதிரி தலைகுனிந்து நின்றிருந்தான். பிறகு அவளே சமாதானம் கூறிக் கொண்டாள். “ஆண்டவன் அவளுக்கு ஒரு கொறையுமில்லாமல் மறுபடியும் முன்னே மாதிரி எழுந்து நடக்க வைப்பான்” என்று அவனுக்கு ஆறுதல் சொன்னாள். அதற்காகப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

“நீங்க எப்ப வந்தீங்க?” என்று விசாரித்துவிட்டுக் கல்யாணியின் அறைக்குப் போனான். அவன் வருகைக்காகக் காத்திருந்தவள் போல் கல்யாணி அவனைப் புன்முறுவலுடன் வரவேற்றாள். ரங்கா அவள் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து தான் ஒரு மாசம் லீவு போட்டுவிட்டதைச் சொன்னான்.

“மணி ஒண்ணாகுது. நீங்க போய்ச் சாப்பிடுங்க” என்று வேண்டினாள் கல்யாணி. தான் அவனுக்குப் பரிமாற முடியாத ஏக்கம் அவள் கண்களில் தெரிந்தது. அவனும் அதே நினைவில் சாப்பிட மனமின்றிக் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்தான். படுக்கையின் மீது ஊன்றிருந்த அவனது முழங்கையைப் பிடித்துக் கொண்டு அவள் கேட்டாள்:

“நான் எழுந்து வந்து சாப்பாடு போடவா?” சிரித்துக்கொண்டே அவள் விளையாட்டாகக் கேட்ட போது அவளையும் அறியாமல் அவளது கண்களிலிருந்து காதோரமாய்க் கண்ணீர் வழிந்தது. ரங்கா அதைத் துடைத்துவிட்டு அவளுக்கு நம்பிக்கை தரும் குரலில் சொன்னான். “சீக்கிரம் உனக்குக் குணமாகி நீ வந்து எனக்குச் சாப்பாடு போடத்தான் போறே...”

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவளும் தலையை ஆட்டி ஆமோதித்தாள். அவன் அறை மூலையில் உள்ள பீரோவைத் திறந்தான். அதில் அவனது உடைகள் சிலவும் லுங்கிகளும் சலவை செய்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவன் உடைமாற்றிக் கொண்டான்.

“நீ சாப்பிட்டியா?” என்று அவளை விசாரித்தான்.

“அதெல்லாம் மணி பார்த்து நேரம் தவறாமலல் குடுத்துடுவா பட்டு” என்றாள் கல்யாணி.

“பாவம் என்னாலே அவளுக்கு எவ்வளவு சிரமம்?”

பின்னர் அவன் சாப்பிடப் போனான். டைனிங் டேபிளில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு ஓர் ஓரமாக நின்றிருந்தாள் பட்டு.

ரங்கா தானே பரிமாறிக் கொண்டான். “நீ போய் ரெஸ்ட் எடுத்துக்க. எல்லாம்தான் இருக்கே” என்று பட்டுவை அனுப்பிவிட்டுத் தானே போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டு வந்தான்.

அவன் அறைக்குள் நுழைந்தபோது கல்யாணி அவனிடம் கேட்டாள். “நீங்க அப்பறம் உங்க லாயர் ஃபிரண்டைப் பார்த்தீங்களா?”

“இல்லை” என்று சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

இந்தக் கேள்விக்குப் பிறகு, அவன் இதுவரை மறந்திருந்த இந்த மூன்று மாதப் பிரிவையும், அதற்குக் காரணமான ‘டைவர்ஸ்’ பிரச்னையையும் இப்போதுதான் நினைத்துக் கொண்டான்.

“நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை” என்று கூறி இருந்ததையும் தங்கள் உறவுபற்றி அவ்விதமே தான் இப்போதும் முடிவு செய்திருப்பதையும் மறுபடியும் அவன் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தான்.

“அது உண்மைதானா? ஒரு வேளை இவள் என்னைக் காதலிக்காதது-அவள் சொல்வது போல் நான் நினைக்கிற அர்த்தப்படி-உண்மையாக இருக்கலாம். நான் இவளைக் காதலிப்பது எவ்வளவு உண்மை! அதுதானே முக்கியம். என்னை இவள் காதலிப்பதும் அல்லாததும் என்னைப் பொருத்த விஷயம் அல்ல. எனக்கு இவள் வேண்டும்: இவளுடன் நான் இருப்பது எனக்காக என்பது இந்த மூன்று மாத காலத்தில் புரிந்ததே... ஒரு பிடிவாதத்தில், வீம்பில் இவளை விட்டு உடல்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரீதியாக என்னால் பிரிந்திருக்க முடிந்தது: முடியும். வாழ்நாள் பூராவும் அந்தப் பிடிவாதம் தளராமல் என்னால் இருந்துவிட முடியும். அப்படி முடிவது எவ்வளவு வெறுமையான, சபிக்கப்பட்ட வாழ்க்கை. ஏன் அப்படி முடியவேண்டும்? வாழ்க்கை கடைசியில் வெறும் பிடிவாதமாகவும் வீம்பாகவும் போவது எவ்வளவு பெரிய பாழ்! இவளைவிட்டுப் பிரிந்திருந்தாலும் இவளை என்னால் வெறுத்து விடவோ, நெஞ்சிலிருந்து இவளைப்பற்றிய இனிய நினைவுகளை அகற்றி விடவோ முடியுமா? அவ்விதம் முடியாதவரை இவளைவிட்டு நான் பிரிந்திருப்பது என்பதற்கு என்ன பொருள்? இவளை நான் காதலிக்கவில்லை என்று எதை வைத்து உறுதியாகக் கூறுவது… எனக்கு இவள் காதல் இன்னும் வேண்டும் என்று இதற்கு அர்த்தமே தவிர - இவளை நான் காதலிக்கவே இல்லை என்பதா?... இவளைப் பற்றி ஒவ்வொரு நிமிஷமும் காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் போதும்-இரவில் படுக்கப் போகும் போதும் எப்போதுமே நினைத்துக் கொண்டிருக்கும் நான் இவளை விட்டுப் பிரிந்திருந்தால் என்ன, இவளோடேயே இணைந்திருந்தால் என்ன, என்றெல்லாம் யோசித்தவாறே சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு அமைதியாய் உட்கார்ந்திருந்தான் ரங்கா.

கல்யாணி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் ஏதாவது பேசுவான் என்று அவள் காத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அது பற்றியெல்லாம் இவளிடம் எதுவுமே பேசுவதில்லை என்று அவன் எப்போதோ தீர்மானம் செய்திருந்தான்.

அவள் முன்பொருநாள் சொல்லியிருந்தாளே… ‘நாம் இனிமே டைவர்ஸைப் பத்தியோ, சேர்ந்து வாழறதைப் பத்தியோ அதிகமாகப் பேசவேண்டாம். வேணுங்கிற வரைக்கும் நாம்ப பேசியாச்சு. இனிமே எப்படி வேணும்னாலும் வாழ்வோம். திட்டம் போடவேண்டாம், எது சரி எது தப்புன்னு விவாதம் பண்ணவேண்டாம்’ என்று –அப்போதே அது மிகவும் ஆரோக்கியமான யோசனை என்று அதனை அங்கீகரித்த இவன் ஏற்றுக் கொண்டு விட்டான்.

“என்ன யோசனை?” என்று கல்யாணி அவனைக் கேட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்:

“யோசிக்கிறதையெல்லாம் பேசக்கூடாதுன்னு நான் புரிஞ்சுக்கிட்டேன்… பேச வேண்டாத எவ்வளவோ விஷயங்களை யோசிக்கிறோம், பேசினதையே திரும்பத் திரும்ப யோசிக்கிறோம்-பேசக்கூடாததைக் கூட

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

யோசிக்கிறோம்-பேசிப் பிரயோசனம் இல்லேன்னு கூடச் சில சமயத்திலே யோசிக்க வேண்டியிருக்கு" என்று நிறுத்தி நிறுத்தி மாற்றி மாற்றிச் சொன்னான்.

"ஆமா, இப்ப உன் நாடகக் குழு எப்படி நடக்கும்? அதைக் கலைச்சுடாதே…எப்படியாவது தொடர்ந்து நடத்த முயற்சி செய்யணும்" என்று அவளுக்கு யோசனை கூறினான் ரங்கா.

"ஆமாமா ஐயரு கூட 'எனக்குக் கால் நல்லா ஆகிற வரைக்கும் நிறுத்தி வைப்போம்'னு சொன்னார். நான் தான் சொன்னேன், 'நிறுத்த வேண்டாம். வேறு யாராவது ஒரு பெண்ணைப் புடிச்சி என் ரோலுக்குப் போட்டுகிட்டுத் தொடர்ந்து நடத்தலாம்'னு சொல்லி இருக்கேன். இந்த மூணு மாசமா நாடகமே இல்லே… பழைய புக்கிங்ஸ் எல்லாம் அப்படியே நிக்குது…" என்று பொறுப்பு மிகுந்த கவலையுடன் சொல்லிக் கொண்டாள்.

மணி இரண்டாகியிருந்தது.

"கொஞ்சம் நாழி நீ தூங்கு" என்று அவன் எழுந்தான், அவள் அவனது கைகளை இறுகப் பற்றி நீங்களும் இங்கேயே படுத்துத் தூங்கலாம்" என்றாள்.

அவன் மூடியிருந்த கதவைத் தாழிட்டபின் அவள் பக்கத்தில் ஒரு குழந்தையை அணைத்துக்கொள்கிற தாய் போல் மெல்ல தழுவிக்கொண்டு படுத்தான். அவள் முழு உடம்பும் அவனது கைக்குள் அடங்கிப் போவது மாதிரி அவள் மெலிந்து கிடந்தாள். தன் பக்கத்தில் படுத்திருப்பது அன்புக்கும், ஆதரவுக்கும் உரிய ஓர் அற்புதமான உயிர் என்பதைத் தவிர, 'இவள் ஒரு பெண்-நான் ஓர் ஆண், இவள் என் மனைவி-நான் இவள் புருஷன்' என்ற உணர்வுகளெல்லாம் கடந்த ஒரு பிணைப்பில் அவளை அவன் மென்மையான ஒரு பூமாலையை அணிந்து கொள்வது போலத் தழுவிக்கொண்டான். ஒரு புறாவைக் கையில் பிடித்து உள்ளங்கைகளில் மூடிக்கொண்டால் துடிக்குமே அதன் உயிர், அது மாதிரி அவள் உடலும், மனமும் மகிழ்ச்சியினால் அவளுள் துடிப்பதை அவனால் உணர முடிந்தது.

சாயங்காலம் அவளுக்கும் தனக்கும் சேர்த்துக் காப்பியை ரங்காவே கல்யாணியின் அறைக்குக் கொண்டு வந்தான்.

"ஐயோ, எதுக்கு நீங்க சிரமப்படுறீங்க?" என்று அவனைத் தடுத்து "பட்டம்மா எங்கே?" என்று படுக்கையிலிருந்து எழ முயன்றாள் கல்யாணி.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அப்போது அவள் உடல் அசைவைக் கூர்ந்து கவனித்தான் ரங்கா. அசைவுகள் எல்லாம் இடுப்புக்கு மேலேதான் தெரிந்தது. இடுப்புக்குக் கீழே ஒரு அசைவுமில்லை.

“இனிமே நீ சம்பந்தப்பட்ட எல்லாக் காரியமும் நான் தான் செய்வேன். பாவம், பட்டு எதுக்கு அலையணும்?” என்று அவளுக்குக் காப்பியை ஆற்றிக் கொடுத்தான்.

காப்பி குடித்தபின் அவள் சற்று உட்கார்ந்து கொள்ள விரும்பினாள். தானாக அவள் கைகளைப் படுக்கையில் ஊன்றி நிமிர்ந்தபோது ரங்கா வந்து பக்கத்தில் நின்று கொண்டான்.

“ம் ட்ரை! கெட் அப்!” என்று அவளை உற்சாகப் படுத்தினான். இடுப்பையோ கால்களையோ அசைக்கவே முடியாத நிலையில் கைகளின் பலத்தைக் கொண்டு மட்டும் தன் உடம்பை நிமிர்த்தின முயற்சியில் அவள் மிகவும் சோர்ந்து போனாள்.

ரங்கா அவளைத் தாங்கி நன்கு உட்கார உதவினான். சற்று நேரம் கழித்து “இறங்கிக் கொஞ்சம் நின்னு பார்க்கறியா?”.... என்று கேட்டான்.

அப்படி ஒரு கற்பனை அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. குழந்தை மாதிரி சந்தோஷமாக ‘சரி’ என்று ஒப்புக்கொண்டாள். அவன் அவளது கால்களை இழுத்துக் கட்டிலுக்குக் கீழே தொங்கவிட்டபோது அவை தன்வசமற்று ஆடுவதைப் பார்த்து ‘இவளால் எப்படி நிற்க முடியப் போகிறது’ என்று மனத்தில் நினைத்துக் கொண்டே அவளை மெள்ளத் தரையில் காலூன்றச் சொல்லி அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

அவளுக்குத் தனது கால்கள் தரையில் படுகின்றனவா இல்லையா என்று தெரியவில்லை. அவள் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

“பாருங்க.... என் கால் தரையிலே இருக்கா? பார்த்துச் சொல்லுங்க...” என்று அவனிடம் அவள் கேட்டாள்.

“அவசரம் கூடாதுன்னு சொல்லி இருக்கார் டாக்டர், இப்போ இவ்வளவு முயற்சி போதும்” என்று சொல்லிக் கொண்டே ரங்கா அவளை அப்படியே தூக்கி அந்தச் சக்கர நாற்காலியில் உட்கார வைத்தான்.

“நேத்து நீ இதிலே உட்கார்ந்து இருந்தியா?” என்று கேட்டான்.

“ம்... இப்பக்கூட நாற்காலியை இழுத்துக்கட்டிலோட சேர்த்துவெச்சா-கொஞ்சம் கொஞ்சமா நகர்ந்து நானே உக்காந்துடுவேன். ஆனா யாராவது

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நாற்காலியெப் பிடிச்சுக்கணும்... நான் நாற்காலியிலே நகர்ந்து வந்துட்ட அப்புறம் என்னையும் கொஞ்சம் இழுத்து நிமிர்த்தி உட்கார வைக்கணும்" என்று தன்னையே பரிகாசம் செய்து கொள்வதைப்போல் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

ரங்காவுக்கு அவளது நிலைமை ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. அவள் நடந்ததையும், ரோஜாச் செடிகளின் இடையே ஒவ்வொரு பூவும் மலர்வதைப் பார்த்துக் குதூகலித்துத் துள்ளியதையும், நாடக அரங்கில் ஒய்யாரமாக நடைபழகி, ஒயிலாக நின்றதையும், தனக்கு ஓடி ஓடிப் பணிவிடைகள் புரிந்ததையும் எண்ணிப் பெருமூச்செறிந்தான் ரங்கா. அதையெல்லாம் நினைக்கும்போது அவனுக்கு அழுகையே வந்தது. தான் வருந்துவது அவளுக்குத் தெரிந்தால் அவள் மிகவும் மனமுடைந்து போவாள் என்று எண்ணி அவளுக்குப் பின்னால் நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்து அண்ணாந்து ஜன்னலுக்கு வெளியே வானத்தைப் பார்த்துக்கொண்டு அவள் பேசுவதைக் கேட்டுக் கண்கள் கலங்க அவளோடு சேர்ந்து சிரித்தான் அவன்.

சாயங்காலம் ஆறுமணிக்குப் பட்டுவுக்குக் குழந்தை பிறந்தது. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கு முன்னால் மருத்துவச்சியை அழைத்து வருவதற்கு முன்பு, அவசரமாகவும் சுகமாகவும் அவளுக்குப் பிரசவமாயிற்றாம்.

அப்போது வீட்டின் முன்புறத்தில் உள்ள ரோஜாச் செடிகளின் நடுவே இரண்டு பக்கமும் செங்கற்கள் முக்கோணமாகத் தெரிகிற மாதிரிப் புதைத்திருக்கும் நடைபாதையில் கல்யாணியைச் சக்கர நாற்காலியில் வைத்து அவளுடன் பேசியவாறே தள்ளியவண்ணம் உலாவிக் கொண்டிருந்தான் ரங்கா.

திடீரென்று ஒரு புதிய மனிதக் குரலின் முதல் அலறலைக் கேட்டுக் கல்யாணிக்கு உடம்பு சிலிர்த்தது. ரங்காவின் கையை அவள் இறுகப் பற்றினாள். அவனும் அவள் தோளில் மெல்லத் தட்டினான். வார்த்தைகள் இல்லாமல் அந்த விஷயத்தை அவர்கள் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

இவர்கள்மீது மோதி விடுவது மாதிரி உள்ளேயிருந்து வேலைக்காரி ஓடிவந்தாள். அவள் ஓடிவந்த அவசரத்தில் ஏதோ சொன்னாள். தான் போய் மருத்துவச்சியைக் கூட்டிக்கொண்டு வருவதாக அவள் கூறிய வார்த்தைகள் அவர்களுக்குப் புரியவில்லை. அவள் ஓடுகிற வேகத்திலும் திசையிலும் அது புரிந்தது.

சுந்தரவல்லி அம்மாள் வெளியே வரவில்லை. அவள் தான் பிரசவம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பார்த்தாள் என்று சொல்லவேண்டும். சற்று நேரத்தில் மருத்துவச்சியும் வந்தாள்.

வீட்டிற்குள் வேலைக்காரியும் மருத்துவச்சியும் சுந்தரவல்லி அம்மாளும் அங்குமிங்கும் ஓடியவாறிருந்தார்கள். வீடு முழுவதையும் அவர்களுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டது மாதிரி கல்யாணியும் ரங்காவும் அவர்கள் நடமாட்டத்தை வெளியே இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

வேலைக்காரி மட்டும் ஒரு சமயம் கல்யாணியிடம் ஓடி வந்து, “ஆண் குழந்தை” என்று சொல்லிவிட்டு மறுபடியும் உள்ளே ஓடிப்போனாள்.

விளக்கு வைக்கிற நேரத்தில் சுந்தரவல்லி அம்மாள் வந்து குழந்தையைப் பார்ப்பதற்காகக் கல்யாணியைக் கூப்பிட்டாள். ரங்கா அவளை நாற்காலியோடு தள்ளிக் கொண்டு உள்ளே போனான்.

கூடத்தில் இவர்கள் ஒத்திகை நடத்துகிற இடத்தில் ஒரு ஸ்கிரின் வைத்து மறைத்து ஒரு கட்டிலில் பட்டுவைப் படுக்க வைத்திருந்தார்கள். ஸ்கிரீனுக்கும் சுவருக்குமிடையே உள்ளே போவதற்காக ஏற்படுத்தியிருந்த வழியில் கல்யாணி மட்டும் உள்ளே பார்ப்பதற்கு வசதியாய் அந்த நாற்காலியை நிறுத்தி ரங்கா பின்னால் நின்று கொண்டிருந்தான். சுந்தரவல்லி அம்மாள் குழந்தையைக் கொண்டு வந்து கல்யாணியின் மடியில் வைத்தபோது ரங்காவும் குழந்தையைப் பார்த்தான். கல்யாணி ஒவ்வொரு நாளும் புதிதாய் மலர்கிற ரோஜாவைப் பார்த்து ரசித்து மகிழ்கிற மாதிரி இந்தக் குழந்தையையும் பார்த்துக் குதூகலிப்பதை ரங்கா பார்த்து ரசித்தான்.

‘நம்ப நாடகத்திலே ஒரு புதுமுகம்: ஒரு புதிய பாத்திரம்’ என்று கல்யாணி மனசுக்குள் நினைத்துக் கொண்டாள். அப்படி நினைக்கும் போது அவள் கண்ணைச் சற்று மூடினாள். அது பிரார்த்தனை மாதிரி இருந்தது.

குழந்தை முகம் சிணுங்கி அழுதபோது சுந்தரவல்லி அம்மாள் அவள் மடியிலிருந்து அதை எடுத்துக் கொண்டாள். கல்யாணி உள்ளே எட்டிப் பார்த்துப் பட்டுவை நோக்கிச் சிரித்தாள். பதிலுக்கு இவளைப் பார்த்துச் சிரித்த பட்டுவின் முகத்தில் தோன்றுகிற பெருமிதத்தின் அர்த்தத்தைக் கல்யாணி புரிந்து கொண்டாள்.

மறுபடியும் ரங்கா, கல்யாணியை அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான். அப்போது நேரம் இருட்டி நிலவு வந்து விட்டது.

ஒரு சினிமாக் கம்பெனி காரில் வந்திறங்கிய தாமு வெளியில் ஒரு டின் மிட்டாய் வாங்கிக்கொண்டு வந்து முதலில் கல்யாணிக்கும் ரங்காவுக்கும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கொடுத்துவிட்டுப் பின் எல்லோருக்கும் வழங்கினான்.

நிலா வெளிச்சத்தில் வாசற்படி ஓரமாக அவளது நாற்காலியை நிறுத்திப் படியில் உட்கார்ந்து கொண்டு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான் ரங்கா. கல்யாணிக்கு மனம் மிகவும் குதூகலமாயிருந்தது. இனி ரங்கா தன்னை விட்டுப் பிரியமாட்டானென்று அவள் மனத்தில் ஒரு திடம் பிறந்தது. தங்கள் இருவர்க்கும் ஒருவர்மேல் ஒருவருக்கிருக்கும் காதலை இருவருமே சரியாகப் புரிந்து கொள்வதற்கு இப்படி ஒரு விபத்து தேவையாயிருந்ததோ:" என்று அவள் எண்ணியவாறு தனது மெலிந்த கால்களைப் பார்த்துக் கொண்டாள்.

தான் இவனை அழைத்துவரச் சொன்னதற்கான காரணத்தை ஒரு யோசனையாக, இப்போது அவனிடம் சொல்லாவிட்டாலும் தான் அப்படி நினைத்ததை இவனிடம் சொல்லலாமென்று அவளுக்குத் தோன்றிற்று. தன் பக்கத்தில் மௌனமாக உட்கார்ந்து நிலாவையும், சுற்றிலும் பூத்து வெள்ளைவெளேரென்று பளீரிடுகின்ற ரோஜா மலர்களையும் பார்த்தவாறு இனிமையான குளிர்ச்சியான சூழ்நிலையில் மனசில் எந்தவித கனமும் சிந்தனையுமில்லாமல் மௌனமாக உட்கார்ந்திருக்கிற ரங்காவைப் பார்த்து,

"என்ன யோசனை?" என்று கேட்ட கல்யாணி காலையில் ஒருமுறை அவ்விதம் தான் அவனைக் கேட்டதையும் அதற்கு அவன் சொன்ன பதிலையும் நினைத்துக் கொண்டாள்.

ரங்கா அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னான்: "நீதான் எதைப் பத்தியோ யோசிச்சுக்கிட்டே இருக்கேன்னு தெரியுது, உன் யோசனையை என்கிட்டே சொல்றதுக்கு முகாந்திரமா 'நான் ஏதாவது யோசிக்கிறேனா'ன்னு நீ கேட்டுக்கிட்டே இருக்கே: இந்த மூணு மாசமா நான் உன்னைப் பத்தியேயோசிச்சுக்கிட்டு இருந்தேன், நான் அப்போ உன்னைவிட்டுப் பிரிஞ்சிருந்தேன்: உன்கிட்டேயிருந்து விலகி இருந்து உன்னைப் பத்தி யோசிச்சிக்கிட்டு இருக்கிறதைவிட உன்னோட சேர்ந்திருந்து எதைப் பத்தியும் யோசிக்காமல் இருக்கிறது நிம்மதியா இருக்கு. ஏதோ உனக்கு உடம்பு இப்படி ஆகிவிட்டதனாலே என் முடிவை நான் மாத்திக்கிட்டேன்னு நீ நினைக்கக்கூடாது. நம்ம மனசிலே இருக்கிற முடிவுகளை நிறைவேத்திக்கிறதுக்கு இதெல்லாம் ஒரு காரணமாயிடுதே தவிர ஒரு காரணத்தினாலே எந்த முடிவும் உண்டாகறதில்லை. நீ சொன்னயே ஞாபகமிருக்கா?' நாம் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு நம்ப மனசு பக்குவப்பட்டிருந்ததனாலேதான் அண்ணாசாமி சொன்னது ஒரு காரணமாப் போயிடுச்சு'ன்னு....

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உன்னோட இப்போ வந்து சேர்ந்ததுக்கு உன்னோட உடல்நிலை காரணம்னா உன்னைவிட்டுப் பிரிஞ்சு போறதுக்கும் அதையே காரணமாக்கிடலாம்: அதெல்லாம் நம்ப மனசு எப்படிப்பட்டதுங்கறதைப் பொறுத்தது” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் அவள் ஆச்சரியத்தால் கண்களை அகலத் திறந்து அவனைப் பார்த்தாள்:

‘இவன் மனம் எப்படிப்பட்டது’ என்று முடிவு செய்வதில் தான் செய்துவிட்ட தவறு அவளை உறுத்திற்று. அவளுக்குக் கண்கள் கலங்கின. அது அழுகை அல்ல என்பதற்கு அடையாளமாக அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்:

“ஆமாங்க நான் அப்படி நெனச்சித்தான் உங்களை வரச்சொன்னேன். மூணுமாசமா நீங்க இந்தப் பக்கமே வரலியா… அதனாலே வக்கீல் சொன்னதுமாதிரி ஒரு வருஷம் டைவர்ஸுக்காக பிரிஞ்சி இருக்கிறதுங்கற முடிவிலே நீங்க இருக்கீங்கன்னு நெனச்சேன். இப்ப இந்த மாதிரி உடம்பு ஆனதுக்கு அப்புறம்-அதையே ஒரு காரணமா வெச்சி இப்ப நீங்க டைவர்ஸுக்கு மனுப் போட்டா உடனே கெடைச்சிடும்னு உங்களுக்கு யோசனை சொல்றதுக்காகத்தான் கூப்பிட்டு அனுப்பினேன். நாம்ப பிரியறதுக்கு இது ஒரு நல்ல காரணமா இருக்கும்னு நெனச்சேன். இதுவே நாம மறுபடியும் ஒண்ணுசேரவும் காரணமா இருக்கறதைப் பார்க்கறப்போ நீங்க சொல்றது ரொம்ப நியாயம்னு தோணுது….”

ரங்கா தன்னுள்சிரித்துக்கொண்டான். அந்தச் சிரிப்பில் ஒரு முதிர்ச்சியும், ‘சட்டமும் சமூக பந்தமும் எவ்வளவு மனிதாபிமானமற்ற சுய நலத்தின் பாதுகாவல்’ என்று புரிந்து கொண்ட அலட்சிய பாவமும் தெரிந்தது.

“நாம்ப பெரிசா, மரியாதையாகவும் உணர்வாகவும் நினைக்கிற சட்டமும் சமூக நியாயமும் எவ்வளவு கேவலமானது! நீயும் நானும் உடம்பும் மனசும் ஆரோக்கியமா இருக்கிற நிலையிலே பிரியணும்னு நெனைக்கிறபோது பலவந்தமா நம்மைச் சேர்த்து வைக்கிற மாதிரி-இல்லாத நிர்ப்பந்தங்களை எல்லாம் உண்டாகற சட்டம்-இப்ப எந்த நிலையிலே ஒருத்தருக்கு மற்றவங்களோட துணை தேவையோ, அப்ப அந்த நிராதரவான நிலைக்கு என்ன காரணமோ அதையே ஒரு ஆதாரமாகக் காட்டி உடனே பிரிஞ்சு போகலாம்னு சொல்றது எவ்வளவு கொடுமை!…. இப்பிடி ஒரு சட்டம்! இது ரொம்ப உயர்வாம்! புதுமையாம்! நாகரிகமாம்!நம்முடைய நன்மைக்காம்!” என்று சொல்லி மறுபடியும் சிரித்தான் ரங்கா:

“சட்டம் பகைமையையும் விரோதத்தையும் வளர்த்துப் பழி

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

வாங்கறதுக்குத்தான் உதவும் போல இருக்கு” என்று சொல்லிக் கொண்டான்.

அவன் மேலும் யோசித்தான்: ‘ஆரோக்கியமானவர்களை அடக்கறதுக்கும், அவங்க சுதந்திரத்தை நசுக்கறதுக்கும், பலவீனமானவர்களை நிராதரவா-தனக்குச் சம்பந்தமில்லாதவர்களா வீசியெறியறதுக்கும் தான் சட்டங்களும் சமுதாய பலமும் இருக்கா? என்ன இவ்வளவு முரண்பாடான முரட்டுத்தனமான அமைப்பு இது! இவள் நல்ல ஆரோக்கியமும் திடமும் பெற்று இருந்தபோது இவளோடு உறவு வைத்துக் கொண்டு இவளுடைய உழைப்பையும், இவள் உடல் தருகிற சுகத்தையும், இவள் சம்பாதிக்கிறதிலேகூட உரிமையும் எனக்கு ஏற்படுத்தின சட்டம் இவள் நலிந்து நலங்கெட்டு இருக்கிறபோது இவளோடு இருந்து இவளுக்கு ஆதரவா உதவி செய்யணும்னு சொல்லத் தெம்பு இல்லாம இருக்கலாமா?... மனிதர்கள்-ஆத்மாவும் அறிவும் உடைய மனிதர்கள்-இந்தச் சட்டத்தை மட்டும் நம்பி இதுக்குப் பயந்து இதைப் பயன்படுத்தியும் மட்டும் வாழறது எவ்வளவு காட்டு மிராண்டித்தனமானது!’ என்று யோசிக்க யோசிக்க அவனுக்குக் கோபத்தால் முகம் சிவந்தது.

கல்யாணியும் அந்த மௌனமான நேரத்தில் அது பற்றியே யோசித்தாள். அவள் சொன்னாள்:

“நீங்க சொல்றதிலே இருக்கிற நியாயம் எனக்குப் புரியுது. ஆனால் சட்டத்திலே இருக்கிற நியாயத்தையும் நாம்ப புரிஞ்சுக்கணும். உங்கமனம் இப்படி இருக்கிறதினாலே உங்களை மாதிரி உயர்ந்தவங்களுக்கு இப்படி தோணறது நியாயம்தான். ஆனால் சட்டம், மனிதாபிமானம் இல்லாதவங்களுக்கு அதை நிர்ப்பந்தப்படுத்தறது கொடுமை இல்லையா? நாம்ப உடம்பு நல்லா இருந்த போதும் சந்தோஷமா இருந்தோம்-இந்த நிலையிலேயும் இருக்கோம், ஆனால் சில பேராலே அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்களுக்கு நல்லா இருக்கிற போதும் கஷ்டம்: நலிஞ்சு கெட்டப்புறமும் கஷ்டம்னு இருக்கிறவங்களுக்கு ‘நீங்க இப்பவும் சேர்ந்துதான் இருக்கணும்’னு சட்டம் சொல்றது கொடுமை இல்லையா? எதுவுமே நாம் அதைப் பயன்படுத்திக்கறதிலேதான் இருக்கு. உடம்புக்கு முடியாத புருஷனோடயோ பொண்டாட்டியோடேயோ நீ வாழவே கூடாதுன்னா சட்டம் சொல்லுது?”

ரங்காவின் மனம் மிகவும் தெளிவாக இருந்தது, அப்போது வீசிய காற்றில் புதிய உயிர்ப்பே பெற்றது போல் ரோஜாவின் மணத்தை அவன் நெஞ்சுவிரிய சுவாசித்து நிமிர்ந்தான். நிலவு இன்று கூடுதல் பிரகாசம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

பெற்றதுபோல் பளீரெனப் பொழிந்து கொண்டிருந்தது.

"அண்ணாசாமி வர்றதாகச் சொன்னாரே" என்று கேட்டான் ரங்கா.

"பாவம்! இன்னிக்கித்தான் அவருக்குக் கொஞ்சம் ஓய்வு: இந்த ரெண்டு மாசமா ஆபீஸ் நேரம் போக மத்த நேரமெல்லாம் இங்கேயேதான் இருப்பார். ராத்திரி பன்னெண்டு மணி கூட சில சமயத்திலே ஆயிடும்... இன்னிக்கி நீங்க இருக்கீங்கங்கற தைரியத்திலே வேற ஏதாவது வேலையாப் போயிருப்பார்...." என்றாள் கல்யாணி.

அப்போது ரங்கா தனக்கும் கல்யாணிக்கும் ஏற்பட்ட மனத்தாங்கல்களையும் எண்ண மாறுபாடுகளையும், உணர்ச்சிச் சிறாய்ப்புக்களையும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லாமே பொருளற்றதாகவும், பேதைமை நிறைந்ததாகவும்-எதற்குமே சரியான காரணமில்லைபோலவும்-அவனுக்குத் தோன்றி மிகவும் வேடிக்கையாக இருந்தது.

'நான் இவளிடம் என்ன எதிர்பார்த்து எனக்கு என்ன கிடைக்கவில்லை!' என்று எண்ணிச் சிரித்துக் கொண்டே "எல்லாம் பைத்தியக்காரத்தனமா இருக்கு-நமக்குள்ளே எதனாலே மனஸ்தாபம் வந்தது?" என்று அவளைக் கேட்டான் ரங்கா.

"மனஸ்தாபமா?" என்று புருவத்தை நெரித்தாள் கல்யாணி: "அதுக்கெல்லாம் மனஸ்தாபம்னு பேரு இல்லே. நீங்க நாம்ப எது இல்லையோ அதோடயெல்லாம் நம்மை ஒப்பிட்டுப் பார்த்துக் கஷ்டப்பட்டிருக்கீங்க. நான் நாம்ப எதுவோ-எதுவா இருந்தாலும்-அதை அப்படியே ஏத்துக்கிட்டு இருந்தேன். இதிலே 'வந்த ஃபிரிக்ஷன்' தான் இன்னொண்ணு! நீங்க சொல்லுவீங்களே, அந்த என்னோட 'ஸெல்ஃ'-அதை உங்களாலே தாங்க முடியலேன்னு.... இப்ப நான் உங்க ஆதரவுக்கும் துணைக்கும் உட்பட்டவளா ஆகிஇருக்கிறதாலே அந்த 'ஸெல்ஃபைத்' தாங்கிக்க முடிஞ்சுட்டுது..."

"இல்லே கல்யாணி... உன் 'ஸெல்ஃப்' என்னை மீறினதோ எனக்கு முரண்பட்டதோ இல்லைன்னு இப்ப நான் புரிஞ்சுக்கிட்டேன். அது மட்டும் இல்லே-உன் 'ஸெல்ஃப்'க்குள்ளே நானும் அடக்கம்னு கூடப் புரிஞ்சுக்கிட்டேன். நம்மோட உறவுக்கும் அன்புக்கும் உன் 'ஸெல்ஃப்' குறுக்கே வந்ததில்லே: வராது. நான்தான் அதைக் குறுக்கே இழுத்தேன்... இதைப்பத்தியெல்லாம் உன்னைவிட்டுப் பிரிஞ்சு இருந்த இந்த மூணு மாசமா நான் யோசிச்சேன். இப்படி யோசிக்கவே ஒரு பிரிவு தேவையா இருந்தது. நீ இல்லாத ஒரு சூழ்நிலையிலே இதைப்பத்தியெல்லாம்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ரொம்ப ‘அப்ஜெக்டிவா’ யோசிக்க முடிஞ்சுது. ஆனாலும் ‘டைவர்ஸை’ப்பத்தி நான் ரெண்டு அபிப்பிராயம் வெச்சிக்கவே இல்லை இப்பவும் கூட எனக்குத் தோணுது. இந்தச் சட்டமும், கல்யாணம்கிற பந்தமும் எவ்வளவு தேவை இல்லாதது உயர்ந்த மனுஷங்களுக்குனு காட்ற மாதிரி, ‘டைவர்ஸ்’ வாங்கிக்கிட்டு நாம்ப ரெண்டு பேரும், ஒரு ‘ஐடியல்’ தம்பதியா வாழ்ந்து காட்டணும்னு…” என்று சொன்னபோது இவள் புன்முறுவல் செய்தாள்: அவன் ஏதோ சொல்ல வந்தபோது அவள் அவனைத் தடுத்தாள். இதுவரை அவன் பேசும்போது குறுக்கிட்டு இதுமாதிரி அவள் தடுத்ததே இல்லை. அவள் சொன்னாள்:

நீங்க ஒண்ணும் சொல்ல வேணாம். நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்குத் தெரியும். அதை நான் சொல்றேன். நான் இப்படி எப்பவாவது இதுக்கு முந்தியே இந்த மாதிரி சொல்லி இருந்தேன்னா எவ்வளவோ மனக் குழப்பங்கள் ஏற்படாமலிருந்திருக்கும். அதைத்தான் நீங்களும் எதிர்பார்த்தீங்க. அதை நான் செய்யாததனாலே தான் உங்களுக்கு என் அன்பு மேலேயே நம்பிக்கை குறைஞ்சுது…. இப்ப நான் சொல்றேன்: ‘டைவர்ஸ்’ வேண்டாம். நான் அதுக்குச் சம்மதிக்க மாட்டேன்… நீங்க எனக்கு வேணும் எனக்கு உதவியா வேற யார் இருந்தாலும் நீங்க இருக்கிற மாதிரி ஆகுமா?... நீங்கன்னா, நீங்க இல்லே-என் புருஷன் இருக்கிறமாதிரி ஆகுமா?’ என்று அவள் சிரித்துக்கொண்டே சொன்ன போதிலும் கண்களில் நீர் பெருகிற்று.

அவன் மறுபடியும் என்னவோ “வாட் ஐ மீன்” என்று ஆங்கிலத்தில் சொல்ல வந்தபோது அவளும் அதே அவசரத்தோடு குறுக்கிட்டு ஆங்கிலத்திலேயே சொன்னாள்:

“நோ மோர் எக்ஸ்பரிமெண்ட்ஸ் வித் லைஃப்-லெட் அஸ் லிவ் இட்….அக்ஸெப்ட் இட்!” என்று கூறியவாறே அவனது இரண்டு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டாள்.

அப்போது சுந்தரவல்லி அம்மாள் அவர்களைச் சாப்பிடுவதற்காக அழைத்தாள்.

“என்ன சமையல்!” என்று கேட்டாள் கல்யாணி.

“எல்லாம் இருக்கு: சாப்பாடும் இருக்கு, சூடா இட்லியும் இருக்கு-எது வேணுமானாலும் சாப்பிடலாம்” என்றாள் சுந்தரவல்லி அம்மாள்.

“டிபன் சாப்பிடலாம். இங்கேயே நிலாவிலே சாப்பிடலாம்-இரு, நான் கொண்டு வரேன்…” என்று ரங்கா எழுந்தான்?

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

“ரொம்ப நல்லா இருக்கு. நீங்க இருங்க. நானே கொண்டு வரேன்” என்று உள்ளே போனாள் சுந்தரவல்லி.

சற்றுநேரத்தில் தாமு ஒரு ஸ்டூலைக் கொண்டுவந்து ரங்காவுக்கும் கல்யாணிக்கும் நடுவே போட்டுச் செம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தான்.

உள்ளே குழந்தை அழுகிற சத்தம் கேட்டது.

பின் கதை

“நான் வரதானா ஒரேயடியாத்தான் வரணும்” என்று ஒருமுறை பட்டு சொன்னாள். கல்யாணி பட்டுவின் அப்போதைய நிலைமையைப் பார்த்து அப்போது ஓர் ஆறுதலாக இருக்கும் பொருட்டு ‘இங்குதான் வந்து இரேன்’ என்று சொன்னதற்குத்தான் பட்டு அழுது கொண்டே அப்படிச் சொன்னாள்.

அன்று சொன்னதுபோலவே இங்கே தான் ‘ஒரே அடி’யாகத் தங்கிவிட்டாலும் அதற்காகப் பட்டு இப்போது அழவில்லை. பிரசவத்துக்கு வந்த பட்டு, கல்யாணிக்கு உதவியாக இங்கேயே இருந்துவிட்டாள். தாமுவும் அவளும் இதே வீட்டில் ஒரு சிறு பகுதியில் தனிக்குடித்தனம் நடத்திக்கொண்டு, இவர்களுக்குச் சுமையாகாமல் உதவியாக இருக்கின்றனர்.

பட்டுவின் பையன் வீடு முழுவதும் தவழ்ந்து விளையாடி கல்யாணிக்குத் தனிமையை மாற்றும் துணையாகப் பகலெல்லாம் உடனிருந்தான். புத்தகம் புதிதாய் ஒவ்வொரு நாளும் அரும்பி மலரும் ரோஜாமலர்களைப் பார்க்கும் போது ஏற்பட்ட பரவசம் இந்தக் குழந்தையின் சிரிப்பிலும் விளையாட்டிலும் கல்யாணிக்கு ஏற்படுகிறது.

ரங்கா ஆபீசுக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் கல்யாணியைச் சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிக் கொண்டு முன்பு மாதிரியே நிறையப் பேசிக்கொண்டிருக்கிறான். இப்போது அவர்கள் தங்களைப் பற்றி அதிகம் பேசிக் கொள்ளாத அளவு-பேச வேண்டாத அளவுக்கு வளர்ச்சியும், முதிர்ச்சியும் தங்கள் உறவின் பேரில் நம்பிக்கையும் கொண்டு விட்டனர்.

ரங்காதான் ரோஜாச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பதியம் போட்டு அவற்றைப் பாதுகாக்கிற வேலைகளையும் தோட்டக்காரனின் உதவியோடு மிகவும் பொறுப்பாய்ச் செய்கிறான். இருந்தாலும் ரோஜா வளர்ப்பது. கிரிக்கட் காமெண்ட்ரி கேட்பது போன்றவற்றைப் பற்றிய அவனது கருத்துக்கள் ஏதும் மாறவில்லை!

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அண்ணாசாமிதான் நாடகக் குழு பொறுப்பு முழுவதும் ஏற்று நடத்துகிறார். இந்த ஒரு வருஷ காலத்தில் கல்யாணி நடிக்காமல் நான்கு புது நாடகங்களை அவர் அரங்கேற்றினார். கல்யாணி அதில் நடிக்கத்தான் முடியவில்லையே ஒழிய ஒத்திகையிலும் 'ஸ்கிரிப்ட்'டிலும், நாடக அமைப்பு வேலையிலும் மிகுந்த உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொண்டாள். அவளால் நடக்க முடியவில்லை என்பதைத் தவிர வேறு எந்தவிதத்திலும் அவள் முடங்கிப் போனவள் அல்ல என்பதை எல்லாரும் அவரவர் சம்பந்தப்பட்ட அளவில் குறையற்று உணர்ந்தார்கள்.

அவள் உடம்பும் மனமும் நன்கு தேறி மிகுந்த பொலிவோடும் புதிய இளமையோடும் திகழ்ந்தாலும் அவளது காலூனத்தால் ரங்கா அவளை ஒரு குழந்தை மாதிரி மட்டும் போஷித்து வந்தான். இருவரும் ஒரே படுக்கையில் துயின்ற போதும் தனது ஆதரவுக்கும் அரவணைப்புக்கும் உட்பட்ட ஓர் உயிர் என்ற பாசத்தில் மட்டுமே தன்னை அவன் அவளோடு பிணித்துக் கொண்டான்.

முதலில் சில மாதங்கள் 'இந்த நெருக்கத்தினூடே விளைந்த 'விலகலை' எப்படிப் போக்குவது? என்று கல்யாணி குழம்பினாள். அவளுக்குத் தன்னடக்கமும் அதே சமயத்தில் ரங்காவின் மீது காதலும் அவனது புலனடக்கத்தினால் ஏற்பட்ட பரிதாபமும் நாளுக்கு நாள் மனத்தில் ஒரு சுமையாய்க் கனத்தது.

கடைசியல் அவர்கள் இருவரும் அதுபற்றி வெளிப்படையாய் மனம் திறந்து பேசினர்.

"நீ எழுந்து நடமாடுகிறவரை நாம் இப்படியேதான் இருக்கவேண்டும்" என்றான் ரங்கா.

அவள் சிரித்தாள். இவனுக்கு எப்படி விளக்குவது என்று புரியாமல் அவள் வெட்கத்தால் முகம் சிவந்து சிரித்தாள்.

"நான் இப்ப ஒண்ணும் நோயாளி இல்லே. வேணுமானா டாக்டரைக் கேளுங்க…" என்று சொன்னாள்.

"டாக்டரை என்னன்னு கேட்கறது? அவர் என்னைப் பத்தி என்ன நினைப்பார்…." என்று சின்னப் பையன் மாதிரி சிணுங்கினான் ரங்கா.

"டாக்டர்கிட்ட என்ன வெட்கம்? பொதுவா இந்த மாதிரி பேஷண்டுகளோட நிலையை விசாரிக்கலாம் இல்லியா" என்று சொல்லித் தந்து, "இல்லாவிட்டால் நான் கேட்கட்டுமா?" என்று சிரித்துக் கொண்டே அவள் அவனைப் பயமுறுத்தியபோது தானே டாக்டரைக் கேட்பதாக

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

அவன் ஒப்புக் கொண்டான்.

மறுநாள் டாக்டரிடம் சுற்றி வளைத்து எப்படியோ ரங்கா கேட்டபின் தனது ஆஸ்பத்திரி வார்டில் படுக்கையிலேயே ஒன்றரை வருஷம் கல்யாணி மாதிரி இருக்க நேர்ந்துள்ள, இதே வியாதியினால் பீடிக்கப்பட்ட ஒரு பெண் இரண்டு மாதங்களுக்கு முன் குழந்தை பெற்றெடுத்த விஷயத்தை மிகவும் நயமாக எடுத்துச் சொன்னார் டாக்டர்.

கல்யாணி நாடகம் நடக்கும்போது தவறாமல் தியேட்டருக்குச் செல்கிறாள். முதலிலேயே, நாடகக் கருவிகளும் வாத்தியங்களும் கொண்டு செல்லுகிற காரில் இவளது சக்கர நாற்காலியும் போய்விடுகிறது.

பின்னர் மாலையில் ரங்கா வந்ததும் ஒரு டாக்ஸியில் அவன் தோளைப்பற்றி நின்றவாறு அநேகமாக ரங்கா அவளைத் தூக்கிக்கொண்டு வருகிறமாதிரி ஏற்றிக் கொள்ள-தியேட்டருக்குச் செல்கிறாள். தியேட்டரில் சக்கர நாற்காலியில் வைத்து அவளை அவனே தள்ளிக் கொண்டு போய் முன் வரிசையில் நிறுத்தித் தானும் உட்கார்ந்து எல்லா நாடகங்களையும் ஒவ்வொரு முறையும் பார்க்கிறான்.

அவள்தான் வரவில்லை என்று ஆரம்பத்தில் எவ்வளவோ மறுத்தாள்.

ஆனால் இந்த நாடகங்கள்-இவை எவ்வளவு மலிவானவையாக, தாழ்ந்ததாக, தரமற்றதாக இருந்த போதிலும்-இவளுக்கு எந்த அளவு மகிழ்ச்சியும் நிறைவும் தந்து இவளது வாழ்வோடு சம்பந்தப்பட்டு விட்டவை என்று ரங்காவுக்கு தெரியும். அதனாலேயே இந்த வசதியை இவளுக்குச் செய்து தருவது தனது கடமை என்று அவன் கருதினான்.

ஆனால் இப்போது கூட அவற்றைப் பற்றி விமர்சிக்கிற போதும் அபிப்பிராயம் தெரிவிக்கிறபோதும் கடுமையாக-முன்பு மாதிரியே, சற்றும் விட்டுக்கொடுக்காமல் 'கிழி கிழி' என்று கிழிப்பதில் அவன் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. தனக்குப் பிடித்தது, பிடிக்காதது என்பதில் அவன் இப்போது பிடிவாதம் காட்டாமல் இருப்பதில் உள்ள பெருந்தன்மையைப் புரிந்துகொண்டு விட்டான். உலகம் இப்படித்தான் இருக்கும். இதில் மாட்டிக்கொண்டு தனது தன்மையை இழந்துவிடாமல் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்று அவன் கற்றுக் கொண்டு எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். கல்யாணியிடம் அவன் கற்றுக்கொண்ட மகத்தான வாழ்க்கைப்பாடம் இது.

அண்ணாசாமிக்கு ரங்காவின் மீது இப்போதும் இந்த நாடக சமாசாரத்தில் ஆழமான வருத்தம்தான். சமயத்தில் அவரும் ரங்காவும் சூடாகவும்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கடுமையாகவும் (இந்தச் சூடு, கடுமை இரண்டு அண்ணாசாமிக்கு மட்டும்தான் சொந்தம்) விவாதித்தும் சண்டை போட்டும் பெருத்த இரைச்சலுடன் பேசுவதைக் கல்யாணி சிரித்து ரசித்துக் கடைசியில் மிகுந்த சிரமத்துடன் சமாதானமும் செய்து வைக்கிறாள்.

ரங்காவுக்கு இப்போது பொறுப்புகள் சற்று அதிகமாகி விட்டன. ஆறு மாதத்துக்கு முன்பு ஒரு நாள்-கிராமத்தில் ஆசிரியை வேலை பார்த்துக் கொண்டிருக்கிற, இவனைக் கல்யாணம்செய்து கொள்வதற்காகக் காத்திருந்த, இவனது இறந்துபோன மனைவியின் தங்கையான-சுமதிக்குத் திருமணம் என்று வந்த கல்யாணப் பத்திரிகையைப் பார்த்து ரங்காவும் கல்யாணியும் நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

கல்யாணத்துக்கு ரங்கா போய்வரவேண்டும் என்று கல்யாணி வற்புறுத்தி அவனை அனுப்பி வைத்தாள். அந்த ஒரு நாளில் தான் இவன் இல்லாமல் சமாளித்துக் கொள்ள முடியும் என்று தைரியம் தந்து அனுப்பினாள்.

சுமதி தன்னோடு வேலை செய்கிற ஒரு வாத்தியார் இளைஞனைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டதாகத் தான் அறிந்த சங்கதிகளைக் கதையாகக் கல்யாணியிடம் கூறினான் ரங்கா.

அதன் பிறகு-சுமதியிடம் வளர்ந்த குழந்தை இந்துவை இங்கு அழைத்துக் கொண்டு வந்து, ஏதாவது ஹாஸ்டலில் சேர்த்துவிடுவது என்று தீர்மானமாயிற்று. அதைச் சுமதியும் ஒப்புக்கொண்டாள். போனமாசம்-விடுமுறை கழிந்ததும்-இந்துவைச் சென்னைக்கு அழைத்து வந்து ஒரு ஹாஸ்டலில் சேர்த்தான்.

வாரம்தோறும் கல்யாணியும், ரங்காவும் போய் அவளைப் பார்த்து வருகிறார்கள். சுமதியும் அவள் கணவனும் இந்த ஒரு மாதத்தில் இந்துவைப் பார்க்க இரண்டு முறை வந்து விட்டார்களாம்.

இந்து ஹாஸ்டலில் உள்ள எல்லோரிடமும் ‘எனக்கு ரெண்டு அம்மா ரெண்டு அப்பா’ என்று சொல்லுவதைக் கேட்டு-இந்த இரண்டு பேரோடும் அவள் இருக்க முடியாமற் போன விசித்திர நிலைமையை எண்ணி மிகவும் ‘ஐரானிக் கலா’கச் சிரித்தாள் கல்யாணி.

இன்று கல்யாணி கலை அரங்கின் ஒரு புதிய நாடகம் அரங்கேறுகிறது.

அண்ணாசாமி காமெடியன் மேக்-அப்போடு உடம்பில் ஒரு படபடப்பும் மனசில் ஓர் பதைபதைப்புமாக அங்குமிங்கும் ஓடுகிறார். மணி ஆறரை ஆகி முதல் மணியும் அடித்தாகி விட்டது. இன்னும் கல்யாணியைக் காணோம்! நாடக ஆரம்பத்துக்கு முன் அவள் வந்துவிட வேண்டுமே

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

என்று மனசு அடித்துக் கொள்ளுகிறது அவருக்கு. ‘ஏன்? டாக்ஸி கிடைக்கவில்லையோ?... ஒரு வேளை ரங்காவுக்கு ஏதாவது வேலை வந்து இன்னும் ஆபீசிலிருந்து வரவில்லையோ? முதல் நாள் நாடகத்துக்குக் கல்யாணி இல்லாமலா?’ என்று பலவாறு எண்ணி மனத்தினுள் அவள் எப்படியாவது வந்துவிட வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்கிறார்.

இந்நேரம் வரைக்கும் அவள் வீட்டைவிட்டுப் புறப்படவில்லையானால் இன்னும் சில நிமிஷங்களில் ஆரம்பமாகும் இந்த நாடகத்தைக் காண அரங்கின் முன்னால் அவளைக் கொண்டுவந்து நிறுத்தக் கடவுளாலும் முடியாது என்று எண்ணி இரண்டாவது மணியையும் அடிக்கச் சொல்லி விட்டு, மேடைக்கு இரண்டு பக்கமும் உள்ள தட்டி அடைப்பிலிருக்கும் அந்தத் துவாரங்களில் ஒன்றின் வழியாகப் பார்த்தார் அண்ணாசாமி.

அவர் பார்ப்பதற்கும், விளக்குகளை அணைத்துத் திரை விலகுவதற்கும் சரியாக இருந்தது. நாடகத் துவக்க நாளன்று நாடக ஆரம்பத்தில் கல்யாணி இல்லாமற் போனதில் அவருக்கு அழுகையே வந்துவிட்டது.

திரை விலகி வெளிச்சம் வந்தபோது, அவரது ஒற்றை விழி தட்டி அடைப்பின் துவாரத்தினூடே சக்கர நாற்காலியில் அவளை வைத்துத் தள்ளியவாறே வரும் ரங்காவைப் பார்த்துக் குதூகலித்தது.

அவளைத் தெரிந்தவர்கள்-அவனைத் தெரிந்தவர்கள் -அவர்களைக் கண்டு வணக்கம் தெரிவிக்கின்றனர்.

சிலர் அவளுக்கு ஏற்பட்ட இந்த நிலையை எண்ணிப் பெருமூச்செறிந்து சூள் கொட்டுகின்றனர்.

மலர்ந்த முகத்துடன் முன் வரிசையில் சக்கர நாற்காலியில் கல்யாணி உட்கார்ந்திருக்க, அவளுக்குப் பக்கத்தில் ரங்காவும் அமர்கிறான்.

அவள் ரங்காவின் காதுகளில் என்னமோ ரகசியமாகச் சொல்லுவதைத் துவாரத்தின் வழியாகப் பார்க்கிறார் அண்ணாசாமி.

நாடகம் ஆரம்பமாகி விட்டது. அவள் நாடகம் பார்க்கிறாள். ரங்கா அவள் ரசிப்பதைப் பார்த்து ரசிக்கிறான்.

அண்ணாசாமி ஸீனுக்குப் போகவேண்டும். இந்த நாடகத்தில் அவர் காமெடியன். அவர் அரங்கில் நுழையும் போதும் எல்லாரும் கை தட்டுகின்றனர்.

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

கல்யாணியும் கைதட்டிச் சிரிக்கிறாள்.

அரங்கிலே நடித்த, இந்தமாதிரி ஆரவார ரசிப்புக்குரிய ஒரு நடிகை, சபையிலே அமர்ந்து ஆரவாரிக்கும் ரசிகர்களில் ஒருவராக மாறுவதிலே இருக்கிற சோகத்தை எண்ணித் தன்னுள்-இந்த காமெடியன் நடிப்புக்கிடையிலும்-அண்ணாசாமி ஒரு விநாடி மனங் கலங்கிப் போகிறார்.

அரங்கத்தில் நடிக்கின்றபோதும்-இப்போதும், எப்போதுமே-அவள் ஒரு ரசிகையாகவும் இருந்தாள் என்கிற விஷயம் அவருக்குத் தெரியாது.

இப்போது அந்த நடிகையின் பாத்திரமே ஒரு ரசிகை என்றாகி விட்டது, அவ்வளவுதான்.

கால்கள் உரம் பெற்று எழுந்து நடமாடுமாறு சரியாகிறவரை அவளுக்கு இந்தப் பாத்திரம்தான். இதையும் அவள் பூரணத் திருப்தியோடு பாத்திர தர்மம் உணர்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.

ஒரு வருஷமாகிறது. இன்னும் அவளால் 'நடமாட முடியும்' என்றுதான் டாக்டர்கள் சொல்லுகிறார்கள்.

அவளும் அவனும் அவனைச் சேர்ந்த எல்லாரும் அதை நம்புகிறார்கள். அதுதான்-அந்த நம்பிக்கைதான் மிகவும் முக்கியம்.

முடியுமா, முடியாதா? இருக்கிறதா, இல்லையா? உண்மையா, பொய்யா என்கிற எல்லா எதிர்மறை நியாயங்களை விடவும் 'முடியும்' என்கிற, 'இருக்கிறது' என்கிற 'உண்மை' என்கிற நம்பிக்கையில்தான் மனித வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது.

ரங்காவுக்கும் கல்யாணிக்கும் அந்த நம்பிக்கை-எல்லா விஷயத்திலும், தங்களைப் பற்றி-வாழ்வின் சகல கோணங்களிலும் நிறைய இருக்கிறது.

அண்ணாசாமி ஏதோ ஹாஸ்யமாகச் சொல்லியோ, டைலாக் மறந்து உளறியோ சபை முழுவதும் எழுந்து துள்ளி 'ஓ' வென்று ஆரவாரித்துச் சிரிக்கிறது! கல்யாணியும் தன்னை மறந்து சிரித்துக் கூவிக் கை தட்டுகிறாள், தியேட்டர் முழுவதும் 'ஓ' வென்ற சிரிப்பும், கரகோஷமும்....

முற்றும்

Click & Join -> https://t.me/tamilbooksworld